வானிலை

# உதயன்

கூ.வெ. 32 °C
கு.வெ. 23 °C
தெளிவான காலநிலை

சுடர் 30 | கதிர் 130 | வளளுவர் ஆண்டு 2046 | பங்குனி 22, ஞாயிற்றுக்கிழமை 05.04.2015


## காங்கேசன் சிமெந்து ஆலையை மீள இயக்கும் முயற்சி ஆரம்பம்

### பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காக காத்திருப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5
காங்கேசன்துறை சிமெந்து ஆலையை மீள இயக்குவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும் தொழிற்சாலைக்கு நேரில் சென்று அதிகாரிகள் பார்வையிடுவதற்கான அனுமதி பாதுகாப்பு அமைச்சினால் இன்னும் வழங்கப்படாததன் காரணத்தால் அந்தப் பணியின் ஆரம்பக் கட்டப் பணிகள் தாமதமடைகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.
தொழிற்சாலையை மீள இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்வதற்காக சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் மொஹமட் றியாஸ் ஷாலி தலைமையிலான வல்லுநர்கள் குழு நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருவதாக இருந்தது. எனினும் பாதுகாப்பு அமைச்சின் பக்.29

## மின்சாரம் தாக்கி இளைஞர் சாவு

### சீரற்ற மின் உபகரணத்தால்

யாழ்ப்பாணம், ஏப். 5
மின் பிளக் மூடி கழன்றிருந்த போதும் அதனைத் திருத்தாது தொடர்ந்து பயன்படுத்தியவர், விரல் நுனி வயரில் பட்டதனால் மின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார்.
இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடியிலுள்ள கஜானா அச்சகத்தில் நேற்று மதியம் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.
உடுவில் கற்பகப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த ராசேந்திரன் செல்வானந்தம் (வயது 36) என்பவரே உயிரிழந்தார்.
வெயில் காரணமாக அங்குள்ள மின்விசிறியை இயக்குவதற்கு அவர் முற்பட்டுள்ளார். அந்த மின்விசிறியின் மேல் மூடி பழுதடைந்துள்ளது. அதனால் றபர் பான்ட் போடப்பட்டுப் பாவிக்கப்பட்டுவந்தது. பக்.29

## வாக்குறுதிகளை நிறைவேற்றாவிடின் விபரீத விளைவுகள்

### அரசை எச்சரிக்கிறார் சோபித தேரர்



கொழும்பு,ஏப்ரல் 5
மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறை வேற்றாமல் பொதுத் தேர்தலுக்குப் புதிய அரசு செல்லுமாயின் பெரும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று நியாயமான சமூகத்திற்கான மக்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மாதுளுவாவே சோபித தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் பக்.29

## நியாயமான ஓர் அதிகாரப் பகிர்வு தமிழருக்கு தேவை

### இரு பிரதான கட்சிகளும் இணக்கப்பாடு எட்டவேண்டும் என்கிறார் கிரியெல்ல



கொழும்பு, ஏப். 5
வடக்கு–கிழக்கு மாகாணங்களுக்கு நியாயமான ஓர் அதிகாரப் பரவலாக்கத்தை வழங்குவது அவசியமானது. இதில் இரு பிரதான கட்சிகளும் ஓர் இணக்கப்பாட்டை எட்ட வேண்டும் என பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லக் ஷ்மன் கிரியெல்ல கூறியுள்ளார். பக்.29

## தாய்ப்பால் புரைக்கேறி உயிரிழந்தது ஆண் குழந்தை

யாழ்ப்பாணம், ஏப். 5
பால் குடித்தவுடன் குழந்தையைச் சமாந்தரமாகக் கிடத்தித் தூங்க வைத்ததால் பால் புரைக்கேறி அந்தக் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது.
கரவெட்டி கிழக்கில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 51 நாள்களான ஆண் குழந்தையே உயிரிழந்தது. நிஸான் இந்துஜன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.
வழமைபோன்று தாயார் குழந்தைக்குப் பாலூட்டிவிட்டு ஏணையில் கிடையாகக் கிடத்தி நித்திரையாக்கிவிட்டுத் தனது வேலைகளைக் கவனித்துள்ளார்.
சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் குழந்தைக்கு அருகில் சென்ற போது குழந்தை மூச்சுப் பேச்சின்றிக் கிடந்துள்ளது. அசைத்த போதும் எதுவித பக்.29

## பிரதமர் ரணில் சம்பூர் பயணம்

திருகோணமலை, ஏப். 5
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திருகோணமலை சம்பூர் பிரதேசத்துக்கு பயணமொன்றை மேற்கொண்டார். இந்தப் பயணம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அங்கு முகாம்களில் வாழுகின்ற மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாகவும், கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள 235 ஏக்கர் காணியை உரிமையாளர்களிடம் கையளிப்பது தொடர்பாகவும் அவர் மக்களுடன் கலந்துரையாடினார்.
அத்துடன் கட்டைபறிச்சான், சம்பூர், கூனித்தீவு ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள இடைத்தங்கல் முகாம்களுக்கும் பிரதமர் சென்று பார்வையிட்டார். கடந்த பக்.29

**மீனவர் பிரச்சினை; மைத்திரியுடன் நேரில் பேசுங்கள்**

பக்கம் 02

## இலங்கைக்கு வந்தார் ஐ.நா. உதவிச் செயலர்



கொழும்பு, ஏப். 5
ஐ.நா. உதவிச் செயலாளர் நாயகமும், ஐ.நா. அபிவிருத்திக் குழுவின் ஆசிய – பசுபிக் பகுதிக்கான தலைவருமான ஹோலி யாங் சூ நேற்று மாலை இலங்கை வந்துள்ளார்.
இரண்டாவது தடவையாக பக்.29

## இலங்கை மீனவர்கள் 6 பேர் கைது

புதுடில்லி, ஏப். 5
இந்தியக் கடற்பரப்பில் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்டதாகக் கூறி இலங்கை மீனவர்கள் 6 பேர், இந்தியக் கரையோரப் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
சென்னையின் வடகிழக்குப் பகுதியிலிருந்து 158கடல் மைல் தொலைவில் கபில புத்தா என்ற மீன்பிடிப் படகு ஆறு மீனவர்களுடன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கைப்பற்றப்பட்டுள்ளது. (த)

## பிறந்த தினத்தை கடலில் கொண்டாடியவர் மாயம்

### நீரில் மூழ்கியிருக்கலாம் என அச்சம்

யாழ்ப்பாணம், ஏப். 5
தொண்டமானாறு அக்கரைக் கடலில் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த 12 பேரில் ஒருவர் நேற்று நீரில் மூழ்கிக் காணாமற் போயுள்ளார்.
புத்தூர் வடக்கைச் சேர்ந்த கருணானந்தன் மிதுலன் (வயது 22)என்பவரே இவ்வாறு நீரில் மூழ்கிக் காணாமற்போயுள்ளதாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–
புத்தூர் பகுதியில் இருந்து சென்ற 12 பேர் தமது நண்பன் ஒருவனின் பிறந்த நாளைத் தொண்டமானாறு கடற்கரையில் கொண்டாடியுள்ளனர். அனைவரும் கடலில் இறங்கிக் குளித்துள்ளனர். பின்னர் வெளியே வந்த அவர்கள் கேக் வெட்ட எண்ணியபோது ஒருவரைக் காணவில்லை. அவர்கள் எங்கு தேடியும் அவரைக் கண்டு பக்.29

## கைகளைப் பின்புறம் கட்டி தாக்கினர் கடற்படையினர்

### இந்திய மீனவர் நீதிமன்றில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5
இலங்கைக் கடற்படையினர் எங்களைச் சுற்றிவளைத்தனர். பின்னர் எங்கள் படகில் ஏறிக் கைகளைப் பின் பக்கமாகக் கட்டிவிட்டுக் கயிற்றினாலும், துப்பாக்கியின் பின் பக்கத்தினாலும் கடுமையாகத் தாக்கினர் என கைதான இந்திய மீனவர்கள் நேற்று நீதிமன்றில் தெரிவித்தனர்.
பருத்தித்துறைக் கடற்பரப்பை அண்மித்துக் கைதாகிய 37 இந்திய மீனவர்களில், இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் படகின் மாலுமிகள் மூவரையும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு சிறைச்சாலைக் காவலர்களுக்குப் பருத்தித்துறை நீதிவான் மா.கணேசராஜா நேற்று உத்தரவிட்டார்.
அத்துடன் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திச் சுட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையை எதிர்வரும் தவணையில் பக்.29





SDBL
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி
தேசத்தின் முன்னோடி
சணச அபிவிருத்தி வங்கி இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால், விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
Fitch Rating BB+ (stable), RAM Rating BBB & $P_3$, Reg. No: PB62PQ

# மீனவர் பிரச்சினை; மைத்திரியுடன் நேரில் பேசுங்கள்

## மோடியிடம் கருணாநிதி கோரிக்கை

சென்னை, ஏப்.5

தமிழக மீனவர் பிரச்சினையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேரடியாகப் பேசி, தீர்வுகாண வேண்டுமென தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியிருக்கிறார்.

தமிழக மீனவர் பிரச்சினையில் பிரதமர் மோடி தலையிட வேண்டுமெனக் கருணாநிதி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்திருக்கும் அறிக்கையில்,

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் பாரபட்சமின்றி கைதுசெய்யப்படுவார்கள் என்று இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாகப்பட்டிணம் மாவட்டத்தைச் சேர்ந்த 37 மீனவர்கள் ஐந்து விசைப்படகுகளுடன் கைதுசெய்யப்பட்டு, காங்கேசன்துறைக்குக் கொண்டுசெல்லப்பட்டிருக்கும் சம்பவத்தின் பின்னணியில் கருணாநிதி இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, மீனவப் பிரதிநிதிகளையும் தமிழக அரசையும் அழைத்து பிரச்சினைகளைக் கேட்டறிந்து, இலங்கை ஜனாதிபதியிடம் நேரடியாகப் பேச வேண்டுமென்றும் மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் முயற்சிகளை எடுக்க வேண்டுமென்றும் கருணாநிதி கூறியுள்ளார்.

இலங்கைக் கடற்படையினர் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டுமென பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் கூறியிருக்கிறார்.

இதற்கிடையில் இந்த விவகாரம் குறித்துக் கருத்துத் தெரிவித்திருக்கும் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் ராமதாஸ், தமிழக மீனவர் பிரச்சினையை சர்வதேச நீதி மன்றத்தில் முறையிட்டு தீர்வு காணவேண்டுமெனக் கோரியுள்ளார்.

மேலும், வங்கக்கடலில் தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து இலங்கைக் கடற்படையினர் மீது வழக்குப் பதிவு செய்து, அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை சர்வதேச பொலிஸ் மூலம் மேற்கொள்வதன் மூலம் இந்தப் பிரச்சினையில் இலங்கையை வழிக்குக் கொண்டு வர முடியும் என்றும் ராமதாஸ் கூறி யிருக்கிறார்.

எனவே, அதிரடியான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் வங்கக்கடலில் மீன்பிடிப்பதற்கான சட்டபூர்வ உரிமையை தமிழக மீனவர்களுக்கு மத்திய அரசு பெற்றுத் தர வேண்டும் என்று ராமதாஸ் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்துள்ளார். (த)

## வடக்கு-கிழக்கு மாணவருக்கு 200 சைக்கிள்கள் அன்பளிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.5

அன்பே சிவம் அமைப்பின் ஒருங்கிணைப்பில் சுவிஸ் நாட்டின் தமிழர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு–கிழக்கு மாகாண மாணவர்களுக்கான கல்வி வள மேம்பாட்டுத் திட்டம் சார்பில் 200 சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், சீனித்தம்பி யோகேஸ்வரன் ,வடக்கு மாகாண சபை அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் வட மாகாண கல்விப்பணிப்பாளர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சுவிஸ்நாட்டின் தமிழர் நலன்புரிச் சங்கத்தினால் வடக்கு–கிழக்கு மாணவர்களில் உயர்தரப் பரீட்சையில் சிறந்த அடைவு மட்டத்தைப் பெற்ற இரு மாணவர்களுக்குக் கணினிகளும் அன்பளிப்பு செய்யப்பட்டன.

மேலும் கல்வி வள மேம்பாட்டை உயர்த்தும் வகையில் வடக்கு–கிழக்கைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு சைக்கிள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (த)

## அரசியல் அநாதைகளுக்கு மீண்டும் இடமளிக்காதீர்கள்

### கோருகிறார் ரில்வின் சில்வா

கொழும்பு, ஏப். 5

புதிய அரசியல் பாதையை உருவாக்கும் நல்ல தருணம் தற்போது பிறந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பதுளையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

அநேக தரப்பினர் பல்வேறு கோஷங்களுடன் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஆட்சிக்கு வந்த போதிலும் நாட்டுக்கோ, நாட்டு மக்களுக்கோ எந்த நன்மையும் ஏற்படவில்லை.

அத்துடன் அரசியல் ரீதியாக அநாதைகளாக்கப்பட்டுள்ள தரப்பினர் மீண்டும் அரசியலுக்குள் பிரவேசிப்பதற்கு தற்போதைய அரசு இடமளிக்கக் கூடாது.

பொதுத் தேர்தலுக்குச் செல்ல அச்சம் கொண்டுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் 19 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

இதனை தோற்கடிக்க வேண்டியது மக்கள் மாத்திரமல்ல, சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் கடமை என ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். (த)

## ஆலயத்துக்கு சென்ற கார் மதகுடன் மோதி விபத்து

தென்மராட்சி, ஏப்.5

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்திற்குச் சென்ற கார் பூநகரி–பரந்தன் வீதியில் உள்ள மதகுடன் மோதிச் சேதமடைந்தது. காரில் பயணித்த 5 வயதுப் பெண் பிள்ளைக்குக் கையில் பாதிப்பு ஏற்பட்டது. பிள்ளையின் பேர்த்திக்கு பற்கள் உடைந்தன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றது. தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆலய குருக்களின் காரே விபத்துக்குள்ளானது. வேகமாகச் சென்ற கார் முன் சில்லு காற்றுப் போகவே வீதியோரத்துக்கு இழுத்துச் சென்று மதகுக்கு வைக்கப்பட்டிருந்த இரண்டு கற்களை மோதி நின்றது.

சாரதி உட்பட காரில் பயணித்த மேலும் நால்வர் தெய்வாதீனமாகக் காயங்களின்றி தப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. (த–9)



*கொழும்பு மாநகர சபையின் 150 ஆவது ஆண்டு விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மேயர் ஏ.ஜே.எம். முசம்மில் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர்களான கபீர் ஹாசீம், ரவுப் ஹக்கீம், ஏ.எச்.எம். பௌசி, வெளிநாட்டுத் தூதுவர்கள், உலமாக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். நிகழ்வில் துஆப் பிரார்த்தனை நடைபெற்றதுடன் மாநகர சபையின் பெயரில் குர் ஆன் பிரதிகளும் வழங்கப்பட்டன.* (த–10)

## கட்டுத் துவக்கு வெடித்து இளைஞன் சாவு

கொழும்பு, ஏப் .5

வெல்லவாய ஏதிலிவெள பிரதேசத்தில் கட்டுத்துவக்கு வெடித்து இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார்.

அதே பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரொருவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். காட்டு மிருகங்களை வேட்டையாடுவதற்காகத் தயாரிக்கப்பட்ட கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்ததில் குறித்த இளைஞன் உயிரிழந்தமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (த)

## மைத்திரியின் உருவப்பொம்மை எரித்த 13 பேர் தஞ்சாவூரில் கைது

சென்னை, ஏப்.5

தமிழகத்தின் தஞ்சாவூர் ரயிலடியில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உருவப் பொம்மையை எரித்ததாகத் தமிழக வாழ்வுரிமைக் கட்சியைச் சேர்ந்த 13 பேரைப் பொலிஸர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

எல்லை தாண்டி மீன் பிடிக்கத் தமிழக மீனவர்களை அனுமதிக்கமாட்டோம். எல்லை தாண்டி வரும் தமிழக மீனவர்கள் படகுகளுடன் கைது செய்யப்படுவர்எனக்கூறிய இலங்கை ஜனாதிபதியைக் கண்டித்து இவர்கள் கோஷம் எழுப்பினர். இதன் பின்னர், இலங்கை ஜனாதிபதியின் உருவப் பொம்மைக்குத் தீ வைத்தனர். இதைப் பார்த்த பொலிஸார் தீயை அணைத்தனர்.

இது தொடர்பாக 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது. (த)

## கணிதம், ஆங்கில பாடங்களில் 50 சத வீதமானோர் சித்தியில்லை

### பரீட்சைகள் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 5

பாடசாலைகள் ஊடாகக் கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 50 சத வீதமானோர் கணிதம் மற்றும் ஆங்கில பாடங்களில் சித்தியடையவில்லை எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரி வித்துள்ளது.

பாடசாலைகள் ஊடாகப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 602 பேர் கணிதப் பாடத்தில் சித்தியடைந்துள்ளதுடன், ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 198 பேர் அந்த பாடத்தில் சித்தியடையவில்லை எனப் பரீட்சைகள் ஆணையாளர் எம்.என்.ஜே. புஷ்பகுமார தெரிவித்தார்.

அத்துடன் ஆங்கிலத்தில் 50 வீதத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் சித்தியடையவில்லை.

ஆங்கிலப் பாடத்தில் ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 701 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 943 மாணவர்கள் சித்தியடையவில்லை. பாடசாலைகள் ஊடாக முதல் முறையாகச் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய 2 லட்சத்து 57 ஆயிரத்து 322 மாணவர்களில் ஒரு லட்சத்து 77 ஆயிரத்து 612 மாணவர்கள் உயர் தரத்திற்கு தகுதி பெற்றுள்ளனர் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் மேலும் கூறியுள்ளார். (த)

## சடங்கு நிலை ஆற்றுகை நாளை

யாழ்ப்பாணம், ஏப்.5

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தயாரித்து வழங்கும் சடங்கு நிலை ஆற்றுகை நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம் பெறும் என கல்லூரி முதல்வர் வண கலாநிதி டி.எஸ். சொலமன் அறிவித்துள்ளார்.

துன்பங்களின் கிண்ணம் என்னும் தலைப்பில் பஜனையும் திருப்பாடுகளின் காட்சியும் இடம்பெறும். மக்களை கண்டு களிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.(த-50)

## பதவியிலிருந்து நீக்கப்பட்டார் நகர சபைத் தலைவர்

கொழும்பு, ஏப்.5

எம்பிலிப்பிட்டிய நகர சபைத் தலைவர் பதவியிலிருந்து வண. வேவல்துவ ஞானபிரபா தேரர் நீக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத் கூறுகையில்,

மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மூலம் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனைகளுக்கு அமைவாக வண.வேவல்துவ ஞானபிரபா தேரரின் சில தவறுகளால் நகர சபையில் ஊழல் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பிலான குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பில் உரிய காலத்தில் பதில் வழங்கப்படவில்லை. பதில் வழங்குவதற்குப் போதிய கால தவணைகள் வழங்கப்பட்ட போதிலும் அவர் அதனைக் கருத்தில் கொள்ளவில்லை. இந்த நிலையில் அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அத்துடன் எம்பிலிப்பிட்டிய நகர சபைத் தலைமைப் பொறுப்புக்களை முன்னெடுத்துச் செல்வதற்கு வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நகரசபை உபதலைவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது' என்றார். (த-10)

# சொந்த இடங்களில் எம்மை விரைவில் மீள்குடியேற்றுங்கள்

### வேம்பொடுகேணி, முகமாலை தெற்கு கிராம மக்கள் கோரிக்கை

பளை, ஏப். 5

கிளிநொச்சி மாவட்டத்தின் பளைப் பிரதேசத்தில் இன்னமும் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத இத்தாவில், வேம்பொடுகேணி, முகமாலை தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை விரைவில் மீளக் குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தின் வலி. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் சம்பூர் ஆகிய பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொண்டு வரும் வேளையில் கடந்த 1995 ஒக்ரோபர் மாதம் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறி 20 வருடங்களாக அகதி வாழ்க்கை வாழும் பச்சிலைப் பள்ளி மேற்குப் பிரதேச மக்களின் நலனிலும் அக்கறை கொள்ளுமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

போர் முடிவடைந்து ஐந்து வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை அப்பகுதி முழுமையாக வெடிபொருள்கள் அகற்றப்படவில்லையெனக் கூறி காலம் தாழ்த்தப்பட்டு வருகிறது. நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் அகதிவாழ்க்கை வாழும் பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேச மக்களின் துயர் துடைக்க அதிகாரிகள் தொடக்கம் அனைவரும் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர்கள் கேட்டுள்ளனர்.

இந்த மூன்று கிராம அலுவலர் பிரிவுகளிலும் ஒவ்வொரு பகுதி மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் உள்ள பகுதிகள் இன்னமும் விடுவிக்கப்படாத தால் 300 க்கும் மேற்பட்ட குடும்பங் கள் அகதிவாழ்க்கையேவாழ்ந்துவருவ தாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## வவுனிக்குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை

முல்லைத்தீவு, ஏப்.5

முல்லைத்தீவு, வவுனிக்குளத்தின் கீழ் இவ்வாண்டு இரண்டாயிரத்து 348 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாகக் காணப்படும் வவுனிக்குளத்தின் கீழ் உள்ளநீரின்அளவைக்கொண்டு 2 ஆயிரத்து 348 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது குளத்தின் நீர் மட்டம் 21 அடியாகவுள்ளதுடன் மத்திய துருசு நீர்ப்பாசன வாய்க்காலில் 68 ஏக்கரும், இடது கரை வாய்க்காலில் ஆயிரத்து 210 ஏக்கரும், வலது கரை வாய்க்காலில் 925 ஏக்கரும் என இரண்டாயிரத்து 203 ஏக்கரிலும், பொதுப்பங்குகளாக 145 ஏக்கரும் என இரண்டாயிரத்து 348 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோகச் செய்கை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விதைப்பு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி எனவும், நீர் விநியோக கடைசித் திகதி ஓகஸ்ட் 10ஆம் திகதி எனவும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.(த)

# மூன்று மாதங்களில் மட்டும் 100 பேருக்கு மேல் டெங்கு

தென்மராட்சி, ஏப்.5

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த மூன்று மாதங்களில் டெங்கினால் பீடிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 100 ஐத் தாண்டியுள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் 52 பேரும், பெப்ரவரி மாதத்தில் 32 பேரும், மார்ச் மாதத்தில் 29 பேரும் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

மார்ச் மாதம் 15ஆம் திகதி வரை டெங்கினால் பிடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்த போதிலும் அதன் பின்னர் பெய்த மழையினால் திடீரென அதிகரித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

டெங்கு ஏற்பட்டுள்ளதென உறுதிப்படுத்தப்பட்டதும் அந்த இடத்திலும் அதனை அண்டிய குடியிருப்புப் பகுதிகளிலும் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுமேலும்பரவாமல்தடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# பளை பிரதேச மருத்துவமனையின் பிரேத அறைக்குக் குளிரூட்டி வசதி

### அப்பகுதி மக்கள் கோரிக்கை

பளை, ஏப். 5

பளை பிரதேச மருத்துவமனைக்கு குளிரூட்டி வசதிகளுடன் பிரேத அறை அமைக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் மருத்துவமனைக்கு ஆண், பெண் விடுதிகளும் பிரசவ விடுதியும்அமைக்குமாறும்கோரிக்கை விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தற்போது இயங்கும் மருத்துவமனை நிர்வாக அலகுக் கட்டடத்தில் வெளிநோயாளர் பிரிவு, பிரசவ விடுதி, சிறுவர், ஆண்கள், பெண்கள் விடுதிகள் போன்றவை இயங்கி வருகின்றன.

இந்த நிலையில் மருத்துவமனை வளாகத்தில் தனித்தனி விடுதிகள் அமைக்குமாறும் அத்துடன் குளிரூட்டி வசதியுடன் கூடிய பிரேத அறையும் அமைக்குமாறும் கோரியுள்ளனர்.

கிளிநொச்சிக்கும் சாவகச்சேரிக்கும் இடைக்கப்பட்ட 40 கிலோ மீற்றர் தூரத்தில் ஏ - 9 வீதியுடன் இணைந்த நிலையில் பளை மருத்துவமனை அமைந்துள்ளது.

18 கிராம அலுவலர் பிரிவுகள் கொண்ட பளைப் பிரதேசத்தில் வாழும் மக்களின் நலன் கருதியும் எழுதுமட்டுவாழ் தொடக்கம் ஆனையிறவு வரையான ஏ - 9 வீதியில் போக்குவரத்து அதிகரித்துள்ளதால் அதில் ஏற்படும் விபத்துக்கள் காரணமாக பாதிக்கப்படுவோர் மற்றும் சாவடைவோர் கிளிநொச்சி மற்றும் சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் நிலை காணப்படுவதால் பளை மருத்துவமனையின் அபிவிருத்தியின் அவசியத்தையும் சுட்டிக் காட்டி மக்கள் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது பளை மருத்துவமனையில் சட்ட மருத்துவ அதிகாரியாகப் பயிற்சி பெற்ற மருத்துவர் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றுவதால் பிரேத அறை அமைக்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# வலைப்பாடு கடலேரியில் சட்டவிரோத வலை மீட்பு

வலி.தென்மேற்கு, ஏப்.5

பூநகரிப் பிரதேசத்தில் வலைப்பாடு கடலேரியில் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளால் கைவிடப் பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட பல ஆயிரம் ரூபா பெறுமதியான தடை செய்யப்பட்ட வலைகளும் கடல் அட்டைகளும் கிளிநொச்சி மாவட்ட நீதிவானின் உத்தரவை அடுத்து அழிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேசத்தில் வலைபாடு கடலேரியில் சட்ட விரோதமான முறையில் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி சிலர் கடற்றொழிலில் ஈடுபடுவதாக கிளிநொச்சி மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் துறைத் திணைக்களத்துக்குக் கிடைத்த தகவலையடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்து சென்ற அதிகாரிகள் கைவிடப்பட்ட நிலையில் இருந்த தடை செய்யப்பட்ட வலைகளையும் பெருந்தொகையான கடல் அட்டைகளையும் கைப்பற்றிக் கிளிநொச்சி நீதிமன்றில் ஒப்படைத்தனர்.


இதுபற்றி விசாரணை செய்த நீதிவான் இவற்றை அழிக்குமாறு உத்தரவிட்டதையடுத்து வலைகளும் கடல்அட்டைகளும் அழிக்கப்பட்டுள்ளன.

(த-115)

## உங்களுக்கு அமைதி உரித்தாகுக!

சாவுக்கு சவாலாகி வாழ்வுக்கு வழிகாட்டிய இயேசு உயிர்த்து விட்டார். "தந்தை என்னை அனுப்பியதுபோல் நானும் உங்களை அனுப்புகிறேன். உங்களுக்கு அமைதி உரித்தாகுக"! என்ற நம்பிக்கைதரும் வார்த்தையைக் கேட்டு நானிலமும் மகிழ்ந்தது. இதுவே இன்று உயிர்ப்பு விழாவாக உலகமே கொண்டாடி மகிழ்கிறது.

"அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தளும்பைப் பார்த்து அதில் என் விரல் விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்பமாட்டேன்" என அவரோடு வாழ்ந்த தோமாவே கூறினார். எட்டாம் நாள் இயேசு சீடர் முன்தோன்றி "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என வாழ்த்தி தோமாவிடம் இதோ என் கைகள், உன்கையை நீட்டி என் விலாவில் இடு, ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்" என்றார். "நீ என்னைக் கண்டதால் நம்பினாய் காணாமலே நம்புவோர் பேறு பெற்றோர்"- என உயிர்த்த இயேசுவின் மீது உலகமே நம்பிக்கையுடன் வழிபாடுகளிலும் வாழ்த்து கூறுதலிலும் இணைந்து மகிழ்கிறது.




கிறிஸ்து பிறந்தார் என்பதை விட, அவர் இறந்து உயிர்க்கவில்லை என்றால் கிறிஸ்தவமே மலர்ந்திருக்காது என்பதை இறைவார்த்தைகள் மூலம் இந்தத் திருச்சபையை இராயப்பா நீ ஒரு பாறை உன்மீது இந்தத் திருச்சபையைக் கட்டி எழுப்புகிறேன் என எமது வாழ்வை புதுப்பித்து முதல் பாப்பரசராக புனித இராயப்பரைத் தந்தார். அவர் வழிவந்த பாப்பரசர் பிரான்சிஸ் எமது நாட்டில் கால்பதித்து தமது அன்பின் சாட்சியத்தை வெளிப்படுத்தி சமாதானத்தின் தூதராக அமைதிக்கு அர்த்தமூட்டியதால் எம் மண்ணிலும் அன்பு சமூகம் மலர அழைப்பு விடுத்தார்.

இன்று நாம் எல்லோரும் சமாதானத்தின் தூதராக மாறி வன்கொடுமைகள், சமுக சீரின்மைகளை களைந்து நற்சமூகம் மலர உழைக்கும் உயிர்ப்பூட்டும் சக்திகளாக மாறும் ஒவ்வொரு செயலும் உயிர்ப்பில்இணைந்து அமைதிக்காக உழைக்கும் கரங்களோடு வாழ்த்துக் கூறுவோம்.

உயிர்ப்பின் உரித்தான நல்வாழ்த்துக்கள்

*யோசப் பாலா*
*செயலாளர்.*
*கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்.*

## பங்குனித் திங்கள் உற்சவம் நாளை

வட இலங்கையில் வரலாற்று புகழ் பெற்ற ஆலயமான சுட்டிபுரம் அம்மன் கோவிலின் 3 ஆவது பங்குனித் திங்கள் உற்சவம் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. விசேட நிகழ்வாக பாரம்பரிய முறைப்படி தீ மிதிப்பு வைபவமும் அன்றையதினம் இடம்பெறவுள்ளது.

அம்பாளுக்கு அன்றைய தினம் விசேட பூசைகள் இடம்பெற்று அம்பாள் வீதி உலா வருகை தருவார். அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் வைபவமும் இடம் பெறும். (த-122)

# கிறிஸ்துவின் உயிர்ப்பு அமைதியைத் தரட்டும்

### யாழ். ஆயர் ஈஸ்டர் செய்தி

யாழ்ப்பாணம்,ஏப்.5

கிறிஸ்துவின் உயிர்ப்பு உள்ளத்திலும் உலகிலும் அமைதியை ஏற்படுத்தட்டும் என யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தனது ஈஸ்டர் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இறைவன் எமது நம்பிக்கை வாழ்வைத் திடப்படுத்தி நாம் புத்துயிர் பெற்றவர்களாய் முன்னோக்கிச் செல்லத் துணையாகத்தான் ஒவ்வொரு வருடமும் ஈஸ்டர் விழாவை நாம் கொண்டாட அருள் கூர்ந்துள்ளார்.

மரணத்தை வென்றவராக, தீமைகளை, அநீதிகளை அழித்தவராக இயேசு மரித்து 3ஆம் நாள் உயிர்த்தெழுந்ததை இன்று நாம் மகிழ்வுடன் கொண்டாடுகின்றோம். கிறிஸ்தவ விசுவாசத்தின் மையமாக இந்த விழா அமைகின்றது.

உலகம் எங்கும் இன்றும் பல துன்ப துயரங்கள், மனித வாழ்வில் சலிப்புத் தன்மைகள், வேதனைகள், இடர்கள் பெருகி வரும் வேளையில் உயிர்த்த இயேசுவின் "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" (யோவா 20:21) என்ற நம்பிக்கையின் வார்த்தை எமக்கு ஆறுதலை தருவதாக உள்ளது.- இயேசுவின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டு துன்பங்களை மரணத்தை வென்ற அவரின் வழியில் நாமும் நடந்து எமது துன்ப துயர, இருள் நிறைந்த வாழ்வில் இருந்து விடுபட்டு உள்ளத்திலும் உலகிலும் இறை அமைதி பெருகிட உயிர்த்த ஆண்டவரை வேண்டுவோம்.

உங்கள் எல்லோரினதும் மனங்களில் உயிர்த்த கிறிஸ்து நிறை அமைதியை அருள ஆசிக்கின்றேன். உங்களுக்கு எனது ஈஸ்ரர் வாழ்த்துக்கள் உரித்தாகுக. (த)



## யாழ். அத்தியடி பிள்ளையார் கோயில் பெருந்திருவிழா - 2015

| | | | | |
|---|---|---|---|---|
| 06.04.2015 | திங்கட்கிழமை | கொடியேற்றம் | நண்பகல் | 12.00மணி |
| 10.04.2015 | வெள்ளிக்கிழமை | தங்கரதம் | மாலை | 07.00 மணி |
| 13.04.2015 | திங்கட்கிழமை | வேட்டைத்திருவிழா | காலை | 07.30 மணி |
| 13.04.2015 | திங்கட்கிழமை | சப்பரம் | மாலை | 07.00 மணி |
| 14.04.2015 | செவ்வாய்க்கிழமை | தேர் | காலை | 09.00 மணி |
| 15.04.2015 | புதன்கிழமை | தீர்த்தம் | காலை | 11.00 மணி |
| 16.04.2015 | வியாழக்கிழமை | பூங்காவனம் | மாலை | 07.00 மணி |

இங்ஙனம்
பிள்ளையார் பணியில் நிற்கும் கோயில் நிர்வாகம்.

விளம்பர அனுசரணை:
மைதிலி நகைமாடம்
89c, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். T.P: 021 222 7902
யாழ் மைதிலி ஜுவலர்ஸ்
79c, Sea Street Colombo - 11 T.P: 011 239 6239

ROWAD الرواد
சிங்கப்பூரில்
கௌரவமான வி.ஐ.பி. வீடுகளில்
பணிப்பெண்களுக்கான
வேலை வாய்ப்பு



| வேலை | தொகை | சம்பளம் |
|---|---|---|
| பணிப்பெண் (முதல் தடவை) | 50 | 45000-50,000 |
| பணிப்பெண் சிங்கப்பூர் அனுபவமுள்ளவர்கள் | 50 | 55000-60,000 |

- உணவு, மருத்துவம், தங்குமிடம், போக்குவரத்து இலவசம்
- 2 வருட வேலைவாய்ப்பு, கல்வி தகமை தரம் 10 வரை
- இரண்டு வருட முடிவில் இருவழி விமானச்சீட்டு இலவசம்
- ஏனைய சலுகைகள் இலங்கை - சிங்கப்பூர் சட்டங்களுக்கு அமைவாக

றொவாட் ஏசியா ஓவர்சீஸ் (பி) லிமிட்..
இல: 74-1வது மாடி ஸ்ரீ. சங்கராஜ மாவத்தை கொழும்பு-10
தொ.பே. 0115 515 552, 077 44 77280
LL NO 3365 E- Mail: info@rowadasia.com Advt 3365/01/14
Hotline : 077 44 77 280

## பொலிஸ் சேவையில் இணைய தமிழ் இளைஞருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5
வடமாகாணத்தில் இயங்கும் பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழியில் சேவையாற்றவல்ல தமிழ்ப் பொலிஸாருக்கான பற்றாக்குறையை முடிந்த அளவு போக்குவதற்கான வாய்ப்பொன்று வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்குக் கிட்டியுள்ளது என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ.ஜயசிங்க தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொலிஸ் சேவையில் பொலிஸ் கான்ஸ்டபிள்களாக இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரல் கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதிய இலக்கம் 1907 கொண்ட அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி, பொலிஸ் கான்ஸ்டபிள் பதவியில் இணைந்து கொள்வதற்கான தமது விண்ணப்பங்களை எதிர்வரும் மே மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கமையத் தயாரித்து அனுப்பி வைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### செல்வன் இராசேந்திரம் செல்வானந்தன்

(கஜானந் பிரிண்டேர்ஸ் உரிமையாளர்)

தோற்றம்: 17.10.1982 மறைவு: 04.04.2015



உடுவில் கிழக்கு, கற்பகப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் செல்வானந்தன் நேற்று (04.04.2015) சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் இராசேந்திரம்-ஞானமணி தம்பதியரின் அன்பு மகன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1.30 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 8999997, 0775924817.

தகவல் : குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சுந்தரம் சத்தியமூர்த்தி

இல.6 பெரியதம்பிரான் வீதி வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் சத்தியமூர்த்தி நேற்று (24.04.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்- இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், உருத்திராதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராமசாமி - கனகாம்பிகை தம்பதிகளின் மருமகனும் இளங்கீரன் (பிரான்ஸ்), இளங்கோ ஆகியோரின் பாசமிகு தந்தையும் அனுசியாவின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப.1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 984 8963

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 • 02 • 1920



மறைவு 05 • 04 • 2015

### நாகர் ஏரம்பு

(முன்னாள் இ.போ.ச.சாரதி)

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் ஏரம்பு 03.04.2015 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகர் - சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான மாதவர் - பொன்னு தம்பதியரின் மருமகனும், சின்னம்மாவின் அன்புக் கணவரும், சிவஞானம், குகதாசன், காலஞ்சென்ற மல்லிகாதேவி மற்றும் தேவராசா (லண்டன்), காலஞ்சென்ற செல்வராசா மற்றும் சந்திராதேவி, சிவானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேஸ்வரி, அன்னப்பிள்ளை, காலஞ்சென்ற நாகராஜா மற்றும் விஜயலட்சுமி (லண்டன்), மகாலிங்கம்,மாலதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொன்னாலையில் உள்ள அவரது இல்லத்தில் நாளை 06.04.2015 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னாலை தெற்கு,
சுழிபுரம்

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி பொன்னம்மா நாகலிங்கம்

சரசாலை வடக்கு, நுணுவில் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா நாகலிங்கம் நேற்று (04.04.2015 ) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, தம்பிப்பிள்ளை தம்பு ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகரத்தினம் (ரஞ்சனாஸ் - சாவகச்சேரி), குலசேகரம் (கோபி கடை - நுணாவில்), ஞானசேகரம் (பூஞ்சோலை - சாவகச்சேரி), சோமசேகரம் - (சோபி ரெக்ஸ் - நெல்லியடி) கலாவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் நகுலேஸ்வரி விஜிதா ஜெயரஞ்சிதம் கேதீஸ்வரி அருந்தவநாதன் (இ.போ.ச. பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுராஜ் - சத்தியா, தசிதரன் - டசித்தா, தர்சினி - சிவபாலன், கஜேந்திரன் கோபிகா -பிரதீபன், முரளி - டினோஜா, ஆரபி விதுர்சன் வினோதன் கஜானி சோபிகன் சங்கீத் சாரங்கன் சாம்பவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அம்சனா அபிசேக் அக்சயன் அர்ஜுன் பிரவீன் கவிசன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2015) ஞாயிற்றுக்கிழமை பிப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சரசாலை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நுணுவில் பிள்ளையார் கோவிலடி,
சரசாலை வடக்கு , சாவகச்சேரி.

தகவல் :
குடும்பத்தினர்.

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்




- வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்
- உலகம் முழுவதும் 1040+ கிளைகள்
- INTERNATIONAL DIPLOMAS.
- ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்).

வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள்

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.



## நாகபூஷணி திருமண சேவை

டாக்டர், எஞ்சினியர். வங்கி உத்தியோகத்தர், அரச உத்தியோகத்தர், தனியார்துறை மற்றும் உள்நாட்டு/ வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் எம்மிடம் நிறைய உள்ளன. நீங்கள் விரும்பிய மணமக்களை மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்துதரப்படும். 7 நாள்களும் திறந்திருக்கும்.

383/14B, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வடக்குப் பக்கம்)

T.P : 021 222 9306, 071 894 5692,
077 138 7596, 075 554 6000

Email : nakapoosanywedding@gmail.com



## நீர்க்கசிவைத் தடுக்கும் இரசாயன பொருள்கள்

இதுவரை காலமும் யாழ். வீதி, மானிப்பாயில் இயங்கிவந்த கீழ் குறிப்பிட்ட ஸ்தாபனம்

இல. 55, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

என்னும் முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை எம் இனிய வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உங்கள் இல்லங்கள், நிறுவனங்கள் மற்றும் வியாபார ஸ்தாபனங்களில் உள்ள சிமெந்தினாலான கட்டடங்கள், நீர்த்தாங்கிகள் ஆகியவற்றில் ஏற்படுகின்ற நீர்க்கசிவுகளை உடனுக்குடன் சீர் செய்து தருகின்றோம்.

**NORTH AND EAST ENGINEERING**
(Exclusive Dealer for Finco) Hot Line:0777568686,
No.55, Stanley Road, Jaffna. Sri Lanka Tel: 0212222363


## சமாதான நீதிவானாக நியமனம்



அச்சுவேலி, ஏப். 5

அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த ஆ.ந.இராசேந்திரம் சமாதான நீதிவானாக நீதி அமைச்சால் நியமிக்கப்பட் டுள்ளார்.

இவர் யாழ்.மாவட்ட மேல் நீதி மன்ற ஆணையாளர் திருமதி கே.சிவபாதம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

தெல்லிப்பழை யூனியன் கல் லூரி மற்றும் மருதானை சிரேஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாண வனான ஆ.ந.இராசேந்திரம், யாழ். மாவட்ட சபையின் உறுப்பினராக பதவி வகித்த தோடு 1981–1983 காலப் பகுதியில் அதன் தலைவராகவும் பதவி வகித்தவர். இவர் இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப் பினருமாவார். (வ–11)

## மரண அறிவித்தல்



### திருமதி சத்தியபாமா தவராசா

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03.10.1945 | 03.04.2015 |

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும், கொண்ட திருமதி சத்தியபாமா தவராசா 03.04.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான பொன்னையா ஐயாத்துரை - இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகளும், தாமோதரம்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தவராசாவின் பாசமிகு மனைவியும், சிவாஜினி ( கனடா ), சிவதர்சன் ( UK ), சிவகாந்தன் ( Director, Vesta property Developers Ltd ), சிவப்பிரியா ( கனடா ) சிவரூபன் (UK), ஆகியோரின் அன்புத்தாயாரும் வசந்த குணபாலன் ( கனடா ), றஜிதா ( UK), நிருபா ( UK ), அகிலன் ( கனடா ), உதயப்பிரியா ( UK ), ஆகியோரின் அன்பு மாமியாரும், தனபாலசிங்கம், பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மல்லிகாவின் அன்பு மைத்துனியும், பூமிகா, தரனிகா, அனுஷன், அனோஜன், ஹரிச்சரன், சங்கீர்த்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.04.2015) ஞாயிறு காலை 9.00 மணி தொடக்கம் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2015) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகள் கல்கிசை இந்துமயானத்தில் மதியம் 12.00 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகன்

TEL : 077 225 7639, 071 842 5405,
011 315 0927

(சி. 15338) (45.9.3)

*Jaffna University Science Teachers' Association (JUSTA)*
*University of Jaffna*

We cordially invite you to the lecture on

**"The (Tamil) Nation as Community"**

**By Prof. Qadri Ismail**
(Associate Professor of English, University of Minnesota, U.S.A)

**Date : 7th of April 2015**

**Time : 4.00 pm**

**Venue : Library Auditorium**

**Executive Committee - JUSTA**

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த பஜார் –1 பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய்த் தடுப்பூசி (ஏ.ஆர்.வி) வழங்கப் படவுள்ளது.

இதன்படி நாளை திங்கட்கிழமை காலை 9 மணி முதல் மு.ப. 11 மணி வரை நாவலர் வீதி கீரிப் பிளையார் கோயிலடியிலும், மு.ப. 11.30 மணி முதல் பி.ப. ஒரு மணி வரை பிரப்பங்குளம் வீதியிலும்–

நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 9 மணி முதல் மு.ப. 11 மணி வரை பி.ஏ. தம்பி லேனிலும்–

மு.ப. 11.30 மணி முதல் பி.ப. ஒரு மணிவரையிலும் ஓட்டு மடம் மெதடிஸ்த திருச்சபை கோயிலடியிலும்–

8 ஆம் திகதி காலை 9 மணி முதல் மு.ப.11 மணி வ்ரை கில்னர் வீதியிலும் பி.ப.11.30 மணி முதல் பி.ப.ஒரு மணி வரை கஸ்தூரியார் வீதி றொலக்ஸ் பேக்கரி அருகிலும் தடுப்பூசி போடப்படும். (ஓ–10)

## மரண அறிவித்தல்

### இராசலிங்கம் சிறிராம்

(உரிமையாளர்- ஸ்ரீ வரதராஜா வெதுப்பகம் - வழக்கம்பரை, சுழிபுரம்)

பிறப்பு : 07.07.1973 இறப்பு : 02.04.2015



நெல்லியான், சுழிபுரத்தைப், பிறப்பிடமாகவும் கம்பனை அம்மன் வீதி,காளுவன், சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிறிராம் 02.04.2015 இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் மீனாட்சி தம்பதியரின் பாசமிகு மகனும் மகாலட்சுமி யின் அன்புக்கணவரும் காலஞ் சென்றவர்களான வேலாயுதம் - அற்புததேவியின் மருமகனும் இந்துமதி (பிரான்ஸ்), இந்துநேசன்(ஆஸ்திரேலியா), காலஞ் சென்ற ஈஸ்வரி, மற்றும் தேவராஜன் (லண்டன்), அனுதா (சுவீடன்) ஆகியோரின் சகோதரரும் ஜெய காந்தன், சிவப்பிரியா, அபிராமி, தர்சன்ஆகியோரின் மைத்துனரும் மகிழினி, லக்ஷாயினி(யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) மோகன்ராம், ஜெயராம், நாரா யனி (பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாச மிகு தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (05/04/2015) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அவரது வீட்டில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பொன்னாலை பெரியவர் கோயிலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளுவன், சுழிபுரம்.

தகவல் : குடும்பத்தினர்.

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ்.அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை திங்கட் கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து எதிர்வரும் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

உற்சவத்தில் வேட்டைத் திருவிழா 13 ஆம் திகதி திங் கட்கிழமை மாலை 7.30 மணிக்கும் 14 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 15 ஆம் திகதி தீர்த்தத் திரு விழாவும் இடம்பெறவுள் ளன. உற்சவங்களில் அடியார்களை கலந்து கொள் ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுக்கொண் டுள்ளனர். (ஓ–10)

## மரண அறிவித்தல்

### முருகேசு - சிவஞானரத்தினம் (சிங்கி)

(ஓய்வுபெற்ற இரசாயனவியல் ஆசிரியர் - யாழ்இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி)



காரைநகர், தபாற்கந்தோரடியைப் பிறப்பிடமாகவும் 112, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு. சிவஞானரத்தினம் 02.04.2015 வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான C.K.முருகேசு - சின்னக்குட்டி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - தையல்முத்து தம்பதியரின் மருமகனும் வள்ளியம்மையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அருள்ரத்தினம், குணபாக்கியம், கனகமணி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, K.V.பொன்னம்பலம், செல்லத்துரை, கணபதிப்பிள்ளை, கந்தையா, தங்கம்மா, இராசம்மா ஆகியோரின் மைத்துனரும் நிரஞ்சனி (கனடா), ஆனந்தரத்தினம்(இலங்கை வங்கி), இன்பரத்தினம்(எந்திரி கடற்றொழில் நீரியல்வள அமைச்சு) ஆகியோரின் அருமைத் தந்தையும், தயாபரன்(கனடா), கேதீஸ்வரி (ஆசிரியை - இந்து மகளிர் கல்லூரி) Dr. யசிந்தா (போதனா வைத்திய சாலை,பேராதனை) ஆகியோரின் மாமனாரும் பிரவீன், பிரவீனா, விதுசன், தர்மிதா ஆகியோரின் அருமைப்பாட்டனாரும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, மற்றும் பொன்மணி, காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் சரஸ்வதி, காலஞ்சென்ற வர்களான சபாநடேசன், பராசக்தி ஆகியோரின் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2015) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

112, பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்





| திருமதி இராசையா றோசலின் குருஸ் | | திருமதி ததேயு செல்வம் வினோதினி கூஞ்ஞ | |
|---|---|---|---|
| பிறப்பு | இறப்பு | பிறப்பு | இறப்பு |
| 24.02.1932 | 01.04.2015 | 21.03.1982 | 03.04.2015 |

தலைமன்னாரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி. இராசையா றோசலின் குருஸ் 01.04.2015 ஆம் திகதியும், திருமதி ததேயு செல்வம் வினோதினி கூஞ்ஞ 03.04.2015 ஆம் திகதியும் அகால மரணமடைந்தனர். அன்னார்களின் இறுதிக்கிரியைகள் நாளை(06.04.2015) திங்கட் கிழமைதலைமன்னார் புதிய லோறன்சியார் ஆலயத்தில் காலை 8.30 மணியளவில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தலைமன்னார் மேற்கு,
மன்னார்.

தகவல்: குடும்பத்தினர்.
023 228 1041

advt@uthayan.com 0215671111

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கை அச்சுறுத்தும் டெங்கு: ஒடுக்க உள்ளார்ந்த உணர்வு வேண்டும்

வடக்கு வாழ் மக்களைப் பயமுறுத்தும் ஆபத்துகளில், இப்போது முதல் நிலை வகிப்பது டெங்கு நோய்ப் பரவலாகும். வடமாகாணத்தின், அதன் பெரும் பிராந்தியத்தின், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களிலும், டெங்கு அதி வேகமாகப் பரவி வருவதாகப் புள்ளி விவரங்கள் வெளிப்படுத்துகின்றன.

மாரி காலத்தில் மலேரியா நோய் ஆபத்துக் குறித்து சுகாதாரப் பகுதியினர் மக்களை எச்சரிப்பது போன்று, கோடை காலத்தில் டெங்கு குறித்து எச்சரிக்க வேண்டிய தேவை உண்டாகின்றமை வழமை.

அந்த வரிசையில், யாழ். மாவட்டத்தின் புதிய அரச அதிபர் நா.வேதநாயகன், டெங்கு நோய் பரவுவதனைத் தடுப்பதற்கான விழிப்புணர்வை உண்டாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்கிறார்.

♦ கிராமங்கள் தோறும் சுகாதார மேம்பாட்டு விருத்தித் திறன் குழுவை அமைக்க வேண்டும். அந்தக் கிராமங்களின் சுகாதாரப் பிரச்சினை கள், டெங்குப் பரவலைத் தடுத்தல், கட்டுப்படுத் தல் என்பனவற்றை முன்னிறுத்தி அவை செயற்பட ஊக்கம் அளித்தல் பிரதான பணிகளாகவும் இலக்காகவும் அமைய வேண்டும் என்றும்.

♦ மேற்குறிப்பிட்ட குழுக்கள் கிராம சேவகர்களைத் தலைவர்களாகவும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை செயலாளர்களாகவும் கொண்டு இயங்கும் என்றும் --

♦ அவை, எதிர்வரும் முப்பதாம் திகதிக்கு முன்னர் செயற்பட ஆரம்பிக்க வேண்டும் என்றும் - அரச அதிபர் வலியுறுத்தி உள்ளார்.

டெங்கு நோய் பரவுவதைத் தடுக்கவும் சுற்றுச் சூழலைக் கண்காணிக்கவும், மாவட்டத் தில் உள்ள அரச நிறுவனங்களிலும், தனியார் நிறுவனங் களிலும் சுகாதார மேம்பாட்டுக் குழுக்களை அமைக்கும் திட்டத்தையும் அவர் அறிமுகப்படுத்தி உள்ளார்.

அந்தக் குழுக்கள் நாளாந்தம் தமது நிறுவனத்தின், சுகாதார நிலையை குறிப்பேடு ஒன்றில் பதிவு செய்ய வேண்டும் --

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்குச் சென்று அவற்றின் நிலைமைகளை நேரில் பார்வையிட வேண்டும். அத்தோடு தமது அவதானிப்புகளையும் தவறாது பதிவிட வேண்டும் -- என்றும் வகுக்கப்பட்டு உள்ளது.

வடக்கு மாகாணத்தில் இந்த ஆண்டில் கடந்து சென்ற மார்ச் மாதம் வரையில், 1,156 பேர் டெங்குத் தொற்றினால் பாதிக்கப்பட்டனர். மாணவன் ஒருவன் உயிரிழக்க நேர்ந்தது என்பது புள்ளி விவரம்.

எனினும், கடந்த ஆண்டில் யாழ்ப்பாணம் - 1833, கிளிநொச்சி - 90, மன் னார் - 357, வவுனியா - 142, முல்லைத்தீவு - 132 என்ற எண்ணிக்கைகளை புள்ளி விவரங்கள் பிரதிபலிக்கின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில், டெங்கு நோயின் பாதிப்பை இயன்றளவு தடுப்பதற்கு, அரச தரப்பு மேற்கொள்ளும் நடவடிக்கைகள், மக்களிடம் அதற் கான விழிப்புணர்வும் செயற்பாடுகளும் இல்லையெனில் பயனற்று நீர் மேல் எழுத்துப்போன்று ஆகிவிடும்.

வடமாகாணத்தில் டெங்கு நோய்த் தொற்று அதிகரித்து வருவதாகக் கவலையுடன் தொட்டுக் காட்டினால் மட்டும் போதாது. அதனை நிறுத்து வதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து விரைந்து செயற்பட வேண்டும் என்பதே அவசரமும் அவசியமுமாகும்.

டெங்குத் தாக்கத்தினால், மனித உயிர்கள் விழுங்கப்படுமானால், அதன் பின்னர் காரண, காரியங்களை அவசர அவசரமாக மேற்கொண்டாலும், அவை பயன்தரும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை.

கடந்த மூன்று வருடங்களில், நாடளாவிய மட்டத்தில் 2013 இல் - 32,063 பேர்களையும், 2014 இல் - 47,246 பேர்களையும், 2015 இல் மார்ச் மாதம் வரை - 11,611 பேர்களையும் டெங்கு நோய் பற்றிக் கொண்டது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

இதனைக் கருத்தில்கொண்டு வடக்கின் மாகாண அரசும், மாவட்டங்களில் மத்திய அரசின் ஆட்சி அலகுகளும் --

டெங்கு நோய் பரவாது தடுப்பதற்கு, சொல் ஒன்று செயல் வேறு என்ற வழமையான வாய்ப்பாட்டைத் தூக்கி எறிந்து விட்டு --

வெறும்திட்டங்களைக்கீறி, சுருட்டி மடித்து வைத்து விட்டோ, அன்றி கெச்சிதம் பேசிக் கொண்டோ இருக்காது, மிகக் கொடும் நோயான டெங்கில் இருந்து, மக்களைக் காப்பாற்றும் உள்ளார்ந்த மனங்களுடன் -- கூட்டு உழைப்புடனும் மக்கள் நல உணர்வுடனும் பணி செய்ய மனங் கொள்ளட்டும்.

அதுவே உயிர்காக்கும் உன்னத மனிதப் பணி. சகோதரத்துவத்தின் மெய்யான வெளிப்பாடுமாகும்.

# தேர்தல் விஞ்ஞாபனத்தை மறந்து அரசு செயற்படுகின்றது

## தெரிவிக்கிறார் பொன் செல்வராசா எம்.பி.

■ ஜனா

ஏப்ரல் 23ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அவ்வாறு கலைக்கப்படுமாக இருந்தால் புதிதாக 26 பேரை அமைச்சர்களாக நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை. புதிய ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 30பேருக்கு மேற்பட்ட அமைச்சர்கள் இருக்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், இன்று முழுமையாக அமைச்சர்களின் எண்ணிக்கை 77 ஆக உயர்ந்துள்ளது. சிலவேளைகளில் இந்த எண்ணிக்கை மேலும் உயரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ அரசை எதிர்த்தே மக்கள் வாக்களித்தனர். ஆனால், பழைய அரசிலுள்ள அமைச்சர்களை புதிய அமைச்சர்களாக நியமித்ததன் ஊடாக 'புதிய ஆட்சி அல்லது நல்லாட்சி' என்பதனைத் தக்கவைக்க, புதிய அரசு மறந்துள்ளது. என்னைப்பொறுத்தவரை அரசு தேர்தல் விஞ்ஞாபனத்தை மறந்து வேறு பாதையில் செல்கின்றது என எண்ணத்தோன்றுகின்றது.

– இவ்வாறு தெரிவித்தார் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

என்னைப் பொறுத்தவரையில் 19ஆம் திருத்தச்சட்டத்தினால் ஒட்டுமொத்த நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும் நன்மையே தவிர, தமிழர்களுக்கு விசேடமாக எந்தவொரு நன்மையும் கிடையாது.

மாகாணசபை முறையானது 1987 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. அன்றுமுதல், சிங்கள மக்களே இதன் நன்மைகளை அனுபவித்து வந்தனர்.

தமிழர் பகுதிகளில் ஆளுநர் ஆட்சியே நிலவியது. தமிழ்த் தரப்புகளுக்கு மாகாண அரசை அமைக்கும் வாய்ப்பு அருகியே அமைந்திருக்கவில்லை.எவருக்காக இந்த மாகாண சபை முறைமை கொண்டு வரப்பட்டதோ அவர்கள் (தமிழர்) அதிகளவு நன்மை பெறவில்லை என்பதே உண்மை.

ஆகவே, 2014ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு ஆகக்கூடிய 11 பிரதிநிதித்துவத்தை நாங்கள் பெற்றோம்.

நாங்கள், அடுத்த பெரும்பான்மையாக இருந்த தமிழ் பேசுகின்ற கட்சியான முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து ஆட்சியமைக்கலாம் என்று அவர்களிடம் கோரிக்கை விடுத்தோம்.

இறுதியாக நாம் முதலமைச்சர் பதவியை வழங்குவதற்கு முன்வந்தும் கூட, அவர்கள் மத்திய அரசில் இணைந்திருந்தமை காரணமாகவும், கிழக்கு மாகாணசபையில் ராஜபக்ஷ அரசு ஆதிக்கம் செலுத்தியமை காரணமாகவும் அவர்களுடன் இணைந்து ஆட்சி அமைத்துக் கொண்டனர்.

பின்னர் முஸ்லிம் காங்கிரஸுக்கும் ஐ.ம.சுவுக்கும் இடையில் ஏற்பட்ட விரிசல் காரணமாக அவர்களால் ஆட்சியைக் கொண்டு நடத்த முடியாமை காரணமாக ஒரு பகிரங்க அழைப்பை முஸ்லிம் காங்கிரஸ் வெளியிட்டது.

அதன் பிரகாரம் உண்மையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போயிருக்கக்கூடாது.

இருந்தாலும் கடந்த இரண்டரை வருட ஆட்சிக்காலத்தில் தமிழர் அனுபவித்த வேதனைகள் – உதாரணமாக, அபிவிருத்தியைப் புறம்தள்ளியமை நியமனங்களில் சட்ட ரீதியாக கூடுதலான புள்ளிகளைப் பெற்று விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் கூட, அங்கிருந்த மாகாண சபையில் அதிகாரம் பெற்றவரின் புறக்கணிப்பால் தமிழ் இளைஞர்களின் நியமனங்கள் தட்டிக்கழிக்கப்பட்டதனையும் நாங்கள் உணர்ந்தோம். இவ்வாறான செயற்பாடுகளினால் இளைஞர்கள் மிகவும் விரக்தியடைந்த நிலையில் இருந்தனர்.

அந்தளவுக்கு நிலைமை மோசமாக இருந்தமையினால், கிழக்கு மாகாண மக்கள் மற்றும் இளைஞர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சு நடத்தி இரண்டு அமைச்சுப் பதவிகளைப் பெற்றுள்ளோம். விரைவில் பிரதித் தவிசாளர் பதவியும் கிடைக்குமென நினைக்கின்றேன்.இதன் மூலம் தமிழ் மக்களுக்கு ஏதாவது சில நன்மைகளைச் செய்யலாம் என எதிர்பார்க்கின்றோம்.

நல்ல விடயங்களுக்கு அரசுக்கு ஆதரவு வழங்கப்படுகிறது. நாங்கள் தமிழருக்கு எதிரான நிலை தோன்றும்போது அதனை எதிர்க்கவும் தயங்கமாட்டோம்.

எமது கோரிக்கைக்கு இணங்க சிறையில் இருக்கும் இளைஞர்களை விடுவிக்க நீதியமைச்சு ஒரு குழுவை அமைத்துள்ளது.

முன்னைய அரசால் கபளீகரம் செய்யப்பட்ட 6,000 ஏக்கர் காணிகளில் 400 ஏக்கர் காணிகள் ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் பிரதமர் ஆகியோரால் மக்களுக்கு மீளளிக்கப்பட்டுள்ளதுடன் விரைவில் மேலும் 600 ஏக்கர் காணிகள் மீளளிக்கப்படும் எனவும் உறுதியளித்துள்ளனர்.

மேலும் தற்போது ஏப்ரல் 23ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஏனெனில், எதிர்வரும் ஏப்ரல் 23ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படுமாக இருந்தால் 26 பேரை அமைச்சர்களாக நியமித்திருக்க முடியாது. ஆகவே, அமைச்சர்களை நியமித்ததன் உள்நோக்கம் என்ன என்பதனைச் சொல்ல முடியாதவர்களாக இருக்கின்றோம். ஆனால், புதிய ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 30பேருக்கு மேற்பட்ட அமைச்சர்கள் இருக்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், இன்று முழுமையாக அமைச்சர்களின் எண்ணிக்கை 77 ஆக உயர்ந்துள்ளது. சிலவேளைகளில் இந்த எண்ணிக்கை மேலும் உயரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் கடந்த ஜனாதிபதித் தேர்தல் ஊடாக ராஜபக்ஷ என்ற (தனிமனிதரை) எதிர்த்து அல்ல, ராஜபக்ஷ அரசை எதிர்த்தே மக்கள் வாக்களித்தனர்.

ஆனால், பழைய அரசிலுள்ள அமைச்சர்களைப் புதிய அமைச்சர்களாக நியமித்ததன் ஊடாக புதிய ஆட்சி அல்லது நல்லாட்சி' என்பதனைத் தக்கவைக்க, புதிய அரசு மறந்துள்ளது. என்னைப்பொறுத்தவரை அரசு தேர்தல் விஞ்ஞாபனத்தை மறந்து வேறுபாதையில் செல்கின்றது என எண்ணத்தோன்றுகின்றது.

வடக்கு, கிழக்குப் பல்கலைக்கழகங்களில் அதிக சிங்கள மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்பது உண்மை. பல்கலைக்கழகங்களில் சிங்களவர்கள் சம பலமாக இருக்க வேண்டும் என முன்னைய அரசின் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்காவால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே, கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அதிக சிங்கள மாணவர்கள் உள்வாங்கப்பட்டதற்குக் காரணமாகும். எனினும், வடக்கு, கிழக்குப் பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்ளப்படும் சிங்கள மாணவர்களுடன் ஒப்பிடுகையில், குறைந்தளவான தமிழ் மாணவர்களே தெற்குப் பல்கலைக்கழகங்களில் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர். இது நியாயமற்ற செயல்.

கடந்த காலங்களில் இவ்வாறான பிழைகளைத் தட்டிக்கேட்டாலும் ராஜபக்ஷ அரசு அதனை நிவர்த்தி செய்ய முயலவில்லை.

இவ்விடயம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்ணும் கருத்துமாக உள்ளது. இனி, கூடுதலான சிங்கள மாணவர்களை அனுமதிக்க விடமாட்டோம்.அதனை எவ்வாறு குறைக்கலாம் என்பதனை அறிய சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக அதிகாரிகளுடன் கலந்துரையாடுவோம். தேவைப்பட்டால் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கதைப்பதற்கும் தயாராக இருக்கின்றோம். 2009 இற்கு பின்னர் கூடுதலான பயங்கரவாதம் இருந்தது. அதுதான் அரச பயங்கரவாதம்.

இந்த அரச பயங்கரவாத காலத்தில்தான் கூடுதலான இளைஞர், யுவதிகள் கடத்தப்பட்டார்கள். உண்மையை சொல்லப்போனால் சிலர் இறந்தும் போனார்கள். சிலபேர் இருக்கின்றார்கள் என்று நம்பப்படுகின்றது.

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமரை சந்திக்கச் சென்றிருந்த போது இவ்விடயம் தொடர்பாகப் பேசினோம். அதன்போது கருத்துத் தெரிவித்த பிரதமர் இரகசிய முகாம்கள் என்று எவையும் இல்லை எனத் தெரிவித்தார். ஆனால், இரகசிய முகாம்கள் இருக்கின்றன என நாங்கள் சுட்டிக்காட்டினோம்.யார் கடத்தப்பட்டார்கள், எந்த இடத்தில் வைத்து கடத்தப்பட்டார்கள், யாரால் கடத்தப்பட்டார்கள் என்பதனை எல்லாம் கூறினோம். இதற்கு எல்லாம் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களில் கடத்தப்பட்டவர்களின் பெற்றோர் மற்றும் மனைவிமார்கள் முறைப்பாடு செய்துள்ளார்கள். எந்த பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்கள் என்பதுகூட எம்மிடம் இருக்கின்றது.

நாங்கள் இறப்புச் சான்றிதழைப் பெறுவதாக இருந்தால் இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பே அவற்றை பெற்றிருக்கலாம். ஏனென்றால், அரசால் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது 'விரும்பியவர்கள் இறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம்' என்று. அந்நேரம் அதனைப் பெற்றிருக்கலாம்.

ஆகவே, மக்கள் இறப்புச் சான்றிதழைப் பெறத் தயாராக இல்லை, அவர்கள் வழங்கும் நிவாரணமும் மக்களுக்குத் தேவையில்லை, மக்கள், "நிவாரணம் வேண்டாம். எங்களுக்கு காணாமற்போன உறவுகளே வேண்டும்" என்கின்றார்கள்.

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### காணி விற்பனைக்கு
இராச வீதியில் இருந்து 150 யார் தூரத்தில் கோண்டாவிலுக்கு அருகில் செல்லும் பாதையில் வாமஸ் முன் ஒழுங்கையில் தொங்கலில் உள்ள 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (சி/17317)(4.3.7)
தொடர்பு: 077 899 6112, 021 300 1104

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
01.Bajaj Discover 135
02.Bajaj XCD 135
மிகவும் நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள்கள் உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 076 683 8717, 077 736 1862
(58462)(4.3.7)

### TV கள் மலிவு விற்பனை
SONY Wega Flat 14"-5000/=, 21"-10000/=, 25" - 14000/=, SONY DVD-3000/=, ரேடியோ கசெற்-3000/=, BOX, குளிர்சாதனப் பெட்டி- 20000/=
சோனி ரேடிட் செவிரா
(கொமர்ஷல் வங்கி எதிரில்)
56, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம். T.P: 077 044 0570

### நிலை, யன்னல்கள் விற்பனைக்கு
பழைய பாலை மர நிலை, யன்னல்கள் விற்பனைக்குள்ளன.
(58264)(4.3.7) தொடர்பு: 077 755 6244

### விற்பனைக்கு
இல.84, 86 கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் 4 பரப்புக் காணியில் உள்ள 5 அறைகள், 2 குளியலறைகள் கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 807 2985
(58356)(4.3.7)

### கடை விற்பனைக்கு
சுன்னாகம் சந்தியில் இருந்து 50M தூரத்தில் கே.கே.எஸ் பக்கமாக உள்ள கடை ஒன்று விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 748 8999
(58618)(4.3.7)

### வீடு விற்பனைக்கு
யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகில் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 078 664 9019 (58350)(4.3.7)

### காணி விற்பனைக்கு
மானிப்பாய் மருதடி சந்திக்கருகில் 4½+4½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(சி/15343)(4.3.7) தொடர்பு: 075 759 6488

### விற்பனைக்கு
முதிரைக்கட்டில், மேசைகள், சார்மனைக் கதிரை, இரும்புப் பெட்டகம் (பகுதியாகவும் பணம் செலுத்தலாம்) Fanகள் வயலின், Walking Strick wim Seat (இறக்குமதி செய்யப்பட்டது) HpLap top, Hp Colour Printer என்பன விற்பனைக்குள்ளன.
(58619)(4.3.7)
தொடர்பு:- 071 096 2082

## தேவை

### ஆள்கள் தேவை
எமது ஐஸ்கிறீம் மற்றும் சிற்றுண்டி விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள, உணவு பரிமாறுவோர், சிற்றூண்டி தயாரிப்பாளர், பில்கிளாக் ஆகிய வெற்றிடங்கள் உள்ளன. தகுதியானோர் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:- Sylo Ice Cream
இல.442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(58387)(4.3.7) 077 771 0785

### சமையல் ஆள் தேவை (ஆண்)
யாழ்.பிரபல விடுதி ஒன்றுக்கு சமையல் ஆள் ஒருவர் உடனடியாகத் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 077 357 6264, 077 634 1589
(58390)(4.3.7)

### முகவர் தேவை
நாடளாவிய ரீதியில் வெளிநாட்டுக்கு மாணவர்களை அனுப்பும் நிறுவனம் ஒன்றுக்கு முகவர் தேவை. பகுதிநேரமாகவும் வேலை செய்ய முடியும். உங்கள் CV ஐ அனுப்பவும். (சி/15340)(4.3.7)
infoeolanka@gmail.com
தொடர்பு: 076 803 6794, 076 672 4104

### வேலையாள்கள் தேவை
வெல்டிங், மேசன், தச்சு போன்ற வேலைகளுக்கு ஆள்கள் தேவை. முன் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். தங்குமிட வசதியும் உண்டு.
தொடர்பு:- 077 407 1537
(58604)(4.3.7)

### பணிப்பெண் தேவை
யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் உள்ள வீட்டில் வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
தொடர்பு:- டாக்டர் ஜனா
(58606)(4.3.7) 076 777 4788

### வேலையாள்கள் தேவை
ஹோட்டல் வேலைகளில் அனுபவமுள்ள சமையல், பரிமாறுபவர் ஆண்/பெண் இருபாலாரும் உடன் தேவை.
தொடர்பு:- 077 199 3338, 077 085 7599
(58394) (4.3.7)

**ENGINEER**
திருமண மண்டபம் கட்டுவதற்கு தேவை
0778361718 MANIPAY

## மணமக்கள் தேவை

### மணமகள் தேவை
யாழ். இந்து 24.02.1982 ரேவதி முதலாம் பாதம், 2 இல் செவ்வாய், கிரகபாவம் 14, உயரம் 5'7" முகாமைத்துவ உதவியாளராக யாழ்ப்பாணத்தில் கடமை யாற்றும் மணமகனுக்கு முகாமைத்துவ உதவியாளர்/ ஆசிரியை / Bank Clerk ஆக கடமைபுரியும் மெல்லிய சிவப்பு நிறமான வலிகிழக்கில் வசிக்கும் மணமகள் தேவை. வீடு இல்லாவிடினும் பரவாயில்லை. தோஷம் குறைந்த செவ்வாய் ஆதலால் மணமகளுக்கு செவ்வாய் இல்லாவிட்டாலும் ஏற்றுக்கொள்ளப்படும்.
(58369)(4.3.7) தொடர்பு:- 077 879 3563

### மணமகள் தேவை
யாழ்ப்பாணத்தில் பிறந்த, கனடாவில் உயர் கல்வி முடித்து பணிபுரிகின்ற கனேடிய குடியுரிமை பெற்ற, 1984 ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு இலங்கையில் பிறந்த இலங்கையில் அல்லது வெளிநாட்டில் வதிகின்ற பொருத்தமான இந்து கௌரவ குடும்ப மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகம் மற்றும் தொடர்புகளை அனுப்ப வேண்டிய முகவரி:
Email: wedks@yahoo.co.uk
(சி/15341)(4.3.7)

### மணமகன்கள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பம் 1983, அத்தம்-3, 12 இல் செவ்வாய் மணமகளுக்கும் 1986, கேட்டை-1, 2 இல் செவ்வாய் மணமகளுக்கும் வெளிநாட்டில் PR உள்ள பொருத்தமான மணமகன்களை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு:- 077 613 9307
(58372)(4.3.7)

### மணமகன் தேவை
இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அமெரிக்க நாடு ஒன்றில் வைத்தியராகப் பணிபுரியும் மாமன் அதே இடத்தில் அரசாங் கத்தில் பணிபுரியும் 35 வயதும் 5½ அடி உயரமுமுள்ள மருமகளுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றார். செவ்வாய்த் தோஷமுள்ள வைத்தியர் விரும்பத்தக்கது.
தொடர்பு: 001 437 333 1437
(58269)(4.3.7)

## வாடகைக்கு

### வீடு வாடகைக்கு
இல.265, பலாலி வீதி, ஊரெழுவில் ஐந்து அறைகள், வாகனத் தரிப்பிடம், குளியல் அறை, சமையல்அறை, பெரிய வரவேற்பறை கொண்ட 2000 சதுர அடி (2003 இல் இருந்து இன்று வரை AeroLanka (Pvt) Ltd China Railway-5 Engneering Siema Construation (Pvt) Ltd போன்ற நிறுவனங்கள் தங்கள் அலுவலகமாக பாவிக்கப்பட்ட சகல வசதிகளுடன்) கொண்ட வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் அல்லது தொழில் தகைமையுடைய குடும்பங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 071 273 1776
(சி/15332)(4.3.7)

### வீடு வாடகைக்கு
சுன்னாகம், தேசிய சேமிப்பு வங்கிக்கு முன் கே.கே.எஸ். வீதியில் நல்ல நிலையில் உள்ள வீடு அலுவலகப் பாவனைக்கு அல்லது சைவ போசன குடும்பத்திற்கு வாடகைக்கு வழங்கப்படும்.
(சி/17320)(4.3.7) தொடர்பு:- 077 208 5271

### வாடகைக்குண்டு
யாழ்ப்பாணம், கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள இல.68 உடைய புதிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0775823346
(58330)(4.3.7)

### வீடு வாடகைக்குண்டு
இல.5, சோமசுந்தரம் அவெனியூ, கண்டுக்குளியில் உள்ள மாடிவீடு வாடகைக்கு உண்டு. அலுவலகங்கள், அதிகாரிகளின் வாசஸ்தலங்களுக்கு உகந்தது.
(58365)(4.3.7) தொடர்பு: 077 476 7119

### Room நாள் வாடகைக்கு
600/=, 800/=, 1200/=, 2500/=,3950/=, A/C.TV இணைந்த குளியலறையுடன்
Hotel Villa,
42, Galle Road, Wellawatte. (இராமகிருஷ்ண வீதிக்கு அருகில்)
072 255 2222

### கடை வாடகைக்கு
கச்சேரி, நல்லூர் வீதியில் கச்சேரிக்கு மிக அருகில் 26'x15' அளவுடைய கடை வாடகைக்குண்டு. தொடர்பு: 077 356 5059
(58620)(4.3.7)

### வீடு வாடகைக்குண்டு
கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோவில் அருகில் வீடு உடனடியாக வாடகைக்குண்டு. சிறிய குடும்பம், மாணவர்கள் விரும்பத்தக்கது.
(58631)(4.3.7) தொடர்பு:- 077 152 4886

### வாடகைக்குண்டு
சாவகச்சேரி, சங்கத்தானை ஏ-9 வீதியில் உள்ள மாடிக் கட்டடத்தின் தளப்பகுதி கடை (20'x30') வாடகைக்குண்டு.
தொடர்பு:
077 948 7603
(51940)(4.3.7)

### வீடு வாடகைக்கு
28, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறையில் முழுமையான தளபாட வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு. 5 அறைகள், 4Bathrooms Hall Dinning Porch garage 5-6 வாகனங்கள் நிற்பாட்டக்கூடிய வசதி. A-9 பாதை ½KM, Colombuthurai Road ¼ km, Jaffna Kachcheri- 1km, ST Jhons 1 km. நிறுவனம் அல்லதுOffice Boarding அல்லது Lodge ஆக பாவிக்க உகந்தது.
தொடர்பு:- 077 071 8271, 021 492 5202, 077 656 6820
(சி/15342)(4.3.7)

## கல்வி

### பிரத்தியேக வகுப்பு
வீட்டிற்கு வந்து Spoken English மற்றும் கணினி வகுப்புக்கள் எடுக்கப்படும்.
(கணினி ஆசிரியரால் எடுத்து வரப்படும்.)
தொடர்பு: 072 186 7203
(58333)(4.3.7)

### ஆங்கில வகுப்புகள்
ஆங்கில வகுப்புகள் அடிப்படையிலிருந்து கற்றுக்கொடுக்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு:
076 627 1771/ 021 321 9181
"why fear, we are here?"
(58306)(4.3.7)

### German Deutsch Class
German, Swiss செல்வோருக்கான Embassy full Course மற்றும் Spoken Course A1 பரீட்சைக்கு ஏற்றவாறு தயார்படுத்தப்படும். இடம் மானிப்பாய் சந்தி. International School அருகில். 076 843 9423
(58364)(4.3.7)

## ஏனையவை


**Majestic Cineplex Jaffna**
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்


பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30


சில்வர் 10.15 / 2.15 / 6.15


ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com


★ பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
★ முக சத்திர சிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)
மேற்கொள்வதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
★ மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
★ ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
★ நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges,Implants)
★ வேர்முறை சிகிச்சை(Root canal Filling)
★ நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
★ பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)
**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)
**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



## சசீலன் அபினாஷ்

**05.04.2015**

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த

**சசீலன் காந்தரூபி** தம்பதியரின் செல்வப்புதல்வன் ச.அபினாஷ் தனது முதலாவது பிறந்தநாளை இன்று 05.04.2015 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார்.

அவர் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்: அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, மாமி, மாமா, மச்சான்மார் — கனடா



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## இராசரெத்தினம் ஜெனால்ட் அன்ரனி

(B.Com, PGDE (Merit), MEd, SLEAS)

(பிரதிக் கல்விப் பணிப்பாளர்-திட்டமிடல், தீவக கல்வி வலயம், வேலணை)



எமது கழகத்தின் முன்னாள் தலைவரும், ஆசிரியருமான இ.ஜெனால்ட் அன்ரனி அவர்கள் 26.03.2015 இல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணி (MEd) பட்டம் பெற்றதையிட்டு அவரை வாழ்த்துவதோடு, மேலும் பல பட்டங்கள் பெற்று தீவக மாணவ சமூகத்துக்கு உன்னத பணியை தொடர வாழ்த்துகின்றோம்.

Best Wishes

அண்ணா முன்னேற்ற விளையாட்டுக் கழகம், ஊர்காவற்றுறை.



# இலவச அழகுக்கலைப் பயிற்சி

(யுவதிகளுக்குட்பட்டது)



நிவித்திரா அழகுக்கலை நிலையத்தில் சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு இலவச அழகுக்கலை வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இப்பயிற்சியில் இணைய 10.04.2015 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

விஷேட சலுகை:
முதல் 10 பதிவுகளுக்கு கேக் ஐசிங் பயிற்சி இலவசம்!



Nivithra
Beauty Parlour & Training Academy

340, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
0777 712604, 0766 919277


# புத்தொளி! பரப்பி இத்தரை உயிர்த்த!



1. புத்தொளி! பரப்பி இத்தரை உயிர்த்த!
நித்திய சுதனே! நின்பதம் போற்றி.
2. அன்பே! அருளே! ஆன்மீக ஒளியே!
இன்பமே! உமக்கு, இதயத் துதிகள்!!
3. ஊன்குருதி சிந்தி, உலகோரை மீட்ட!
வான்சுடர்! வேந்தே! வந்தனை உமக்கே!
4.அற்புத வேந்தரின்! அதிசய உத்தானம்
நிற்கதி வாழ்வில், நிம்மதி ஊற்று
5. அமுதான! நற்செய்தி! அவனியை
ஆளும்.
சமுதாயச் சீரழிவு, சங்கையுடன் சூழும்.
6. வாய்மை நேர்மை தூய்மை துலங்க,
தோயும் அன்பால் தேற்றுவார்! திருமகன்!
7. கதறிப் பதறிச் சிதறும் மக்களை
உதறித் தள்ளார் உன்னத! மன்னர்!
8. வருந்தும் பாவிக்குத் திருந்தவழி கூறுவார்!
விருந்தாக வீற்றிருந்து விழிப்புணர்வு ஊட்டுவார்!
9. சாதனை! புரியும் சரித்திர! நாயகர்!
வேதனைச் சிறையில், விடுதலை வீசுவார்
10.ஐம்புலன் கருவிகள் அவர்பணி புரிய
எம்மிதயப் பூங்கதிர்!! ஏந்துவார் எம்மை
11. போட்டி பொறாமை நாட்டைத் தீண்டாது
ஆட்சிப் பீடத்தில் அன்பமைதி ஒளிவீசும் !
12. நீதிநெறி நிர்வாகம் போதனை பொழியும்
வேதவழி விசுவாசம் உயிராவி! ஊற்றும்
13. ஆதியும் அந்தமும் அழிவும் அற்றதோர்.
சோதியின்! உயிர்ப்பே!! சோபனம் உமக்கே!

(58259)

**ஆ.அரியமலர் - மிருசுவில்**


# காணி விற்பனைக்கு

பளையிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் ஏ-9 வீதி, தென்னை ஆராய்ச்சி நிலையத்துக்கு வடக்குப் பக்கமாக பத்து (10) ஏக்கர் விஸ்தீரணமான தோட்டக்காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை.

தொடர்புகளுக்கு: வே.அன்னலிங்கம் ஏ-9 வீதி, வண்ணான்கேணி, பளை என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். (58461)(4.3.7)



# காணி தேவை

பூநகரி - வாடியடிச் சந்திக்கு அருகில் A -32, வீதியோரமாக கோழிப் பண்ணை அமைப்பதற்கு ஏக்கர் கணக்கில் காணி தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: T.P: 077 841 0381 (58458)



# CAA(Computer Applied Assistance)

## ஆங்கிலக் கல்வி மற்றும் நடனம் படிப்பதற்கு இறுதிச்சந்தர்ப்பம்.



மிகக் குறைவான கட்டணத்தில் எல்லோருக்குமான திறமையான ஆசிரியர்களுடன் CAA(Computer Applied Assistance) NVQ-3 மற்றும் ஆங்கிலக் கல்வி.

வாரநாள்களிலும் சனி, ஞாயிறு தினங்களிலும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும், வேலை புரிவோர்க்கும் விசேட கவனம் எடுக்கப்படும். நீங்கள் எதிர்பார்க்கும் விதத்தில் கற்பிக்கப்படும்.

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள ஆசிரியரால் கற்பிக்கப்படவுள்ள **நடனம்** மற்றும் **சிறுவர்களுக்கான computer kids** வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மாணவர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதால் விரையுங்கள். விண்ணப்பிக்கும் மாணவர்களின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும். இப்பாடநெறிகளுக்கு முதல் பதிவு செய்யும் 10 மாணவருக்கு பதிவுக் கட்டணம் இலவசம். **(Free Registration)**

EXAMPOINT

120/6, Palaly Road,
Kantharmadam, Jaffna.
Mob: 076 868 2475



# சிங்கப்பூரிலுள்ள கோயில் ஒன்றுக்கு குருக்கள், முகாமையாளர், சமையலாளர்கள் போன்றவர்கள் தேவை

**குருக்கள்**

- குறைந்தது 5வருட அனுபவம்.
- 35 - 40 வயதுடையவர்
- கோயில் அலங்காரம் செய்பவர்கள்
- விண்ணப்பதாரியுடைய முழுப்போட்டோ அனுப்பவும்.
- சுயவிவரக் கோவை என்பன.

**முகாமையாளர்**

- கோயில் மேற்பார்வையாளர்.
- கோயில் வரும்படி (டொனேசன் சேகரித்தல்)
- கணக்கு தெரிந்திருத்தல்.
- ஆங்கிலம், கணினி, தமிழ் கட்டாயம் தெரிந்திருத்தல்.
- புன்சிரிப்புடன் வரவேற்புகளை மேற்கொள்ளல்.
- முழுப்படம் அனுப்ப வேண்டும்.

**சமையலாளர்**

- 10 வருட அனுபவம்.
- மரக்கறி வகை சமையல்களைச் செய்யும் திறமை.
- இலங்கைத் தமிழர்.
- 40 வயதிற்குட்பட்டவர்.

உங்கள் சுயவிவரக் கோவையை e mail இல் அனுப்பி வைக்கவும்

தொடர்பு : 659 753 9583

meenara43@gmail.com


# நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஏப். 5

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை குறிப்பிட்ட பகுதிகளில் மின்தடை இடம்பெறவுள்ளதாக இலங்கை மின்சாரசபையின் மின் பொறியியலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

நாளை திங்கட்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை யாழ் பிரதேசத்தில் மெய்கண்டான், ஆலடி, சித்திரமௌலி, ஆனைவிழுந்தான், நாதோலை, பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், கரிசன் ஐந்தாவது பெரறியியல் படை முகாம், பலாலி இலங்கை விமானப் படை முகாம், கரிசன் ஐந்தாவது பொறியியல் படை முகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வுகால விடுதி ஆகிய இடங்களிலும்–

கிளிநொச்சி பிரதேசத்தில் 14ஆம் மைல் கட்டை, ஒட்டுசுட்டான், சின்னத்திமடு, கருவேலங்கண்டல், கற்சிலைமடு, முத்துவிநாயகபுரம், நெடுங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இடங்களிலும்–

வவுனியா பிரதேசத்தில் மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடியவரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமல்கம, பிரப்பன்மடு, சி.இ.சி கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும்–

மன்னார் பிரதேசத்தில் முதலைக் குத்தியிலும் மின் வெட்டு இடம் பெறும். (ஒ–10)

# அளவெட்டியில் நாளை மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்.5

அளவெட்டி ஸ்ரீ நரசிம்ம வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. காலை 6.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு புண்ணியாக வாசகம் ஆகியன இடம்பெற்று காலை 9.15 மணிக்கு ஸ்தூபிகள் அபிஷேகமும் தொடர்ந்து 10.20க்கு கும்பாபிஷேகமும் இடம்பெறும். மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு நேற்றுக் காலை ஆரம்பமாகிய எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று மாலை 4 மணி வரை இடம்பெறும். மகா கும்பாபிஷேகத்திலும் தொடர்ந்து இடம்பெறும் அன்னதான நிகழ்விலும் அடியார்களை கலந்துகொள்ளுமாறு ஆலயபரிபாலன சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஒ–10)

# நடனப் போட்டி

கைதடி, ஏப்.5

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையம் எதிர் வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் நடனப்போட்டி ஒன்றை எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு வளர்மதி கலையரங்கிலே நடத்தவுள்ளது. இந்தப் போட்டியில் பங்கு கொள்ளவிரும்பும்போட்டியாளர்கள் தமது பெயர் விவரங்களை செயலாளர், வளர்மதி சனசமூக நிலையம், கைதடி மத்தி எனும் முகவரியுடன் நேரடியாகவோ அல்லது தபால்மூலமோ தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-288)


உதயன்
advt@uthayan.com
0215671111




/அணிக்கு 5 பேர். பதிலாளிகள் இருவர் மட்டும். / காலணி உட்பட சீரான உடை கட்டாயம்./
/ அனுமதிக் கட்டணம் 250/= / அணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாவட்ட மட்டத்தில் ஆட்டங்கள்./

அகவையில் உதயன்

விண்ணப்பங்களையும் போட்டி விதிகளையும் உதயன் பத்திரிகையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.




TITAN
குடை
இலவசம்
+ 10% தள்ளுபடி
ஒவ்வொரு டைட்டான் கடிகாரத்துடனும்
புது வருட
சலுகை
2 வருட உத்தரவாதம்
www.titanworld.com
4000/- ரூபாவிலிருந்து
Visit us for more information:
www.facebook.com/AbansLK
நாடெங்கிலுமுள்ள அங்கீகாரம் பெற்ற முகவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்
புதிய விநியோகஸ்த்தர்கள் விசாரணைகளுக்கு
011 2301561 | 077 3613045 | 077 0037688 | 077 5719240 | 071 2128119 | 0779 739262
Abans
அபான்ஸின்
புத்தாண்டு
அதிஷ்டம்
50% வரை தள்ளுப்படி
50மாதம் வரை வட்டியின்றிய கொடுப்பனவு
மாற்றீட்டுச் சலுகை
பெறுமதியான இலவச பரிசில்கள்
கூட்டுச் சலுகை
மெய் சிலிர்க்கும் - உள்ளம் கவரும் - புத்தாண்டின் அதிஷ்டம் அபான்ஸிடமிருந்து மாத்திரமே
LG
LG லோ வோட் ஸ்மார்ட் இன்வேட்டர் குளிர்சாதனப்பெட்டி
இன்வேட்டர் கொம்பரஸர் 36%வரை மின்கட்டணத்தைக் குறைக்கும்
R600a வாயுவானது சூழலை மாசுபடுத்தாத சுற்றாடல் தோழ வாயுவாகும்.
Smart Inverter Compressor
மாதமொன்றிற்கு குறைந்தது 21 அலகுகள் மாத்தரமே செலவழியும்.
GLB282SLHL
ரூ.79,900
வட்டியில்லா 18 கொடுப்பனவு
GL-M292RMTL
ரூ.89,900
ரூ.20,000 பெறுமதியான பரிசுச்சீட்டு
Power Cut EverCool
GL-E292RPTL
ரூ.109,900
மாற்றீட்டு விலை ரூ.89,900
Power Cut EverCool
GL-E292RPTL
ரூ.109,900
மாற்றீட்டு விலை ரூ.89,900
GL-M302RLML
ரூ.94,900
வட்டியில்லா 12 கொடுப்பனவு
GL-M332RLML
ரூ.104,900
மாற்றீட்டு விலை ரூ.89,900
GL-M612GPDL
ரூ.144,900
விசேட விலை ரூ.134,900
GL-B612GLPL
ரூ.147,900
விசேட விலை ரூ.139,900
R600a
Abans

# சரணாலயத்தைப் பார்வையிட்டார் நகர அபிவிருத்தி அமைச்சர் ஹக்கீம்

கொழும்பு, மார்ச் 29

கோட்டை மாநகர எல்லைக்குள் இயற்கைச் சூழலில் உலக வங்கியின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வரும் பன்முகத் தன்மை வாய்ந்த உயிரினங்களின் சரணாலயத்தை நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப்ஹக்கீம் நேரில் சென்று பார்வையிட்டார்.



இதன்போது அவ்விடத்தை சர்வதேச தரத்துக்கு உயர்த்துவதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உரிய பணிப்புரைகளையும் விடுத்தார்.

ஈரலிப்பான தாழ்நிலப் பகுதியில் சதுப்பு நிலத்தில் தியவன்னா வாவியின் ஒரு புறத்தை நோக்கியவாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான 70 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த வனப்பு மிக்க பல்லுயிரின சரணாலயம் அமைந்துள்ளது. புதர் மண்டிய கலப்பு பற்றைக்காடுகளினூடாக பலகைகளினால் அமைக்கப்பட்டுள்ள நடைபாதையிலும், பாலங்களின் மீதும் பயணம் செய்து இந்த சரணாலயத்தை கண்டு களிக்கலாம்.


பறவைகள் மற்றும் உயிரினங்களை நன்கு பார்வையிடுவதற்கு வாய்ப்பாக உயரமான கட்டடங்களும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு, வாகனத் தரிப்பிட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. உடற்பயிற்சிக்கான நடைபாதைகளும் நிர்மாணிக்கப்படுகின்றன. இந்த சரணாலயத்துக்கு அருகிலுள்ள 12 வீதிகளும் நவீனமயப்படுத்தப்படுகின்றன.

அமைச்சர் ஹக்கீம் மேற்கொண்ட இந்த கண்காணிப்பு பயணத்தில் கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட், அமைச்சின் செயலாளர் பொறியியலாளர் கருணாசேன ஹெட்டி ஆராச்சி, நகர அபிவிருத்தி அதிகார சபை தலைவர் ரஞ்சித் பெர்ணான்டோ, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் பொறியியலாளர் ரொஹான் செனவிரத்தின ஆகியோர் உட்பட உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர். (வ–10)











DIALOG IDD
போனஸ்
மேலும்
அதிகரிக்கப்பட்டுள்ளது
LOWE LDB
ஆகக் குறைந்த IDD கட்டணம்,
ஆகக் கூடிய போனஸ்
அழைப்பு நேரம் மற்றும் SMS உடன்
ரூ. 798/- இற்கு
ரூ. 1900/- IDD
ரூ. 598/- இற்கு
ரூ. 1200/- IDD
ரூ. 198/- இற்கு
ரூ. 500/- IDD
ரூ. 98/- இற்கு
175/- IDD
நிபந்தனைகளுக்கு உட்பட்டது
ரீலோட் மற்றும் காட் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
an axiata company
Dialog
எதிர்காலம் இன்றே.

# வெற்றியாளர்கள்



WP/GT/4297

புதியவகைகள் பயில்வோம் பரிசுகள் வெல்வோம் நுகர்வோர் மேம்படுத்தல் திட்டத்தில் உற்சாகமாய் கலந்துகொண்டு ஆயிரக்கணக்கான விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைத்த அனைவருக்கும் எமது நன்றிகள். இம் மேம்படுத்தல் திட்டத்தில் **2ஆம்** சுற்றில் 100 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். இவ் அனைவருக்கும் சேர்.:ப் எக்செல் வழங்கும் பெறுமதியான பரிசுபொதிகள் வழங்கப்படவுள்ளன.

**க. கோபிநாத்**
54, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு அரியாலை

**க. சோபிகா**
அமானை, அளவெட்டி மத்தி அளவெட்டி

**சஞ்சித் சதீஸ்வரன்**
கொக்கு பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவில், யாழ்ப்பாணம்

**க. புலக்சனா**
யா.அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசலை, அச்சுவேலி, யாழ்ப்பாணம்

**தி. நடராசா**
இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்

**சர்வேஸ்வரன் சச்சுதன்**
மீசாலை மேற்கு, மிசாலை

**சி.கௌதமி**
35-2, சோலைபுரம், கொட்டடி, யாழ்ப்பாணம்

**கனகசபாபதி வினோஜா**
திகிரி, புலோலி கிழக்கு பருத்தித்துறை, யாழ்ப்பாணம்

**உதயபாலா திசாரகன்**
இல. 50, ஜீ.பி.எஸ். வீதி, கல்வியன்காடு, யாழ்ப்பாணம்

**சு. சுதர்ஸசன்**
செந்தாமரை, வதிரி, கலவெட்டி

**இலட்சுமிகாந்தன் ஜெயகாந்த்**
அன்பகம், உடுவில் கிழக்கு சுன்னாகம்

**இ. நதுஷா**
33, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி யாழ்ப்பாணம்

**வாகினி தயாபரன்**
90 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

**ச. வசுந்தரா**
105, சிவன் கோயில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்

**அபிராமி கனகசபை**
அபிராமி வாசம், ஐயனார் கோவில் வீதி, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம்

**எம்.கே. மொஹமட் ஷாப்கி**
சரு:பா மன்சில் மார்க்கட், 1ம் குறுக்குத் தெரு, ஓட்டமாவடி

**ஐ. வெரோனிக்கா**
இல. 43 இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்

**கண்ணதாசன் சரணியன்**
71 விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்

**கு. லக்ஸன்**
வா. செல்வராணி நுணாவில் மத்தி, சாவகச்சேரி

**விவர்சன் துஜீவன்**
கொட்டடி, பன்னாலை, தெல்லிப்பளை

**கோணேஸ்வரன் சிவதர்சன்**
சிவகாமி அம்மன் கோவிலடி, காரைநகர்

**சுதர்சன் அஜந்திகா**
வேலாயுதம் வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரி

**பி.எஸ்.ஏ. தாஹிர்**
10-1, மத்திய வீதி, காத்தான்குடி

**பவானி கதிர்காமநாதன்**
40-2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்

**ராஜ்பதன் துவாரகன்**
நாவலர் பதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி

**பே. மோகனதர்சன்**
இல. 06, தேன் தமிழ் வீதி, உவர் மலை திருகோணமலை

**ரவிஷா ஆப்ரகாம்**
இல. 05, அடம்பன் வீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்

**ர. மதுஷன்**
இணுவில் தெற்கு மயான வீதி

**ஸ்ட:பியா ஆப்ரகாம்**
இல. 05 அடம்பன் வீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்

**எம்.ஐ.எப். இஷ்னா**
இல. 05, பியால் பலாஸ் காலனி, நிகலஹேன, திக்வெல்ல

**த. பிரவீன்**
சுதுமலை வீதி, தாவடி வடக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்

**பவிக்ஷனா இந்திரகுமார்**
இல 74-83, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

**சௌமியா**
46, சென் பற்றிஸ் வீதி, யாழ்ப்பாணம்

**கலையமுதன் சௌபர்ணிகா**
இராமநாதன் கமம் 94, மருதநகர், கிளிநொச்சி

**ஆர்.எஸ். சிவரூபன்**
2 முத்தமிழ் வீதி, 3ம் ஒழுங்கை கொட்டடி, யாழ்ப்பாணம்

**மா. மகாதேவன் சங்கர் இல்லம்**
வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை

**இ. தர்சன்**
புலோப்பளை கிழக்கு, பளை

**ஜே. சுனித்தா ரூசை**
றோசரி வாசம் தலைமன்னார் மேற்கு.

**மா. சங்கீதன்**
கள்ளப்பாடு தெற்கு, முல்லைத்தீவு

**ம.ப.யோகரத்தினம்**
அனுக்கை, அளவெட்டி

**லதுஷாந் கிருபாகரன்**
தேவாலய வீதி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி, யாழ்பாணம்

**த. கனீஸ்வரன்**
ஏழாலை மேற்கு, ஏழாலை தம்புவத்தை, வைரவர் கோவிலடி

**த. நிதர்சன**
மகாத்மா வீதி, அல்வாய் வடக்கு

**ர.சுஜனியா**
இணுவில் தெற்கு, மயான வீதி

**கபாலினி ஆனந்தஜோதி**
கோண்டாவில் வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய், யாழ்ப்பாணம்

**லிந்துஜா வியலேந்திரன்**
நாவற்கட்டை, கோப்பாய், வடக்கு

**சர்வேஸ்வரன் சச்சுதன்**
மீசாலை மேற்கு, மீசாலை

**நிரஞ்சன் சுவஸ்ரிக்கா**
வட்டாக்கை அம்மன் கோவிலடி கந்தரோடை, சுன்னாகம்

**ய. அபிசாந்த்**
பரமேஸ்வரி பவன் கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை

**நா. விசாகன் குகதாஸ்**
79, செட்டித் தெரு, நல்லூர்,யாழ்ப்பாணம்

**ஜெ. தனராம்**
வாகீசன் வீதி, சுதந்திரபுரம் மத்தி, உடையார்கட்டு

**கு. ஜீஸ்னுகா**
டாக்டர் செல்லத்துரை வீதி, சங்கரத்தை வட்டுக்கோட்டை

**பு. உமாசுதன்**
காளிகோயிலடி, மூளாய், சுழிபுரம்

**மா. புகழ்யா**
கள்ளப்பாடு தெற்கு, முல்லைத் தீவு

**சுந்தரலிங்கம் யோகதீபன்**
அச்செழு வடக்கு, தரசிங்க வைரவகோவிலடி, நீர்வேலி

**கா. மகாலிங்கம் போபிசன்**
06, முஸ்லிம் கல்லூரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்

**ஜெயகாந்தன் ஜெயசந்திரன்**
மகளிர் கல்லூரி வீதி, கற்குளி, சாவகச்சேரி

**புலேந்திரன் சதுர்ஷன்**
சுழிபுரம், கிழக்கு, சுழிபுரம்

**நா. சாமந்தி**
ஊறணி, புத்தூர் கிழக்கு, புத்தூர்.

**த. இலக்கியன்**
தேன்தமிழ், கைதடி வடக்கு,கைதடி

**சேந்தன் தர்மிகன்**
அல்லாரை தெற்கு, மீசாலை, சாவகச்சேரி

**பி. சாருஜன்**
41-2 நமுனி ஒழுங்கை, நல்லூர்,யாழ்ப்பாணம்

**சந்திரகுமார் துளசிகா**
80-27 வனாக வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**ப. பிரியங்கா**
122, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

**ரா. ரித்திஸ் கிஷான்**
இராச வீதி, கோப்பாய், கனகபுரம்

**கே.எஸ். சிவகுமாரராஜா**
கொக்குவில்

**சி. குழலினி**
95-12 ஐயனார் கோவில் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்

**ஜே.செல்வாஜினி**
26 பரமேஸ்வரா வித்தியாசாலை வீதி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.

**f. ஆன் மொரின்**
30-1 புகையிரத வீதி, ஹற்றன்

**சரவணபவன் சாருஜன்**
ஞானவைரவர் கோவிலடி, பத்தமேனி, அச்சுவேலி

**கஜேந்திரன் நிரோஜா**
அம்பனை அளவெட்டி மத்தி, அளவெட்டி

**பா. நிலோச்சன்**
சுதுமலை கிழக்கு, அரசடி வீதி, மானிப்பாய்

**நா. மதுவிஜனன்**
ஊறணி, புத்தூர் கிழக்கு

**இ. ஹேமசூர்ஜா**
இரசப்பா வீதி, கரவெட்டி கிழக்கு, கட்டைவேலி

**ஜி. சார்லஸ்**
செட்டித் தோட்டம், ஆனைகோட்டை, மானிப்பாய், யாழ்ப்பாணம்.

**இ. சகிதா**
இல. 32-31 புளியடி வீதி, இறம்பைக் குளம், வவுனியா

**லோகநாதன் சாகித்தியன்**
பருத்தித்துறை வீதி, புத்தூர் கிழக்கு, புத்தூர்

**சசிக்குமார்**
இல. 361, கரியாலை நாகபடுவன், பல்லவராயன்கட்டு, பூநகரி

**பத்மநாதன் பரநீதரன்**
கார்த்திகேசு வீதி, மீசாலை மேற்கு, மீசாலை

**ரவிக்குமார் கிருஷன்**
இராசவீதி, கோப்பாய், கனகபுரம்

**த. கஜபாஹுஜன்**
யாழ்ப்பாணம் இராஜகாரியார் வீதி, மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்

**தனிஸ்கா**
108 ஜ.பீ.எஸ் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்

**துஷானி சதீஸ்குமார்**
சாமியன் அரசடி யூனியன், லேன், கரவெட்டி மத்தி, கரவெட்டி

**ஸ்ரீபாலன் மதுஷா**
செட்டியகுறிச்சி, பூநகரி

**சஞ்சீவன் சக்திவிதுஷன்**
70, கொழும்புத்துறை வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்

**யாஸ்மின் கதிஜா**
நெடுவரம்பு, ஆண்டான்குளம், அடம்பன், மன்னார்.

**இ. கிருஷாந்தி**
32-31, புளியடி வீதி, இறம்பைக்குளம், வவுனியா

**விக்ரோரியா ஏகசகாயம்**
அன்னவாசா, நவாலி தெற்கு, மானிப்பாய்

**சு. நிரோஷன்**
21-6 குமாரசாமி வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**இரத்திரனசிங்கம் நஸ்மி**
அளவெட்டி கிழக்கு, கும்பலை

**கு. அபிநயன்**
ஊரிக்காடு வீதி, வல்வெட்டித்துறை

**தர்மராஜா திருவழகன்**
இல. 271சி -5 மன்னார் வீதி, பட்டாணிச்சூர், வவுனியா

**இரவிச்சந்திரன் பிரியங்கா**
இல 94, 2ம் குறுக்கு ஒழுங்கை அன்னா வீதி, தோணிக்கல் வவுனியா

**யோகேஸ்வரன் நிதுர்சன்**
ஆதவன் மில் லேன், அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி

**கனகராசா கஜானன்**
மட்டுவில்நாடு மேற்கு, பூநகரி

**எஸ். திருபாஜினி**
35, செல்லர் லேன், நல்லூர், யாழ்ப்பாணம்

**கஜேந்திரன் யதுர்ஷன்**
இல. 60-6 வனாக வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

**ஸ்ரீ இராஜேஸ்வரன் ரகுராஜ்**
பழம் றோட், ஐயாகடை ஒழுங்கை, மீசாலை மேற்கு, மீசாலை

**க. காயத்திரி**
பாடசாலை வளவு, கரணவாய் கிழக்கு, கரவெட்டி

**எம்.ஜே.சி. நிரோஷா**
இல. 103-7, வைத்தியசாலை வீதி, மன்னார்.



இன்னும் 200 வெற்றியாளர்கள் தெரிவு
செய்யப்படவுள்ளதால் உங்கள் விண்ணப்பப்படிவங்களை
இன்றே அனுப்பி, உங்கள் வெற்றியை உறுதி செய்துக்கொள்ளுங்கள்.

* மேம்படுத்தல் திட்ட கால எல்லை பெப்ரவரி 15 முதல் - ஏப்ரல் 15 வரை.
ரூ.50 இலிருந்து
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது, மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 0112629629

Surf excel

# மக்களின் மனங்கவர் பான வகையாக எலிபன்ட் ஹவுஸ் மீண்டும் தெரிவு

இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகம் நீல்சன் மக்கள் விருதுகள் 2015 நிகழ்வின் போது தொடர்ச்சியாக ஒன்பதாவது வருடமாக மக்களின் மனங்கவர்ந்த பான வகையாக எலிபன்ட் ஹவுஸ் கிறீம் சோடா தெரிவாகியிருந்தது.

சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் (எலிபன்ட் ஹவுஸ்) நிறுவனத்தின் பான வகைகளுக்கான தலைமை அதிகாரியும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் உப தலைவருமான தமிந்த கம்லத் கருத்து தெரிவிக்கையில்;

தொடர்ச்சியாக ஒன்பது வருடங்களாக மக்களின் மனங் கவர்ந்த பான வகையாக எலிபன்ட் ஹவுஸ் கிறீம் சோடா தெரிவாகியுள்ளமையையிட்டு நாம் பெருமையடைகிறோம். முக்கியமாக, இந்த விருது என்பது. நாம் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்த விருதுகள் வழங்கலின் போது பெற்றுக் கொண்ட அதே நிலைக்கு மீண்டும் எம்மை அழைத்துச் சென்றிருந்ததுடன், எமக்கு தொடர்ச்சியாக ஆதரவு வழங்கிவரும் இலங்கையர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்றார். இலங்கையில் பெருமளவில் விரும்பப்படும் மென் பான வகையான எலிபன்ட் ஹவுஸ் கிறீம் சோடா, அண்மையில் வழங்கப்பட்ட விருதின் மூலமாக, மக்கள் மனங்களில் ஆழமான இடத்தை கொண்டுள்ளது என்பதற்கு சான்றாக அமைந்துள்ளது.

எலிபன்ட் ஹவுஸ் முழு மென்பான வகைகளில் எவ்வித சந்தேகமும் இன்றி முன்னிற்கும் தயாரிப்பாக இது திகழ்கிறது. எலிபன்ட் ஹவுஸ் பான தயாரிப்புகளில் நெக்டோ, ஈஜிபி, ஒரேன்ஜ் பார்லி, லெமனேட், பிட்டர் லெமன், ஒரேன்ஜ் க்ரஷ், அப்பிள் சோடா, சோடா, டொனிக் மற்றும் கிக் கோலா போன்றன உள்ளடங்கியுள்ளன.



சிலிம் நீல்சன் மக்கள் விருதுகள் என்பது தொடர்ச்சியாக ஒன்பதாவது வருடமாக முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வின் போது நாடு முழுவதையும் சேர்ந்த மக்களிடமிருந்து தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற ஆய்வு நிறுவனமான நீல்சன் தரவுகளை சேகரித்திருந்தது. ஐந்து மாதங்கள் வரை எழுமாறாக இடம்பெற்ற இந்த கருத்துக் கணிப்பில், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு உட்பட சகல பாகங்களையும் உள்ளடக்கி, சகல சமூக பொருளாதாரநிலைகளையும்சேர்ந்த, 15 வயது முதல் 60 வயதுக்குட்பட்ட ஆண் மற்றும் பெண் இரு பாலாரும் பங்குபற்றியிருந்தனர்.

இதன் காரணமாக, நாளாந்தம் இலங்கையர்கள் மத்தியில் பிரபல்யமடைந்திருக்கும் வர்த்தக நாமங்கள் மற்றும் அவர்கள் விரும்பும் நாமங்கள் போன்றன தொடர்பான விவரங்களை மிகச்சரியாக தேர்ந்தெடுக்க முடிந்ததுடன், இவ்வாறு சேகரித்த விவரங்களை நிபுணத்துவம் வாய்ந்த நடுவர்கள் குழாம் மூலமாக விருதுகளுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# கொகா கோலாவிற்கு வெள்ளி விருது

மனித வள வல்லுநர்கள் சங்கம் 2015 மார்ச் 06ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற மதிப்புமிக்க விருதுகள்2014 நிகழ்வின் போது கொகா–கோலா நிறுவனத்திற்கு வெள்ளி விருதினை வழங்கியது.

தொழிற்றுறையில் மிகச்சிறந்த மனிதவளமுகாமைத்துவநடைமுறைகளை தொடர்ச்சியாக கடைப்பிடித்தமைக்காகவே கொகா–கோலா பெவரேஜஸ் ஸ்ரீலங்காவுக்கு இந்த விருது வழங்கப்பட்டது. இந்த விருதானது மனித வள முகாமைத்துவ நடைமுறைகள்ஊடாகஉன்னதத்தன்மையை அளிப்பதான கொகா–கேலாவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்புணர்வை அங்கீகரிக்கும் வகையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தகவல் தொழில் நுட்ப தலைமை அதிகாரி சாமர பெரேராவினால் கொகா- கோலா பெவரேஜ் ஸ்ரீலங்கா லிமிட்டெட் தேசிய மனி தவள முகாமையாளருக்கு அளிக்கப்பட்டது.




கொகா–கோலா பெவரேஜஸ் ஸ்ரீலங்கா இலங்கையில் 1500 இற்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடியாக மற்றும் மறைமுகமாக தொழில் வாய்ப்பினை அளிப்பதுடன் தமது பணியாளர்கள் தம் சுய இலக்குகளை எட்டுவதற்கும் வெற்றிகளை சாதிப்பதற்கும் தேவையான வலுவூட்டலையும் ஊக்குவிப்பினையும் தொடர்ச்சியாக வழங்கியும் வருகின்றது. (த)



# எஸ்.எல்.ஐ.ஐ.ரி பட்டமளிப்பு விழா 2015

எஸ்.எல்.ஐ.ஐ.ரி வருடாந்த பட்டமளிப்பு நிகழ்வில் 1000க்கும் அதிகமான மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டிருந்தது. தகவல் தொழில் நுட்பம், பொறியியல் மற்றும் வணிக முகாமைத்துவம் ஆகிய பிரிவுகளில் மாஸ்டர்ஸ் கற்கைகளை பூர்த்தி செய்தவர்களுக்கு இவ்வாறு பட்டம் வழங்கப்பட்டிருந்தது. மாலபே பகுதியில் அமைந்துள்ள SLIIT கம்பஸ் இல் இந்த பட்டமளிப்பு வைபவம் இடம்பெற்றது.

எஸ்.எல்.ஐ.ஐ.ரி கல்வி ஆலோசகர் பேராசிரியர் சாம் கருணாரட்ன, நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புகள் பிரதி அமைச்சர் எரான் விக்ரமரட்ன, கொள்கை, திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, பேராசிரியர். ஆஸ்திரேலியாவின், கேர்டின் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான மற்றும் பொறியியல் பீடத்தின் உதவிப் பீடாதிபதி அன்டிரிஸ் ஸ்டெல்பொவிக்ஸ், இலத்திரனியல் பொறியியல் மற்றும் கணினிப் பிரிவின் தலைவர் கெவின் ஃபின் மற்றும் பிரித்தானியாவின் ஷெஃபீல்ட் ஹலாம் பல்கலைக்கழகத்தின் பதில் பீடாதிபதி ரோஜர் எக்லிஸ்டன் ஆகியோர் இந்நிகழ்வில் உரையாற்றியிருந்தனர்.எஸ்.எல்.ஐ.ஐ.ரி. தலைவர் பேராசிரியர் லஷ்மன் ரத்நாயக்க இந்த நிகழ்வில் பட்டங்களைக் கையளித்திருந்தார்.

பட்டதாரிகளுடன் பெறுமதி வாய்ந்த கொள்கைகளைப் பகிர்ந்து கொண்டு கொள்கை, திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கருத்து தெரிவிக்கையில், 'கல்லூரிக்கு செல்வதன் நோக்கம், பரிபூரண அனுபவத்தை பெற்றுக் கொள்வது, கடும் அழுத்தங்களுக்கு மத்தியில் பணியாற்றப் பழகிக் கொள்ள, வெவ்வேறு நபர்களுடன் பணியாற்றப் பழகிக் கொள்ள, பரீட்சை அழுத்தங்களை கையாள மற்றும் இலகுவில் விட்டுக்கொடுப்பதைதவிர்க்கப் பழகிக் கொள்வது என்பதாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தை உங்கள் அடிப்படைவிடயமாகக்கொண்டு, உங்கள் ஆளுமைகளைப் பயன்படுத்தி SLIIT பயின்று இந்நாட்டை பெருமைக்குரியதாக்குங்கள்.

எதிர்காலத்தில் தாம் முன்னெடுக்கும் தொழில் மீதும் அன்பைச் செலுத்துமாறு குறிப்பிடுகிறேன்' என்றார்.

எஸ்.எல்.ஐ.ஐ.ரி நீண்ட கால சர்வதேச கல்வி பங்காளர்கள் மற்றும் துறைசார் பங்காளர்கள் ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். (த)



# தோலகட்டி செபமாலை தாசர் சபை அருட்சகோதரிகள் மடம் சிரமதானம்

கொழும்புத்துறை, ஏப். 5

வயாவிளான் கிழக்குப் பகுதியில் அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரிவில் அமைந்துள்ள தோலகட்டி செபமாலை தாசர் சபையின் அருட் சகோதரிகளுக்கான மடத்தைதுப்புரவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.




பெரிய பற்றைக்காடுகளால் சூழப்பட்ட கட்டடங்கள் பல கூரைகளின்றிக் காணப்படுகின்றன. அந்தப் பகுதியில் செபமாலை தாசர் சபையின் கன்னியாஸ்திரிகளுக்கான புனித சூசையப்பர் மடம் 1990 ஆம் ஆண்டுவரை இயங்கி வந்தது.

அந்தப்பகுதியில் திருப்பலிகளுக்குப் பயன்படுத்தப்படும் திராட்சை ரசம்,அப்பம் மற்றும் நெல்லிரசம் என்பன உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. நுழைவாயிலில் பொருத்தப்பட்டிருந்த பெயர் பொறித்த கல் மட்டும் சேதமின்றிக் காணப்படுகின்றது.

தற்போது குறித்த கன்னியர் மடம் அச்சுவேலிப் பகுதியில் உள்ள அமலி வனத்தில் இயங்கி வரு வது குறிப்பிடத்தக்கது.

(வ-135)

# அமைச்சர் ரவூப் ஹக்கீமின் இணைப்பாளரானார் தௌபீக்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் இணைப்பாளராக ஏ.தௌபீக் நியமிக்கப்பட்டுள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் நீர் வடிகாலமைப்பு அமைச்சரின் பிரத்தியேக உத்தியோகத் தர்களுக்கு மேலதிகமாக 10 இணைப்பாளர்களை நியமிப்பதற்கு அமைச்சர் ஹக்கீமுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது. இந்த அனுமதியை அடுத்தே தௌபீக் இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக் கடிதம் புதன்கிழமை அமைச்சரால் அமைச்சரின் அலுவலகத்தில் கையளிக் கப்பட்டது.

ஏ.தௌபீக் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நற்பிட்டிமுனை அமைப்பாளராக இருந்ததுடன் கல்முனை மாநகரசபையின் முன்னாள் உறுப்பினருமாவார்.

(வ-10)




இது மக்களின் மனமுவந்த தெரிவு



மக்களின் மனம் அறிந்த மக்கள் வங்கி மீண்டும் 'ஆண்டின் அதிக விருப்பத்திற்குரிய சேவை நாமம்' மற்றும் 'ஆண்டின் அதிக விருப்பத்திற்குரிய வங்கிச் சேவை வழங்குனர்' ஆகிய விருதுகளை தொடர்ச்சியாக இந்த ஆண்டிலும் 09 வது முறையாக SLIM NIELSEN மக்கள் விருது விழா 2015 இல் பெற்று சாதனை படைத்துள்ளது.

மக்கள் வங்கி என்றும் இலங்கை மக்களின் நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதில் முன்னணியில் திகழ்ந்து வந்துள்ளது. இந்த வெற்றி இலங்கையில் மிகவும் முன்மாதிரியான நிதி நிறுவனமாக எம்மை நிலைநிறுத்தியுள்ளது.

மக்கள் வங்கியிலுள்ள நாம் அனைவரும், இந்த வெற்றிக்கு துணையாகவும் எமது பலத்திற்கு காரணமாகவும் இருந்த இலங்கை வாழ் மக்கள் மற்றும் எமது விசுவாசமிக்க வாடிக்கையாளர்களுக்கு எமது இதயபூர்வமான நன்றிகளை மிகவும் மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம். வாடிக்கையாளர்களுக்கான சேவையை மேலும் அர்ப்பணிப்புடனும் உற்சாகத்துடனும் தொடர்ச்சியாக வழங்கிட மக்கள் வங்கி உறுதியளிக்கின்றது.

AA- Brand Finance Rating, AA+ Fitch Rating

மக்கள் வங்கி

www.peoplesbank.lk

# திருச்சபையின் அனைத்து விழாக்களிலும் முக்கிய விழா இயேசுவின் உயிர்ப்பு விழா

அருள்திரு
ரூபன் மரியாம்பிள்ளை
(ஊடக விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்)

உலகெங்கும் வாழும் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்கள் இன்று இயேசுவின் உயிர்ப்பு விழாவை கொண்டாடுகின்றவேளை இயேசுவின் உயிர்ப்பு விழா வாழ்த்துக்களை முதலில் பகிர்ந்து கொள்வோம்.

உதயன் பத்திரிகையின் கத்தோலிக்க – கிறிஸ்தவ – இந்து அன்பு வாசக நெஞ்சங்களே உதயன் பத்திரிகை ஆசிரியக் குடும்பத்தினரே – செய்தியாளர்களே – பணியாளர்களே உங்கள் அனைவரோடும் உயிர்த்த இயேசுவின் ஆசீர் என்றும் நிலைத்து உங்களை வழிநடத்துவதாக.

மனித வாழ்வில் பிறப்பு இறப்பு என்ற இரு முக்கிய நிகழ்வுகள் நடைபெறுகின்றன. பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் இறக்க வேண்டும் என்ற நியதி ஒன்று இங்கு உருவாகிறது. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே நடைபெறுகின்ற அந்த நீண்ட பயணத்தில் பிறக்கின்றவருக்கு ஓர் இடம் தயார் செய்யப்படுகின்றது.

பிறந்த பின்னர் அவருக்கு ஒரு தொட்டில் – அவர் வளர்ந்துவர அவருக்கு ஓர் இடம் – அவருக்கு ஓர் அறை – அவருக்கு ஒரு பாடசாலை – அவருக்கு ஒரு பணித்தளம் – எனப் பயணப்பாதை வளர்ந்து கொண்டே செல்கிறது. பணியில் இருந்து நிறைவு பெறும் போது அவர் இளைப்பாறுகிறார். பின்னர் இறந்து போகிறார். அவரது இடம் அப்போது வெற்றிடமாகிறது. அவர் இறந்த பின்னர் அவரின் வாழ்வும் பணியும், அவர் ஆற்றிய அரும் செயல்களும் நினைவு கூரப்படலாம். கால ஓட்டத்தில் அவர் பற்றிய நினைவும் படிப்படியாக மறந்து மறைந்து போகலாம்.

இயேசுவிற்கு ஒரு பிறப்பு இருந்து. அவருக்கு ஒரு இறப்பும் இருந்தது. இயேசு பிறந்தபோது அவருக்கு என்று ஓர் இடம் தயாரானது. மாட்டுத் தொழுவத்தில் தொடங்கி சிறு வயது இள வயது என 33 வருடங்கள் வாழ்ந்தார். வாழ்வின் முடிவில் இறந்தார். அவருடைய வாழ்வும் பணியும் வெற்றிடமாகிப் போன போது அவர் வாழ்ந்த இடங்களும் அவர் செய்த பணிகளும் இன்று அவருக்குச் சான்று பகர்கின்றன.


மனிதரின் வாழ்வில் இடம்பெறுகின்ற பிறப்பு இறப்பு என்கின்ற இந்த இரண்டு நிலைகளைத் தாண்டி இயேசு இறை மனிதன் என்கின்ற வகையில் மூன்றாவது ஓர் நிலையை அடைந்தார். அதுதான் அவரது உயிர்ப்பு. மனிதர்கள் எவரும் இறந்த பின்னர் உயிர்த்து வந்ததாக வரலாறு இல்லை. இயேசு உயிர்த்த படியால் அவர் ஒரு புதிய வரலாறு படைத்தார். இயேசுவின் மரணப் பாடுகள் சிலுவை மரணம் வழி வந்த உயிர்ப்பு ஒரு வரலாற்று நிகழ்வு – வரலாற்றை மாற்றிய நிகழ்வு.

இறைவனும் மனிதனுமான இயேசுவின் உயிர்ப்பு கத்தோலிக்க திருச்சபைக்கு உயிரும் உறுதியும் தந்தது. கிறீஸ்து இறந்து உயிர்க்கவில்லை என்றால் அனைத்துமே அர்த்தமற்றதாகிப் போயிருக்கும். ஆனால் அவர் இறந்து உயிர்த்தார். அவரது உயிர்ப்பிலே கத்தோலிக்க திருச்சபை கட்டி எழுப்பப்பட்டது இயேசு உயிர்த்த படியால் தான் இன்று கத்தோலிக்க திருச்சபை உயிருள்ள திருச்சபையாக உலகெங்கும் உயிர் வாழ்கிறது.

இயேசுவின் உயிர்ப்பு ஒரு மகிழ்வின் நிகழ்வு – அனைவரும் மகிழ்ந்து கொண்டாடவேண்டிய நிகழ்வு. மாற்கு நற்செய்தியாளர் இயேசுவின் உயிர்ப்பை ஒரு மகிழ்வின் நிகழ்வாகவே அறிவிப்புச் செய்கிறார். ஓய்வுநாள் முடிந்ததும் இயேசுவின் கல்லறை நோக்கி விரைகிறார்கள். மனது கனத்துக் கொண்டிருக்கிறது. நறுமணப் பொருள்களைப் பூசுவதற்குக் கல்லறையின் கற்களை யார் புரட்டிவிடுவார்கள் என்ற ஏக்கத்துடன் செல்கிறார்கள். அவர்கள் காணும் காட்சி அதிர்ச்சி தருவதாய் இருப்பினும் பெறுகின்ற செய்தி மகிழ்ச்சி மிக்கதாய் இருக்கிறது.

மாற்கு நற்செய்தியாளரின் அறிக்கையிடல் பின்வருமாறு அமைகிறது. ஓய்வுநாள் முடிந்ததும் மகதலா மரியா யாக்கோபின் தாய் மரியா சலோமி ஆகியோர் அவரது உடலில் பூசுவதற்கென்று நறுமணப் பொருள் கள் வாங்கினர். வாரத்தின் முதல் நாள் காலையிலேயே கதிரவன் எழும் வேளையில் அவர்கள் கல்லறைக்குச் சென்றார்கள். கல்லறை வாயிலிலிருந்து கல்லை நமக்கு யார் புரட்டுவார்? என்று அவர்கள் ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டார்கள்.

ஆனால் அவர்கள் நிமிர்ந்து உற்று நோக்கியபொழுது கல் புரட்டப்பட்டிருப்பதைக் கண்டார்கள். அது பெரியதொரு கல். பிறகு அவர்கள் கல்லறைக்குள் சென்றபோது வெண் தொங்கல் ஆடை அணிந்த இளைஞர் ஒருவர் வலப்புறம் அமர்ந்திருக்கக் கண்டு திகிலுற்றார்கள். அவர் அவர்களிடம் திகிலுற வேண்டாம்: சிலுவையில் அறையப்பட்ட நாசரேத்து இயேசுவைத் தேடுகிறீர்கள். அவர் உயிருடன் எழுப்பப்பட்டார். அவர் இங்கே இல்லை. இதோ, அவரை வைத்த இடம். நீங்கள் புறப்பட்டுச் செல்லுங்கள்.






கீழைத்தேய நாடுகளில் இயேசுவின் பிறப்பு கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றது.

கிறிஸ்மஸ் மரங்கள் வைக்கப்பட்டு – வீடுகளில் ஆண்டவர் இயேசுவின் பிறப்பைச் சித்தரிக்கும் பாலன் குடில் அமைக்கப்பட்டு – வீடுகள் சோடிக்கப்பட்டு – கேக் அடிக்கப்பட்டு – சிற்றுண்டிகள் தயார் செய்யப்பட்டு – புத்தாடைகள் வாங்கப்பட்டுக் – கொண்டாட்டம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

ஆனால் இயேசுவின் உயிர்ப்பை கீழத்தேய நாடுகள் இவ்வளவு சிறப்பாகக் கொண்டாடுவதில்லை. கிறிஸ்மஸ் கொண்டாட்டம் போல் ஈஸ்ரர் கொண்டாட்டம் நமது பிரதேசங்களில் நடைபெறுவதில்லை.

ஆனால் மேலைத்தேய நாடுகளில் சிறப்பான விதமாகக் கொண்டாடுகிறார்கள். குறிப்பாக உயிர்ப்பு விழா முட்டை – ஈஸ்ரர் எக் இவர்களின் கொண்டாட்டத்தில் சிறப்பிடம் பெறுகிறது. புலம்பெயர்ந்து மேலைத்தேய நாடுகளில் வாழ்கின்றவர்கள் ஓரளவு இந்த வழக்கத்தைப் பின்பற்றத் தொடங்கியிருந்தாலும் அநேக மானவர்கள் இயேசுவின் பிறப்பு விழாவையே பெரிதாகக் கொண்டாடுகிறார்கள்.

ஈஸ்ரர் முட்டைகள் இயேசுவின் உயிர்ப்பு விழாவோடு எப்படித் தொடர்வுபட்டன எனப் பார்க்கும் போது, திருச்சபையின் ஆரம்ப காலத்திலிருந்தே ஒரு தொடர்பு இருந்ததைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஈஸ்ரர் முட்டைகள் இயேசுவின் உயிர்ப்பை அல்லது உயிர்த்த இயேசுவைக் குறித்து நிற்கிறது என்ற எண்ணம் ஆரம்பத்திலிருந்தே நிலவி வந்ததாகக் காணக்கூடியதாகவுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் குளிர்காலம் முடிந்து மரங்கள் எல்லாம் தளிர்த்து பூக்கள் பூத்துக் குலுங்கத் தொடங்கும் காலம். வெய்யில் எறிக்கும் கோடை காலம். மக்கள் வீடுகளில் முடங்கிக் கிடந்த குளிர் காலம் முடிந்து மக்கள் மகிழ்வோடு வெளியே திரியத் தொடங்கும் காலம். இந்தக்காலத்தில் கொண்டாடப்படும் இயேசுவின் உயிர்ப்பு விழாவிலும் புது வாழ்வு – புது உயிர்ப்பு – மீள் பிறப்பு போன்ற கருத்துக்கள் இணைக்கப்பட்டிருப்பதால், உயிர்ப்புப் பெருவிழா அவர்களுக்கு அர்த்தமும் காலப் பொருத்தமும் கொண்டதாக உள்ளது.

தவக்கால 40 நாள்களிலும் முட்டையோ இறைச்சியோ சாப்பிடாமல் இருக்கும் ஒரு வழக்கம் உள்ளது. எனவே தவக்காலத்தின் ஆரம்பத்தில் இனித் தவக்காலத்தின் 40 நாள்களிலும் முட்டை தேவை இல்லை என முட்டைகளை ஆசைதீரச் சாப்பிட்டும் எறிந்து உடைத்தும் அழித்துவிடும் ஒரு பழக்கம் உண்டு. எமது நாடுகளிலும் தவக்காலத்தின் முதல் நாளான விபூதிப்புதன் அன்று முட்டை அடிக்கும் வழக்கம் உண்டு.

நாற்பது நாள்களும் சாப்பிடாத அந்த முட்டைகளை திரும்பவும் சாப்பிடத் தொடங்கும் முதற் தினமான இயேசுவின் உயிர்ப்பு ஞாயிறு தினத்தன்று முட்டைகள் சாப்பாட்டு மேசைக்கு வருவதும், அனைவரும் அதனைச் சாப்பிடுவதும் முட்டைகள் இயேசுவின் உயிர்ப்பு விழாவோடு தொடர்புபடக் காரணமாகலாம்.

மேலும் முட்டைகள் வெளிப்பார்வையில் உயிர்அற்றவை போல் தோன்றினாலும், உள்ளே நிறைந்த உயிரைக் கொண்டவை. இயேசுவின் கல்லறையும் வெளிப்பார்வைக்கு உயிரற்றுத் தோன்றினாலும் உள்ளே உயிர் உள்ள இயேசுவைக் கொண்டுள்ளது என்ற ஒரு பொருத்தமும் இங்கு பார்க்கப்படுகிறது.

முட்டையிலிருந்து கோழிக் குஞ்சானது முட்டைக்கோதை உடைத்துக்கொண்டு உயிருடன் வருவதைப்போல்,ளளள இயேசுவும் கல்லறை யில் இருந்து அதன் கட்டிடங்களைத் தகர்த்துக்கொண்டு உயிருடன் உயிர்த்தார் என்ற ஒரு கருத்தும் இங்கு நோக்கப்படுகிறது.

கிறிஸ்மஸ் காலங்களில் பெற்றோரே தம் பிள்ளைகளுக்கு அன்பளிப்புப் பொருள்களை வாங்கி அவர்களுக்குத் தெரியாமல் கிறிஸ்மஸ் மரத்தில் வைத்துவிட்டு சான்தாகுளோஸ் என அழைக்கப்படும் கிறிஸ்மஸ் தாத்தா கொண்டுவந்து வைத்ததாகச் சொல்வதைப்போல், இங்கும் இயேசுவின் உயிர்ப்பு விழாவோடு தொடர்வு படுத்தப்படும் ஈஸ்ரர் முட்டைக்கும் ஒரு பாரம்பரியக் கதை உண்டு.

சிலுவையின் வழியேதான் கிறிஸ்தவம் இன்று உலகெங்கும் இனம் காணப்படுகின்றது. சிலுவையிலே தான் இன்று கிறிஸ்தவம் உலகெங்கும் உயிர் வாழ்கிறது. இந்தச் சிலுவையின் வழி இயேசு உயிர்த்த படியால் தான் கிறிஸ்தவம் அர்த்தமும் ஆழமும் பெற்றது. இந்த வகையில் இயேசுவின் பிறப்பு விழர்வைக் காட்டிலும் இயேசுவின்உயிர்ப்புவிழாவுக்கு முக்கியத்துவம் தருவதே சிறப்பாகும். அல்லது இரண்டிற்கும் ஒரே சிறப்பு முக்கியத்துவம் தரவேண்டும்.

இயேசு உயிர்த்தார் என்ற உண்மை – அவர் இன்றும் உயிர் வாழ்கிறார் என்ற உண்மை – அவர் என்றும் கத்தோலிக்க திருச்சபையில் உயிர் வாழ்வார் என்ற உண்மை – எல்லாம் ஆழமாக்கப்படவும் தெளிவாக்கப்படவும் கூடிய விதமாக இந்த விழாவை அமைக்க முற்பட வேண்டும். வெளிக் கொண்டாட்டங்ளை விட இயேசு இறந்து உயிர்த்தார் என்ற உண்மையை உள்ளத்தின் ஆழத்தில் பதிக்கும் விதமாகவும் உணரும் விதமாகவும் இந்த விழா அமைக்கப்படுவதே சிறப்புடையதாகும்.

## உயிர்த்தெழுந்த இயேசு!

பல்லவி

எழுந்தனை உயிர்த்து எழுந்தனை
எங்கள் கிறிஸ்த்து எழுந்தனை
விழுந்தது மண்டலம் விழுந்தது
வீணவர் கூட்டம் தொலைந்தனர்
(எழுந்தனை)

அனுபல்லவி

இயேசுவின் நாமத்தைப் பேசிடுவோம்
ஜெயமங் களம் கூறிப் பாடிடுவோம்
யேசுலாவும் மணிநாளெனக் கூறியாம்
தென்பது பெற்று நாம் எழுந்திடுவோம்
(எழுந்தனை)

சரணங்கள்

பச்சைப் பாலகன் வயது அதனில்
பகைவர் கொல்லப் போட்ட திட்டம்
எச்சம் எதுவும் இல்லா தொழிந்து
ஏசு நாதரோ வளர்ந்து வந்தார்
(எழுந்தனை)

முப்பத்(து)ஆறு வயதை அடைந்தார்
முப்பது வெள்ளிக் காசு அதற்காய்
எப்பவும் கூடி இருந்த வனாம்
எளியோன் யூதாஸ் காட்டிக் கொடுத்தான்
(எழுந்தனை)

பரிசேயர் பாவிகள் சதிசேயர் சொல்லாலே
பரமனின் உடலைச் சல்லடை போட்டாம்
உயிரைச் சிலுவை மரத்தடித் தெடுத்தார்
உத்தமர் மூன்றாம் நாளிலே உயிர்த்தனரே
(எழுந்தனை)

– 'நவாலியூர்க்கவிராயர்'

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 211

# நிறைவான உணவை உண்டு வளமாக வாழ்வோம்

இன்று நாம் இயந்திர மயமான உலகில் வாழ்கின்றோம். காலையிலிருந்து இரவு வரை வேலை, படிப்பு, டிவி பார்த்தல் என நேரம் போய் விடுகின்றது. இதனால் நாம் உண்ணும் உணவைக் கவனிப்பதில்லை. இலகுவாகச் சமிபாடடையக் கூடிய, விரைவாகத் தயாரிக்கக் கூடிய பதப்படுத்தப்பட்ட மற்றும் பொதி செய்யப்பட்ட உணவு வகைகளை நாடுகின்றோம். நிறைவான உணவு உண்ணப்படாததினால் எமது உடற் பருமன் அதிகரிக்கின்றது. அத்துடன் விற்றமின்கள், கனியுப்புக்கள் மற்றும் புரதக் குறைபாடுகள் ஏற்பட இடமுண்டு. நாம் போதிய உடற்பயிற்சிகளையோ உடலை வருத்தி வேலைகளையோ செய்வதில்லை. இதனாலும் உடற்பருமன் அதிகரிப்பதுடன் சலரோகம், உயர்குருதியமுக்கம் மற்றும் இருதய நோய்கள் ஏற்படுகின்றன.

ஆரோக்கியமாக வாழ்வதற்கு எத்தகைய உணவை உண்ண வேண்டும் என்று பார்ப்போம். ஆரோக்கியமான உணவென்பது எல்லோருக்கும் பொதுவானது. சிறுவயதுமுதல்நாம்ஆரோக்கியமானஉணவு (Healthy diat) உண்ணப் பழகிக் கொள்ள வேண்டும்.

நாம் எமது உணவில் அதிகளவு பழங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். பழங்கள் எமக்கு விற்றமின் C, விற்றமின் A போன்ற அத்தியாவசிய விற்றமின்களை வழங்குகின்றன. பழங்களில் உள்ள பொட்டாசியம் குருதியமுத்தத்தைக் குறைக்கின்றது. பழங்களில் உள்ள நார்ச்சத்து மலச்சிக்கலைத் தடுக்கின்றது. இதனால் பெருங்குடல் புற்றுநோய், மூல நோய் (Piles) போன்ற பிரச்சினைகள் ஏற்படுவது குறைகின்றது.

நீரிழிவு நோயுள்ளவர்கள் அதிக இனிப்புள்ள மாம்பழம், பலாப்பழம் என்பன வற்றைத் தவிர்ப்பது நல்லது. அவர்கள் கதலி அல்லது இதரை வாழைப்பழம், பச்சை அப்பிள், விளாம்பழம், பப்பாசிப்பழம், கொய்யா, நாவல் ஆகியவற்றை உண்ணலாம்.

சிறுநீரகம் செயலிழந்த நோயாளிகள் பழங்களை முற்றாகத் தவிர்ப்பது நல்லது.

பழங்களைப் போலவே மரக்கறி வகைகள் மற்றும் கீரை வகைகள் மிகுந்த பயனைத்தருகின்றன. அவை உடலுக்குத் தேவையான விற்றமின்கள், கனியுப்புக்களைத் தருவதுடன் நார்ச் சத்தையும் தருகின்றன.

பயறு, கடலை, கௌபி, சோயா அவரை போன்றவை எமக்குப் புரதச் சத்தையும், இரும்புச் சத்தையும் வழங்குகின்றன. இவற்றில் காபோவைதரேற்றுக்கள் குறைவாக உள்ளதால் நீரிழிவு நோயாளிகளுக்கு இவை சிறந்தவை.

தானிய வகைகளைப் பொறுத்தவரை தீட்டப்படாத முழுத்தானியங்களே சிறந்தவை. தீட்டாத அரிசியில் நார்ச்சத்தும், விற்றமின் B உம் அதிகம் உள்ளன. ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்த நாங்கள் அதிக மாச்சத்துள்ள சோறு மற்றும் அரிசிமா, கோதுமை மாப்பண்டங்களை அதிகளவில் உண்கிறோம். உடலை வருத்தி வேலை செய்யாதவர்களுக்கு இது தீங்கானது. எனவே நாம் மரக்கறி வகைகளை அதிகமாகவும் மாச்சத்துள்ள உணவுகளை குறைவாகவும் உண்ண வேண்டும். மாவகைகளில் ஆட்டா மா சிறந்ததாகும்.

எண்ணெய் வகைகளை உணவில் குறைத்துக் கொள்வது நல்லது. நிரம்பிய கொழுப்பமிலங்களால் ஆன (saturated fattyacids) மரக்கறி எண்ணெய், தேங்காய் எண்ணெய் என்பன இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவை அதிகரிக்க செய்யும். எனவே அவற்றின் பாவனையைக் குறைப்பது நல்லது Non unsaturated fat ஆல் ஆன ஒலிவ் எண்ணெயே மிகச் சிறந்த எண்ணெய் ஆகும். இது நல்ல கொலஸ்ரோலை HDE cholostorol) கூட்டி கூடாத கொலஸ்ரோலைக் (LDL cholostorol) குறைக்கும். polyunsaturatedfat எனப்படும் நிரம்பாத கொழுப்பமிலங்களையுடைய சூரியகாந்தி எண்ணெய், சோயா எண்ணெய், நல்லெண்ணெய் என்பவை பொதுவாகக் கொலஸ்ரோலைக் குறைவடைய ச் செய்வதனால் பாவிக்க உகந்தவை. மாஜரீன் மற்றும் பிஸ்கட் வகைகளில் Trans fattyacid என்ற தீங்கான கொழுப்பமிலம் உள்ளது. இது இருதய நோய்களை ஏற்படுத்தலாம் என்பதால் தவிர்க்கப்பட வேண்டியது.

பால் ஒரு நிறையுணவு. வளரும் பிள்ளைகளுக்குப் பால் புரதத்தையும், கல்சியம் மற்றும் விற்றமின்களையும் வழங்குகின்றது. பாலிலுள்ள பிரச்சினை அதிலுள்ள கொலஸ்ரோலும் நிரம்பிய கொழுப்புமாகும். எனவே கொலஸ்ரோல் அதிகமுள்ளவர்கள் பசுப்பாலையும் முழு ஆடைப் பால்மாக்களையும் தவிர்த்து கொழுப்பற்ற பால் மாவைப் பயன்படுத்தலாம். மாமிசம் உண்ணாதவர்களுக்கு (vegetarians) விற்றமின் B12 பாலின் மூலம் மட்டுமே கிடைப்பதால் கட்டாயம் அவர்கள் பால் அருந்த வேண்டும்.

மீன் எமக்குத் தேவையான புரதம், கல்சியம், விற்றமின்கள், அயடீன் என்பவற்றை இது அளிக்கிறது. மீனிலுள்ள கொழுப்பில் ஒமேகா–3 எனும் கொழுப்பமிலம் உள்ளது. இது இருதய நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாக்கின்றது. பெரிய மீன்கள் தீங்கானவை என்ற கருத்து நம்மிடையே உள்ளது. இது தவறானது.

இறைச்சி வகைகளில் கோழி இறைச்சி ஆரோக்கியமானதாகும். மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி என்பவற்றில் நிரம்பிய கொழுப்பமிலங்கள் (saturated fat) கொலஸ்ரோல் என்பன அதிகமுள்ளதால் தவிர்ப்பது நல்லது. இவை (Red meat) புற்றுநோயையும் ஏற்படுத்தக் கூடும்.

உணவில் உப்பை முடியுமான வரை குறையுங்கள் உயர்குருதியமுக்கம் உள்ளவர்கள் அதிக உப்புள்ள சூப்வகைகள், கருவாடு என்பவற்றைத் தவிர்க்க வேண்டும்.

எந்த வயதினராக இருந்தாலும் எல்லோருமே இனிப்பு வகைகளைக் குறைக்க வேண்டும். இனிப்புள்ள மென் பானங்கள், ஐஸ்கிரீம், இனிப்பு பிஸ்கற்றுக்கள், கேக் என்பவற்றைத் தவிர்க்க வேண்டும். தாகமாக இருக்கும் போது மென்பானங்களைத் தவிர்த்து நீரை அருந்த வேண்டும்.

கூடுமான வரை இயற்கையான புதிய உணவுகளை உண்ணுங்கள். பதப்படுத்தப்பட்ட, பொதி செய்யப்பட்ட உணவுகளிலுள்ள இரசாயனப் பொருள்கள் உடலுக்கு தீங்கிழைக்கலாம்.

ஒவ்வொரு நாளும் போதுமான அளவு நீரை அருந்துங்கள். வளர்ந்த ஒருவர் ஒரு நாளைக்கு 2 தொடக்கம் 2½ லீற்றர் கொதித்தாறிய நீரைப்பருக வேண்டும். இதன் மூலம் சிறு நீரகக்கற்கள், சிறு நீர்க்கிருமித் தொற்று என்பவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

ஆரோக்கிய உணவான பால், வயது வேறுபாடின்றி அனைவருக்கும் பொதுவானது. ஆரோக்கிய உணவு உண்பதன் மூலம் நீரிழிவு, உயர் குருதியமுத்தம், கொலஸ் ரோல் போன்ற நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். நோய் வாய்ப் பட்ட பின்னர் உணவுக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதை விட வருமுன்காப்பதே சிறந்தது.

**Dr.எஸ்.கேதீஸ்வரன்**
பொது வைத்திய நிபுணர்
யாழ் போதனா வைத்தியசாலை

# மருத்துவத்துறையில் பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சையின் முக்கியத்துவம்

(கடந்த வாரத் தொடர்ச்சி)



இலங்கையில் பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சை அந்தக் காலப் பகுதியில் காணப்பட வில்லை. இந்த நிலையில் இலங்கையில் பேச்சு மொழிச் சிகிச்சையின் முக்கியத்துவத்தை உணர்ந்த harry wicondan இலங்கையில் பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சையாளர்களை உருவாக்குவதன் மூலமாக பேச்சு மற்றும் மொழி பிரச்சினை உடையவர்களுக்கு போதுமான சிகிச்சையை வழங்க முடியும் என எண்ணினார். அத்தோடு அவருடைய எண்ணத்தில் உதித்த சிந்தனையை செயல் வடிவமாகவும் மாற்றியமைத்தார். ஆரம்பத்தில் பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சை டிப்ளோமா பாட நெறியை ஆரம்பிப்பதற்கு அனைத்து தயார்ப்படுத்தல்களையும் திட்டமிட்டு மேற்கொண்டு இலங்கை அரசின் உதவியுடன் களனி பல்கலைக்கழகத்தில் டிப்ளோமா பாட நெறியை ஆரம்பித்து வைத்தார். அன்று அவரால் ஆரம்பிக்கப்பட்ட டிப்ளோமா பாட் நெறியானது வெற்றிகரமாக முன்னெடுக் கப்பட்டு இன்று B.Sc degree programme ஆக நான்கு வருடங்களை கொண்ட கற்கை நெறியாக களனிப் பல்கலைக்கழக, மருத்துவ பீடத்தினால் வழங்கப் பட்டு வருகின்றது. இது வரையில் மூன்று கட்டமாக கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்கள் வெளியேறி உள்ளனர் என்பது விசேடமாகவும், மகிழ்ச்சிகரமாகவும் குறிப்பிடப் படக் கூடிய ஒரு விடயமாகும். தொழில் வாண்மையாக பட்டப்படிப்பை முடித்து வெளியேறிய பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சையாளர்கள் கொழும்பு பிரதேசத்தை அண்டிய தனியார் மற்றும் அரச வைத்தியசாலைகளிலும், தனியார் பாடசாலைகளிலும் தமது சேவைகளை வழங்கி வருகின்றனர். எனினும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சையாளரிடையே தேவை அதிகமாகக் காணப்பட்டாலும் அதற்கான நிரந்தர ஆளணியினர் போதியளவு இல்லாதது இங்கு குறிப்பிடத்தக்கது.

**பேச்சு மற்றும் மொழி சிகிச்சை சேவைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியவர்கள்**

குழந்தைகளைப் பொறுத்தவரையில் அவர்கள் கருவில் வளர ஆரம்பிக்கும்பொழுது, பிரசவத்தின்போது மற்றும் அவர்கள் பிறந்ததன் பிற்பட்ட காலப்பகுதிகளில் அவர்களுடைய மூளையின் வளர்ச்சியில் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் பேச்சு, மொழி, தொடர்பாடல் மற்றும் உணவை விழுங்குவதில் குறைபாடு உடையவர்களாக வருவதற்கு காரணமாக அமைகின்றது.

வயது வந்தவர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு ஏற்படுகின்ற பாரிசவாதம், மூளையில் ஏற்படுகின்ற காயம், மூளைக் கட்டி மற்றும் தலையில் ஏற்படுகின்ற காயம் ஆகியன பேச்சு, மொழி, தொடர்பாடல் மற்றும் விழுங்குவதில் பிரச்சினை உடையவர்களாக மாறுவதற்கு காரணங்கலாக அமைகின்றன.

**சிறுவர்களில்**

★ விழுங்குவதில் பிரச்சினைகள் (Swallowing difficulties)
★ பிளவு பட்ட உதடு, அண்ணம் (Cleftlip and palate)
★ தாமதமான மொழி விருத்தி (Speech and Language delay)
★ எழுதுதல் அல்லது வாசிப்பதில் பிரச்சினைகள்
★ முடக்கு வாதம் (Cerebral palsy)
★ தவறான உச்சரிப்பு பிரயோகங்கள் (Articulation difficulties)
★ காது கேட்பதில் பிரச்சினைகள் (Hearing imparrments)
★ திக்குதல் (stuttering)
★ ஓடிஸம் (Autism)
★ குரல் சார்ந்த பிரச்சினைகள் (voice problem)
★ நுண்ணறிவு மட்டம் குறைந்த பிள்ளைகள் (learning difficulty)
★ உடல்ரீதியான அங்கவீனம் உள்ள பிள்ளைகள்
★ அனைத்து விருத்திகளும் தாமதமான பிள்ளைகள் (Global developmental delay)

**வளர்ந்தோரில்**

★ மொழி சார்ந்த பிரச்சினைகள் (Aphasia)
★ தசைப் பலவீனம் காரணமாக ஏற்படும் தவறான உச்சரிப்பு பிரயோகங்கள் (dysarthria)
★ தசைகளின் ஒருங்கிணைப்பில் ஏற்படும் பிரச்சினைகள் (dyspraxia)
★ விழுங்குவதில் ஏற்படும் பிரச்சினைகள் (swallowing difficulties)
★ நுண்ணறிவு மட்டம் குறைந்தவர்கள் (learning difficulties)
★ அதிகரித்துச் செல்லும் நோய் நிலைமைகள் (denentia, parkinsons)
★ குரல் சார்ந்த பிரச்சினைகள் (voice problems)
★ தலை, கழுத்துப் ப்குதியில் ஏற்படும் புற்றுநோய்
★ திக்குதல் (stuttering)

**பேச்சு, மொழி சிகிச்சை சேவைகளை பெற்றுக் கொள்ளக் கூடிய இடங்கள்**

★ அரச அல்லது தனியார் வைத்தியசாலைகள்
★ அரச அல்லது தனியார் பாடசாலைகள்
★ கனிஷ்ட, சிரேஷ்ட பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள்
★ முன்பள்ளிகள்
★ தனியார் சிகிச்சை நிலையங்கள்
★ புனருத்தாபன நிலையங்கள்
★ சிறுவர் அபிவிருத்தி மையங்கள்
★ அரச சார்பற்ற சிகிச்சை நிலையங்கள்

எமது வடபகுதி பிரதேசங்களில் பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சையை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டுள்ள குறைகளை கவனத்தில் கொண்டு,



பெற்றோர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மருத்துவ துறைசார் தொழில்வாண்மையாளர்கள் பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சை பற்றிய விழிப்புணர்வு பற்றி அறிந்திருக்க வேண்டியது மிக அவசியமான ஒன்றாகும். மேலும் பேச்சு, மொழி மற்றும் விழுங்குவதில் குறைபாடுடையவர்களை இனம் காண்பவர்கள் அவர்களுக்கான சிகிச்சையை பெற்றுக் கொடுப்பதற்கும், வழி காட்டுவதற்கும் முன் வர வேண்டும். எமது பிரதேசங்களில் காணப்படுகின்ற பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சை பற்றிய விழிப்புணர்வு குறைவு என்கின்ற காரணத்தால் எமது பகுதி கொள்கை வகுப்பாளர்கள் வருங்கால திட்டமிடலின் போது வட பகுதியில் பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சையின் அபிவிருத்தியில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. எமது பகுதியில் தேவைகள் அதிகமாக இருப்பதன் காரணமாக இது அவசரமானதும், அவசியமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதும் ஒன்றாகும்.

ப.கௌரிதரன்
பேச்சு மற்றும் மொழிச்சிகிச்சையாளர்,
நரம்பியல் பிரிவு – B
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்











வவுனியா சைவப்பிரகாச ஆரம்பப்பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில், அண்மையில் ஓய்வுபெற்ற முன்னாள் வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.(வ-402)







வலிகாமம் கல்வி வலய விஞ்ஞானபாட ஆசிரிய ஆலோசகர் நா.ஸ்ரீகணேசனால் எழுதப்பட்ட தரம் 10, 11 மாணவர்களுக்கான இயற்பியல்(பௌதிகவியல்) நூல் வெளியீடு அண்மையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினராக சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசாவும் கோட்டக் கல்விப் பணிப்பாளா தி.தர்மலிங்கமும் கலந்து கொண்டார்கள். ஓய்வு நிலை அதிபர் கு.ஜெகநாதன் நூலை வெளியிட்டு வைக்க முதற் பிரதியை திருமதி புஸ்பவதி சிவகுமார் பெற்றுக் கொண்டார். (வ-86)















மன்னார் ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் 16 ஆவது பொதுக்கூட்டம் அண்மையில் ஆயுள்வேத வைத்தியர் செல்வ மகேந்திரன் தலைமையில் மன்னார் மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்றது. குறித்த கூட்டத்துக்கு பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ்.தேசபிரிய, சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்டான்லி டிமெல் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (வ-56)



முல்லைத்தீவு இருட்டுமடு தமிழ் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியில் அதிபர் க.ஆ.ஞானேஸ்வரன் உரையாற்றுவதையும், வடமாகாண சபை உறுப்பினர் ம.அன்ரனி ஜெகநாதன் வெற்றிக் கேடயம் வழங்குவதையும் காணலாம். (ஒ)



வண்ணை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் கோயில் பெருந்திருவிழா அண்மையில் நடைபெற்ற போது... (ஒ)



மல்லாகம் மகா வித்தியாலயத்தில் பயிலும் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் 50 பேருக்கு பாதணிகளை யாழ். திருப்பணி திருச்சபை மன்றத்தினர் வழங்கினர். நிகழ்வில் திருப்பணி திருச்சபை மன்ற தலைவர் அருட் தந்தை ஜெயவீரசிங்கம், செயலாளர் அருட் தந்தை செல்வன், பொருளாளர் சம்சன் ஜி. பொன்னுத்துரை மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் சபீந்திரன், அதிபர், ஆசிரியர்களால் பாதணிகள் வழங்கப்பட்டன. (ஒ)



கிழக்கில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சிறீலங்கா அரச சேவை மற்றும் மாகாண அரச சேவை தொழிற்சங்க சம்மேளனத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் கல்முனை சணசமண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கிழக்கு மாகாண சபை அமைச்சரும், தமிழரசுக் கட்சியின் செயலாளருமான கி.துரைராஜசிங்கம், கௌரவ அதிதியாகக் கலந்து கொண்ட மாகாண சபை உறுப்பினர் எம். இராஜேஸ்வரன் ஆகியோர் சம்மேளன தலைவர் எஸ். லோகநாதன் மற்றும் உறுப்பினர்களால் வரவேற்கப்படுவதைக் காணலாம். (ஒ-30)





வடமாகாண பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ள வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ள வைத்திய கலாநிதி ஏ.தேவநேசன் ஆகியோர் யாழ். ஆங்கில மருந்து வணிகர் கழகத்தினால் கௌரவிக்கப்பட்டுள்ளனர். (ஒ)



பளையில் அமைந்துள்ள தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் தோட்டத்தில் 'மைற்றினை' கட்டுப்படுத்தும் உயிரினவியல் கட்டுப்பாட்டு முறையாக "நியூசிலஸ் பராக்கி" எனும் இரைகௌவியினை எப்படி தென்னந்தோட்டங்களில் விடுவிடுப்பது என்பது பற்றி செயல் விளக்க ரீதியாக கிளிநொச்சி மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ. சத்தியேந்திரன் விளக்கமளிப்பதையும் இந்த நிகழ்வில் தென்னையில் 'மைற்' இனை கட்டுப்படுத்துவதற்கு "நியூசிலஸ் பராக்கி" (பொலித்தீன் பையில் உள்ளது) எனும் இரை கௌவியை தென்னை வட்டில் பூந்துணரில் விடுவிப்பதையும் காணலாம். (ஒ)



வாழ்வின் எழுச்சி வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் யாழ். நகர மேற்கு சமுதாய அடிப்படை வங்கியின் ஜே/81 கிராம அலுவலர் பிரிவுக்குரிய பயனாளி முகாமைப் பணிப்பாளரிடமிருந்து தையல் இயந்திரம் ஒன்றை பெற்றுக் கொள்வதையும், அருகில் கருத்திட்ட முகாமையாளர், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நிற்பதையும் காணலாம். (ஒ)




திருமறைக் கலாமன்றமும் சுனேரா நிறுவனமும் இணைந்து மாற்று ஆற்றலுடையோர் பராமரிப்பு நிலையமாகிய உடுவில் ஆர்க், மாணவர்கள் பங்குபற்றும் வண்ணக் கோலங்கள் நிகழ்ச்சியை அண்மையில் நடத்தின. சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மங்கல விளக்கை ஏற்றி வைப்பதையும் ஆர்க் மாணவர்களின் கலைநிகழ்வையும் காணலாம். (ஒ-135)






வரணி சைவப் பிரகாச வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியை பிரதம விருந்தினர்களான கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் ஆரம்பித்து வைத்து உரையாற்றுவதையும், பாடசாலை மாணவர்களின் அணி நடை மரியாதையைப் பிரமுகர்கள் ஏற்கும் காட்சியையும், பலரின் பாராட்டைப் பெற்ற பாடசாலை மாணவர்களின் இடைவேளை நிகழ்வுக் காட்சியையும் காணலாம். (ஒ-122)




வட்டுக்கோட்டை வடக்கு பிளவத்தை அ.மி.த.க..பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது அதிபர், ஆசிரியர்களால் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வைபவத்தில் இடம்பெற்ற மாணவர்களது இசையும் அசைவும் நிகழ்ச்சியையும் காணலாம். (ஒ)






சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் அ.கயிலாயபிள்ளை கலந்து கொண்டார். (வ-9)




வவுனியா விபுலானந்தாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதமவிருந்தினராக மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் சிறப்பு விருந்தினராக வட மாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சிவநாதன் கிசோர், வவுனியா தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி கிசோர் சுகந்தி, பண்டாரிகுளம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி மு.சிவகுமாரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (வ-402)



மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி அலுவலரும் வித்தியாலய பழைய மாணவனுமாகிய ம.புவனதாஸ் ஆகியோருடன் அதிபர் செ.பேரின்பநாதன் மாணவர்களின் அணிவகுப்பை பார்வையிடுவதைக் காணலாம். (வ-9)



SINGER
Recommends Windows 8
சிறந்த கணினி ஒன்றை
கையிலுள்ள பணத்திற்கு
கொள்வனவு செய்யுங்கள்
SINGER X SERIES
DELL
hp
lenovo
வட்டியின்றி
SINX-243AT
Printer இலவசம்
• Intel Celeron dual core
• 2GB, 320GB
• 14" HD Display
ரூ.48,499/- மாதாந்தம் ரூ.2,567/-
விசேட விலை ரூ.42,999/-
வட்டியின்றி
SINX-QC-4G
• Intel Quad core
• 2GB, 320GB
• 14" HD Display
ரூ.54,889/- மாதாந்தம் ரூ.2,999/-
விசேட விலை ரூ.46,999/-
SINX-i3-4G
• Intel core I3
• 4GB, 500GB
• 14" HD Display
ரூ.59,999/- மாதாந்தம் ரூ.4,387/-
வட்டியின்றி
SINGER ALL-in-ONE COMPUTER
SINX-M173H
• Intel Celeron B830 1.8GHz
• 2 GB DDR3, 320 GB SATA
• 17.3" Display, HD Graphics
ரூ.49,999/- மாதாந்தம் ரூ.3,333/-x12
விசேட விலை ரூ.44,999/-
3 வருட உத்தரவாதம் இலவசம்
DELL-NB-DC
(Dell Inspiron 3543)
intel 5th Gen
• Intel Celeron 2957U
• 2GB, 500GB,
• 15.6" HD Display
ரூ.54,999/- மாதாந்தம் ரூ.4,021/-
வட்டியின்றி
DELL-NB-i3
(Dell Inspiron 3543)
intel 5th Gen
• Intel core i3
• 4GB, 500GB
• 15.6" HD Display
ரூ.83,299/- மாதாந்தம் ரூ.3,937/-
விசேட விலை ரூ.74,999/-
வட்டியின்றி
DELL-NB-i5
(Dell Inspiron 3543)
intel 5th Gen
• Intel core i5
• 4GB, 1TB,, 15.6" HD Display
• Intel HD Graphics 4400
ரூ.99,999/- மாதாந்தம் ரூ.4,937/-
விசேட விலை ரூ.89,999/-
DELL-NB-i7-W8
(Dell Inspiron 3543)
intel 5th Gen
• Intel core i7
• 8GB, 1TB,15.6" HD Display
• 2GB SVGA, Windows 8.
ரூ.138,889/- மாதாந்தம் ரூ.9,140/-
விசேட விலை ரூ.124,999/-
வட்டியின்றி
LEN-NB-i3-4G
ரூ5,000/- பெறுமதியான Lenovo Speaker System இலவசம்
• Intel core I3
• 4GB, 500GB, Wi-fi
• 15.6" HD Display
ரூ.75,999/- மாதாந்தம் ரூ.3,937/-
விசேட விலை ரூ.67,999/-
LEN-NB-I5
• Intel core I5
• 4GB, 500GB, Wi-fi
• 15.6" HD Display
ரூ.99,999/- மாதாந்தம் ரூ.6,367/-
விசேட விலை ரூ.89,999/-
HP-i3-I5NB
• Intel core I3
• 4GB, 500GB,
• 15.6" HD Display
ரூ.88,399/- மாதாந்தம் ரூ.5,893/-x12
விசேட விலை ரூ.74,999/-
HP-i5-I5NB
• Intel core I5
• 4GB, 500GB,
• 15.6" HD Display
ரூ.99,999/- மாதாந்தம் ரூ.6,590/-
விசேட விலை ரூ.89,999/-
SINGER Plus
காட்சியறைகள்
மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடம்
யாழ்ப்பாணம் 021-2225408
சங்கானை 021-2251100
சாவகச்சேரி 021-2270197
கொடிகாமம் 077-2108889
நெல்லியடி 021-2264937
சுன்னாகம் 021-2240555
மானிப்பாய் 021-5100280
கிளிநொச்சி 021-2280199
பருத்தித்துறை 021-2263411
முல்லைத்தீவு 021-2290180
011 5 400 400
http:// www.singersl.com



அனைத்து ராசிகளுக்கும்
அதிர்ஷ்டத்தை அள்ளித்தரும்
சொப்ட்லொஜிக்
புத்தாண்டு
SampathCards
The responsible choice
கிரடிட்கார்ட் உரிமையாளர்களுக்கு
25% வரை விலைக்கழிவு
+
36 மாதங்கள் வரை
வட்டியற்ற திட்டம்
★பரிசுகள் ★விலைக்கழிவுகள் ★வவுச்சர்கள் ★கவர்ச்சிகரமான இலகு கொடுப்பனவு திட்டங்கள்
Panasonic LED TV - 40"
TH-40A300DX
• Clear Bass Sound
• Low Power Consumption
ரூ.120,999/-
மாதாந்தம் ரூ.11,616/- மட்டுமே
Panasonic LED TV - 32"
இலவசம் வவுச்சர் பெறுமதி ரூ. 4,000/-
அல்லது
பழைய தொலைக்காட்சிக்கு பரிமாற்ற விலைக் கழிவு ரூ. 5,000/-
காசுக் கொள்வனவிற்கு ரூ. 3,000/- விலைக்கழிவு
TH-32A400 X
• Media Player
• Dot Noise Reduction
ரூ.58,999/-
மாதாந்தம் ரூ.3,933/- மட்டுமே
15 மாத வட்டி இலவசம்
Panasonic LED TV - 24"
காசுக் கொள்வனவிற்கு ரூ. 3,000/- விலைக்கழிவு
TH24A403DX
• HD Ready | • USB Media Player
ரூ.34,999/-
மாதாந்தம் ரூ.2,333/- மட்டுமே
15 மாத வட்டி இலவசம்
softlogicTV LED TV - 42"
காசுக் கொள்வனவிற்கு ரூ. 10,000/- விலைக்கழிவு
LE42E360
• Full HD
• Slim Design
• HDMI x 2
ரூ.84,999/-
மாதாந்தம் ரூ.5,213/- மட்டுமே
15 மாத வட்டி இலவசம்
softlogicTV LED TV - 32"
பழைய தொலைக்காட்சிக்கு பரிமாற்ற விலைக் கழிவு ரூ.7,500/-
LE32E360
• Full HD
• Slim Design
• HDMI x 2
ரூ.42,999/-
மாதாந்தம் ரூ.2,867/- மட்டுமே
15 மாத வட்டி இலவசம்
softlogicTV LED TV - 24"
பழைய தொலைக்காட்சிக்கு பரிமாற்ற விலைக் கழிவு ரூ.5,000/-
SFT24E88
• Full HD
• Slim Design
• HDMI x 2
ரூ.30,999/-
மாதாந்தம் ரூ.1,595/- மட்டுமே
15 மாத வட்டி இலவசம்
SAMSUNG குளிரூட்டிகள்
Whirlpool குளிரூட்டிகள்
லிட்டர் 250
RT26H3000SE/IG
• Cool Pack
• Frrrunch Box
• Anti Fungal Gasket
18 மாத வட்டி இலவசம்
ரூ.69,999/-
மாதாந்தம் ரூ.3,889/- மட்டுமே
இலவசம் வவுச்சர் பெறுமதி ரூ. 6,000/-
லிட்டர் 190
RR19H1006SE
• One Door
• Direct Cool
• 4 Star Rating
15 மாத வட்டி இலவசம்
ரூ.45,999/-
மாதாந்தம் ரூ.3,067/- மட்டுமே
இலவசம் Samsung DVD Player
லிட்டர் 292
REFWTM330RT/IB
• Twister ice tray
• Anti-bacterial gasket
• Toughened Glass Shelf
15 மாத வட்டி இலவசம்
ரூ.84,999/-
மாதாந்தம் ரூ.5,667/- மட்டுமே
இலவசம் வவுச்சர் பெறுமதி ரூ. 6,000/-
லிட்டர் 262
REFWTM290RIB/TI
• Twister Ice Tray
• Anti-bacterial Gasket
• Quick Chill Function
15 மாத வட்டி இலவசம்
ரூ.79,999/-
மாதாந்தம் ரூ.5,333/- மட்டுமே
இலவசம் வவுச்சர் பெறுமதி ரூ. 6,000/-
SAMSUNG சலவை இயந்திரம்
CANDY சலவை இயந்திரம்
CANDY சலவை இயந்திரம் + 100% உலர்த்தி
6.0 kg
WF1600NCW/TL
• 8 Wash
4 option Programmes
• Anti-limescale Heater
• Diamond Drum
ரூ.89,999/-
மாதாந்தம் ரூ.8,640/- மட்டுமே
6.5 kg
WF1650WCW/TL
• Fully Automatic
• Eco Bubble Technology
• Diamond Drum
ரூ.98,999/-
மாதாந்தம் ரூ.9,504/- மட்டுமே
7.0 kg
GC1071D1
• 16 programs
• Energy efficiency Class A+
• Electronic control
இலவசம் NI100 Panasonic Iron
ரூ.89,999/-
மாதாந்தம் ரூ.7,290/- மட்டுமே
9.0 kg
EVOW4963D
• Triple Class A
• Fuzzy Logic
• Anti-crease system
இலவசம் NI100 Panasonic Iron
ரூ.199,999/-
மாதாந்தம் ரூ.19,200/- மட்டுமே
*சொப்ட்லொஜிக் உத்தரவாதம் சகிதம்
களியா மற்றும் சகல சொப்ட்லொஜிக் மெக்ஸ், சொப்ட்லொஜிக் காட்சியறைகள் மற்றும் உத்தரவாதம் பெற்ற விநியோகஸ்தர்களிடமும் வாங்கலாம்.
011 5 705 705
softlogic
BEST IN THE BUSINESS

# விழிப்புக் குழுக்களை உருவாக்கி எமது பங்களிப்புடன் செயலாற்றுக

## பொலிஸ் பொதுமக்கள் கலந்துரையாடலில் கொடிகாமம் பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

வரணி, ஏப்.5

பொதுமக்கள் விழிப்புக் குழுக்களை உருவாக்கி அது குறித்து எமக்கு அறிவித்து எமது பங்களிப்புடன் செயலாற்றுங்கள். பொது மக்கள் எவரும் பொலிஸாரின் கடமைகளை ஆற்ற முடியாது. சந்தேகத்துக்கு இடமானவர்களைக் கைது செய்யுங்கள். அதன் பின்பு அவர்களை எம்மிடம் ஒப்படையுங்கள். அதன்பின்பு சட்டப்படி நாம் நடவடிக்கை எடுப்போம் என்று தெரிவித்தார் கொடிகாமம் பொலிஸ் அதிகாரி.

வரணி, இடைக்குறிச்சி பிரதேசத்தில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களையடுத்தும், அதன் பின்னர் அந்தப் பகுதியில் விழிப்புக் குழுவினரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் உள்ளவர்களின் நிலைப்பாடு மற்றும் அதன் பின்பு பிரதேசத்தில் ஏற்பட்ட குழப்ப நிலை தொடர்பிலும் பொலிஸார்–பொதுமக்கள் கலந்துரையாடல் ஒன்று புதன்கிழமை வரணி மாசேரி கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்:

“கொள்ளைச் சம்பவம் தொடர் பில் தற்போது கைது செய்யப்பட்ட நிலையில் பொலிஸ் பாதுகாப்பில் நால்வர் உள்ளனர். அவர்களது கைரேகைகள் எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பட்டுள்ளன. பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னரே உண்மை நிலை தெரிய வரும்.

தற்போது இந்தச் சம்பவத்தால் பிரதேசத்தைச் சேர்ந்த இரு தரப்பினர்கள் மத்தியில் மோதல் நிலை ஏற்படும் வாய்ப்புக்கள் தோன்றியுள்ளதை நன்கு அறிந்து அப்படியான நிலை ஏற்படாமல் தடுக்கும் நோக்கிலேயே இந்தக் கலந்துரையாடல் இடம்பெறுகின்றது.

விழிப்புக்குழுக்களை உருவாக்கி உங்கள் பிரதேச பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள். அது குறித்து எமக்கு அறிவியுங்கள் நாமும் உங்களுடன் இணைந்து பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட முன்வருவோம். இதனால் விரும்பத்தகாத சம்பவங்கள் ஏற்பட வாய்ப்பிருக்காது – என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் பொதுமக்கள் 100 இற்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு தமது ஆலோசனைகளையும் அபிப்பிராயங்களைவும் தெரி வித்தமை குறிப்பிடத் தக்கது.

கொடிகாமம் பொலிஸ் உதவி பொலிஸ் பரிசோதகர் எஸ்.கருணாரட்ண தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. வரணி இடைக்குறிச்சி, மாசேரி, வரணி வடக்கு கிராம அலுவலர்கள் மற்றும் அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த பொதுமக்கள் எனப்பலர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

(வ்–122)



முல்லைத்தீவு மாவட்ட மாந்தை கிழக்கு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான உனைஸ் பாறூக் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.
கூட்டத்துக்கு மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் எஸ். பிருந்தாவனன் முல்லைத்தீவு மாவட்ட ஐக்கியதேசியக் கட்சியின் அமைப்பாளர் எஸ். இந்திரன் சாஜீந்திரா வவுனியா மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி இணைப்பாளர் குலேந்திரம் ஆனந்தராஜா மற்றும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.





ஏப்ரல் 06ம் திகதி தொடக்கம் 10ம் திகதி வரை கொமர்ஷல் வங்கியின் ஊடாக e-Exchange, MoneyGram, Express Money மற்றும் RIA பணப்பரிமாற்ற சேவையூடாக பிறநாட்டிலிருந்து அனுப்பும் பணத்தை பெற்றுக்கொள்ளும் அனைவருக்கும் புதுவருடத்திற்கு விசேட மங்களகரமான பரிசில் எம்மிடம்.

மேலதிக விபரங்களுக்கு +94 112 353 576 அழையுங்கள்.

COMMERCIAL BANK

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

www.combank.lk

பெற்றோல் - டீசல் - Hybrid - Registered - Unregistered

எந்தவொரு வாகனத்திற்கும் சிறந்த மாதாந்த தவணைக் கொடுப்பனவைத் தரும்

சம்பத் லீஸிங்

தற்போது மேலும் குறைக்கப்பட்டுள்ளது

ஒரு லட்சம் ரூபாய்க்கு மாதாந்த கட்டணம், ரூ. 1,780/- இலிருந்து.

Like us on facebook.com/Sampathbankplc

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 0112 30 30 50

சம்பத் வங்கி

எதிர்காலத்தின் முன்னோடிகள்

Sampath Bank Fitch Ratings AA-(lka)

www.sampath.lk

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

Grant McCann

# வீதிக்குக் குறுக்காகவுள்ள குழியைச் சீர்செய்ய வலியுறுத்து



கொழும்புத்துறை, ஏப். 5

யாழ்.நாவலர் வீதியில் பிறவுண் வீதிச் சந்திப் பகுதியில் வீதிக்கு குறுக்காகத் தோண்டப்பட்ட நீண்ட குழி சீர் செய்யப்படாமையால் வீதியில் பயணிப் போர் விபத்துக்களைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

நிலக்கீழ் குழாய்கள் பொருத்துவதற்காகத் தோண்டப்பட்ட அந்தக் குழி நீண்ட காலமாக காப்பெற் கலவை கொண்டு சீர் செய்யப்படாது மிகவும் தாழ்வாகக் காணப்படுகிறது. இதனால் வேகமாக வரும் வாகனங்கள் திடீர் வேகத்தணிப்பை மேற்கொள்ளும் போது விபத்துக்களைச் சந்திக்க நேரிடுகிறது.

போக்குவரத்து நெரிசல் மிகுந்த இந்த வீதியின் குறுக்கேயுள்ள குழியை விரைந்து சீர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சாரதிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (வ–135)

# போரின் பாதிப்பால் படுக்கையில் தள்ளப்பட்ட தந்தையும் மகளும்

கிளிநொச்சி, ஏப்.5

இந்திய அமைதிப்படையினரால் தாக்கப்பட்டு தந்தை படுக்கையில் இருந்துவரும் நிலையில், அவரது மகளும் இலங்கை இராணுவ நடவடிக்கை காரணமாக படுத்தபடுக்கையான பரிதாபம் தமிழ் குடும்பங்களுக்கே நிகழும் அதிசயக்கதைகள் ஆகும்.

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் வசித்துவரும் தங்கவேல் (வயது –65) 1987ஆம் ஆண்டில் இந்திய இராணுவத்தினரின் தாக்குதலினால் நடமாட முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டு படுக்கையில் இருந்து வருகிறார்.

இந்த நிலையில் அவரது மகளான மாதங்கியும் (வயது–21) இறுதிப் போர்க் காலப் பகுதியில் மாங்குளத்தில் விபத்துக்குள்ளாகி எழுந்து நடமாட முடியாத நிலையில் உள்ளார்.

எந்தவொரு வருமானமோ உதவியோ அற்ற அந்த குடும்பத்தின் பரிதாப நிலையை உணர்ந்து ஜேர்மனைச் சேர்ந்த புலம்பெயர் உறவுகளது உதவும் இதயங்கள் அமைப்பின் ஊடாக எஸ். சின்னத்தம்பி மகேந்திரம் முதல் கட்ட உதவியை வழங்கியுள்ளார் அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர் ச.சஜீவன் நேரில் சென்று உதவிகளை வழங்கியிருந்தார். (வ)





## பிரிட்டிஷ் கவுன்சிலில் ஏன் ஆங்கிலம் கற்க வேண்டும்?

நாம் பின்வருவனவற்றை வழங்குகின்றோம்

- வயதுவந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சிநெறிகள் (வார, வார இறுதி நாட்கள்)
- பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததும் பிரிட்டிஷ் கவுன்சில் சான்றிதழ் வழங்கப்படும்.
- ஐக்கிய இராச்சிய தராதரமுடைய தொழில்சார் மற்றும் அனுபவமுடைய ஆங்கில ஆசிரியர்கள்
- இரண்டு தவணைக் கட்டண முறைகள் எங்கள் யாழ்ப்பாணக் கிளையில்

ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கும் பயிற்சிநெறிக்கு தற்போது பதிவு செய்யவும்

நான் எவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள முடியும்?

- தரப்படுத்தல் பரீட்சைக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு
  வயதுவந்தவர்களுக்கு (16 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கு) அடையாள அட்டை/கடவுச்சீட்டு
- தரப்படுத்தல் பரீட்சைக்கான கட்டணம் ரூபா. 1000

70 ரக்கா வீதி, கண்டிக்குளி யாழ்ப்பாணம்
தொ.பே (021) 7521521
அலுவலக நேரங்கள்:
புதன் முதல் ஞாயிறு வரை: 0830–1800

49 அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், கொழும்பு 3
தொ.பே (011) 4521521, (011) 7521521
அலுவலக நேரங்கள்:
திங்கள் முதல் ஞாயிறு வரை: 0830–1800

88/3 கொட்டுகொடல்ல வீதி, கண்டி
தொ.பே (081) 7222410
அலுவலக நேரங்கள்:
செவ்வாய் முதல் சனி வரை: 0900–1730
ஞாயிறு: 0900–1600 (விசாரணைகளுக்கு மட்டும்)

நாங்கள் Apex Business Academy உடன் இணைந்து எங்கள் பாடநெறிகளை நடாத்துகின்றோம். மாத்தறை (041)2229555 காலி (091)2232755

www.britishcouncil.lk




United Motors Lanka PLC

| | | | |
|---|---|---|---|
| நுகேகொடை | 0777 898 455 | குருநாகல் | 0773 849 561 |
| அநுராதபுரம | 0773 444 376 | மாத்தறை | 0773 595 269 |
| கண்டி | 0773 608 859 | இரத்தினபுரி | 0777 354 981 |
| நுவரெலியா | 0773 858 096 | யாழ்ப்பாணம் | 0773 325 521 |

யாழ்ப்பாணம் காட்சியறை
கிரிதரன் 0773 325 521

காட்சியறை: 100, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 02.
தொலைபேசி: 011 244 8112/4, 011 479 7200 தொலைநகல்: 011 244 8113
மின்னஞ்சல்: info@unitedmotors.lk இணையதளம்: www.unitedmotors.lk
தொலைபேசி: 011 494 6422/3 தொலைநகல்: 011 269 0282
525, யூனியன் பிளேஸ் (Lipton Circus), கொழும்பு 02.

# 15 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
10.09.1936



மறைவு
21.03.2000

திதி: 05.04.2015
(பிரதமை)

## திருமதி மகேஸ்வரி பரராஜசிங்கம்

அன்போடும் பண்போடும் பாசத்தோடும்
எல்லோரையும் அரவணைத்த அம்மா
விதியழைத்து நீங்கள் எம்மை
விட்டுப் பிரிந்து சென்று
ஆண்டுகளோ பதினைந்து ஆனதம்மா
மீண்டும் ஒரு பிறப்பிருந்தால்
எம்மிடம் வரவேண்டும் தாயே!

உங்கள் ஆத்மாசாந்தியடைய வேண்டி நிற்கும்:
அன்புக் கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இ.பரராஜசிங்கம்,
82/1, செட்டித்தெரு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

# நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப்.5
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிறைவேற்று உத்தியோகத்தர்கள் ஒன்றியத்துக்கு நடப் பாண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நடப்பாண் டுக் குரிய நிர்வாக சபையின் தலைவராக பல் கலைக் கழகத்தின் பதிவாளர் வி.காண் டீபனும், செயலாளராக கல்விக் கிளையின் உதவிப் பதிவாளர் ஆர்.ரமேசும், பொருளாளராக சிரேஷ்ட உதவி நிதி யாளர் எம்.என்.பி.லசந்த மாவிக் கும்பரவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

உபதலைவராக கைதடி சித்த மருத்துவத்துறையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எட்வேட் றெஜினோல்ட்டும், உப செயலாளராக விவசாயபீட உதவிப் பதிவாளர் எஸ்.பிரணவனும், பத்திராதிபராக உதவி நிதியாளர் செல்வி சதீஸ்கா சங்கபாலி கோணபின்வலவும் தெரிவு செய்யப்பட்டனர். (வ)

♦ ♦ ♦

முல்லைத்தீவு, ஏப்.5
முல்லைத்தீவு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் பொதுக்கூட்டம் அண்மை யில் முல்லைத்தீவு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவை கள் அலுவலர் ந.தசரத குமாரன் தலை மையில் நடைபெற்ற கூட்டத்தில் மாந்தை கிழக்கு, கரைது றைப்பற்று, ஒட்டிசுட்டான், துணுக்காய் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மாற்றுத் திறனா ளிகள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் சமூக சேவைகள் அலுவலர் களான க.குணசிங்கம், ம.சுஜிதரன், க.சாருஹாசன், ரி.ராஜ்குமார் ஆகியோ ரும் கலந்து கொண் டனர். நடப்பு வருட நிர்வாகி களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக ந.யோகராசா, உப தலை வராக ரசிதரன், செயலாளராக மு.குக நேசன், உதவிச் செயலாளராக கி.நிர்மலா, பொருளாளராக க.நவரத்தினம் ஆகியோ ருடன் ஆறு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (வ-9)

♦ ♦ ♦

யாழ்ப்பாணம், ஏப்.5
அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதன்போது சங்கத்தின் நடப் பாண்டுக்கான புதிய நிர்வாகிக ளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக சி.இராசநாயகம், பொதுச் செயலாளராக எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி, உபதலைவர்களாக பேராசிரியர் மா.சின்னத்தம்பி மற்றும் ந.சிவ கரன், பொருளாளராக மா. லீலா விநோதன் ஆகியோரும், சங்கத்தின் சிரேஷ்ட ஆலோசகராகசோ.க. தம்பிப்பிள்ளையும் தெரிவாகினர்.

சங்கத்தின் கீழ் இயங்கும் கிளிநொச்சி சிறுவர் இல்ல (காந்தி நிலையம் –உருத்திரபுரம்)குழுவுக்கு தி.இராசநாயகம் (தலைவர்), ப.சதானந்தன் (செயலாளர்), மா.லீலா விநோதன் (பொருளாளர்) ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக கா.கார்த்திகேசு, செல்வராணி சோமசேகரம்பிள்ளை, து.இரத்தின சிங்கம், தே.சுபாகரன், செ.கோபிதர்சன், ப.சபாரத்தினம், த.நேசராஜ்குமார், இரா.செல்வராசா, த.தேவராசா, க.பிரமதீஸ்வரி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

காந்தியக் கல்விக் குழுவுக்குத் தலைவராக பேராசிரியர் மா.சின்னத்தம்பியும், உறுப்பினர்களாக பேராசிரியர் சு.மோகனதாஸ், ந.சிவகரன், க.செல்வக்குமாரன், எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (வ)

♦ ♦ ♦

பண்டத்தரிப்பு பிரதேச எம்.ஜி.ஆர். முன்னேற்றக்கழக புதிய நிர்வாக பொது கூட்டம் அண்மையில் சில்லாலை வடக்கு சாந்தை எம்.ஜி.ஆர். இல்லத்தில் யாழ்.மாவட்ட எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர் செ.அன்ரன் தலைமையில் நடை பெற்றது. இதன்போது தலைவராக செ.கஜீபன், உபதலைவராக இ.இராஜசிறி, செயலாளராக நா.முருகானந்தம், உபசெயலா ளராக இ.தவராஜா, பொருளாளராக த.உதயசூரியன், ஆலோசகராக சி.தி[illegible] செல்வம் ஆகியோரும் மற்றும் நிர்வாக சபை உறுப் பினர்களும் தெரிவு செய்யப் பட்டனர்.

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி அன்னலட்சுமி
(கிளியாச்சி) முருகையா

திதி: பிரதமை

ஆண்டுகள் எட்டாகியதோ அம்மா!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகளை எங்களால்
மறக்க முடியாது அம்மா! உங்களைப் பிரிந்து பார்க்கும்
இடமெல்லாம் உங்கள் முகம் தெரியுதம்மா
நீங்கள் வாழ்ந்த வீட்டின் கலகலப்பை
இழந்து நின்று தவிக்கின்றோம் அம்மா!
எங்கள் கனவில் அடிக்கடிவரும்
உங்கள் முகம் எப்போது நிஜமாய் வருவாயம்மா!
ஆத்மா சாந்தியடைய சிவ பூதராயரை வேண்டுகிறேன்.

தாயின் மடியில்
27.03.1946

ஆண்டவன் அடியில்
22.03.2007

உங்கள் பிரிவாலும் துயரத்தாலும் வாடும்:
முருகையா (கணவர்), பிள்ளைகள்-
ஜெயராணி (மகள் - [illegible])

பன்னாலை,
தெல்லிப்பழை.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
றேனுகாதேவி
அருட்பிரகாசபிள்ளை

திதி: பிரதமை (05.04.2015)

தோற்றம்
31.07.1953


மறைவு
17.03.2014

எம்மை வையத்துள் வாழ்வாங்கு
வாழவைத்த தெய்வமே!

உங்கள்பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர்

“மாப்பியன் லேன்”
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



வையகத்துள்
அறிமுகம்
02.05.1948

தெய்வத்துள்
சங்கமம்
06.03.2015

## அமரர் இளையதம்பி பாலசுப்பிரமணியம்

(முன்னாள் சாரதி - இலங்கை போக்குவரத்துச்சபை)

கடந்த 06.03.2015 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் இளையதம்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் 31 ஆம் நாள் நினைவை யொட்டி எமது இல்லத்தில் இன்று (05.04.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தியைக்கேட்டு ஓடோடிவந்து நேரிலும், தொலைபேசி மூலமும் ஆறுதல் தெரிவித்தோர், துண்டுப்பிரசுரம் வெளியிட்டோர், நினைவுமலர் வெளியிட்டோர், இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி. 077 473 0722

குடும்பத்தினர்.

(58271) (45.3.

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சுப்பையா
கணேசு

தோற்றம்
14.02.1943

மறைவு
07.04.2008

ஏழு ஆண்டுகள் எமைப் பிரிந்திடினும்
ஏழேழு ஜென்மமும் எமக்கு அப்பாவாய்
எம் குடும்ப குத்துவிளக்காய் வாழும்
எஜமானான எம் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்.

டச்சு றோட்,
மானிப்பாய்

8TH INTERNATIONAL

# TAMIL SHORT FILM FESTIVAL 2015

Trinity Centre East Avenue, East Ham London E12 6SG, UK

18 July 2015

VIMBAM

'விம்பம்' ஆவது 8 சர்வதேச

## தமிழ் குறுந்திரைப்பட விழா-2015

போட்டிக்கான உங்கள் குறுந்திரைப்படங்களை

15 ஜூன் 2015

திகதிக்கு முன்னர், கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

- குறுந்திரைப்படங்கள் யாவும் 20 நிமிடங்களுக்குக் குறைவாக இருத்தல் வரவேற்கத்தக்கது.
- ஒருவர் எத்தனை படங்களும் அனுப்பலாம்.
- விண்ணப்பக் கட்டணம் எதுவும் செலுத்தவேண்டியதில்லை.
- பிரித்தானியாவில் ஒளிபரப்பாகும் எந்தவொரு தொலைக்காட்சிகளிலும் இவை காட்சிப்படுத்தப்பட்டிருக்கக்கூடாது.
- தொடர்பு விபரங்களுடன், மேற்கண்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொண்ட ஒப்புதல் கடிதத்துடன் விண்ணப்பதாரியின் புகைப்படமும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

Contact: VIMBAM, 4 Burges Road, East Ham, London E6 2BH, UK

Phone : (44) + 7736 908 421, 208 471 5636 7883 573 337, 7888 238 600, 7817 262 980

E-mail: contact@vimbam.org

Become the Next Youngest Employable Professional Accountant

& Extend Your Professional Qualification

Age of 19 — Age of 18: A\L Second Year — Age of 17: A\L First Year — After O\L

aat SRI LANKA Stage 03 (Associate Accountant) Complete & Become an Passed Finalist

aat - Stage 02 (Accounting Analyst)

aat - Stage 01 (Accounting Assistant)

CIMA Foundation Level

ACCA Stage 02 (Skill Level) Earn Exemption Stage 01 (Knowledge Level)

CA Stage 02 (Business Level) Earn Exemption Stage 01 (Executive Level)

Registrations Now Open..!

Classes in Progress

FREE Career Path Guidance Provided By

S.Thumilan

Group Chairman & Renowned Lecturer



Comprehensive Theory & Revision Programmes

## @ KBBS CAMPUS

Campus Open for Weekday & Weekend Classes

Dehiwala • Kollupitiya • Jaffna

ACCA | CA Sri Lanka | CIMA | aat SRI LANKA | IBSL | CMA Sri Lanka

KBBS CAMPUS — A Subsidiary of Blue Ocean Group of Companies

Head Office : No. 75, Galle Road, Dehiwala

Kollupitiya Campus : No.396, Galle Road, Kollupitiya, Colombo - 03

Jaffna Campus : No. 281, K.K.S Road, Jaffna

Tel: 021 221 7508 / 0112 717 902 Email: jaffna@kbbssl.com

HOTLINE 0765 309 742 0777 554 557 0773 157 465

www.kbbssl.com

கைக்கு தொழில்.... ஒளிமயமான எதிர்காலத்திற்கு சிறந்த வழி .....

# ஹயிடெக் லங்கா

சர்வதேச தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்

நல்ல தொழிலுக்கு நல்ல திறன்

## கட்டுமான இயந்திர உபகரண செயற்பாட்டு நிபுணர் பயிற்சி பாடநெறி



பெகோலோடர் ஒப்பரேடர் Backhoe Loader Operator

புதிய குழுவில் பங்குபெறும் உங்களுக்கு பல விசேட வரப்பிரசாதங்கள்

எக்ஸ்கெவேட்டர் ஒப்பரேடர் Excavator Operator

பிரைம்மூவர் ட்ரைவர் Prime Mover Driver

மொபைல் கிரேன் ஒப்பரேடர் Mobile Crane Operator

வீல் லோடர் ஒப்பரேடர் Wheel Loader Operator

இயந்திர உபகரண பாடநெறி ஆரம்பம் APRIL 28

ப்ரோக்லிப்ட் ஒப்பரேடர் Fork Lift Operator

மோட்டர்கிரேட்டர் ஒப்பரேடர் Motor Grader Operator

ஸ்கிட்லோடர் ஒப்பரேடர் Skid Loader Operator

விபரங்கள் மற்றும் விண்ணப்பங்களுக்கு

0771515114

இலக்கத்துக்கு உங்களுடைய பெயர் மற்றும் விலாசத்தினை SMS செய்யவும்.

ஹயிடெக் லங்கா சர்வதேச தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்

## தொழில்நுட்ப நிபுணர் பயிற்சி பாடநெறி



POWER ELECTRICAL TECHNICIAN — மின்சக்தி தொழில்நுட்ப நிபுணர்

AUTOMOBILE TECHNICIAN — மோட்டார் வாகன தொழில்நுட்ப நிபுணர்

AUTO ELECTRICAL TECHNICIAN — மோட்டார் வாகன மின் தொழில்நுட்ப நிபுணர்

ELECTRONIC ENGINEERING TECHNOLOGY

REF & A/C TECHNICIAN

IT with English

HYDRAULIC TECHNICIAN — ஹைட்ரோலிக் தொழில்நுட்ப நிபுணர்

CONSTRUCTION SITE SUPERVISOR — கட்டுமான தள மேற்பார்வையாளர்

புதிய குழுக்களை இணைத்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மே 12

இப்பாடநெறி யாருக்காக?

0777 851111

077 1515114

037 22 96 029

hightec lanka.int@gmail.com

www.highteclanka.com

PV-81127

(பதிவு இல. P12/0113)

சிவமயம்

# திறப்புவிழா அழைப்பு

## யாழ் நகரில் முற்றிலும்

நவீன மயப்படுத்தப்பட்டு புதுப்பொலிவுடன்

உங்கள் நம்பிக்கையைப் பெற்ற

# த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

## அதே இடத்தில்

நாளை (06.04.2015) திங்கட்கிழமை தொடக்கம்
தமது வியாபாரத்தை புதுப்பொலிவுடன் ஆண், பெண் மற்றும்
சிறுவர்களுக்கான ஆடைத் தினுசுகளுடன்
மங்கலகரமாக ஆரம்பிக்கவுள்ளது.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)



த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44,42, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 8847/ 021 222 4307

## மக்கள் சேவைக்கோர் மகத்தான உதயம்!

# ரூபின்ஸ் மருத்துவமனை

- வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் -



யாழ். வடமராட்சிப்
பிரதேசத்தில்
நவீன வசதிகளுடனான
**மருத்துவமனைத்
திறப்பு விழா**
ஏப்ரல் 5 ஆம் திகதி
மாலை 3.00 மணிக்கு

**FACILITIES**

OPD with ETU 24 hrs | Channeling | Laboratory | Pharmacy | Dental | ECG | Ultrasound Scan

*We will be expanding other services and facilities in the near future*

இல. 160, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. தொ.பேசி 021 226 1500

Rubbins Hospital

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சி நகர்ப்புறத்தில் சகல வசதி களுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப் படும். நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 072 4966082

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி, ஆடியபாதம் வீதி, அரசடி ஒழுங்கையில் திருத்தியமைக்கப்பட்ட 04 அறைகள் கொண்ட வீடு பெரிய குடும்பத்திற்கு அல்லது நிறுவனங்களிற்கு உடன் வாடகைக்கு உண்டு.

குருபரன் : 0777 760 663

max adz

## வேலையாள்கள் தேவை

யாழ்.தெல்லிப்பழைப் பகுதியில் உள்ள கோழிப்பண்ணையைப் பராமரிப்பதற்கு ஆண் அல்லது குடும்பமாக வேலையாள் கள் தேவை. தங்குமிடம், உணவு இலவசம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.(வெளி மாவட்டத்திலிருந்து வருபவர்கள் விரும் பத்தக்கது.)

(58317)(4.3.7) தொடர்பு: 077 074 1765

## வேலைவாய்ப்பு

FR Advertising International இன் புதிய கிளைகளில் வெற்றிடங்கள் காணப் படுகின்றன.

முன் அனுபவம் அவசியமில்லை.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப் பிக்கலாம்.

O/L, A/L முடித்தவர்கள் நேர்முகத் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்.

வயதெல்லை 18-55

Tp:- 077 208 3140, 077 280 3773

(57058)(4.3.7)

## மணமகள் தேவை

கனடா சிற்றிசன் யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1977 சதயம் முதலாம் பாதம் மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.

(58349) (4.3.7) தொடர்பு: 077 552 8882

## வயலின், வாய்ப்பாட்டு வகுப்புக்கள்

யாழ். பல்கலைக்கழகம் இசைமாணி பட் டம் பெற்ற பிரபல ஆசிரியரால் வயலின் வாய்ப்பாட்டு (தரம் 1-6) வரை நடத்தப் படும்.

தொடர்புகொள்ளும் முகவரி:
36, செட்டித்தெரு, நல்லூர். 0212220076

## பதவி வெற்றிடங்கள்

வரவேற்பாளர்/தொலைபேசி இயக்குநர் பதவி களுக்கு பின்வரும் தகைமையுடையவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சாதாரணதரப் பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்தியும், உயர்தர பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி. கவர்ச் சிகரமான வேதனம் வழங்கப்படும். விண்ணப்பங் கள் நேரிலோ தபால் மூலமோ 15.04.2015 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கும்படி அனுப்பும் வண்ணம் கோரப்படுகின்றனர்.

பணிப்பாளர்
நோதேன் சென்றல் வைத்தியசாலை
342, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

## மணமக்கள் தேவை

★ யாழ்.இந்து கௌரவ 1984 இல் பிறந்த U.K குடியுரிமை அச்சுவினி, பாவகிரகம்-18, உயரம் 5.8 லண்டன் U.S.F Com+ கம்பனி மணமகனுக்கு மணமகளும்

★(மருமகன் தேவை) யாழ்.இந்து கௌரவ 1980 ஆண்டு, மகம்.U.K குடியுரிமை B.Sc Computer படிப்பு முடித்து விட்டு வங்கியில் வேலை செய்கின்றார். செவ்வாய் குற்றம் இல்லை. கிரகபாவம்-15, உயரம் 5.5 மணமகளுக்கு தகுந்த மணமகனை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள். P.R இல்லாதவர்களும் விரும்பப்படுவர்.

தொடர்பு இல.
00447908707555, 0758372387

## மருத்துவம் பயிலுங்கள்

MBBS! Zhengzhou University, China



- சீன நாட்டின் முதற் சிறந்த பல்கலைக்கழகம்
- காலம் :- 05 வருடங்கள்
- மொழி :- ஆங்கிலம்
- கட்டுப்படியான கட்டணத்துடன் சிறந்த கல்வி மற்றும் சௌகரியமான விடுதி வசதி
- பகுதி கொடுப்பனவு வசதி
- GMC – UK, USA, WHO மற்றும் இலங்கை மருத்துவ சபையினால் அங்கிகரிக்கப்பட்டது
- 2015 உள்ளீர்ப்புக்கான உடனடி பயணம்

Spot Admisson

மேலதிக விபரங்களுக்கும் / முன்பதிவுகளுக்கும்
பேராசிரியர் விஜிதா சேனாநாயகவை
தொடர்புகொள்ளுங்கள் 0777 444 500

**Institute of Vocational Studies (Pvt) Ltd**
476, Kandy Road, Dalugama, Kelaniya
(Tire Corp Junction / Opposite Bank of Ceylon)
Direct Dial: 011 2910323 Mobile: 0777 444 500 Fax: 011 4810829
E-Mail: ivsltd@hotmail.com WEB: www.ivsedu.net

## புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவு

Sale Sale Sale Sale Sale Sale Sale Sale Sale Sale Slae

- Dell Vostro 200 — Warranty 06 Months
- Dell Desktop GX755 — Warranty 06 Months
- Dell Vostro 200 — Warranty 06 Months
- Dell Vostro 200 — Warranty 06 Months
- Hp Desk Top DC 7800 — Warranty 06 Months
- Hp Desk Top DC 7800 — Warranty 06 Months
- Lenovo Desktop — Warranty 06 Months
- Hp Desk Top DC 7900 — Warranty 06 Months
- Hp Tower DC 7700 — Warranty 06 Months
- Hp Tower DC 7800 — Warranty 06 Months
- Hp Tower Work station — Warranty 06 Months
- Monitor 17" — Warranty 06 Months

**Micro System** Call Now 077 248 7082, 021 225 6165
Alady Junction, Manipay.

## ஷைலோ ஐஸ் கிறீம்

மிகக் குறுகிய காலத்தில் யாழ். மக்களின்
நன்மதிப்பைப் பெற்ற
**Sylo Food and Bavareges Pvt Ltd**
நிறுவனத்தினராகிய நாம்
பால், தேன், பிஸ்தா, பாதாம், முந்திரி, பேரீட்சை,
திராட்சை போன்ற இயற்கையான
ஆரோக்கியமான சுவையான ஊட்டச்சத்துக்கள்
நிறைந்த உயர் தொழில்நுட்ப முறையில்
தயாரிக்கப்படும். Sylo Ice Cream தயாரிப்புக்களின்
விற்பனை நிலையத்தை யாழ். நகரத்தில்
பஸ் நிலையம் முன்புறம் ஆரம்பித்துள்ளோம்.
என்பதை அனைவருக்கும் அறியத் தருவதோடு
அன்புடன் அழைக்கின்றோம்.

**ஷைலோ ஐஸ்கிறீம்**
இல. 442, வைத்தியசாலை வீதி,
(வாகனத்தரிப்பிடம் எதிரில்) யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 221 7885

## Study in Europe

ஏற்றுக்கொள்ளக்கூடிய
குறைந்த செலவில்

Medicine, Engineering, Computer & IT, Aeronautics, Science, Agriculture, Robotics, Data Analysis, Business & Management, Social & Arts and Many More.....
**Bachelors (BSc's) - Doctoral (PhD's) & Duel Degrees**

Schengen Countries : (France, Germany, Romania, Bulgaria, Lithuania, Latvia, Czech Republic etc.)
**GCE (O/L) & GCE (A/L), Admission Guaranteed, No ILETS's**

செப்டெம்பர் மாதம்
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்

கட்டணம்
1900 யூரோவில்
இருந்து

Contact : **Euro Lanka**
33, Railway Station Lane,
Udahamulla, Nugegoda
Phone: 0768036794 / 0766724104
Email: infoeolanka@gmail.com

## Mega Sale

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

# மாபெரும் மலிவு விற்பனை


## 01.04.2015 புதன்கிழமை தொடக்கம்



தம்ரோ, பியெஸ்ரா ஏக விநியோகஸ்தராகிய எங்களிடம்

- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு Sofa செற்றிகளுடனும் 7500/= பெறுமதியான (Glass Coffee Table) இலவசம்.
- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மெத்தைகளுடனும் ஒரு தலையணை (Pillow) இலவசம்.
- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு Damro Doorகளுடனும் ஒரு Door Lock இலவசம்.
- Innovex TV மற்றும் Preethi Mixi, Stand Fan, Rice Cookers ஐ அதிகூடிய விலைக் கழிவுடனும் Damro உத்தரவாதத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.
- 32", 40", 50" LED TV களுடன் ஒரு DVD Player இலவசம்.
- 25000/= இற்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்களை கொள்வனவு செய்தால் இலவசமாக விநியோக சேவை (Home Delivery) செய்யப்படும்.
- Damro, Pyestra Nilkamal, Phonix, Arpico ஆகிய பொருள்களையும் பெற்றுக்கொள்ளலாம்.




**JAMUNA FURNITURE** 181, Navalar Road, Jaffna.
T.P. 021 222 1092, 077 757 4776

# இன வாத தண்டனைச் சட்டத்தை எச்சரிக்கையுடன் வரவேற்கின்றேன்

## மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 5

இனவாதம், மதவாதம் பேசினாலோ, எழுதினாலோ இரண்டு வருடம் சிறைத் தண்டனை என்று குற்றவியல் சட்டக்கோவையில் திருத்தம் கொண்டுவர அமைச்சரவை முடிவு செய்திருப்பதை எச்சரிக்கையுடன் வரவேற்கின்றேன்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் தேசிய நிறைவேற்றுச் சபை உறுப்பினரும் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவருமான மனோ கணேசன்.

கொழும்பு மாநகரசபைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஜன நாயக மக்கள் முன்னணி மாநகரசபை உறுப்பினரானஎம்.திருபாகரகுமார், கட்சித் தலைவரின் முன்னிலையில் உறுதியுரை பிரமாணம் செய்துகொண்ட நிகழ்வு நேற்று கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது. புதிய மாநகர சபை உறுப்பினருக்கு உறுதியுரை செய்துவைத்துஉரையாற்றியமனோ கணேசன் மேலும் கூறியதாவது:–

இனவாதம் எது, மதவாதம் எது, இனவுரிமை எது, மதவுரிமை எது என்பன பற்றி இந்நாட்டு அரசியல், மதத் தலைவர்கள் குறிப்பாக பெரும்பான்மை தரப்பைச் சேர்ந்தவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். தட்டிப் பறிக்கப்படும் தமது உரிமைகளுக்காக தமிழ் பேசும் மக்கள் குரல் எழுப்புவது, போராடுவது, எழுதுவது இனவாதம் அல்ல. அடுத்த இனத்தின் உரிமைகளைத் தட்டிப்பறிப்பது, வெட்டிக்குறைப்பது இனவாதமேயாகும். இந்தத் தெளிவு அரசிலும், எதிர்க்கட்சியிலும் இருக்கின்ற பெரும்பான்மை கட்சிகளுக்கும், தலைவர்களுக்கும் இருக்கவேண்டும். இந்தத் தெளிவுடன்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். இந்தச் சட்டம் நல்லது. ஆனால், இந்தத் தெளிவு சிலருக்கு இல்லை. ஆகவே, இனவாதம், மதவாதம் பேசினாலோ, எழுதினாலோ இரண்டு வருடம் சிறைத் தண்டனை என்று குற்றவியல் சட்டக்கோவையில் திருத்தம் கொண்டுவர அமைச்சரவை முடிவு செய்திருப்பதை எச்சரிக்கையுடன் வரவேற்கின்றேன்.

இந்த நாட்டில் இன, மதவாதம் பல்வேறு ரூபங்களில் இருக்கின்றது. வெறுமனே கோவில்களையும், பள்ளிகளையும், கிறிஸ்தவ தேவாலயங்களையும் இடிப்பது மாத்திரம் இனவாதம் அல்ல. இந்நாட்டில் சனத்தொகையை கணக்கிட்டு, கொழும்பு மாவட்டத்தில் மூவர், நுவரெலியா மாவட்டத்தில் ஐவர், பதுளையிலும், கண்டியிலும் தலா இருவர் என தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் முகமாக புதிய தேர்தல் முறையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனக் கூறினால் கொழும்பிலும், மலையகத்திலும் அரசியல் செய்கின்ற சிலருக்கு கோபம் வருகிறதாம். இவர்கள் யார்? இவர்கள், தேர்தல் காலங்களில் தமிழ் வாக்குகளை குறிவைத்து, தமிழர்களை வாக்கு வங்கியாக மட்டும் பயன்படுத்துகின்றவர்கள் ஆகும்.

இங்கே யார் இனவாதி? எனது இனத்தின் உரிமையை உறுதிப்படுத்த விளையும் நான் இனவாதியா? அல்லது எங்கள் வாக்குகளைத் தட்டிப்பறித்து ருசிபார்க்கத் துடிக்கும் இவர்கள் இனவாதியா?

இன்று யுத்தம் இல்லை. புலிகளும் இல்லை. அவர்களது எறிகணைகளும் இல்லை. ஆகவே, அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கான தேவையும் இல்லை. ஆகவே, எங்கள் நிலங்களைத் திருப்பிக் கொடுங்கள் என்று நாம் கோருவது எப்படி இனவாதமாகும்? இதையும் இனவாதமாக காட்ட சிலர் முயல்கிறார்கள்.

முஸ்லிம் சகோதரர்களின் பள்ளிகளை உடைக்காதே என்று நான் சொன்னால், என்னைப் பார்த்து முதலில் சுன்னத் செய்துவிட்டு வந்து பிறகுமுஸ்லிம்களைப்பற்றிப் பேசுங்கள் என்று சொல்லுபவர் இனவாதியா? அல்லது முஸ்லிம் சகோதரர்களுக்காகக் குரல் எழுப்பும் நான் இனவாதியா?

இலங்கை தாய்திருநாட்டை சிலாகிக்கும் தமிழ்மொழியிலான தேசிய கீதத்தைப் பாடுவது மீதான அதிகாரபூர்வமற்ற தடையை நீக்குங்கள் என்று நான் ஜனாதிபதியைக் கேட்டேன். அவரும் உடன்பட்டார். அதன் பிறகு இந்தத் தடை நீக்கம் என்ற செய்தி உலகம் முழுக்கப் போனது. அதை நமது புதிய அரசின் நல்லெண்ண செயற்பாட்டின் அடையாளம் என்று நமது வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாவில் சென்று சொல்கிறார். நமது பிரதமர் அதை யாழ்ப்பாணத்தில் நினைவூட்டுகிறார்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) தேசிய நிறைவேற்று சபைக் கூட்டம் முடிந்த பின் என்னிடம்வந்த ஒரு பெரும்பான்மை அரசியல்வாதி இரகசியமாக ஒரு வேண்டுகோளை விடுக்கின்றார். அது என்ன வேண்டுகோள்? மனோ, நீங்கள் கடந்த முறை இங்கே தமிழில் தேசிய கீதம் பாடும் விவகாரம் பற்றிய பிரச்சினையை எழுப்பினீர்கள். இனி இப்படியான சர்ச்சைக்குரிய பிரச்சினைகளை எழுப்பாமல் இருங்கள். அது நமது ஜனாதிபதியை தர்மசங்கடத்திற்கு உள்ளாக்கிவிட்டது என்று அவர் கோரிக்கை விடுக்கின்றார்.

தமக்கு தர்மசங்கடம் என்று ஜனாதிபதி என்னிடம் சொல்லவில்லை. அவரிடம் அப்படியான ஒரு அடையாளம்கூட தெரியவில்லை. ஆனால், ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சார்ந்த ஒரு தேரர் என்னிடம் இப்படி சொல்கிறார். அவருக்கு நான் என்ன பதிலை சொல்வேன். ஆனால்,தமிழ் மொழியில் இலங்கையின் தேசிய கீதம் பாடுவதைப் பற்றிக் கூட பேசாதீர்கள் என சொல்லும் இவர்கள் இனவாதிகளா? தாய்நாட்டை? பற்றி தாய்மொழியில் தேசிய கீதம் பாடும் உரிமையை கோரும் நான் இனவாதியா?

இவைபற்றி நாம் சிந்திக்க வேண்டும். இனவாதம் எதுஎன்பதுபற்றி அனைவருக்கும். அறிவுறுத்த வேண்டும். எச்சரிக்கையுடன் இந்தச்சட்டங்களை வரவேற்கவேண்டும் – என்றார்.

---

### வாக்குறுதிகளை

தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:–

புதிய அரசு 100 நாள் வேலைத் திட்டத்தில் மக்களுக்கு அளிக்கப்பட்ட அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற வேண்டும். அரசு இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் அவசர அவசரமாக பொதுத் தேர்தலுக்குச் செல்ல முயற்சித்தால் அதற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்தல், 19 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தல், புதிய தேர்தல் முறைமை ஒன்றை அறிமுகம் செய்தல் ஆகியவை அரசு தேர்தல் காலத்தில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளாகும். இந்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும்.

நாட்டு மக்களும், புதிய அரசை ஆட்சியில் அமர்த்த முயற்சித்த தரப்புக்களும் அவசர தேர்தல் ஒன்றைக் கோரவில்லை.

நாடாளுமன்றைக் கலைத்து தேர்தல் நடத்த போதியளவு கால அவகாசம் இருக்கின்ற நிலையில், அவசர அவசரமாக 100 நாள் வேலைத் திட்டத்தை நிறைவேற்றாது தேர்தலை நடத்துவதற்கு செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது – என்றார்.

### காங்கேசன்

அனுமதி கிடைப்பதில் தொடர்ந்து நிலவும் தாமதம் காரணமாக அந்தப் பயணத்தைப் பிற்போட வேண்டி ஏற்பட்டுள்ளதாக றியாஸ் சாலி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனமும் இந்தியாவின் ஜே.கே சீமெந்தும் இணைந்து தொழிற்சாலையை மீள இயக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இது தொடர்பில் எமது குழுவினரும் ஜே.கே சீமெந்தின் நிபுணர் குழுவினரும் திங்கட்கிழமை காங்கேசன்துறைக்கு வருவதற்குத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்கவில்லை. இதனால் திங்கட்கிழமை திட்டமிடப்பட்ட எமது பயணம் தொடர்பில் தீர்மானமான முடிவு எட்டப்படவில்லை.

இந்திய நிறுவனமான ஜே.கே. சிமெந்து, 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனத்தில் முதலிடத் தயாராகவுள்ளது. இதன் மூலம் 1500 பேருக்கு வேலைவாய்ப்பினை வழங்க முடியும்.

இந்திய நிறுவனங்கள் சமூக அக்கறைகொணடவை என்பதால் ஆலையைச் சுற்றியுள்ள பகுதியில் வைத்தியசாலை, பாடசாலை, மாதிரிக் கிராமம் ஆகியவற்றையும் அமைக்க உள்ளது. இந்தத் திட்டத்தில் மக்கள் விரும்பினால் அவர்களுக்கு மின்சாரம், சுத்தமான குடிநீர் வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன.

'காங்கேசன்' என்ற பெயரில் தான் முன்னர் காங்கேசன் துறையின் சீமெந்து உற்பத்தி செய்யப்பட்டன. தற்போது கூட்டுத்தாபனம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையிலும் 'காங்கேசன்' என்ற பெயரிலேயே உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு சந்தைப்படுத்தப்படும்.

உற்பத்திகளில் 5–7 மெற்றிக் தொன் அளவில் உள்நாட்டு மூலப்பொருள்கள் பயன்படுத்தப்படவுள்ளன. மொத்தம் 8.2 மெற்றிக் தொன் அளவில் உற்பத்திகள் மேற்கொள்ளப்படும். உள்நாட்டு மூலப் பொருள்களை உபயோகிப்பதால் இலங்கைக்கு வருடமொன்றுக்கு 75 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சேமிப்பாக அமையும். தயாரிக்கப்படும் உற்பத்திகள் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் ஐரோப்பாவின் உயர் தொழில்நுட்பங்கள் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடந்த வருடம் கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது ஜே.கே. நிறுவனத்தினர் காங்கேசன்துறைக்குச் சென்று பார்வையிடுவதற்கு அனுமதி கோரினர். அனுமதி அளித்த கோத்தபாய இந்த இடத்தில் தொழிற்சாலை அமைப்பதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன்' எனத் தெளிவாகக் கூறியிருந்தார்.

ஆட்சிமாற்றத்தை அடுத்து பஸ்நாயக்க பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இருப்பினும் நாம் திங்கட்கிழமை காங்கேசன்துறைக்கு செல்வதற்கு கோரியிருந்த அனுமதி கிடைக்கவில்லை. எமது நிலத்திற்கு நாங்கள் செல்வதற்கு இயலாத நிலையே காணப்படுகின்றது. தொடர்ந்தும் அனுமதி மறுக்கப்பட்டால் போராட்டம் நடத்தி காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தை மீள இயக்குவேன்– என்றார். (உ–10)

### நியாயமான

கண்டி, ஹாரகம பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போதைய அரசு ஆட்சியமைத்து குறுகிய காலத்தில் மேற்கொண்ட பெரும் பணிகளை வேறு எந்த அரசும் முன்னெடுக்கவில்லை. நாட்டில் தற்போது நல்லாட்சி ஏற்பட்டுள்ள நிலையில் உலக நாடுகளின் தலைவர்கள் இலங்கைக்கு பயணம் மேற்கொள்வதில் பெருமளவு ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆனால் கடந்த காலங்களில் உலகத் தலைவர்கள் இலங்கைக்கு பயணம் செய்வதை நிராகரித்து வந்தனர். அடுத்த மாதம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுப் பொதுத் தேர்தல் நடத்தப்பட உள்ளது.

தேர்தலின் பின்னர் தேசிய அரசு அமைக்கப்படும். தேசிய அரசு என்பது அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதல்ல. மாறாக அனைத்துக் கட்சிகளும் ஒரு நிலைப்பாட்டில் இருந்து நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதே.

அனைத்துக் கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டில் இருந்து செயற்படத் தவறினால், எதிர்காலத்தில் நாடு பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும்.

வடக்கு – கிழக்கு பிரச்சினை இதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இரு பிரதான கட்சிகள் இணைந்து வடக்கு – கிழக்குக்கு நியாயமான அதிகார பரவலாக்கத்தை வழங்குவது தொடர்பில் இணக்கம் காண வேண்டும். அதேபோல் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இரு பிரதான கட்சிகளும் இணைந்து முகம் கொடுக்க வேண்டும்–என்றார். (த)

### இலங்கைக்கு

நேற்று இலங்கை வந்துள்ள அவர், எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையில் இங்கு தங்கியிருக்கவுள்ளார்.

இவர் தனது பயணத்தின்போது உயர்மட்ட அரச அதிகாரிகள், அபிவிருத்திப் பங்காளர்கள், மற் றும் சிவில் சமூகத்துடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

புதிய அரசியல் சூழலில், இலங்கையின் எதிர்பார்ப்புகள், எழுந்து வரும் அபிவிருத்தித் தேவைகளை அறிந்து கொள்ளவுள்ளதுடன், இலங்கையில், ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் பங்கை வலுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடவுள்ளார்.

இவர், வடக்கு மற்றும் வட மத்திய மாகாணத்துக்கும் சென்று அரச அதிகாரிகள், சமூகப் பிரதிநிதிகள் மற்றும் பயனாளிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

வடக்கு மாகாணத்திற்குச் செல்லும் இவர், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்து அங்குள்ள தற்போதைய நிலைமைகள் மற்றும் உதவித் தேவைகள் குறித்தும் கேட்டறியவுள்ளார்.

### கைகளைப்

மன்றில் சமர்ப் பிக்குமாறும் யாழ் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளுக்கு நீதிவான் இதன்போது உத்தரவிட்டார்.

கைதான இந்திய மீனவர்கள் 37 பேரும் நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது வாக்குமூலம் வழங்கிய இந்திய மீனவர்கள்,

எங்கள் கடற்பரப்பில் மீன்படுவது குறைவு. மற்றைய மீனவர்கள் அதிகமான மீன்களைப் பிடித்திருந்தார்கள். நாங்களும் அதிகளவான மீன்கள் பிடிப்பதற்காகவே இலங்கைக் கடற்பரப்புக்குள் வந்து மீன் பிடித்துக்கொண்டு இருந்தோம். அப்போது மாலை 6 மணியளவில் நான்கு டோறா படகுகளில் வந்த இலங்கைக் கடற்படையினர் எங்களைச் சுற்றிவளைத்தனர். பின்னர் எங்கள் மீன்பிடிப் படகில் ஏறி எங்களுடைய கைகளைப் பின்புறமாகக் கட்டி வைத்துக் கயிற்றினாலும், துப்பாக்கியின் பின்பக்கத்தினாலும் கடுமையாகத் தாக்கினர்.

அதன் பின்னர் எங்கள் அனைவரது கைகளையும் கட்டிக் கடற்படை முகாமுக்குக் கொண்டு சென்றனர் என நீதிவானிடம் தெரிவித்தனர்.

சிவபெருமாள் செந்தில்குமார் (வயது–39), தங்கவேல் ரவிச்சந்திரன் (வயது–37), இடும்பன்சாமி கந்தவேள் (வயது–34) ஆகிய மூவருமே கடுமையான அடிகாயங்களுக்கு உள்ளான நிலையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

### மின்சாரம் தாக்கி

நேற்று ஏற்கனவே பிளக்கில் போடப்பட்டிருந்த அந்த மின்விசிறியின் இணைப்பை வேறொரு பிளக்கில் மாட்டுவதற்காகக் கழற்றியபோதே அதன் மேல் மூடி கழன்று, விரல் மின் வயரில் பட்டுவிட்டது. அதனால் அவர் தரையில் தூக்கி வீசப்பட்டுள்ளார்.

சத்தம் கேட்டு அங்கு சென்று பார்த்த பக்கத்துக் கடைக்காரர் அவரின் நிலைமையை உணர்ந்து பிரதான மின் ஆளியை நிறுத்திவிட்டு ஓட்டோவில் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும் அதற்கு முன்னரே அவர் உயிரிழந்து விட்டமை பரிசோதனையில் தெரியவந்தது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். பொலிஸ் விசாரணை மற்றும் பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த–4)

### தாய்ப்பால்

உணர்வும் அதில் காணப்படவில்லை. உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது குழந்தை அதற்கு முன்னரே உயிரிழந்துவிட்டமை தெரிய வந்தது.

நெல்லியடிப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். குழந்தையின் உடலை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்திய போது தாய்ப் பால் புரைக்கேறி சுவாசப் பையில் சென்று சுவாசத்தை அடைத்ததனால் குழந்தை உயிரிழந்துள்மை தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். பாலூட்டியவுடன் குழந்தையைக் கிடையாகக் கிடத்தியமை அதற்குக் காரணமாக இருக்கலாம் என்று மேலும் கூறப்பட்டது. விசாரணைகளின் பின்னர் குழந்தையின் உடல் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது. (த–4)

### பிறந்த

பிடிக்க முடியவில்லை.

அவர் நீரில் மூழ்கிக் காணாமற் போயிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அவரைத் தேடும் பணியில் மீனவர்களும், சுழியோடிகளும் தீவிரமாக ஈடுபட்டனர்.ஆயினும் நேற்று இரவு வரை அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏனைய 11பேரையும் அச்சுவேலிப் பொலிஸார் கைதுசெய்து விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர். (த–101)

### பிரதமர்

ஆட்சிக் காலத்தில் கூனித்தீவில் தரைமட்டமாக்கப்பட்டிருந்த பத்திரகாளி அம்மன் கோயி லுக்குச்சென்று அவ்விடத்தைப் பார்வையிட்ட பிரதமர், அந்தக் கோயிலை மீள நிர்மாணித்துத் தருவதாக மக்களிடம் வாக்குறுதி அளித்துள்ளார். பிரதமருடன் திருகோணமலை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் மூதூர் தொகுதி அமைப்பாளருமான எம்.ஏ.எம்.மஹ்றூப் பும் சென்றிருந்தார். (த–10)

WELLAWATTE
**UDAYAA JEWELLERS**
**புதிய காட்சியறை திறப்பு விழா**
புதிய மற்றும் நவீன டிசைன்கள் கொண்ட
புதிய காட்சியறையை வாடிக்கையாளர்களான உங்களை
திறந்துவைக்க அன்புடன் அழைக்கின்றோம்.
**15.04.2015ம் திகதி புதன்கிழமை காலை 6.27 மணிமுதல்**
இல. 303, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு 06.
தொ.பேசி : +94-11-2554933
**அக்ஷய திருதியை முன்னிட்டு விஷேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்**
வெள்ளவத்தையை தவிர வேறெங்கும் எமக்குக் கிளைகள் கிடையாது

**SB TRAVELS & TOURS (PVT) LTD** SPECIAL AIR FARES
E-mail: sbtravels99@yahoo.com, sbtravels@sltnet.lk

| | | | |
|---|---|---|---|
| MADURAI | 16,200/- | LONDON | 81,600/- |
| TRICHI | 22,400/- | MALDIVES | 17,500/- |
| CHENNAI | 23,500/- | PARIS | 86,699/- |
| BOMBAY | 28,000/- | TORONTO | 148,200/- |
| BENGALURU | 28,900/- | NEW YORK | 107,000/- |
| KOCHI | 22,400/- | MELBOURNE | 99,800/- |
| DELHI | 40,400/- | PERTH | 102,200/- |
| MALAYSIA | 26,600/- | CANTON | 66,900/- |
| SINGAPORE | 27,500/- | NARITA | 77,900/- |
| BANGKOK | 29,900/- | | |
| SYDNEY | 102,600/- | AUCKLAND | 130,900/- |

*Condition Apply
VISA MASTER American Express Card Accepted
ONE WAY: DUBAI-23,800/-, DOHA-23,800/-, ABUDHABI-18,800/-, SHARJAH-16,500/-
சகல நாடுகளுக்குமான டிக்கட்டுகள் மிக நியாய கட்டணத்தில் பெற இன்றே அழையுங்கள்:
**0771083480,81,82,83**
**0766911080,81,82,83,84,85,86,87,89,90**
Doha Qatar Bureau Arrangement செய்து தரப்படும்.
India, Bangkok, Malaysia Visa Arrangement செய்து தரப்படும்.
No324, ALUTHMAWATHA ROAD, COLOMBO-15. TEL-011 2540280
No: 132, SRI KATHERASAN STREET, COLOMBO 13. TEL -011 2333322
NO 15, JEMPATTAH STRRET, COLOMBO-13. TEL- 011 2446666
E-mail: sbtravels99@yahoo.com Contact for Travel Insurence

**பயிற்சி மூலம் ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளல்**
**English Medium (Gr 1 - 11) All Subjects**
**10 மாதங்களுக்கு**
**தொடர்புகளி**
**தெமட்டகொட, புத்தளம், யாழ்ப்பாணம், சுதுமலை**

**தகைமைகள்**
1. 18 தொடக்கம் 35 வயது வரை ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
2. க.பொ.த. சாதாரண தரம் 6 பாடங்களில் திறமை சித்தி மற்றும் க.பொ.த. உயர்தரம் படித்திருக்க வேண்டும்.
3. நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு தெமட்டகொட, புத்தளம், யாழ்ப்பாணம், சுதுமலை ஆகிய இடங்களில் 10 மாதங்கள் பயிற்சி கொடுக்கப்படும்.
4. பயிற்சிக் காலத்தில் 1 தொடக்கம் 11ஆம் வகுப்பு வரை உள்ள தனியார் பாடசாலைகளில் பயிற்சி கொடுக்கப்படும். (English Medium)
5. உங்களது விண்ணப்பத்தை பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், தராதரப்பத்திர குறிப்பு பிரதி எடுத்து அத்துடன் 9X4 வடிவமுள்ள தபாலுறையில் 45 ரூபா முத்திரையுடன் தபாலுறையின் மேல் மூலையில் 1 தொடக்கம் 11ஆம் வகுப்பு வரை என்று எழுதி பதிவுத்தபாலில் அனுப்பவும். ஆங்கில Semi பகுதி/அரை அரசாங்கப் பாடசாலையிலும் தனியார் பாடசாலையிலும் படிப்பிக்கும் ஆங்கில மொழிமூல பாடங்களை பயிற்றுவிக்க ஆசிரியர்களை சேர்த்து பயிற்சி கொடுத்தல் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகுதி**
* க.பொ.த. G.C.E. Level 5 பாடங்களில் விசேட சித்தி அல்லது G.C.E. A/Level பாடங்களில் சித்தி அடைந்தவரும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.
* நேர்முகப்பரீட்சை தெமட்டகொட, புத்தளம், யாழ்ப்பாணம், சுதுமலை ஆகிய பொது காரியாலயங்களில் நடைபெறும்.
* ஆங்கில பாடத்தில் குறைவானவர்களுக்கு 60 நாள்களில் ஆங்கில பயிற்சி கொடுக்கப்படும் மற்றும் கணினி கற்கைநெறி (இலவசமாக Diploma)
* பயிற்சி கிழமையில் 5 நாள்களுக்கு 10 மாதங்களுக்குக் கொடுக்கப்படும்.
* பயிற்சியின் பின்னர் தகுதியானவர்களுக்கு அப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் வேலை பெற்றுக்கொடுக்கப்படும்.

**பயிற்சியின் பின்னர் மாதாந்த கட்டணம் ரூபா 34,500/- Salary ஐ கொடுத்து உங்களை எங்கள் நிறுவனத்தின் சிறந்த ஆசிரியர்களாக தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்.**

**Teacher Training Institute**
390/2/1 Baseline road Dematagoda
தொலைபேசி : 071 5669641/ 077 1529731/ 0112 677641
பதிவுத்தபாலில் அனுப்பவும் அனுப்ப வேண்டிய முகவரி
Officer
Blooming Buds International
Teaching Training Institute, No.388/1/1
Base Line Road, Dematagoda, Colombo-09
PV 94034

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குவீர்கள்.

**இடபம்:** நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும்.

**மிதுனம்:** வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**கடகம்:** உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டுக் கிடைக்கும்.

**சிங்கம்:** சோர்வு நீங்கி துடிப்புடன் செயற்படத் தொடங்குவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கன்னி:** பல வேலைகளையும் இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். சாதாரணமாக பேசுவதைக் கூட சிலர் குதர்க்கமாக புரிந்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறை கூறுவார்கள்.

**துலாம்:** எதிர்பார்த்தவை தாமதமாக முடியும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதத்தைத் தவிர்க்கவும். வேலைப்பளு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** சமயோஜித புத்தியால் எல்லாப் பிரச்சினைகளையும் எளிதாகச் சமாளித்து வெற்றி பெறுவீர்கள். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள்.

**தனுசு:** கோபத்தைக் கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிரபலங்கள் உதவுவார்கள். வீடு, உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள்.

**மகரம்:** நீண்ட நாள்களாகதள்ளிப்போன காரியங்கள் முடியும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கும்பம்:** குடும்பத்தினர் சிலர் உங்களைப் புரிந்து கொள்ளாமல் நடந்து கொள்வார்கள். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**மீனம்:** தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பர்.

# இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஏப்.5

பருத்தித்துறை கடற்பரப்பை அண்மித்த இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 37 பேரையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித் துறை நீதிவான் மா.கணேசராஜா உத்தரவிட்டார்.

நாகப்பட்டினம், அக்கரைப்பேட்டை பகுதியைச்சேர்ந்த 37 இந்திய மீனவர்கள் பருத்தித்துறையை அண்மித்த கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் நேற்றுச் சனிக்கிழமை காலை ஒப்படைக்கப்பட்டிருந்தனர். நீரியல் வளத்துறை அதிகாரிகள் மீனவர்களை பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். இதன் போது, இவர்கள் அனைவரையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டார். (த)

**வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொதுக்கூட்டம் 2015**

தென்மராட்சி வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 18.04.2015 சனிக்கிழமை மு.ப. 9 மணியளவில் இடம்பெறவுள்ளதால் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்.


UK, Australia, Canada, USA, New Zealand, Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden etc...
**வங்கியில் பணவைப்பு**
Saving book, Fixed Deposit, Statement
3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு (அரசவங்கிகளில் மட்டும்)
Migration / Skill Migration / Visit Visas / Student Visas / Dependent / Business / Investment / New Applications etc...
(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).
SKYWALK Visa Solutions
ஸ்கைவோர்க் வீசா சொலூஷன்
No.65, 1/1, Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)
**077-7711905**

# கல்முனை மக்கள் நேற்று உணவுத் தவிர்ப்புப் போர்

கல்முனை, ஏப்.5

கல்முனை மக்கள் நேற்றுச் சனிக் கிழமை உணவுத் தவிர்ப்புப் போராட் டத்தில் ஈடுபட்டனர். முஸ்லிம்கள் விடயத்தில் அரசு அலட்சியப் போக்கைக் கடைப்பிடிப்பதாகக் கூறியே மேற்படி போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது கல்முனை புதிய நகரத் திட்டத்தை உடன் ஆரம் பிக்க வேண்டும், 25 ஆண்டுகளுக்கு மேலாக சுத்தமான குடி தண்ணீர் இன்றி இருக்கும் கல்முனைக்குடி பிரதேசத்துக்குக் குடி தண்ணீர் வசதியை ஏற்படுத்தவேண்டும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சவூதி அரசினால் நிர்மாணிக்கப் பட்ட நுரைச்சோலை வீடமைப்புத் திட்டம் உடனடியாகக் கையளிக்கப் படவேண்டும் போன்ற 15 அம்சக்கோரிக்கைகள் இதன் போது முன்வைக்கப்பட்டன. போராட்டத்தின் முடிவில் அரச அதிபருக்கு மனு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. (த-10)

# கூட்டமைப்புக்கு எதிராக யாழ்.நகரில் ஆர்ப்பாட்டம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக யாழ்.நகரில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பு என்றொரு அமைப்பினால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரில் தந்தை செல்வா சதுக்கம் முன்பாக நேற்று நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் தமிழரசுக் கட்சியின் தலைவர் ஆகியோரின் உருவப் பொம்மைகளும் எரிக்கப்பட்டுள்ளன.

கூட்டமைப்பினரால் பெண்கள் மீது துஷ்பிரயோகம் மேற் கொள்ளப்படுவதாகக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியதுடன், அது தொடர்பில் விசாரணை நடத்தவேண்டும் என்றும் கோரியே இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கிருந்து தமிழரசுக் கட்சியின் அலுவலகம் வரை ஆர்ப் பாட்டக்காரர்கள் உருவப் பொம்மைகளையும் இழுத்துச் சென்று எரியூட்டினர். (த-4)

# சிங்கள ராவய குழுவை கலைத்தனர் பொலிஸார்

பலாங்கொடை, குரகல எனுமிடத்திலுள்ள புனித பூமிக்குள் அத்துமீறி நுழைவதற்கு முயன்ற சிங்கள ராவய அமைப் பினர் மீது பொலிஸார் தண்ணீர் பீச்சியடித்து அவர்களைக் கலைத்துள்ளனர்.

குறித்த இடத்திற்குள் பிரவேசிக்க வேண்டாம் என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த விடயத்தை குறித்த குழு வினருக்குப் பொலிஸார் ஏற் கனவே அறிவித்திருந் தனர்.

எனினும், பொலிஸாரின் அறிவுறுத்தலை மீறி சிங்கள ராவய அமைப்பின் குழுவினர் புனித பூமிக்குள் நுழைய முற்பட்ட வேளை, பொலிஸாரால் தண்ணீர் பீச்சியடித்து அவர்கள்

# காளி அம்பாள் -கண்ணகி தாச்சியில் பலப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப் 05

நல்லூர் அரசடி ஜனசக்தி சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வளர்ச்சி நிதிக்காக யாழ்.மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்திய தாச்சித் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் கொக்குவில் காளி அம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இன்றைய நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபையின் உறுப்பினரும் விளையாட்டுத்துறை இணைப்பாளருமான இ.ஆனல்ட், கௌரவ விருந்தினர்களாக கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன், யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத் தலைவர் செ.சண்முகலிங்கம், உதயசூரியன் சனசமூக நிலையத்தின் தலைவர் சி.ரமேஸ், சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துஸ்மந்த ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக ஜனசக்தி சனசமூநிலையத்தின் ஆ.கனகலிங்கம், மா.சிவசுப்பிரமணியம், செ.முருகையா ஆகியோரும் சுன்னாகம் ஜே–196 கிரம சேவையாளர் யூஜின் மசனட்டும் கலந்துகொள்ளவுள்ளனர். (த–ரி–23)

# வசந்தஶ்ரீ, பாரதி, இளவாலை மத்தி அரியாலை ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம், ஏப் 05

அரியாலையின் 96ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் ஓர் அங்கமான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அருணோதய சனசமூக நிலைய மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் 'பி' பிரிவு சார்பாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தஶ்ரீ விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இந்த ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தஶ்ரீ விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இந்த ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாவது ஆட்டத்தில் மல்லாகம் நீயூவோறியஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இந்த ஆட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (த–ரி–23)



## பஞ்சாப் பணியாது

எதிர்வரும் ஐ.பி.எல். தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி பஞ்சாப் அணி மீண்டும் சாதிக்கும்' என்று பஞ்சாப் அணியின் நட்சத்திர வீரர் சேவாக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 8வது ஐ.பி.எல். தொடர் எதிர்வரும் 8ஆம் திகதி தொடங்குகிறது. இதில் இடம் பெற்றுள்ள பஞ்சாப் அணி, கடந்த ஆண்டு இறுதியாட்டம்வரை முன்னேறியது. இந்தத்தொடர் குறித்து பஞ்சாப் அணியின் அதிரடி தொடக்க வீரர் சேவாக் தெரிவித்ததாவது 'உலகக்கிண்ண தொடர் முடிந்து 10 நாள்களுக்கு பின்தான், ஐ.பி.எல்., தொடர் தொடங்குவதால், வீரர்கள் சோர்வடைய வாய்ப்பு இல்லை. ஏற்கனவே இதுபோன்ற சூழ்நிலையில் விளையாடிய அனுபவம் வீரர்களுக்கு உள்ளது.

கடந்த ஆண்டு பஞ்சாப் அணி இறுதியாட்டத்துக்கு முன்னேறியதற்கு பயிற்சியாளர் சஞ்சய் பங்கார் முக்கிய காரணம். வீரர்களுக்கு முழு சுதந்திரம் அளிக்கும் இவர், நண்பரைப் போல பழகுவார். வீரர்களின் பலம், பலவீனம் குறித்து நன்கு அறிந்தபின் பயிற்சி வழங்குவது இவரது தனிச்சிறப்பு. கடந்த ஆண்டை போல, இம்முறையும் பஞ்சாப் அணி முழுத்திறமையை வெளிப்படுத்தி சாதிக்க முயற்சிக்கும். இதற்காக விரைவில் புனேயில், பயிற்சி முகாமை துவக்கி, ஐ.பி.எல். தொடருக்கான திட்டங்களை தீட்ட உள்ளோம். இளம் வீரர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்தும் சிறந்த மேடையாக ஐ.பி.எல்., தொடர் திகழ்கிறது. இத்தொடரில் சாதித்த நிறைய வீரர்கள், தேசிய அணியில் இடம் பிடித்துள்ளனர். கடந்தமுறை பஞ்சாப் அணியில் இடம் பிடிக்காத வீரர்களுக்கு, இம்முறை நிச்சயம் விளையாடும் வாய்ப்புக் கிடைக்கும்.' என்றார். (ரி)

# நிபந்தனையுடன் அணிக்கு திரும்புகின்றார் அஜ்மல்

பந்துவீச்சு முறை தவறு என்ற சர்ச்சையால் தடை விதிக்கப்பட்டிருந்த முன்னணி சுழற்பந்துவீச்சாளர் சயீட் அஜ்மல் மீண்டும் பாகிஸ்தான் அணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



உலகின் முதல்தர பந்துவீச்சாளராக இருந்த பாகிஸ்தானின் சயீட் அஜ்மலின் பந்துவீச்சு முறை சர்ச்சையை ஏற்படுத்தியது. ஐ.சி.சியின் விதிமுறைக்கு ஏற்ப இவரது பந்துவீச்சு அமையாததால் தடை விதிக்கப்பட்டார். இதனால் உலகக் கிண்ணத் தொடரிலும் இவரால் பங்கேற்க முடியவில்லை. பந்துவீச்சு முறையை மாற்றிக் கொண்ட அஜ்மலுக்கு, ஐ.சி.சி கடந்த பெப்ரவரி மாதம் தடையை நீக்கியது. இந்நிலையில், அவர் பாகிஸ்தான் அணியின் பங்களாதேஷ் தொடருக்கான ரி–20, டெஸ்ட், ஒருநாள் ஆகிய 3 அணியிலும் இடம் பிடித்துள்ளார். இந்தத் தொடருக்கான திகதிகள் இன்னும் முடிவாகவில்லை. இருப்பினும் எதிர்வரும் 17ஆம் திகதி தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, நேற்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தனது அணியை அறிவித்தது. (த–ரி)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 05

வடமாரட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங் கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பி.ப. 3.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் கரவைசுடர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் மற்றொரு ஆட்டத்தில் பண்டத்தரிப்பு பிறைட்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த–ரி–23)

# நிறைவுக்கு வந்தது தொடர் வெற்றி



மலேசியா பட்மின் ரன் தொடரின் அரை யிறுதியில் சாய்னா நெவால் தோல்வியடைந்துவெளியேறினார்.

பட்மின்ரன் தொடர்களில் தொடர்ச் சியாக வெற்றிக்கு மேல் வெற்றியைக் குவித்துத் தரப்படுத்தலில் முதல்தர வீராங்கனையாக வலம் வந்து கொண்டிருந்த சாய்னா நேவாலின் வெற்றிப்பயணத்துக்கு ஸ்யுருயால் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. சுமார் ஒரு மணி நேரம் 8 நிமிடங் கள் நடைபெற்ற இந்த சவால் நிறைந்த ஆட்டத்தில் சீன வீராங்கனை லி ஸ்யு ருய் 13–21, 21–17, 22–20 என்ற செற்களில் சாய்னாவை வீழ்த்தி இறுதி ஆட்டத் துக்கு முன்னேறி னார். அரையிறுதியில் தோல்வியடைந்தாலும் தொடர்ந்தும் தரப்படுத்தலில் சாய்னாவே முன்னிலையில் உள்ளார். (த–ரி)




## இந்தியா—பங்களாதேஷ் தொடர் நிறுத்தம் ?

ஐ.சி.சியின் முன்னாள் தலைவராக இருந்த பங்களாதேஷின் முஸ்தபா கமால், இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபைக்கு ஐ.சி.சி பக்கச்சார்பாக உள்ளது என்று குற்றஞ்சாட்டி பதவி விலகியதை அடுத்து பங்களாதேஷுடனான தொடரை இந்திய அணி ரத்துச் செய்யும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலகக்கிண்ணக் காலிறுதியாட்டத்தில் இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதிய காலிறுதி ஆட்டத்தின்போது, நடுவர்கள் இந்தியாவுக்குச் சாதகமாகச் செயல்பட்டதாக அப்போதைய ஐ.சி.சி தலைவர் முஸ்தபா கமால் சர்ச்சையைக் கிளப்பினார்.

இந்நிலையில் வரும் ஜூன் மாதம் இந்திய அணி, பங்களாதேஷுக்கு மேற்கொள்ளவுள்ள சுற்றுப்பயணத்தை ரத்துச் செய்வது குறித்து இந்திய கிரிக்கெட் சபை ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது. இது குறித்து அடுத்த வாரம் முடிவெடுக்கப்படலாம் எனத் தெரிகிறது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் செயற்குழுக் கூட்டத்தில் பங்களாதேஷ் சுற்றுப்பயணம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.... (த–ரி)

# ஸ்டார்க் இல்லாதது இழப்பில்லை



'ஐ.பி.எல்., தொடரில் மிட்சல் ஸ்டார்க், ஆடம் மில்னே உள்ளிட்ட முன்னணி வேகப்பந்துவீச்சாளர்கள் இல்லாதது, பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது' என்று பெங்களூர் அணியின் வருண் ஆரோன் தெரிவித்தார்.

எதிர்வரும் ஐ.பி.எல் தொடருக்கான பெங்களூர் அணியில், ஆஸ்திரேலியாவின் மிட்சல் ஸ்டார்க், நியூஸிலாந்தின் ஆடம் மில்னே உள்ளிட்ட வேகப்பந்து வீச்சாளர்கள் இடம்பெற்றிருந்தனர் ஆனால், சமீபத்தில் முடிந்த உலகக்கிண்ணத் தொடரில், 22 இலக்குகளைக் கைப்பற்றி தொடர்நாயகன் விருது வென்ற ஸ்டார்க், முழங்காலில் காயமடைந்தார். இதனால் இரண்டு வாரம் ஓய்வில் இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ள இவர், சில ஆட்டங்களில் விளையாடமாட்டார். இதேபோல, குதிக்கால் காயத்தால், உலகக் கிண்ணத் தொடரில் இருந்து பாதியில் விலகிய மில்னே, ஐ.பி.எல்., தொடரில் விளை யாடுவது சந்தேகமாக உள்ளது.

இதுகுறித்து பெங்களூர் அணியில் இடம் பெற்றுள்ள இந்திய வேகப்பந்து வீச்சாளர் வருண் ஆரோன் தெரிவிக்கையில் 'மிட்சல் ஸ்டார்க், ஆடம் மில்னே போன்ற திறமையான வேகப்பந்துவீச்சாளர்களுடன் விளையாட முடியாதது வருத்தம் அளிக்கிறது. இவர்களது இடத்தை பூர்த்தி செய்வது கடினம். இருப்பினும் அணியில் இடம்பெற்றுள்ள மற்ற வேகப்பந்து வீச்சாளர்களுக்கு கூடுதல் பொறுப்பு கிடைத்துள்ளது. இதனால் எவ்வித நெருக்கடியும் உண்டாகாது. இந்த பொன்னான வாய்ப்பை பயன்படுத் திக் கொண்டு, திறமையை நிரூபிக்க வேண்டும். அப்போது தான் தேசிய அணியில் இடம்பெறுவதற்கான வாய்ப்பை அதிகப்படுத்திக்கொள்ளலாம்.

சமீபத்தில் முடிந்த உலகக்கிண்ண தொடரில் இந்திய அணியில் இடம் கிடைக்காமல் போனது ஏமாற்றம். இதற்காக யார் மீதும் குற்றம் சுமத்த விரும்பவில்லை. என்னை மட்டுமே காரணமாக கூறுவேன். தற்போது எனது கவனம் முழுவதும் ஐ.பி.எல். தொடரில் மட்டுமே உள்ளது. இத்தொடரில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி, திறமையை நிரூபிக்கக் காத்திருக்கிறேன்.' என்றார். (த–ரி)

Windows

# உங்கள் Selfie Stick சாதனத்தை இன்றே இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்

மொபிடெல் வசதியுடன் மாதத்திற்கு 2GB வீதம் ஆறு மாதங்கள் வரை தரவுகள் இலவசம்



சகல Lumia 535, 730, 735 கைத்தொலைபேசிகளுடனும் Selfie Stick ஒன்று இலவசம்.

**மொபிடெல் வசதியுடன் மாதத்திற்கு 2GB வீதம் ஆறு மாதங்கள் வரை தரவுகள் இலவசம்.**

சகல மொபிடெல் கிளைகளிலும் Nokia விற்பனை நிலையங்கள், சொவ்ட்லொஜிக் காட்சியறைகள் மற்றும் நாடெங்குமுள்ள சொவ்ட்லொஜிக் அதிகாரம் பெற்ற முகவர்களிடமும் கிடைக்கும்.

உடனடி அழைப்பு 071 9295295

TRC/M/PROMO/15-07

Sri Lanka Telecom Mobitel


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


உதயன்
ஞாயிறு சிறப்பிதழ்
05.04.2015

# சூரியகாந்தி

# ஏமாற்றம்!

நல்லாட்சிக்கான
வடக்கின் ஏக்கம்
தொடர்கின்றது.





# ஏமாற்றம்: நல்லாட்சிக்கான வடக்கின் ஏக்கம் தொடர்கின்றது

நெல்வேலி நிமலன்

வடக்கு மாகாண சபையின் 26ஆவது அமர்வு இம்மாதம் 17ஆம் திகதி நடைபெற்றபோது சில முக்கியமான விடயங்கள் பேசுபொருளாகக் காணப்பட்டன. சபை பிறந்து இரண்டு வருடங்கள் கழிந்தநிலையில் சுகாதார அமைச்சின் நியதிச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. நிறைவேற்றப்பட்டுள்ள இரண்டாவது நியதிச் சட்டம் இது. போக்குவரத்துத் துறை உள்ளிட்ட இன்னும் பல நியதிச் சட்டங்களை இந்தச் சபை இயற்றுவதற்குள், அதன் ஆயுள் காலம் முடிவடைந்துவிடும் என்பதை இந்த வேகம் தெளிவாகவே எடுத்துக் காட்டுகிறது.

சபையிலுள்ள எதிர்க்கட்சி எதனையும் எதிர்க்கும் திராணியற்றது. இருந்தாலும் எதிர்க்கட்சித் தலைவர் மட்டும் அவ்வப்போது கொஞ்சம் காரசாரமாக ஆளும்கட்சியைநுள்ளிவைப்பார். அதற்கு மேல் அவராலும் எதுவும் செய்ய முடியாது. அவர் இறுக்கி நுள்ளினால் மீசையில் மண்ணொட்டாத குறையாக ஆளும் கட்சி அதனை ஏற்றுக்கொள்ளும்.

26ஆவது அமர்வின்போதும் அதுவே நடந்தது. எதிர்க்கட்சித் தலைவர் நாசூக்காகப்பேசி நியதிச் சட்டத்திற்குள் தனது கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ள வைத்தார். சுகாதார அமைச்சின் நியதிச் சட்ட குழுநிலை விவாதத்தின்போது எதிர்க்கட்சித்தலைவரால் அன்றைய தினம் சிலமுக்கியமான விடயங்கள் சட்டத் திருத்தத்தில் எடுத்துக்கூறப் பட்டன. புதிய வைத்தியசாலை ஒன்றை அமைப்பதற்கான தீர்மானத்தை அதிகாரிகள் மேற்கொள்ள முடியும் என்று முன்மொழிவில் கூறப்பட்டிருந்தது. ஆனால், அதிகாரிகளின் தீர்மானத்தின் பின்னர் அந்த முடிவு சபையின் அங்கீகாரத்துக்கு வரவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தினார். பல சொற் சிலம்பங்களின் பின்னர் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வெளிப்படைத்தன்மையானது நல்லாட்சியின் ஓர் அங்கமாகையால் இந்தத் திருத்தம் அவசியம் என எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தியிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சியிலும்கூட அவரது கருத்துக்குப் பலத்த வரவேற்புக் கிடைத்தது.

எது எவ்வாறாயினும் வெளிப்படைத்தன்மை என்பதும் பக்கச்சார்பற்ற தன்மை என்பதும் வடக்கு மாகாண சபையின் தற்போதைய ஆட்சியிலிருந்து விலகிச் செல்கிறதோ என்று எண்ணுமளவிற்கு நிலைமைகள் முற்றியிருக்கின்றன. மத்தியின் ஆட்சி மாற்றத்தின் பின்னரான போக்குகள் அந்த வகையிலேயே அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

வடக்கு மாகாண சபை தாபிக்கப்படுவதற்கு முன்னர் முன்னாள் ஆளுநர் சந்திரசிறியின் இராணுவமயப்பட்ட நிர்வாகமே வடக்கில் நிலவியது. ஒரு ஆளுநருக்கு சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரத்தையும் கடந்து முறையற்ற நியமனங்களும் இடமாற்றங்களும் தாராளமாக மேற்கொள்ளப்பட்டன. மஹிந்தவின் ஆட்சியில் அமைச்சர்களாகவிருந்த ரிசாத் பதியுதீன் மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் விருப்பு வெறுப்புகளுக்கேற்பவே பல்வேறு திட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. அப்போது எந்த விதிமுறைகளும் நியமங்களும் பின்பற்றப்படவேயில்லை. அரசியல் மட்டுமே முழுமையான நோக்கமாக இருந்தது. ஆளுநர், டக்ளஸ், ரிசாத் மூவர் கூட்டணி பல்வேறு அதிகார முறைகேடுகளிலும் ஈடுபட்டன.

புதிய நியமனங்களை வழங்குவதில் மட்டுமல்ல அதிகாரிகளைப் பதவியில் நியமிக்கும் விடயத்திலும் இதுவே நடந்தது. தமிழ் பேசும் மூத்த நிலை அதிகாரிகள் பலரும் சேவைமூப்பு அடிப்படையில் இருக்கத்தக்கதாக சேவையிலிருந்து ஓய்வுபெற்றவர்களை நியமித்தார்கள். தமக்குத் தலையாட்டக்கூடியவர்களும் தமது ஊழல்கள் முறைகேடுகளுக்குத் துணைபோகக் கூடியவர்களும் இளநிலையில் இருந்தாலும், அனுபவ ரீதியிலும் அறிவு ரீதியிலும் அவர்களுக்கு மூத்தோரைத் தாண்டி பதவிகளில் நியமிக்கப்பட்டனர்.

அப்படி நியமனம் பெற்றவர்களும் பரமசிவன் கழுத்துப் பாம்பாக இருந்துகொண்டு தங்கள் பங்கிற்கு செய்யக்கூடிய அநியாயங்கள் அனைத்தையும் செய்தனர். ஈற்றில் மாகாணசபை நிர்வாகச் சட்டக கட்டமைப்புக்கு முற்றிலும் கேடுவிளைவிக்கக் கூடிய தீர்ப்பு ஒன்றைப் பெற்றுக்கொடுத்து விட்டு அவர்களில் முதன்மையானவர் வெளியேறிவிட்டார்.

மாகாணத்தின் குறித்தொதுக்கப்பட்ட பதவிக்கு மேலதிகமாகப் பிராந்திய ஆணையாளர்கள் என்ற பெயரில் எந்தத் தகுதியும் இல்லாதவர்கள், அமைச்சர்களின் எடுபிடிகள் என்ற காரணத்துக்காக ஆளுநர் சந்திரசிறியினால் நியமிக் கப்பட்டனர். அவர் களின் அட்டகாசத்தால் மாகாண நிர்வாக உத்தியோகத்தர்கள் மட்டுமின்றி மாவட்டச் செயலாளர்கள், பிரதேசச் செயலாளர்களும் நிலைகுலைந்து போயினர். இறுதியில் தமது பதவி களைக் காப்பற்றிக்கொள்ள பல்வேறு ஊழல்களுக்கும் துணைபோயினர்.

ஆயிரக்கணக்கான ஏக்கர் அரச காணிகள் நூற்றுக்கணக்கான ஏக்கர் தனியார் காணிகள் அமைச்சர்களின் உறவினர் பெயர்களில் முறைகேடாகக் கையகப்படுத்தப்பட்டிருப்பதும் முறையான அனுமதியற்ற மணல் குவாரிகள் கல்குவாரிகள் இயங்கிக்கொண்டிருப்பதும் இவற்றிற்குச்சான்றாகும்.

சில பாடங்களுக்கு அளவுக்கு மிஞ்சிய ஆசிரிய நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் இன்னமும் அவை ஒழுங்கு படுத்தப்படாதிருக்கின்றன. உள்ளூராட்சி நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்களில் தமது தாளத்திற்கு ஆடும் உத்தியோகத்தர்களை நியமித்து அவற்றைச் சீரழித்து வைத்தனர். இவை அனைத்தும் இராணுவ அதிகாரியாக இருந்தவரான ஆளுநர் சந்திரசிறியின் ஆட்சியில் நிகழ்ந்தேறின. ஆளுநர் ஓர் இராணுவ அதிகாரி என்பதால் அவரிடம் எதனையும் எடுத்துச் சொல்ல முடியாது என்றும் அவர் சொல்வதை நிறைவேற்றுவதைத் தவிர வேறு எதுவும் தம்மால் செய்ய முடியாது என்றும் அப்படி மறுத்துரைத்தால் இடம்மாற்றம் கிட்டும் என்றும் காரணங்களைச் சொல்லிக் கொண்ட மாகாண அதிகாரிகள், கிடைத்த இடைவெளிகளுக்குள் புகுந்து விளையாடி தாமும் சுகம் அனுபவித்துக் கொண்டனர்.

புதிய ஆட்சியின் கீழ், இந்த நிலைமைகள் அனைத்துக்கும் முடிவு கட்டப்படும் என்ற எண்ணமே மக்களை மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்கத் தூண்டின என்பதை மறுக்க முடியாது. மாகாண சபையும் இந்த விடயத்தில் வினைத் திறனுடன் செயலாற்றும் என்பதாகவே தன்னை இனம் காட்டியது.

ஆனால், அந்தோ பரிதாபமாக, நல்லாட்சித் தத்துவம் என்பது தாங்கள் ஊழல் அற்ற ஆட்சியை நடத்துவதில் அக்கறை கொள்வதைவிட முன்னைய ஆட்சியாளர்களின் ஊழல்களைத் தோண்டி எடுத்து அரசியல் நடத்துவதே என்பது முழு நாட்டுக்குமான விதியாகி விட்ட நிலையில், வடக்கு மாகாண சபையும் கடந்த கால நியமனங்களில் இடம்பெற்ற முறைகேடுகளை விசாரிக்கக் குழு அமைத்துள்ளது. இதற்கான முறைப்பாடுகளைக் கோரி பத்திரிகை விளம்பரங்களும் விடுக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய விசாரணை குழுவின் முடிவுகளால் கிடைக்கப்போவது மிக மலிவான அரசியல் ஆதாயமே அன்றி வேறு எதுவும் இல்லை என்பதை தெற்கில் நடக்கும் சம்பவங்களில் இருந்து உய்த்துணர முடிகிறது. வடக்கிலும் அப்படியே நடந்து முடிந்துவிடுமா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. அவ்வாறில்லாமல் நல்லாட்சி ஒன்றுக்கான அடித்தளம் உண்மையிலேயே இடப்படுமா? இப்போது வரைக்கும் அதற்கான அறிகுறிகள் இல்லை.

ஆனால், நீதியரசர் எவரது எடுப்பிற்கும் தொடுப்பாக மாட்டார் என்ற எண்ணம் இன்னமும் குலையாமல் இருக்கிறது. அவரால் மட்டுமே அது சாத்தியமானதா என்பதும் அதனைச் செய்யும் வினைத்திறனை அவர் கொண்டிருக்கிறாரா என்பதும் குட்டையைக் குழப்புகின்றன.

ஏற்கனவே குறிப்பிட்டது போல, சந்திரசிறி ஆளுநராக இருந்த காலத்தில் மாகாண நிர்வாகம் தராதரம் அற்றவர்களையும் தலையாட்டிப் பொம்மைகளையும் வைத்து நிர்வகிக்கப்பட்ட ஆட்சியில் கடந்த 3 மாதங்களாக மாற்றங்கள் எவையும் நிகழவில்லை. புதிய ஆளுநரின் வருகையின் பின்னரும் புதிய தலைமைச் செயலாளரின் வருகையின் பின்னரும் நிலைமையில் முன்னேற்றம் ஏதுமில்லை.

இவர்கள் இருவரது வருகையும் பெரும் எதிர்பார்ப்பை உண்டாக்கியிருந்தாலும் காத்திரமான நடவடிக்கை எதனையும் காணமுடியவில்லை. அண்மைக்கால வடக்கு மாகாண சபையின் நடவடிக்கைகள் திருப்தி தருவனவாகவும் இல்லை.

ஊழல், முறைகேடுகளின் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களே இன்னமும் பதவிகளில் தொடர்கிறார்கள். தாம் அரச அதிகாரிகளாக விதிமுறைகளையும் நியமங்களையும் பின்பற்றியிருக்க வேண்டியவர்கள் அவற்றை மீறி அரசியல்வாதிகளுக்குச் சலாம் போட்டு அனைத்தையும் நாசம் செய்த பின்னரும் அதே கதிரைகளில் அமர்ந்திருக்கிறார்கள். அதே சமயத்தில் முன்னாள் ஆளுநரினதும் பிரதம செயலாளரினதும் எதேச்சதிகாரப் போக்கினால், கொழும்பு அரசியல்வாதி விசுவாசத்தாலும் பாதிக்கப்பட்ட அரச அதிகாரிகள் இன்னமும் அப்படியே காலத்தைக் கழிக்கிறார்கள். அரச சட்டக் கோவை நியமங்களைப் புறந்தள்ளி அரசியல்வாதிகளின் விருப்புக்காக நடக்க முடியாது என்று தமது பணியில் அர்ப்பணிப்புடன் நின்றவர்களே இப்படித் தண்டிக்கப்பட்டார்கள். அவர்கள் தொடர்ந்தும் அதே நிலமையிலேயே வைக்கப்பட்டுள்ளார் கள். ஒருவேளை அவர்களைப் பதவியில் அமர்த்தினால், தங்களுக்கு இசைவாகவும் பணியாற்ற மாட்டார்கள் என்று கூட்டமைப்பின் மாகாண நிர்வாகமும் அச்சம் கொண்டுள்ளதோ என்ற ஐயம் எழுகின்றது.

மூப்பு நிலை ஒழுங்கைப் புறந்தள்ளிப் பிரதேச வாதத்தை முன்னிறுத்தி உயர் நியமனங்களுக்கு பரிந்துரைகள் செய்யப்படுவதைப் பார்க்கும் போதும், தமக்கு வேண்டியவர்களை, அவர்கள் இளநிலையாளர்களாக இருந்தபோதும் உயர் பதவிகளுக்கு நியமிப்பதில் அமைச்சர்கள் ஆர்வம் காட்டுவதைப் பார்க்கும் போதும் அந்த ஐயம் தவிர்க்க முடியாததே. வடக்கு மாகாணத்திற்கு ஒரு முன்னாள் நீதியரசர்தான் தலைமை தாங்குகிறாரா என்கிற கேள்வியையும் எழுப்புகிறது.

இலங்கையில் தீவடங்கலான சேவைகளாக நிர்வாக சேவை, திட்டமிடல் சேவை, கல்வி நிர்வாக சேவை, கணக்காளர் சேவை, எந்திரிகள் சேவை என்பன உள்ளன. இவை சார்ந்த பதவிகளுக்கு துறை சார்ந்த தகுதியுடையவர்கள் மூப்பு நிலை அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால் இவ்வாறான நியமனங்களின் போது கடைப்பிடிக்கப்படவேண்டிய நடைமுறைகள் வடக்கு மாகாணத்தில் மட்டும் இப்போதும் புறந்தள் ளப்படுகின்றன. மைத்திரி ஆட்சியின் பின்னரும் புறந்தள் ளப்படுகின்றன.

(22ஆம் பக்கம் பார்க்க..)

# மஹிந்த கட்டிய வசந்த மாளிகை

டிலீப்

அரச தலைவர்கள் பலரது கவனத்தையும் கீரிமலையில் அமையப் பெற்ற ஜனாதிபதி மாளிகை ஈர்த்து வருகின்றது. ஜனாதிபதி, பிரதமர் இருவரும் தமது யாழ்ப்பாண பயணத்தின்போது இந்த மாளிகைக்குச் சென்று பார்த்திருந்தார்கள். மாமன்னர் கனவுடன் இருந்த மஹிந்த ராஜபக்ஷ இந்தக் கட்டடத்தை எழுப்பியிருந்தார் என்பதைவிட செதுக்கியிருந்தார்என்பதேபொருத்தமாகஇருக்கும். "இவ்வளவு பணத்தைச் செலவு செய்து இப்படியொரு மாளிகையா?" என்ற வெறுப்பில், ஜனாதிபதி மைத்திரிபால மாளிகையைச் சுற்றிப்பார்ப்பதை விட்டு அரைவாசியிலேயே வெளியேறினார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ அதற்கும் ஒருபடி மேலே போய், இந்த மாளிகையைப் பார்த்து தான் வாய் பிளந்து – அசந்து போனார் என்று குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கட்டிய அந்த மாளிகையில் – வசந்த மாளிகையில்அப்படி என்னதான் இருக்கின்றது?

ஜனாதிபதி மாளிகையின் வரவேற்பு வாயில் இன்னமும் முழுமைப் படுத்தப்படவில்லை. பணிகள் மீதமிருக்கின்றன. வீதியின் இரு மருங்கிலும், பிரமாண்டமான தூண்கள் அடித்தளமாக அமைக்கப்பட்டு வருகின்றன. கிட்டத்தட்ட கோயில் கோபுரத்தின் அடித்தளம் போன்றே அமைக்கப்படுகின்றது.

நடுவே விலையுயர்ந்த மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ள வீதி, மாளிகைக்கு செல்வதற்காக அமைக்கப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாண நகரத்தில்கூட இவ்வாறான வீதி அமைக்கப்படவில்லை. மாளிகையின் வரவேற்பு வாசலிலேயே மாளிகையின் வரைபடம் வைக்கப்பட்டுள் ளது. மாளிகையைக் கட்டுவதில் இதுவரை 70 சதவீதமான பணிகள் முடிவடைந்து விட்டன. மாளிகையின் உள்ளே கால் வைப்பதற்கே கூசுகின்றது. அந்தளவிற்குப் பளிங்கினாலான தரை அமைக்கப்பட்டிருக்கிறது. மன்னர் கதைகளின் வர்ணணைகளில் படித்ததை நேரில் பார்க்கத் தவம் செய்திருக்க வேண்டும். முகம் பார்த்து தலை சீவ முடியும் அந்த நிலத்தில். பளிச்சென்று இருக்கின்றது.

நடுவே வரவேற்பு மண்டபமும் அதனைச் சுற்றி இரண்டு கட்டடங்களை இணைத்தவையாக 9 தொகுதிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

வரவேற்பு மண்டபம் செல்வச் செழிப்புடன் திகழ்கின்றது. சுற்றி, நான்கு புறமும் தண்ணீர் பாய்கின்றது. மேலிருந்து தண்ணீர் வடியும் வகையில் இரு அடுக்குகள் கொண்ட தொட்டி கட்டடத் தைச் சுற்றிவர அமைக்கப்பட்டுள்ளது. தீவின் நடுவே கட்டப்பட்ட மாளிகை போன்ற இன்பத்தை அள்ளிச் சொரி கின்றது.

மாளிகையின் நடுவே கலந்துரையாடல் முற்றல் நவீன வசதிகளுடன் தயாராகி வருகின்றது. நிலம் விலையுயர்ந்த தேக்கு மரங்களைக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது. பலகைகள் பளபளக்கின்றன. அதேபோன்று மேலே, மரத்திலான கூரை வேலைப்பாடுகள். அத்துடன் குளிரூட்டி கள்கூட மரப்பலகை அடுக்குகளினுள் ளேயே மறைத்து வைக்கப்பட்டுள்ளன.

அங்கு பொருத்தப்பட்டுள்ள அலங்கார மின்குமிழ்கள் கண்களைப் பறிக்கின்றன. 3 டி மின் குமிழ்கள் அவற்றின் உச்சம்.

இந்த முற்றத்தைச் சுற்றி, வெளியில் விறாந்தைக் காணப்படுகின் றது. நான்கு புறமும் காணப்படும் விறாந்தைக்கு வெளியே தான், தண்ணீர் நான்கு புறமும் சுற்றி ஓடிக் கொண்டிருக்கின்றது.

முதலாவது வரவேற்பு மண்டபத்தின் பின் பகுதியினூடாக வெளியேறு வதற்கான படிக்கட்டுகள் அமைக் கப்பட்டிருக்கின்றன. இதனூடாக வெளியேறியதும்,நேரானபாதை இன்னொரு மண் டபத்துக்கும், வலது மற்றும் இடது புறம் அமைக்கப்பட்டுள்ள பாதைகள் அடுத்த மாளிகைக் கும் செல்கின்றன.

நடுவே இருக்கும் இந்த மண்டபம் இரண்டு தொகுதிகளை உள்ளடக்கியது. அதன் மற்றைய தொகுதி முன்னையதிலும் பார்க்க பல மடங்கு பிரமாண்டங்களைக் கொண்டிருக்கின்றது. இந்தத் தொகுதியைச் சுற்றியும் நான்கு புறங்களிலும் தண்ணீர் பாய்கின்றது. அத்துடன் அந்த மண்டபத்துக்குச் செல்வதற்கான படிக்கட்டு கண்ணாடியில் அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் கண்ணாடியின் கீழ் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கின்றது. வரவேற்பு மண்டபமாக இது இருக்கவேண்டும். விலையுயர்ந்த, பெரும் வேலைப்பாடுகள் கொண்ட சொகுசு இருக்கைகள் அங்கே போடப்படுவதற்காகத் தயார் நிலையில் இருக்கின்றன. இந்தத் தொகுதியின் பின்புறத்தில் கடற்கரை ரம்மியமாகக் காட்சி தருகிறது. அங்கும் கட்டுமான வேலைகள் நடக்கின்றன. நீச்சல் தடாகமோ அல்லது நீர் விளையாட்டுத் தொகுதிகளோ அங்கு அமைக்கப்படுகின்றது.

மாடிக்குச் செல்லும் படிகள் அனைத்தும் சிறப்பான வேலைப்பாடுகள் செய்யப் பட்ட பலகைகளைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வேலைப்பாடுகளும் கண்களுக்கு விருந்து. மேல் தளத்தின் நிலம் மரப் பலகையினால் அமைக்கப்பட்டுள்ளது. மேல்மாடியிலும், பொதிகள் உடைக்கப் படாதநிலையில்அழகிய வேலைப்பாடுகள் கொண்ட கதிரை கள் ஆயிரம் வரையில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. மேல்மாடியிலிருந்து கடற்கரைப் பக்கமாக பலகனி அமைக்கப்பட்டிருக்கின்றது. அங்கிருந்து கடற் காற்றை சுகிப்பதற்குக்கொடுத்துவைத்தி ருக்கவேண்டும். நடுவே அமையப் பெற்றிருக்கும் பிரதான மண்டபத்துக்கு வெளியே, சுற்றிவர சிறிய மாளிகைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் வலதுபுறம் இருக்கும் மூன்று மாளிகைகளின் பணிகள் மாத்திரமே முடிவடைந்துள்ளன.



இரண்டு மாளிகைகளைக் கொண்ட ஒரு தொகுதியா அது அமையப் பெற்றிருக் கின் றது. அதுபோன்ற 9 தொகுதிகள் அமைக் கப்படப் போகின்றன என்று வரை படம் கூறுகின்றது. மிக்கரசனையுடன்இந்த மாளிகைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இரண்டு மாளிகைகளை யும் இணைப்பதற்கான பாலம்கூட ஒரு சிறிய மாளிகை போன்றே அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றுடன் தொடர்புடைய தாகவே அமைக்கப்பட்டுள்ளன. பிரதான மாளிகை யில் காணப்படுவது போன்றே வேலைப் பாடுகள் அந்தசிறிய மாளிகைகளிலும்காணப்படுகின்றன.

இடதுபுறமும் மாளிகைகள் கட்டப்பட் டுள்ளன. ஆனால் வேலைகள் பூர்த்தி யாக்கப்படவில்லை. உள்ளக இணைப்பு வீதிகள் கூட காப்பெற்றில் அமைக்கப்பட்டுள்ளன. நடுநாயகமாக இருக்கும் 3 மண்டபங் களும், சுற்றி வர இருக்கும் மாளிகைகளுமாக மொத்தம் 18 அமையப் பெற்றுள்ளன. இதனைவிட இரண்டு விசாலமானநீச்சல்தடாகங்களும்அமைக்கப்பட்டுள்ளன. 200 ஏக்கர் காணி முழுவதும் புற்றறை வளர்க்கப்பட்டு பச்சைப் பசேலெனப் பேணப்படுகின்றது. சிவாஜி கட்டி வசந்த மாளிகை இந்த மாளிகையிடம் பிச்சை வாங்க வேண்டும். அவ்வளவு அற்புதமானது இது.

இந்த மாளிகையை இப்போது யாரிடம் கையளிப்பது என்பது தொடர்பில், ஜனா திபதி மைத்திரியும், பிரதமர் ரணிலும் முரண் பாடான கருத்துக்களைத் தெரி வித்துள்ளனர்.

மாளிகையை, அரச, அரை அரச அல்லது வேறு பொருத்தமான நிறுவனங்களுக்கு கையளிக்கும் அமைச்சரவைப் பத்தி ரத்தை சமர்ப்பித்து நிறைவேற்றி யுள் ளார். ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ, இதனை ஆறு நட்சத்திர விடுதியாக மாற்றப் போவ தாகத் தெரி வித்துள்ளார்.

இந்த மாளிகையின் எஞ்சிய 30 சதவீத வேலைகளைத் தொடரவும் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஆக மொத்தத்தில் அந்த மாளிகையை அழிக்கப் போவதில்லை. ஆனால் அது எழுந்து நிற்பது தமிழ் மக்களுடைய சொந்தக் காணிகளில். அதற்கு இதுவரையில் நட்டஈடுடோ இழப்பீடோ வழங் கப்படவில்லை.



# 2150இல்

## உலக நிலவரம் பற்றிய ஒரு சிறிய கற்பனை....

ப.அருந்தவம்



### 5 ஏப்ரல் 2150 வலிகாமம் எப் எம் இன்றைய முக்கிய செய்திகள்

- கோப்பாய் ரொக்கெட் உந்துதளத்துக்கு அண்மையில் இற்றைக்கு நூறுவருடத்துக்கு முன் பயன்படுத்திய உழவு இயந்திரமொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதற்கு இரு பெரிய பின் ரயர்களும் இரண்டு சிறிய முன் ரயர்களும் இருந்ததாக இந்த ஆய்வில் ஈடுபட்ட கலாநிதி க.நந்தகுமார் தெரிவித்தார். இதனை விட இதனை இயக்குவதற்கு அக் காலத்தில் நிலத்திலிருந்து எடுக்கப் பட்ட ஒரு வகைத் திரவம் பயன் படுத்தப்பட்டதாகவும் இது படிப்படியாகக் கிடைக்காமையால் இந்த இயந்திரம் வழக் கொளிந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

- உலகில் அதிக காலம் வாழ்ந்து வந்தவரான இந்தியாவின் பஞ்சாப் பகுதியைச் சேர்ந்த திபத் சிங் தனது 52 ஆவது வயதில் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். இதன் மூலம் இவர் தற்போது உலகில் அதிக காலம் வாழ்ந்த மனிதர் என உலகசாதனைப் புத்தகமான புதிய கின்னஸ் புத்தகத்தில் தன் பெயரையும் இணைத்துக் கொண்டுள்ளார்.

- வவுனியா மரக்காரம்பானை நகரசபை எல்லைக்குள் வாழும் அபிராம் எனும் இளைஞன் தன்வீட்டு மொட்டை மாடியில் பழங்கால பிரதான பயிரான நெல்லைப் பயிரிட்டு சிறந்த அறுவடை பெற்றுள்ளார். இதனைக் கேள்விப் பட்ட சர்வதேச விவசாய அமைச்சர் சம்சே சுங் இவருக்கு வேளாண்மையின் மாமனிதர் விருது வழங்கிக் கௌரவித்துள்ளார்.

- வியாழனில் கட்டப்பட்ட அம்மன் கோயில் பங்குனித்திங்கள் உற்சவத்தில் செவ்வாயிலிருந்து சென்ற விண்கலமும், புவியில் இருந்து சென்ற விண்கலமும் மோதியதில் நூறுபேர் மாண்டதாக பிரபஞ்ச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற விழா நெரிசலிலும் நூற்றுக்கணக்கானவர்கள் இறந்துமுள்ளனர். இவர்களில் புவியைச் சேர்ந்த எவரும் இல்லை என புவிக்கான பிரபஞ்ச இணைப்பாளர் கௌரவ தம்மிக்க வர்ணகுலசூரிய தெரிவித்தார். இவர்கள் அனைவரும் செவ்வாய்க்கிரகவாசிகள் என செவ்வாய்க்கான பிரபஞ்ச இணைப்பாளரை மேற்கோள் காட்டி மாஸ்நியூஸ் எனும் இணையத் தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

- இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய ரோபோக்களை காங்கேசன்துறை கடற்படைத் தளத்தைச் சேர்ந்த ரோபோக்கள் சரமாரியாக காமாக்கதிர் துப்பாக்கியால் சுட்டதில் ஏழு ரோபோக்கள் பழுதடைந்தன. இதன்போது இந்திய கடற்கலத்தின் கப்டன் ரோபோ பழுதடைந்த ஏழு ரோபோக்களையும் கடலில் வீசிவிட்டு தனுஷ்கோடியை அடைந்ததாக இராமேஸ்வரம் கடற்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

- இற்றைக்கு நூறு வருடத்துக்கு முன் வாழ்ந்த ஒரு விலங்கின் எலும்புக்கூடொன்று தமிழ் நாட்டின் தாமிர பரணி ஆற்றங்கரையில் கண்டெடுக்கப் பட்டுள்ளது. இது நிலத்திலும் – நீரிலும் வாழக்கூடிய வகையிலான இசைவாக்கம் கொண்ட விலங்கு என்றும் இது அக் காலத்தில் முதலை என்றும் அழைக்கப்பட்டதாகவும் இவ் ஆய்வில் ஈடுபட்ட குழுத் தலைவர் பேராசிரியர் க.மூத்தப்பன் தெரிவித்துள்ளார்.

- புவியில் ஏற்பட் டுள்ள நீர்த்தட்டுப்பாட்டை நீக்குவதற்கு ஐக்கிய பிரபஞ்ச சபை யின் அனுசரணையுடன் பூமிக்கு நெப்டியூனிலிருந்து வாராந்தம் ஏழாயிரம் பில்லியன் கிலோ கிராம் பனிக் கட்டிவழங் கப்பட உள்ளதாகவும் இதற்கு பிரதியீடாக புவியிலிருந்து வாராந்தம் ஆற்றலுடைய கூலிப் படையினர் இருபதாயிரம் பேர் ஒரு வருடத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் இந்த ஒப்பந்தம் மேற் கொள்ளப் பட்டுள்ளது.
இந்த ஒப்பந்தத்தில் புவி யின் சார்பில் பூமியின் நீர் நிர்வாக அமைச்சரும் நெப்டியூன் சார்பாக நெப்டியூனின் மன்னரும் கைச்சாத்திட்டுள்ளனர்.

### விளையாட்டுச் செய்திகள்

- பிரபஞ்ச அணிகளுக்கிடையிலான MPL (மாஸ் பிறீமியர் லீக்) கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழனுக்கு அருகில் அமைந்த அண்டவெளியில் அமைக்கப்பட்ட திறந்தவெளி K13G மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்தப்போட்டியில் யூனிவேர்சல் தரநிர்ணயமுள்ள 11 அணிகள் மோதுவதாகவும் நடப்பு ஆண்டின் சம்பியனாக நெப்டியூன் அணியே வலுவான நிலையில உள்ளதாகவும் மூன் யூனிவேர்சல் நெற்வேக் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

- வியாழனுக்கும் சந்திரனுக்கும் இடையிலான பெண்கள் ரொக்கெட் செலுத்தும் போட்டி எதிர்வரும் 31ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் UWW. RORA.MON (முன்னர் WWW - WorldWi 4wep என்பது தற்போது Universol wide wep ஆக மாற்றப் பட்டுள்ளது) எனும் இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.


*(மீண்டும் செய்திகளை ஞாயிறு காலை எதிர்பாருங்கள்....)*


## சிரிக்க சிந்திக்க சில வரிகள்


வீட்டுக்கு வீடு வாசல்படி என்பது போல் யாழ்ப்பாண குடாநாட்டுக்குள்ளையும் வீட்டுக்கு வீடு மோட்டார் சைக்கிள் நிக்குது பாருங்கோ. நாங்கள் சின்னப்பிள்ளையளாய் இருக்கும்போது இந்த மோட்டார் சைக்கிளைப் பார்த்து வாயை பிளந்து கொண்டு நிண்ட காலமும் உண்டு. 1961 ஆம் ஆண்டு நான் புதுக்க அரச உத்தியோகம் பாக்க மட்டக்களப்பு கச்சேரிக்கு போனபோது சீப்பு கிளாக்கர் சொன்னார், "தம்பி நீ வெளிக்கள உத்தியோகம் பாப்பதாலை மாதாமாதம் உனக்கு பிரயாணப்படி தருவினம் ஒரு மோட்டார் சைக்கிளை வாங்கு" . சீப்பு கிளாக்கர் நல்ல மனுஷசன் எண்டு பலபேரும் கதைக்கிறவை. ஆனபடியாலை அந்தாளுக்கு ஒரு நாளும் தீங்கு விளைவிக்கிற குணம் இருக்காது எண்டு நினைத்து சீப்பு கிளாக்கர் சொன்னதை தேவ வாக்காய்கருதி முதல் வேலையாய் என்ரை அம்மாவுக்கு ஒரு கடிதம் எழுதிப்போட்டன். அதில் முதல் வரியாய் "அம்மா அறிவது! நான் சுகமாய் உள்ளேன். உங்கள் சுகத்தையும் கடவுள் காப்பாராக. உங்கள் சுகமெப்படி?" என்று எப்.எம். வானொலியில் கேட்கும்கேள்விபோல் எழுதிவிட்டு அம்மாவுக்கு ஐஸ் வைக்க, எனக்கு பெரிய உத்தியோகம் கிடைத்தமையால் இவ்விடம் ஓடித்திரிந்து வேலைகளைப் பாக்க ஒரு மோட்டார் சைக்கிள் வேண்டவேணுமாம் என (சீப்பு கிளாக்கரிலை பழியைப் போடுவதாக நினைந்து) கடிதத்தை முடித்து தபாலில் சேர்த்துவிட்டு ஏ.எல். மறுமொழிக்கு ஏங்கி நிற்கும் மாணவன்போல் அம்மாவின் பதிலுக்கு ஏங்கி நின்றேன்.
அதுசரி, ஆர் அந்த சீப்பு கிளாக்கர் என நீங்கள் கேட்கலாம் அவர்தான் காணிப்பகுதியில் தலைமை கிளாக்கர் CHIEF CLERK. அவரை மட்டக்களப்பு மக்கள் சீப்புக் கிளாக்கர் எண்டுதான் அழைப்பார்கள். ஒரு கிழமை கடந்து அம்மாவின் அனுமதி கிடைத்தது. அதுவும் சில கொண்டிஷன்களுடன். கவனமாக ஓட வேண்டும். மோட்டச் சைக்கிள் தூக்கி எறிஞ்சுபோடும் என எச்சரிக்கையும் விட்டிருந்தா. அது கழுதை என நினைத்து எழுதியிருக்கக்கூடும். எனவே அன்றே அம்மாவை மன்னித்து விட்டேன்.
கடந்த 54 வருஷமாய் அம்மா சொன்ன 'கழுதையில்' ஓடித்திரிகின்றேன். இருந்தும் பெரிய விபத்துக்களில் மாட்டிக் கொள்ளவில்லை என்பதில் எனக்குள் பெருமை. விபத்துக்களுக்கு பங்காளிகள் காட்டுப்பகுதிகளில் எருமையும் குரங்கும்தான். ஊர்மனைகளில் முக்கியமானவர் வைரவரின் வாகனம் எனப் புகழப்படுபவரும் அரசினால் பாதுகாக்கப்படுபவருமான நாயர்கள்தான். நாய் என்று குறிப்பிட்டால் அவர்களை அவமதித்தாக என் மீது அரசு வழக்குத் தொடர வாய்ப்புண்டோ தெரியவில்லை.
சரி! விஷயத்துக்கு வருவோம். அவசியமாக யாழ். குடாவில் எத்தனை மோட்டார் சைக்கிள்கள் ஓடித்திரி கின்றன என்பதை மோட்டார் வாகனத் திணைக்களத்திடம் அறியலாம். அதேநேரம் தினமும் விபத்தில் காயமடைந்தோர் மற்றும் விண்ணுலகம் சென்றோர் தொகையை ஆஸ்பத் திரிகளில் அறியலாம். இவையெல்லாவற்றையும் பார்க்கும் பொழுது எமது போக்குவரத்துக்கு துவிச் சக்கரவண்டியே துணைபோல் தெரிகிறது. தினமும் 10 கிலோ மீற்றர் வரை சைக் கிள் ஓடினால் பணமும் மிச்சம். தேக ஆரோக்கியமும் நன்றாக அமைவதுடன் சுற்றுச் சூழல் மாசடையாதிருக்கும் என சிந்திக்கிறேன்.

கலாபூஷணம் மு.மாசிலாமணி









■ ஸூடோ ஸ்வாமி

# மஹிந்தவை

## பிரதமராக்க முனையும் முன்னணிக்கு ஒரு பகிரங்க மடல்!

அன்புள்ள ஐயாமாருக்கு!

வணக்கம்! நீங்கள் யாவரும் அண்மைக் காலமாக சுறுசுறுப்பாக இயங் குவதனால் சுகமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன்!

தை மாதம் 9ஆம் திகதிக்குப் பின் தோன்றியுள்ள – அதற்கு முன்னர் நீங்கள் சற்றும் எதிர் பார்த்திராத – புதிய அரசியல் சூழல், உங்களை உறக்கத்திலிருந்து தட்டியெழுப்பி விட்டுள்ளது. மஹிந்த தோற்றுப் போவதற்கு பின்னணியிலிருந்ததற்கு பிராயச்சித்தம் தேடும் வகையில் தற்போது நீங்கள் கூட்டும் கூட்டங்கள், விடும் அறிக்கைகள் கிலியை ஏற்படுத்துகின்றன. மைத்திரி அரசு முன்னெடுக்கும் இனங்களுக்கிடையிலான இடைவெளியைக் குறைக்கும் நடவடிக்கைகளுக்கு முரணாக அவை அமைகின்றனவே அன்றி நாட்டிற்கு உருப்படியான பலாபலன்களைத் தருவதாக அல்லது தரப்போவதாக எனக்குத் தோன்றவில்லை.

மஹிந்தவை சிறிலங்கா சுதந்திர கட்சியின் பிரதமர் வேட்பாளராகப் பிரேரிப்பதற்கு சு.க.வினருக்கு அழுத்தம் கொடுப்பதற்காக இதுவரைக்கும் நுகேகொட, கண்டி, இரத்தினபுரி என்று மேடை போட்டுக் கத்தி வரும் நீங்கள், அடுத்த உங்கள் மேடையைகுருநாகலில்அமைப்பதற்கு திட்டமிட்டிருக்கிறீர்கள். இதுவரையான உங்கள் மேடைகளுக்கு மஹிந்த மடல்களை மாத்திரம் அனுப்பிவிட்டு நேரடி பிரசன்னம் தருவதிலிருந்து தவிர்த்து நழுவிக்கொண்டிருக்கிறார். ஆனால் மற்றைய நிகழ்வுகளில் தாராளமாகவே பங்குபற்றி வருகிறார்.

மஹிந்தவை நடைமுறை அரசிற்கு இழுப்பதற்குப் பாடுபடும் உங்களால், அவருடைய மகனான நாமல் ராஜபக்ஷவைக் கூட இதுவரை உங்கள் மேடைகளில் ஏற்ற முடியவில்லை. அவரும் விரும்பி வந்து ஏறவில்லை என்பதனை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

சந்திக்கின்ற வெளிநாட்டு ஊடகங்களிடம் மேற்குலக நாடுகளின் சதியால்தான் ஜனாதிபதி தேர்தலில் தான் தோற்கடிக்கப்பட்டார் என்று மஹிந்த குமுறிவரும் நிலையில், அவர் அடிபட்ட நாகமாக இருப் பது புலப்படுகிறது. அந்த மன நிலையையும் சந்தர்ப்பத்தையும் சிறந்த உத்தியாகப் பயன்படுத்தி நீங்கள் மக்களை உசார்ப்படுத்தக் கைக் கொண்டு வரும் முயற்சிகள் விசனத்திற்குரியவையாக இருக்கின்றன.

புதிய அரசின் நடவடிக்கைகளினால் ஒவ்வாமை நிலைமைக்கு ஆளாகியுள்ள நீங்கள், நாட்டுப்பற்று என்னும் பெயரில் முன்னெடுக்கும் சிலபல நடவடிக்கைகள்–மஹிந்தவை மீள நடைமுறை அரசியலில் களமிறக்குவதாகக் காட்டும் மாயாஜாலங்கள்– இனநல்லிணக்கத்திற்கு வழிகோலுபவையாக எனக்குப்படவில்லை.

வலி. வடக்கில் படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள காணிகளை விடுவிப்பதாக இருக்கட்டும், தேசிய கீதத்தை தமிழில் பாட ஜனாதிபதி தலையசைப்பதிலாக இருக்கட்டும், எதிர்க்கட்சித் தலைவராக கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை நியாயமாக நியமிக்கக் கோருவதிலாக இருக்கட்டும் எல்லாமே உங்களுக்குத் தலையிடியை ஏற்படுத்துகின்ற விவகாரங்களாக இருக்கின்றனவே தவிர, அதிலுள்ள நியாயத்தினை சிந்திக்க நீங்களும் தயாராக இல்லை; சற்றே தெளிவடைய ஆரம்பித்திருக்கும் சிங்கள மக்களைச் சிந்திக்க விடவும் தயாராக இல்லை நீங்கள்.

நீங்கள் போடும் கூச்சலிற்கு வலுச் சேர்க்க மேலும் சில பிரகிருதிகள் தொண்டையைத் தயார்ப்படுத்துகின்றனர் எனத் தெரிகிறது. சிறிலங்கா தொழில்கட்சியின் தலைவர் ஏ.எஸ். பி.லியனகே, மயில் மாளிகையைத் தந்தும் மற்றும் மேல்மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தனது மாகாண உள்ளுராட்சிமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்தும் விசுவாச தாசன்க ளாகத் தம்மை இனங்காட்டியுள்ளனர். சு.க. பிளவுபடுவதைதடுக்க மஹிந்த, கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏலவே கையளித்து விட்ட நிலையிலும், முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட 27 சு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சியின் தடை தீர்மானத்தை மீறி இரத்தினபுரிக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கின்றனர்.

அமைச்சர் ராஜித சேனாரத்னவின் கூற்றுப்படி, மஹிந்த இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி என்பதைவிட, போட்டியிட்டு தோற்றுப்போன ஜனாதிபதி. ஆனால் அவருக்கு முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய உபசரணைகள் வழங்கப்பட்டுள்ளன.

அவர் ரஜினிகாந்த் பாணியில், "நான் எப்ப வருவேன் எப்பிடி வருவேன்னு யாருக்கும் தெரியாது, ஆனா, வர வேண்டிய நேரத்தில கரெக்டா வருவேன்" என்கிற தோரணையில் தனது நடை முறை அரசியல் பிரவேசம் பற்றிப் பட்டும் படாமலும் கருத்துத் தெரிவித்து வரு கிறார். மறுபுறம் தனக்கு ஓய்வு தேவைப் படுவதாகவும் குழப்பி வருகின்றார்.

இன்னொரு புறத்தில், தன்னை சு.கவின் பிரதமர் வேட்பாளராக்க மஹிந்த தானாகக் கோருவாரேயானால் அதனைப் பரிசீலிக்கத் தயாராக இருக்கின்றனர் என்றும் அதற்கு ஜனாதிபதியைச் சந்திக்கும்படியும் ராஜித ஆலோசனை தெரிவித்திருக்கிறார். மஹிந்தவோ தேர்தலில் போட்டியிட்டால் சு.கவிலேயே போட்டியிடுவேன் எனப் பிடிவாதமாயிருக்கிறார்.

சு.கவினர் பிரதமர் வேட்பாளர் பற்றி வேறெந்தத் தெரிவுகளையும் முன் வைக்காமை – அறிவிக்காமை – சற்றே சந்தேகத்தைக் கிளப்புகிறது. ஆக மொத்தத்தில் மஹிந்தவின் மீள்வருகைக்கான நிகழ்தகவு இன்னும் கேள்விக்குறியாகவுள்ள நிலையில், சித்திரை 23 வரை காத்திராமல், அவரிடம் உருப்படியான பதிலைப் பெற்று மக்களுக்கு வழங்குவது பயனுள்ள காரியமாக இருக்கும் என்று நான் நம்புகின்றேன்.

குழம்பிய குட்டையில் மீன்களை திரட்டலாம் என்பதற்காக குட்டையை குழப்பி வரும் உங்களுக்கு மஹிந்தவின் பதில் என்ன, அரசின் பதிலடி என்ன என்பதை அறியும் ஆவலுடன் விடை பெறுகிறேன். ■

# உண்டென்றால் அது உண்டு; இல்லையென்றால் அது இல்லை



தண்ணீரிலே கழிவு ஒயில் என்பது, தெய்வம் மாதிரி. "உண்டென்றால் அது உண்டு; இல்லையென்றால் அது இல்லை" தெய்வமும் அவ்வாறுதான்.

"ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட நீரில் காணப்படும் பதார்த்தங்கள் மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்கள் எனக் கூற முடியாது" என சுன்னாகம் குடிதண்ணீர் ஆய்வு அறிக்கையாளர் தெரிவித்துள்ளனர்.

இங்கு மனிதர் என்பது, வாக்காளக் 'குடி' மக்களையும், அவர்களது குடும்பங்களையும் குறிப்பதாகும். மனிதனுக்கு தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்களான பென் சீன், தொலுயீன், ஈதையில் பென்சீன், ஓதோசைலின், பராசைலின் மற்றும் மெற்றாசைலின் போன்ற பதார்த்தங்கள் சர்வதேச அளவை விட மேற்பட்டிருக்கவில்லை. 'அதாவது.....' என்றவாறாக நீட்டி முழங்கி தமது அறிக்கையை "தமக்கே புரியும் மொழியில்" மிகத் தெளிவாக முன்வைத்துள்ளனர்.

"கண்டறியப்பட்ட அறிக்கை" தொடர்பான 'கண்டறியாத' சர்ச்சைகளும் கனகச்சிதமாக உள் வீட்டுகளுள்ளேயே கிளம்பியுள்ளன.

சுனாமி பிரச்சினையின் போது கடல் மீனை நாட்டு மக்கள் பலரும் புறக்கணித்து வந்தனர். அந்த நிலையில் நாட்டின் தலைவியாக இருந்த திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்கள் மீன் சாப்பிடப் படுவதை ஊக்குவிக்கும் முகமாக, தாமே ஒரு விருந்தை ஏற்பாட்டு செய்து, அதில் மீன்கறி, மீன் பொரியல் பரிமாறி தாமும் உண்டு காண்பித்தமை ஞாபகத்துக்கு வருகின்றது.

■ அறியா யான்

# நேரம் வீண்




நீதிக்குப் புறம்பாகத் தவறு செய்யும் பட்சத்தில் வலியவனாக இருந்தாலும் பலம் இல்லாதவர்களிடம் கூடத் தோற்க வேண்டி இருக்கும் என்பதுதான் வலியவனின் அடிப்படை என்கிறார் இயக்குநர். கருத்து என்ற அளவில் கவரும் இந்த ஒரு வரிக் கதையைச் சொல்ல இயக்குநர் சில வலிமையான காட்சிகளை வைத்திருக்கிறார்

எது வலிமை? யார் வலியவன்? இந்தக் கேள்விகளை அழுத்தமாக எழுப்ப முயற்சிக்கிறார் இயக்குநர் சரவணன்.

சென்னையின் அங்காடித் தளம் ஒன்றில் வேலை செய்யும் இளைஞன் வினோத் (ஜெய்), ஒரு சுரங்கப்பாதையில் சுமியை (ஆண்ட்ரியா) சந்திக்கிறார். பார்த்தவுடனே ஆண்ட்ரியா ஜெய்யிடம் காதலைச் சொல்ல, ஜெய் ஆடிப்போகிறார். சுதாரித்துக்கொண்டு திரும்பிப் பார்ப்பதற்குள் அந்தப் பெண்ணைக் காணோம். எதற்காக அந்தப் பெண் நம்மிடம் காதலைச் சொல்ல வேண்டும் என்ற அவஸ்தையுடன் ஆண்ட்ரியாவைத் தேடி அலைகிறார்.

சலிக்கும் அளவுக்குக் கண்ணாமூச்சி விளையாடிய பிறகு ஆண்ட்ரியாவே வந்து சந்திக்கிறார். உன்னை எனக்கு முன்பே தெரியும் என்கிறார். ஃபிளாஷ் பேக் தொடங்குகிறது. ஆரம்பிக்கும்போது ஆச்சரியப்படவைக்கும் பின் கதை முடிவதற்குள் பொறுமையைச் சோதித்துவிடுகிறது. இதில் பாட்டு வேறு... ஆண்ட்ரியாவிடம் ஜெய் காதலைச் சொல்ல, அவர் நழுவப் பார்க்கிறார். விடாமல் துரத்தும் ஜெய்யிடம் ஆண்ட்ரியா ஒரு நிபந்தனையை முன்வைக்கிறார். ஒரு ஆளை அடிக்க வேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனை. அந்த ஆள் ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற குத்துச் சண்டை வீரன். ஆனாலும் ஜெய் ஒப்புக்கொள்கிறார். அதற்காக மிகக் கடுமையாக உழைக்கிறார். அதற்குக் காரணம் காதல் மட்டுமல்ல.

குத்துச் சண்டை வீரனுக்கு எதிராக ஜெய்யை ஆண்ட்டிரியா களமிறக்குவதற்கும் அதை ஜெய் மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்வதற்கும் என்ன காரணம்? ஜெய்க்கு ஜெயம் கிடைத்ததா? எப்படி அது நிகழ்ந்தது?

நீதிக்குப் புறம்பாகத் தவறு செய்யும் பட்சத்தில் வலியவனாக இருந்தாலும் பலம் இல்லாதவர்களிடம் கூடத் தோற்க வேண்டி இருக்கும் என்பதுதான் வலியவனின் அடிப்படை என்கிறார் இயக்குநர். கருத்து என்ற அளவில் கவரும் இந்த ஒரு வரிக் கதையைச் சொல்ல இயக்குநர் சில வலிமையான காட்சிகளை வைத்திருக்கிறார். ஆனால் அதற்கு இரண்டாம் பாதி வரும் வரை நீங்கள் பொறுமையோடு காத்திருக்க வேண்டும். அதுவும் சில்வஸ்டர் ஸ்டோலனின் படங்களையோ 'ஹாங் ஓவர்' படங்களையோ நீங்கள் பார்க்காமல் இருந்திருக்கவும் வேண்டும்.

பெரும்பாலான படங்களில் இடைவேளையின்போது பதற்றம், ஆர்வம் போன்ற ஏதாவது ஒரு உணர்வு வரும். ஆனால் அப்படி எந்த உணர்வையும் சரவணன் நமக்குத் தரவில்லை. வலுவான ஒரு காரணத்துக்காக நாயகனுக்கு உத்வேகமூட்டிச் செயலில் ஈடுபடுத்துகிறாள் நாயகி. இது ஏன், எப்படி நடக்கிறது என்பதெல்லாம் இரண்டாம் பாதியில் சொல்லப்படுகின்றன. முதல் பாதி? நேரத்தைக் கடத்தவே பெருமளவில் பயன்பட்டிருக்கிறது. அதிலும் ஜெய் – ஆன்ட்ரியாவின் இரண்டு கார் பயணங்களும் பொறுமையைக் கடுமையாகவே சோதிக்கின்றன.

ஜெய் குடும்பத்தின் சூழலைக் காட்சிப் படுத்திய விதம் நன்றாக உள்ளது. அழகம் பெருமாள் (ஜெய்யின் அப்பா), ஆண்ட்ரியாவுக்கு இடையில் உள்ள நட்பு அழகாகக் காட்சிப் படுத்தப்பட்டிருக்கிறது. தமிழ் சினிமாவுக்கு இது கொஞ்சம் புதுசு. அங்காடித் திரையரங்கில் நடக்கும் சண்டையும் அதைப் பற்றிப் பின்னால் பேசப்படும் வசனங்களும் பரவாயில்லை ரகம்.

பாடல்கள் முணு முணுக்கும்படி இல்லை என்பதோடு, எந்தப் பாடலும் திரைக்கதையில் ஒட்டவில்லை.இசைஇமானா? ஜெய்யின் நடிப்பு பின் பாதியில் சோபிக்கும் அளவு முன்பாதியில் கவரவில்லை. எங்கேயும் எப்போதும் வார்ப்பிலிருந்து அவர் விரைவில் வெளியே வர வேண்டும்.

ஆண்ட்ரியா படம் முழுவதும் வருகிறார். கடலை போடுபவர்களைச் சமாளிப்பது, காதலனைச் சீண்டுவது, சவால் விடுவது, வயதில் மூத்த நண்பருடன் இயல்பாகப் பழகுவது ஆகியவற்றை அழகா கக் கையாள்கிறார். வேறு ஏதாவது அவருக்குச் சவாலாகப் படத்தில் இருக்கின்றதா என்பதைத் தேடித்தான் பார்க்க வேண்டியிருக்கிறது.

அழகம் பெருமாளும் அவரது மனைவியாக வரும் அனுபமாவும் அழுத்தமான நடிப்பை வழங்குகிறார்கள். ஜெய்யின் தோழனாக வரும் பால சரவணன் ஆங்காங்கே மெல்லிய சிரிப்பை வரவழைக்க முயற்சிக்கிறார். காதல் தோல்வியால் பாதிக்கப்பட்டுக் கருத்து சொல்லும் பாத்திரப் படைப்பும் கொஞ்சம் ரசிக்க வைக்கிறது.

தார்மிக உணர்வுதான் நிஜமான வலிமை என்பதைச் சொல்ல வந்த நோக்கத்தைப் பாராட்டலாம். இந்தக் கருத்தை முழுப் படத்துக்கான திரைக்கதையாக மாற்றுவதில் படம் கொஞ்சம்கூட வெற்றிபெறவில்லை. பார்ப்பதால் நேரம் வீண்.

# கால் கவனம்


வழக்கமாக 'மைறோட், மை பெற்றோல், மை கார்' என்று வீறாப்புடன் வீதியைக் கண்டபாட்டுக்குக் கடக்கும் மைலோட் மயில்வாகனத்தார், அன்று தனது பழங்கிடையான் சைக்கிளில், மிகப் பக்குவமாக, முச்சந்தியில் இறங்கினார். பார்த்தவர்களுக்கு மிக அதிசயமாக இருந்தது. அரை வெறியில், வீதி முழுவதும் தனது என்ற பாணியில் வெட்டி ஓடும் அவர், மிகப் பக்குவமாக சந்தியில் இறங்கி, வலது பக்கம் பார்த்து, இடது பக்கம் பார்த்து மீண்டும் வலது பக்கம் பார்த்து, இனிக் கடக்கலாம் என்று உறுதிப்படுத்திய பின்னர் வீதியைக் கடந்தார்.

விபத்துக்கள் அதிகரித்து விட்டன. அநியாயமாக உயிர்கள் விபத்தில் பறிபோகின்றன என்பதை உணர்ந்த போதிலும் மயில் வாகனத்தார் கவனமாக நடந்து கொண்டார் என எண்ணி அவரிடம் போய் மெதுவாக விசாரித்தேன்.

'தம்பி! இந்த உலகிலே கால் மிகப் பிரதானம். கண்டபடி வாகனங்கள் ஓடுறாங்கள். அதிலை எங்கடை காலைக் காப்பாற்ற வேண்டியது முக்கியம்" –என்றார்.

விபத்துக்கள் பற்றி பத்திரிகைகளிலும், வேறு ஊடகங்களிலும் அடிக்கடி, விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மேற்கொள்வது பயனளிப்பதை அப்போது தான் என்னால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

தம்பி ஒரு கால்தான் இருக்குது. இல்லாட்டில் உமக்கும் கொஞ்சம் தந்திருப்பன்.... இந்தக் காலைக் காப்பாற்றத்தான் வலு பக்குவமாக இறங்கிச் சைக்கிளை உருட்டிக்கொண்டு வந்தனான். இந்தக் கால் உள் ளுக்கை இறங்கிவிட்டால் இந்த மைலோட் மயில் வாகனத்தை ஒருத்தராலையும் அசைக்க முடியாது" என்று கூறியவாறு மடியில் கவனமாகச் சுற்றி வைத்திருந்த கால் போத்தலை வெளியே எடுத்தார் மயில்வாகனத்தார்.



அறியா யான்



# மரங்கள் அல்ல அவை வரங்கள்

ஜெ.பாஸ்கரன்

உலகம் முழுவதும் பதினைந்து கோடிக்கும் மேற்பட்ட பனை மரங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆசியாவில் இந்தியா, இலங்கை, மலேசியா, மியான்மர், தாய்லாந்து, இந்தோனேசியா, சீனா போன்ற நாடுகளிலும், மேற்கு ஆபிரிக்க நாடுகளிலும் பனைமரங்கள் இருப்பதாக ஆய்ந்தறியப்பட்டிருக்கிறது.

உலக அளவில் இருக்கும் பனை மரங்களில் பத்து கோடிக்கு மேற்பட்டவை இந்தியாவிலும், ஐந்து கோடிக்கு மேல் தமிழ்நாட்டிலும் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இலங்கையில் ஒரு கோடி 15 லட்சம் பனைமரங்கள் உள்ளன என மதிப்பிடப்பட்டிருக்கின்றன. வடக்கில் 35 லட்சமும் யாழ்ப்பாணத்தில் 15 லட்சமும் உள்ளன.

எப்படியிருந்தாலும் பனை மரத்தின் தாய் நிலம் தமிழ் நிலம்தான். பனை மரங்களுக்கும் தமிழ் மண்ணுக்கும் பழமையான பந்தம் உண்டு. தமிழ் மக்களுக்கும் பனை மரங்களுக்கும் ஆயிரக் கணக்கான ஆண்டுகள் பயன்பாட்டு, பண்பாட்டுப் பரிச்சயமும் உண்டு.

பனை மரங்கள் போரசஸ் பிலபெல்லிஃபெர் எனும் தாவரவியல் பெயர் பூண்டவை. மூங்கில், தென்னை, கரும்பு போன்று பனையும் புல்லின வகையைச் சேர்ந்தது என தாவர அறிவியல் வல்லுநர்கள் வரையறை செய்திருக்கிறார்கள். ஆனால், தென்னை, மூங்கில், கரும்பு ஆகியவற்றைக் காட்டிலும் பனையின் பயன்பாடுகள் மகத்தானவை. ஓடகம், தாலம், கரும்புறம், காமம், பெண்ணை, போந்து, புற்பதி, புற்றாளி, தாளி, தருவிராகன் போன்று பல்வேறு பெயர்களில் பழந்தமிழர்களால் அழைக்கப்பட்ட பனை மரங்களின் ஓலைகள்தான் தொல் தமிழ் அறிஞர்களின் சிந்தனை வளங்களைச் சுமக்கப் பயன்பட்டிருக்கின்றன.

சில கோயில்களின் தல விருட்சமாகவும் பனை மரம் விளங்குகிறது. பழந்தமிழ் இலக்கியங்களின் தாய்வீடு பனை ஓலை தான். பனையோலைகளில் பதிவு செய்யப்பட்டிருந்த பழந்தமிழ் இலக்கியங்களுக்கும் தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயருக்கும் இடையே நிலவிய உன்னதமான உறவை, அறிவுலகம் நன்கறியும்.

பழந்தமிழரின் செய்திப் பரிமாற்றங்களுக்கு பனையோலைகளே பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளன. யானைகளின் தும்பிக்கைகள் கருத்த பனை மரங்களைப் போல உறுதியாகவும் நெடிதுயர்ந்தும் காணப்பட்டதாக பழைய இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ் மூவேந்தர்களில், சேர மன்னர்கள் பனம்பூ மாலை சூடி மகிழ்ந்தவர்களாவர். பனை மரமே தமிழ்நாட்டின் மாநில மரமுமாகும்.

பழந்தமிழர்களுக்கான பயன்பாட்டுப் பொருள்களாகவும், உணவு வகைகளாகவும் பனை மரங்கள் பயன்பட்டுள்ளன. "தென்னை வச்சவன் தின்னுப்புட்டு சாவான், பனை வச்சவன் பார்த்துப்புட்டுச் சாவான்" என்றொரு பழமொழி உண்டு. பனை மரங்கள், அவற்றை வைத்து வளர்க்கிற தலைமுறையைத் தாண்டி அடுத்தடுத்த தலைமுறைகளுக்கே அதிகம் பயன்படக்கூடியவை.

1885ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் திருநெல்வேலி மண்டலத்தில் கூட்டப்பனை எனும் ஊரில் இருந்து வேம்பார் என்கிற ஊர் வரை கடற்கரையையொட்டிய பகுதிகளில் ஐந்து லட்சம் பனை மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. வளர்த்தவர் வெள்ளைக்கார மாவட்ட ஆட்சியர் ஒருவர்.

ஆழிப்பேரலை போன்ற கடலின் சீற்றங்களையும் தடுத்து நிறுத்துகின்ற இயற்கை அரண்களாகவும், பசியைப் போக்கிப் பல்வேறு உணவு வகைகளைப் படைக்கின்ற அருஞ்சுவை அமுதசுரபிகளாகவும், வாழ்வின் தேவைகளுக்காக நுற்றுக்கணக்கான பயன்பாட்டுப் பொருள்களைத் தயாரிக்க மூலப் பொருள் கொடுக்கும் சூழல் நலத் தொழிற்சாலைகளாகவும், பழந்தமிழ் இலக்கியங்களை பல தலைமுறைகளுக்கு பயிற்றுவித்த பல்கலைக்கழகங்களாகவும் பனை மரங்கள் விளங்கின; விளங்குகின்றன.

ஆல மரங்களும் அரச மரங்களும் பனை மரங்களும் அருகருகே வளரும் இயல்புடையவை. இயற்கையிடமிருந்து கொஞ்சமாகப் பெற்றுக்கொண்டு மனிதர்களுக்கு மிக அதிகமாகத் தருகின்ற கொடையுள்ளம் கொண்டவை பனை மரங்கள்.

பனை மரங்களை அலட்சியப்படுத்திய தலைமுறையைத் தொடர்ந்து, அவை குறித்து எதுவுமே தெரியாத ஒரு தலைமுறை உருவாகிவிட்டது. என் பதுகவலைக்குரியது.படையினர் அழித்தொழித்த பனைமரங்கள் போக, நாமும் தொடர்ந்தும் அழித்து வருகின்றோம். தமிழ் அரிய செல்வங்களின் மீது இயல்பாகக் காட்டப்படுகின்ற அலட்சியம், பனை மரங்கள் மீதும் காட்டப்படுகிறது.

தொழிற்சாலை, வீட்டு மனை போன்ற தேவைகளுக்கு நிலம் கையகப்படுத்தப்படும்போது அந்த நிலத்தில் உள்ள பனை மரங்களே முதற்பலியாகின்றன. யாழ்ப்பாணத்தில் தீவகப் பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களில் அனேகமாக பனைகள் அழிவின் விளிம்புக்கு வந்துவிட்டன.

ஒரு பனை வீழ்த்தப்படுவது எவருக்கும் பதைபதைப்பை ஏற்படுத்துவதில்லை. மனிதர்களால் வளர்க்கப்படாமல் இயற்கையே வளர்த்துத் தருகின்ற மரங்களாகப் அவை விளங்குவதால் அவற்றின் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்த எவரும் முன்வருவதில்லை. சூழல் நலத்திற்கு எத்தகையதொரு சிறு கேட்டினையும் செய்யாத பனையின் பொருளாதாரச் செயல்பாடுகள் முற்றாக மறக்கடிக்கப்பட்டு, சூழலைச் சீர்குலைத்துச் சின்னாபின்னமாக்கும் பயிர்களை வளர்ப்பதில் நாம் அதிகம் நாட்டம் காட்டி வருகின்றோம்.

ஆற்றங்கரைகளும், ஏரிக்கரைகளும், குளக்கரைகளும், பயன்படுத்தப்படாமல் கிடக்கும் புன்செய் நிலங்களும், கடலோர நிலப் பகுதிகளும் பனை மரங்களை நட்டு வளர்க்க சரியான இடங்களாகும். இனி மேலாவது காணும் வெளிகள் எல்லாம் பனை மரங்களை நட்டு அவற்றைப் பனஞ்சோலையாக்கி, வளம் பெறுவோம்.

வளரத் தொடங்கும் ஒரு பனை மரம் தனக்கான நீர், பூச்சி மருந்துகள், அன்றாட உழைப்பு, பாதுகாப்புத் தேவை என்று எதையும் மனிதர்களிடம் கோருவதில்லை. பனை மரங்கள் நமக்கு எண்ணிலடங்காத பயன்களைக் கொடுக்கப் பிறந்தவையே தவிர, எதுவொன்றையும் நம்மிடம் கேட்கப் பிறந்தவையல்ல.

பனையியல் சார் பல்கலைக்கழகங்கள், பனைசார்ந்த கல்வி, ஆராய்ச்சிகள், பனை உணவுத் தயாரிப்பு ஆலைகள், பனை மரப் பயன்பாட்டுப் பொருள் தயாரிப்பு ஆலைகள், பனைப் பொருள்கள் ஏற்றுமதிக் கழகம், பனைசார் உணவகங்கள், பனைத் தொழில் வேலைவாய்ப்புப் பயிற்சி நிலையங்கள், பனைத் தொழில் கருவிகள் தயாரிப்புத் தொழிற்சாலைகள் இவ்வளவு பணிகளுக்குமான லட்சக்கணக்கான வேலை வாய்ப்பு மையங்கள் என்றெல்லாம் பல்வேறு நிறுவனங்களைத் தோற்றுவிப்பதற்கான சாத்தியக் கூறுகளை பனை மரங்கள் கொண்டுள்ளன.

கொஞ்சம் கூர்ந்து பார்ப்பவர்களுக்கு பனை மரங்கள் அரிய வரங்கள். அப்படிப் பார்க்காதவர்களுக்கு அவை வெறும் மரங்களே!

> சில கோயில்களின் தல விருட்சமாகவும் பனை மரம் விளங்குகிறது. பழந்தமிழ் இலக்கியங்களின் தாய்வீடு பனை ஓலை தான். பனையோலைகளில் பதிவு செய்யப்பட்டிருந்த பழந்தமிழ் இலக்கியங்களுக்கும் தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயருக் கும் இடையே நிலவிய உன்னதமான உறவை, அறிவுலகம் நன்கறியும்.

# சினிமாவும் நடைமுறை வாழ்க்கையும்

ரம்யன்

நீ ரோம் நாட்டில் இருக்க நேர்ந்தால் ரோமானியர்கள் போலவே நடந்து கொள் என்பது ஆங்கிலத்தில் உள்ள ஒரு பழமொழி (when you are in rome do as ramans do) இது உருவானதற்கு உள்ள காரணம் தெரியவில்லை. ஆனால் நாம் ஒரு புது இடத்துக்கு அல்லது புது நாட்டுக்கு அல்லது வித்தியாசமான கலாசாரங்கள் பேணப்படும் இடங்களுக்குச் செல்ல நேர்ந்தால் அங்கே இருப்பவர்களில் பெரும்பாலானவர்களும் நடந்துகொள்ளும் விதம் அறிந்து அதற்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும் என்பதையே இது குறிக்கிறது என்று கொள்ளலாம்.



மேற்குநாடுகளின் பழக்க வழக்கங்களை கீழைத் தேசத்தவர்களில் பலர் இப்போது கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதைப் பார்க்கிறோம். பெண்க ளுக்கு அங்கே அதிக மதிப்பு அளிக்கப்படுகின் றது என்பார்கள். உதாரண மாக கார் ஒன்றில் தன் மனைவியை வைத்து ஒருவர் அழைத்துச் செல் கிறார் என்று வைத்துக்கொள்வோம். ஓர் இடத்தில் காரை நிறுத்தி இருவரும் இறங்க வேண்டிய கட்டம். காரை நிறுத்துகிறார் கணவர் முதலில் காரை விட்டு இறங்கி மனைவி இருக்கும் பக்கமாக வந்து அவர் இறங்குவதற்கு கதவைத் திறந்து விடுகிறார்.

இது பெண்களுக்கு அங்கே அளிக்கப்படும் மரியாதைகளில் ஒன்று என்று பேசப்படுகின்றது. அதேநேரம் அங்குதான் குடும்பங்களில் விவாகரத்து என்பது மிகப்பெரியதாக காணப்படுகின்றது. கணவனுக்கும் மனைவிக்கும் சற்று ஒத்துபோகா விட்டால், கருத்து முரண்பாடு ஏற்பட்டால் போதும்தனிமனித உரிமை என்ற அடிப்படையில் விவாகரத்துக்குப் போய்விடுகிறார்கள். ஆனால் நம் குடும்பங்களில் பெண்களும் சரி, ஆண்களும் சரி கூடிய வரை சகிப்புத்தன்மையைப் பேணுகிறார்கள். இனிமேலும் முடியாது என்ற கட்டத்தில் தான் விவாகரத்துப் பற்றி யோசிக்கிறார்கள். ஆண் ஆதிக்கம் மித மிஞ்சிப் போயுள்ள இந்த சமூகங்களில் குடும்ப ஒற்றுமை – குழந்தைகளின் எதிர்காலத்துக்காக எதையும் சகித்துப்போவது என்ற பண்புகாணப்படுகிறது.

இருந்தாலும் மேன்நாட்டு பழக்கவழக்கங்கள் தினம் தினம் அதிகரித்துக் கொண்டுதான் வருகின்றன. உதாரணத்துக்கு மேற்குநாடுகளில் ஆண், பெண்கள் ஒருவரை ஒருவர் விரும்பும்போது பகிரங்கமாக உணர்ச்சிகளைக் காட்டி விடுகிறார்கள். பகிரங்கமாக முத்தமிடுவது அங்கு சர்வசாதாரணம். அந்தப் பழக்க வழக்கம் இங்கேயும் சில சில இடங்களில் காணப்படுகின்றது. சனநடமாட்டம் குறைவான இடங்களில் – பாதை ஓரங்களில் – பூங்காக்களிலும் கூட சிலர் இவ்வாறு தறிகெட்டு நடந்து கொள்ளப் பார்க்கிறார்கள். இவ்வாறு நடந்து கொள்கின்ற ஆண் பெண்களை சமூகம் வெறுக்கின்றது.

சமீபகாலத்தில் வடஇந்தியா நகரம் ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொள்ள வந்திருந்த மேற்கு நாட்டு பிரபல நடிகர் ஒருவர் இந்திய பெண் நடிகைகளில் ஒருவரான சில்பா செட்டி என்பவரை

> சமீபகாலத்தில் வட இந்தியா நகரம் ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொள்ள வந்திருந்த மேற்கு நாட்டு பிரபல நடிகர் ஒருவர் இந்திய பெண் நடிகைகளில் ஒருவரான சில்பா செட்டி என்பவரை பகிரங்கமாக மேடையில் வைத்தே மேற்கு நாட்டுப் பாணியில் முத்தமிட்டிருந்தார்.

பகிரங்கமாக மேடையில் வைத்தே மேற்கு நாட்டுப் பாணியில் முத்தமிட்டிருந்தார். அந்தச்சம்பவம் இந்தியாவில் ஊடகங் களில் பெரிதாகக் கண்டிக்கப்பட்டது. அந்த நடிகர் தாம் இந்தியாவிலிருக்கிறார் என் பதை மறந்து போய் அவ்வாறு நடந்து கொண்டார் என்று அந்த நடிகையே அவருக்காக பரிந்து பேசியிருந்தார்.

முத்தமிடும் காட்சிகள் மேற்குநாட்டுப் படங்களில் ஒரு கட்டாய காட்சிபோல் காட்டுகிறார்கள். டென் கொமான்ட்மென்ட் என்ற மிகப் புகழ் பெற்ற ஒரு படம் முன்னர் வெளிவந்திருந்தது. விவிலியத்தின் பழைய ஏற்பாட்டிலிலுள்ள சம்பவங்கள் அதில் கதையாக்கப் பட்டிருந்ததாகக் கூறப்பட்டது. அந்தப் படத்தில் மோசஸ் என்ற பாத்திரத்தில் பிரபல்யமான நடிகர் ஒருவர் நடித்திருந்தார். மோசஸ் என்பவர் விவிலியத்தில் ஒரு புனிதராகப் போற்றப் படுபவர் ஒரு கட்டத்தில் ஒரு பெரிய நகரைக் கட்டியெழுப்புவதில் அவர் மும்முரமாக ஈடுட்டிருக்கும் சமயத்தில் அவர் விரும்பும் இளம்பெண்ணொருவர் அவரைச் சந்திக்க வருகிறார். கட்டுமானத்துக்குத் தேவையான மண் குழைப்பில் ஈடுபட்டுள்ள அவர் தன் கால்களால் மண்ணை உழக்கி பிசைந்து கொண்டிருக்கும் வேளையிலும்கூட




அந்தப் பெண்ணைக் கட்டிப்பிடித்து வெறிகொண்டவர் போன்று முத்தமிடுவதாகக் காட்டியிருந்தார்கள்.

இந்தக் காட்சி மேற்கு நாடுகளில் வரவேற்கப்பட்டிருந்தாலும் புனிதராக வணங்கப்படும் ஒருவர் இவ்வாறு நடந்து கொண்டிருப்பாரா என்று கீழைத் தேய நாடுகளில் அனேகர் ஆட்சேபித்தார்கள். ஆனால் அந்தக் காட்சி படத்தில் இருந்து நீக்கப்பட்டவுமில்லை – மாற்றப்படவுமில்லை.

அந்தக் காட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது அந்த நாட்டின் அரசன் (யூல்பிரைனர் அரசனாக நடிக்கிறார்) உப்பரிகையில் இருந்து பார்த்துக் கொண் டிருக்கிறான். அப்போது அரசன் பின்வருமாறு கூறுகிறான். "அவன் கட்டியெழுப்புகின்ற நகரம் என் பெய ரைத் தாங்கி நிற்கும். அவன் காதலிக்கும் பெண் என் குழந்தையைச் சுமந்து நிற்பாள்" The city he builds shall bear my name. The girl he loves shall bear my child என்று

ஆரம்பகாலத்தில் தமிழ்ப்படங்களில் காதல் காட்சிகள் அந்தக் காலத்துக்கு ஏற்றாற்போலவே படமாக்கப்பட்டிருந்தன. காதலர்களின் உரையாடல்கள் சிறு சிறு வசனங்களாக இருந்தது மட்டுமல்ல மன எழுச்சிகளை அழகான பாடல்கள் மூலமே வெளிப்படுத்தினார்கள். பெரும்பாலும் கைகளை மட்டுமே தொட்டுக் கொள்வார்கள். தோள்களைத் தொடுவதும் உண்டு. பெண்களின் ஆடை அணிகளில் மிகவும் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. அந்த நிலைமைளை இன்றைய நிலைமைளுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாமல் இருக்கிறது.

பொதுவில் சினிமா என்பது பொழுது போக்குக்கான ஒரு கலைதான் – அதில் சமூகத்தின் யதார்த்த நிலையை எதிர்பார்க்க முடியாது. கூத்து – நாடகம் என்று வந்து சினிமாப்படம் மக்களின் மிக இன்றியமையாத ஓர் அம்சமாக மாறிவிட்டுள்ளது.

சினிமாவைப் பார்த்து வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியாது. அது தனிப்பட்ட ஒருவருக்காக உருவாக்கப்படுதன்று. சமூகத்தில் வாழும் பலதரப்பட்டவர்களின் இரசனைகளுக்கும் ஈடுகொடுப்பதாகவும் தயாரிப்புக்கு பணம் போடுபவர் நட்டமடையாமல் இருக்கவுமே முக்கிய கவனம் செலுத்துகிறார்கள்.

காலம் மாறியிருப்பதால் சினிமாவிலும் காட்சிகள், உடைய லங்காரங்கள் ஏன் வசன அமைப்புக்கள் மட்டுமல்ல ஆண் பெண் நடத்தை பற்றிய காட்சிகளும்கூட இக்காலத்தவர்களின் இரசனைக்கு ஏற்றாற்போல் மாற்றம் பெற்று விட்டது. படிப்படியாக இப்பொழுது தமிழ்ப்படங்களிலும் முத்தக்காட்சிகளைப் புகுத்திவிட்டார்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகளுக் கேற்ப அந்தக் காலத்தில் பாடல்களுடன் நடனங்களும் சேர்க்கப் பட்டிருக்கும். அதன் கருத்தும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற்போல் இருக்கும் இப்போது பாட்டு ஏதோ ஒன்றாக வும் ஆட்டம் வேறொன்றாகவும் பெரும் ரக ளையாக இருக்கிறது. பாரம்பரிய இசை, நடனம் பாட்டு எல்லாம் மூட்டை கட்டப்பட்டு விட்டன.

ஏதோ பொழுது போக்குக்காக ஒரு படத்தைப் பார்த்தோம் என்ற வகையில் இன்றைய ரசிகர்கள் திருப்தி கொள்ளவேண்டும் – அதை விட்டு சினிமாவையே வாழ்க்கைக்கான வழிகாட்டியாக கொள்வது தவறு. சினி மாவானது மேற்கிலிருந்து வந்து கிடைத்த வொரு வரப்பிரசாதமே. அதனை நம்பவர்கள் நமது நாடுகளுக்கும் கலாசார விழுமியங்களுக்கும் ஏற்றமுறையில் தொடர்ந்து பயன் படுத்திக் கொள்ளவதே புத்திசாலித்தனம்.



# பெண்ணே நீ பூவா? இல்லை புயலா?



புரியாத புதிர் நீ
புரட்சிகள் படைத்திட
புதுமைகள் தந்திடு--
புது யுகம் உனக்காய்
பிறந்திட இன்றே புறப்படு
சிறகொழிந்து சிறைக்குள்
சிக்கிய காலத்தை விட்டு
சீக்கிரம் வெளியே வா
உனக்காய் புதிய உலகு
உன்னருகே உள்ளது
காலங்கள் மாறிட
காயங்கள் ஆறிடும்
காலத்திற்காய் காத்திராமல்
உனக்காய் காலம்
காத்திருக்க
கண்மணியே உன்
கவலைகளை உதறிவிட்டு
கடந்த கசப்பான காயங்கள்
கனவு என மறந்து விட்டு
நிஜ உலகிற்காய் நீயே
நிமிர்ந்து நடை போடு
நெஞ்சமதில் துணிவுடன்
நித்தம் நீ வாழ்ந்திட
வஞ்சம் செய்யும் சிலர்
வாஞ்சையுடன்
பேசி-பின்
வசை பாடுவர்-அதனை
கண்டு கொள்ளாமல்
கண்டிப்புடன் இருந்திடு
காலப் போக்கில்
கயவர்களும் விலகிடுவர்
வெட்டிப் பேச்சு பேசி
வீண் வம்பை விட்டு
விழிப்புடன் இரு
விசமிகள் கூட
விலகிச் செல்வர்.



# நம்பிக்கையோடு போராடுவோம்

■ உடுவிலூர் கலா

வீட்டுக்குள் அடங்கி யன்னல் வழியாக எட்டிப் பார்த்த பெண்ணினம் இன்று சாதனையின் சிகரத்தில் நின்று சரித்திரத்தின் பக்கங்களில் பதிவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனினும் அடக்கி ஒடுக்கப்படும் அடிமை வாதக் கொள்கைகளை சுவாசித்தும், உதட்டில் புன்னகையும், உள்ளத்தில் வேதனையாகவும் ஒரு பகுதி பெண்கள் வாழ்கின்றனர்.

ஆணாதிக்க,பெண்ணாதிக்க அடக்குமுறையில் சமுதாய அடிக்கட்டுமான அடிமைவாதக் கொள்கைகளில் பலவித வேதனைகளை இன்று பெண்கள் அனுபவிக்கின்றனர். அவர்கள் வேதனை தான் வாழ்க்கை என்ற உள்ளார்ந்த மன உளைச்சலோடு சந்தோசத்தை தொலைத்து வெறும் பகட்டுக்கான வாழ் நாளாக அவர்களது வாழ்க்கை கழிகிறது.

இயற்கை சில வரங்களைப் பெண்ணுக்கு கொடுத்திருக்கின்றது. அதில் விதவை என்ற கொடுமையான வரமும் ஒன்று. சில பெண்களுக்கு இந்த வரம் இள வயதிலேயே கிடைத்து விடுகிறது. வாழ்வில் உந்து துணையான கணவனை மரணத்தினால் பிரியும் போது அவளது வாழ்வில் பெரும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

பெண்களின் சகவாசம் கொள்ளும் கணவனோடு மனைவியாக வாழும் பெண்கள், எதிர்ப்பால் அனனத்து அதிகாரிகளின் கீழ் வேலை செய்யும் பெண்கள், பாலியல் துஸ்பிரயோகத்துக்கும் வன்முறைக்கும் ஆளாகும் பெண்கள், கைப்பேசியில் ஆபாசப்படங்கள் குறும் செய்திகள் அனாமதேய அழைப்புக்களால் சலனப்படும் பெண்கள், என எண்ணிலடங்கா ஆணாதிக்க பிடியில் சிக்கியுள்ள பெண்களின் கண்ணீரை சமுதாயத்தில் பரவலாக காணமுடியும்.

புகுந்த வீடு வந்த பெண்ணை மாமியும் மைத்துனிமாரும் பழிசுமத்தி அம்மிக்கலாக ஆட்டுவது, பெற்ற தாயிடம் இருந்து பிள்ளையைப் பிரிப்பது, வறுமையில் வாழும் பெண்களை வசதி படைத்த பெண்கள் பரிகசிப்பது, சற்று நிறம் குறைந்த பெண்களை அழகில்லை என தம் அழகில் இறுமாப்படையும் பெண்கள் போன்ற பலவித பெண்களை பெண்ணாதிக்கத்தினால் உண்டாகும் வேதனைகளுக்கு உதாரணம் காட்டமுடியும்.

பாலியல் வன்முறைக்கு ஆளாகி வாழ்நாளெல்லாம் பார்வைக்கு பயந்து வாழும் பெண்கள, அங்கவீனத்தால் சமுதாயத்தில் சூட்டும் இகழ்ப்புரைக்கு கண்ணீர் சிந்தும் பெண்கள், எனப் பலகோணத்தில் பெண்களின் கண்ணீரை பார்க்கின்றோம். ஆனாலும் இந்தக் கண்ணீரை துடைக்க வருபவர்கள் யார் வருவார்? என்ன வழி? என்பதே இன்றைய கேள்வி. எமது வேதனைகளை நாமே தவிர்க்க வேண்டும். உடல் ஊனம் ஒரு குறைபாடு அல்ல. கைகள் இரண்டையும் இழந்த நிலையில் படித்து முன்னேறிய பெண்களும் எமது சமுகத்தில் உள்ளனர். வறுமைக்கு வாழ்வு தடையாகாது. தரித்திரத்திலே பிறந்து சரித்திரம் படைத்த பல பெண்மணிகளை நாம் காணவில்லையா? எனவே பெண்களாகி எமது கண்ணீர்கள், வேதனைகளை மூட்டைகட்டி அப்புறப்படுத்தி விட்டு வாழ்கைப் பயணத்தில் வெற்றி காணவேண்டும். வாழ்க்கை வாழ்வதற்கே கண்ணீர் சிந்தவும் கட்டுண்டு வாழவுமா வாழ்க்கை? எம்மைத் தாங்கும் தூண் நாமே. எமது கண்ணீரை எமது கரங்களே துடைக்க வேண்டும். யாரையும் எதிர்பார்த்து வாழும் வாழ்க்கை வேண்டவே வேண்டாம். பெண்களின் வாழ்வில் இயற்கை தருகின்ற சில இன்னல்களை தாங்கியே ஆக வேண்டும். பெண்களின் வாழ்வில் இயற்கை தருகின்ற சில இன்னல்களை தாங்கியே ஆகவேண்டும். ஆனால் எம்மை யாரும் துன்புறுத்தவோ, வேதனைப்படுத்தவோ முடியாத நாமே நம்மை பாதுகாக்க வேண்டும்.

இதனால் அவள் தனிமைப்படுத்தப்படுகின்றாள். வெறுமையுணர்வு மேலோங்க, பிரிவும் கண்ணீரும் நிரந்தரமாகின்றது. தன்னையும் தனது உணர்வுகளையும் மட்டுமல்ல குழந்தை களையும் சுமக்கும் சுமையாகின்றாள்.

திருமணமாகி மறுநாளே கணவனைப் பிரிந்து விதவைகள் ஆகும் பெண்களும் உள்ளனர். வன்னியில் போரின் போது அதிகமான பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் விதவைகள் என்பது மட்டுமல்ல வயதான பெற்றோரையும் தாங்கும் சுமைதாங்கிகளாகவுள்ளனர்.

இதனைவிட ஆணாதிக்க சிந்தனையாளர்களாலும் பெண் மிகத்துல்லியமாகக் கொடுமைப் படுத்தப்படுகின்றாள். திருமணம் என்கின்ற ஆத்மார்ந்த உறவின் பின்னர் ஒரே வயிற்றில் பிறந்த அண்ணன் தம்பியை மறக்க முடியாது, பாசத்தைச் சிதைத்து வாழும் பெண்கள், குடும்பத்தில் அனைத்துக் கடமைகளையும் சரிவரச் செய்து எந்த முடிவையும் எடுக்க முடியாத பெண்கள், பாடசாலை நட்பைச் சொல்லி ஆயுள் வரை கண்ணீர் சிந்தும் பெண்கள், வெளியே

ஆக சமுதாயப் பாதையில் இடறிடாமல் நடந்து செல்ல ஊன்று கோலாகவும், உள்ளம் என்னும் விளக்கு அணைந்திடாமல் தூண்டிக் கொண்டிருக்கும் தூண்டு கோலையும் நம்பிக்கை என்னும் ஆயுதங்களோடு வாழ்வில் போராடி வெற்றி பெறுவோம் எமது கண்ணீரையும் எதிர்கால பெண் சந்திதியினரின் கண்ணீரையும் பாதுகாக்க நம்பிக்கையோடு போராடுவோம். வெற்றி நமக்கே.

> “ இயற்கை சில வரங்களைப் பெண்ணுக்கு கொடுத்திருக்கின்றது. அதில் விதவை என்ற கொடுமையான வரமும் ஒன்று. சில பெண்களுக்கு இந்த வரம் இள வயதிலேயே கிடைத்து விடுகிறது. வாழ்வில் உந்து துணையான கணவனை மரணத்தினால் பிரியும் போது அவளது வாழ்வில் பெரும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.



செல்வி ரிஸ்கா நவாஸ்
விஷேட கல்வித்துறை, 2 ஆம் வருடம்

# மனிதா உன்னைத்தான்……

ஆறறிவுள்ள உயிராய்
அகிலமே போற்றும் மனிதா
சீற்றம் கொண்ட வாழ்வை
சொல்லினில் முழங்கும் மனிதா
பேரணியோடு இந்தப்

பார்வலம் சூழும் மனிதா
ஓரணி சேர்ந்து வாழும்
இன் வழி மறந்த தேனோ?
நறுமணம் கமழும் அழகின்
நல்லெழில் பூங்கா வனமோ

செருக் கதுகொள்ளா தென்றும்
சுகந்தமே வீசுதங்கே
கருவினில் இருந்து இந்தக்
காசினி வந்த மனிதன்
கர்வமே கொண்டு பகையின்
குணமதில் வீழ்வ தேனோ?

கானகம் எங்கும் பறந்து
'கா கா' என்று கரைந்து,
கானமே இசைக்க நாளும்
காக்கைகள் திரிந்து மாலை,
வானதில் ஒன்றாய்க் கூடி
வாகுற பறக்கு தங்கே;
மானமே கொண்ட மனித
மனதிலே பிளவு ஏனோ?

உருவினில் சிறிய உயிராம்
எறும்புகள் கூட்டமங்கே
பெருமனதோடு ஒன்றாய்ப்
படையெடுக்கின்ற காட்சி
பெருமைசேர் ஒற்றுமைக்குப்
புவியினில் சிறந்த சாட்சி!
அருமையாய்ப் பிறந்த மனிதா,
உன்னில் பேதம் ஏனோ?

யுத்தமே செய்து சொந்த
இரத்தமே சிந்தி தானும்
உத்தம வீரன் என்று
உயர்வுறப்பேசும் மனிதா
சத்தியமாக நீயோ
சிந்திய இரத்த நிறமோ
இத்தரை எங்கும் ஒன்றே
என்று ஏன் உணரவில்லை?

குண்டுகள் வெடிக்கும் யுகமாய்
குவலயம் ஆன தேனோ?
மண்ணுடன் மனித உயிரோ
மாண்டிடும் நிலையும்
சண்டைகள் பெருக்கெடுத்து
சாதித்த தேது முண்டோ
கண்டதோ ஒன்றும் இல்லை
காண்பதோ பேதம் ஒன்றே!

கண் இமை போல நன்றே
காத் துனை வளர்த்த அன்னை
வெண்மையின் பாலைத் தானே
வாகுற அருந்தத் தந்தாள்;
பண்பெலாம் பாலை போலே
பரிவுடன் வெண்மை கொண்டால்
உண்மையாய் உந்தன் பேதம்
அகன்றுளம் விழிப்புக் காணும்!



# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**05.04.2015 முதல்
11.04.2015 வரை**




## மேடம்

தன்னம்பிக்கை அதிகமாகும். பழைய கடனைத் தீர்க்க புது யோசனை தோன்றும். வீடு கட்ட வங்கி உதவும். சுபச் செலவுகள், இனந்தெரியாத பயம், அடிவயிற்றில் வலி வந்து நீங்கும். உறவினர்களால் சங்கடங்கள் வரும். சிலரின் ஆசை வார்த்தைகளை நம்பி ஏமாறாதீர்கள். வழக்கில் தீர்ப்பு தள்ளிப் போகும். நண்பர்கள் தேடி வந்து உதவுவார்கள் வியாபாரத்தில் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை தாண்டி முன்னேறுவீர்கள்.



## இடபம்

சவாலான விடயங்களையும் சாமர்த்தியமாகப் பேசி முடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. பெரிய பதவியில் இருப்பவர்களின் அறிமுகம் கிட்டும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். உறவினர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும். படபடப்பு, ஏமாற்றம், கை, கால் வலி, மனைவிக்கு முன்கோபம், அவருடன் ஆரோக்கியமான விவாதங்களெல்லாம் வந்து நீங்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத்திறமை கூடும்



## மிதுனம்

நினைத்ததை முடிப்பீர்கள். புகழ், கௌரவம் பல மடங்கு உயரும். அதிகாரப் பதவியில் இருப் பவர்கள் உதவுவார்கள். வெளியூர்ப் பயணங் கள் செல்ல திட்டமிடுவீர்கள். வழக்கு சாதகமாக திரும்பும். உடன்பிறந்தவர்கள் உங்களின் உண்மையான பாசத்தை உணர்வார்கள். மன இறுக்கம், வீண் கவலை, சோர்வு, களைப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் பதவி உயர்வுக்காக உங்களுடைய பெயர் பரிசீலிக்கப்படும். முன்னேற்றப் பாதை நோக்கிப் பயணிப்பீர்கள்.



## கடகம்

புத்திசாலித்தனம் வெளிப்படும். தொழிலில் முன்னேற்றம் உண்டு. கண்டும் காணாமல் இருந் தவர்கள் வலிய வந்து பேசுவார்கள். மூத்த சகோதரிக்கு நல்ல வாழ்க்கைத் துணை அமையும். தள்ளிப் போன வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உறவினர்கள், நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். முக்கிய கோப்புகளை கவனமாகக் கையாளுங்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமையை உயரதிகாரி பரிசோதிப்பார்.



## சிம்மம்

திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். ஒரு சொத்தை விற்று மற்றொரு சொத்தைக் காப்பாற் றுவீர்கள். சேமிக்க முடியாதபடி செலவுகள் துரத்தும். உறவினர்களால் ஆதாயம் உண்டு. காரியத் தாமதம், முன்கோபம் வந்து செல்லும். சிறுசிறு விபத்து வரக்கூடும். கண்பார்வைக் கோளாறு, பல் வலி, பேச்சால் பிரச்சினைகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் ஒரே நேரத்தில் பல வேலைகளைப் பார்க்க வேண்டி வரும்.



## கன்னி

எதிர்பார்த்த பணம் வரும். பாதியில் முடங்கிக் கிடந்த வீடு கட்டும் பணி முழுமையடையும். கல்வியாளர்கள், அறிஞர்களின் நட்பால் தெளி வடைவீர்கள். பழைய சொந்தங்கள் தேடி வரும். சொந்த ஊர் பொதுக்காரியங்களை முன்னின்று நடத்துவீர்கள். சகோதர வகையில் பிரச்சினைகள் வரும். சமையலறையில் சமைக்கும் போது நெருப்புக் காயங்கள் ஏற்படக்கூடும். முன்கோபத்தைத் தவிர்க்கப்பாருங்கள். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள்.



## துலாம்

உங்களிடம் மறைந்து கிடந்த திறமைகள் வெளிப் படும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். அரசு காரியங்கள் சுலபமாக முடியும். உறவுகளின் அன்புத் தொல்லை குறையும் உறவினர், நண்பர்களுடன் நெருடல்கள் வந்து விலகும். வீண் விரயம், எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலை, சளித்தொந்தரவு வந்து நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்கள் கோரிக்கையை ஏற்பர்.



## விருச்சிகம்

பிரச்சினைகளின் ஆணிவேரைக் கண்டறிவீர்கள். தினந்தோறும் எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். பிரபலங்களின் உதவியால் இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். பூர்வீகச் சொத்துப் பங்கை கேட்டு வாங்குவீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனத்தாங்கல் வரும். வழக்கு சாதகமாகும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் உதவியால் நினைத்ததை முடித்துக் காட்டுவீர்கள்.



## தனுசு

ஆட்சியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். அதிகாரப் பதவிகள் தேடி வரும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். சிலர் வீண் பழி சுமத்தினாலும் மீண்டு வெளியே வருவீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்பட்டாலும் சக ஊழியர்களால் மதிக்கப் படுவீர்கள். சாதுர்யமான பேச்சால் சாதிக்கும் வாரமிது.



## மகரம்

திடீர் யோகம் உண்டு. குழப்பம் நீங்கும். உங்களின் ஆளுமைத்திறன் அதிகரிக்கும். வெற்றி பெற்ற மனிதர்களின் நட்பு கிடைக்கும். உறவினர்களால் நன்மை உண்டு. சொந்த ஊரில் இழந்த செல்வாக்கைக் பெறுவீர்கள். புது சொத்து வாங்குவீர்கள். விலகிச் சென்ற நண்பர்கள் விரும்பி வருவார்கள். சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை உணர்வீர்கள். கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.



## கும்பம்

சமயோஜித புத்தியால் சாதிப்பீர்கள். பணப் புழக்கம் கணிசமாக உயரும். பூர்வீக சொத்தை மாற்றியமைப்பீர்கள். வெளியூர் பயணங்கள் சிறப்பாக அமையும். ஆன்மீகப் பெரியோரின் ஆசி கிட்டும். உறவினர்கள் ஒத்தாசையாக இருப் பார்கள். பல் வலி, பதற்றம், முன்கோபம், பேச்சால் பிரச்சினைகள் வரக்கூடும். கண் பார்வையை பரிசோதித்துக் கொள்ளுங்கள். வேற்றுமதத்தை சேர்ந்தவர்கள் நண்பர்களாக அறிமுகமாவார்கள். உத்தி யோகத்தில் சக ஊழியர்களால் இடையூறுகள் வந்தாலும் மூத்த அதிகாரிகளால் உதவிகள் உண்டு.



## மீனம்

எதிர்பார்ப்புகள் நிறைவேறும். முக்கிய பிரமுகர் களின் உதவியுடன் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். இரத்த அழுத்தம், அடிவயிற்றில் வலி, வெறுப்பு, சலிப்பு வந்துப் போகும். வழக்கு சாதகமாக திரும்பும். உடன்பிறந்தவர்கள் உங்களைப் புரிந்து கொள்வார். எதிலும் நாட்டமின்மை, வீண் பிரச்சினைகள் வந்துப் போகும். உத்தியோகத்தில் அதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள்.

# எல்லாமே போய்ச்சுது

கே.எஸ்.சிவஞானராஜா,
*கொக்குவில்*

**‘அம்மா! குத்தரிசியெண்டால் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. குத்தரிசிக்கு உடம்பு கொழுத்து வருமாம். சம்பா அரிசிக்கு உடம்பு மெலிஞ்சு வருமாம். எனக்கு மெலியத்தான் விருப்பம்” என்றவளை “உனக்கென்ன விசரா பிடிச்சிருக்கு. எந்த விசரி உனக்குச் சொன்னவள். றோட் டுக்கு வடிவாயிருந்தால் சரியே! வீட்டுக்கு அம்சமாயிருக் வேணும் பிள்ளை.**

“என்னடி உங்களின்ர கோலங் களும், ஆட்களும் கண்ணாடியில பாருங்கோ! வடிவாவே இருக்கு. கொறிப்புச் சாமான்களைச் சாப்பிட் டால் சரியே. வீட்டுச் சாப்பாடுகள் உங்களுக்குப் பிடிக்குதில்லையோ! கொம்மாவும் நானும் எவ்வளவோ கஷ்டப்பட்டு நெல்லுத் தொடக்கம் பயறு, எள்ளு, உளுந்து எல்லாம் போதும் போதும் என்று வீட்டிலே வைத்தி ருந்தும், அதையெல்லாம் எட்டியும் பார்க்காமல் கடையிலே வாங்கியே சாப்பிடுறியள். உந்தச் சாப்பாடுகள் எல்லாம் ஒட்டுமே! வீட்டுச் சாப்பாடு உங்களுக்கு இறங்குதில்லையோ! சரி, என்னெண்டாலும் செய்யுங்கோ! ஆண்டவனுக்கு ஏற்குமோடி!” என்றார் மயிலர்.

அப்பாவின் பேச்சைக் கேட்டு கேட்டு யாழினி மரத்துப்போனாள்.



“அம்மா!....... ஏனம்மா அப்பா இப்படி யுத்தகளத்துக்கு வரச்சொல்கிறார்?” யாழி னியும் சும்மா இருந்தால் தானே! முணு முணுத்தாள்.

“பின்னையென்னடி? உன்னைப் பார்த்தால் பெத்தவயிறு எப்படி நோகுதடி? பொம் பிளைப்பிள்ளை மாதிரியே கிடக்குது. குத்தரிசிக் கஞ்சி குடிச்சாலே எப்பிடி உடம்பு குளிர்மையாய் இருக்கும்? வெள்ளை யரிசி வேணும் எண்டெல்லே அடம்பிடிக் கிறியள்! வெள்ளைச்சோற்றை மனுசன் சாப்பிடுவானா?” “அம்மா ! சோறு குமைஞ்சுபோய்ச்சுது! எனக்கு சாப்பாடு வேண்டாம்” “பார்த்தியோ! ஆடு மாடு கூட உதைச் சாப்பிடாது. வெள்ளைச்சோறு மாதிரித்தான் இந்தப் பிள்ளையள். வடி வாய் இருக்கும் சாப்பிடேலாது. உடம் பிலை அப்பிடி இப்பிடி சௌகரியமும் இருக் காது. என்னதான் செய்யப் போகுதுகளோ தெரியாது. வாட்ட சாட்டமா இருக்க வேண்டிய வயசிலை, எப்பிடி நீ இருக் கிறாய்.”

“அம்மா! குத்தரிசியெண்டால் எனக்குப் பிடிக் கவே பிடிக்காது. குத்தரிசிக்கு உடம்பு கொழுத்து வருமாம். சம்பா அரிசிக்கு உடம்பு மெலிஞ்சு வருமாம். எனக்கு மெலியத்தான் விருப்பம்” என்றவளை “உனக்கென்ன விசரா பிடிச்சிருக்கு. எந்த விசரி உனக்குச் சொன்னவள். றோட் டுக்கு வடிவாயிருந்தால் சரியே! வீட்டுக்கு அம்சமாயிருக்க வேணும் பிள்ளை. நோகா மல் கொள்ளாமல் இருக்க சம்பா நல் லாத்தான் இருக்கும். பொம்மை மாதிரி படத்துக்கு அது சரி. நொந்தெல்லா பெற வேணும். அழுதும் பிள்ளை அவள்தான் பெறவேணும். அதை யோசித்து நடந்து கொள்” என்று நெருடினாள் பறுவதம்.

“சரி சரி போய் சீக்கிரம் வரட்டும். உவ ளுக்குப் போய் பிரசங்கம் செய்து கொண் டிருக்க உனக்கு வெட்கம் இல்லையா! பறுவதம் உன்ரை காலம் என்ரை காலம் வேறை. இப்ப ஒரு மாதம் வாழ்ந்தால் போதும். அப்பிடியெல்லே உலகம் போகுது. பிறகு டிவோஸ்! சரி சரி பறுவதம் உலையை வைச்சு குத்தரிசியைப் போடு. இண் டைக்காவது குத்தரிசிச்சோறு சாப்பிடுவம்.” என முறுக்கினார் மயிலர்.

“எங்கையாவது இரண்டு உலை வைக் கிறவையே! எங்கன்ரை வீட்டிலதான் அப்படி நடக்குது. இரண்டு உலை வச்சால் என்ன நடக்கும். சொல்லட்டே. குடும்பங்கள் இரண்டாப் பிரியும் பாருங்கோ. மொட்டைக் கறுப்பன் அரிசி போட்டால் ஒண்டரை மணித் தியாலத்தில வேகும். அந்தக்கஞ்சி குடிக்க வேணும். ஆயுள் நூறு பாருங்கோ. அவளுக்குப் பிடிக்குதோ இல்லையோ இரவைக்கும் சோறுதான்” முடிவாக் கினாள் பறுவதம்.

“பறுவதம்! பயறும், வறையும், கீரையும் வைச்சு வாழையிலையிலை போட்டு சாப்பிட்டால் எப்படி இருக்கும்?” மயில ரின் கற்பனை.

“இந்தளவு வயசு வந்தும் ஆசை உங்களை விட்டபாடில்லை. குத்தரி யின்ரை குணம் அதுதான். இரத்தப் பிடிப்போடை வைத்திருக்குமெல்லே! பிள்ளைத்தாச்சிகளுக்கு அந்த மாதிரி. வயித்துக்குத்துத் தொடங்கின உடனை பிள்ளை பிறக்கும். அடுத்தநாள் வீடு. இப்பத்த பிள்ளைகளுக்கு வெட்டுக் கொத்து. கொஞ்சநஞ்சமே. அது முடிஞ்சு பிள்ளைக்கு பால் மா பைக்கற் வாங்க பிறிம்பா உழைக்க வேணும். பக்கத்து வீட்டு வாத்தியாற்றை பிள்ளை பட்டபாடு எனக்கல்லோ தெரியும். அது களுக்கு குத்தரிசியெண்டால் தொண்டை யாலை இறங்காதாம். தாயும் அப்படி. பிள்ளையளும் அப்படி. தகப்பனுக்கு மட்டும் குத்தரிசிக்கு மட்டும் உலை வைப்பினையாம். அந்த ஆளையும் இதுகள் மாத்தலாம் எண்டு இருக்கினம். அந்த ஆள் செத்தாலும் சாப்பிடாது. அந்த வாத்தியார் இலங்கையிலை எல்லா இடமும் வேலை செய்து வெள் ளையரிசி படுத்தினபாடு அந்த ஆளுக் கெல்லோ தெரியும். வெள்ளையரி சிலை என்ன கிடக்குது என்று சாப்பிடுது களோ தெரியேல்ல. குளிர்நாடே யாழ்ப்பாணம். கொதிக்குதப்பா. குஞ்சு குருமன்களுக்கும் கொடுத்தெல்லே பழக்கிப்போட்டுதுகள். வாத்தியாரைப் பார்த்தியளே. அந்தாள் சந்நிதிக்கு, கிழ மைக்கு கிழமை போய் கும்பிட்டெல்லே வாறார். அந்த ஆளுக்கு வெள்ளை அரி சியை கண்ணிலை காட்டேலாது. நாடகம் எண்டால் காணும். குத்தரிசியை அடுப் பிலை போட்டிட்டு நாடகம் பார்க்கலாமோ? குத்தரிசிக்கு அடுப்பு வேணும். விறகு வேணும். ஊதவேணும். கரி பிடிக்கும். கழுவவேணும். எல்லாம் நடக்கிற காரி யமே.” பொரிந்து தள்ளினாள் பறுவதம்.

“பறுவதம்! பிள்ளை வரப்போறாள். அவிஞ் சிட்டுதே பார் பார். யாரோ படலையிலை பறைஞ்சு கேட்குது போல கிடக்கு. யாரெண்டு பார். பொம்பிளைப் பிள்ளை யின்ரை குரல் போல கிடக்குது.

“பாட்டி! பாட்டி! நாயைப் பிடியுங்கோ!” ஜானகி குழறினாள். “அது கடிக்காது பிள்ளை. பயப்படாமல் நடந்து வா பிள்ளை.”

“பாட்டி! அம்மா அரிசியிருந்தா வாங் கிக்கொண்டு வரச்சொன்னவா” என்று தயங்கினாள் ஜானகி.

“சம்பா அரிசியோ! குத்தரிசியோ”! பரீட் சித்தாள்......! பறுவதம்

“சம்பா அரிசிச்சோறு நாங்கள் சாப்பிட மாட்டம் பாட்டி! பொம்பிளைப்பிள்ளையள் சம்பா அரிசிச்சோறு சாப்பிட்டால் குடும் பங்கள் அம்போ என்று விருத்தியடை யாதாம். அப்பிடி இப்பிடியென்று அலங் கோலமாய் போய்விடுமாம்” என்றாள் ஜானகி.

“சரியாய்ச் சொன்னாயடி எங்கன்ரை பெட்டையளுக்கு விளங்குதில்லையே. அதுகளைப் பார்த்தால் பொம்பிளைப் பிள்ளையள் மாதிரியே இருக்கு. ஆம் பிளைப் பிள்ளையள் தோற்றுப் போய் விடுங்கள். உன்ரை கொம்மா ‘வலே கெட்டிக்காரி’ என்ன கஷ்டம் வந்தாலும் வெள்ளைச்சோறு காய்ச்சவே மாட்டாள். சரி சரி கெதியாய் கொண்டுபோய்க் கொடு பிள்ளை.

“ஏன்டி பிள்ளை இவ்வளவு நேரம்? உலை நல்லா கொதிச்சிட்டுது. ஓடி வா” என்றாள் சரசுவதி.

“இது மொட்டைக் கறுப்பனாம். புழுங்கலரி சியாம். கையால குத்தினதாம். சாப்பிட்டுப் பார்க்கட்டாம். குத்தரிசி சாப்பிட்டால் எல்லாம் குறைவில்லாமல் நிறைவேறு மாம்” என்றாள் ஜானகி.

“உங்களுக்கு எங்கை விளங்கப்போகுது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக் களப்பு, முல்லைத்தீவு எல்லாமே குத்தரிசி உலைதான். எப்பிடி எப்பிடியெல்லாம் கொடி கட்டிப்பறந்த இடங்கள். எப்ப வெள்ளை அரிசி வந்ததோ அன்றி லிருந்து எல்லாமே போய்ச்சுது. எங் கன்ரை மண்ணிலிருந்து பிறந்த அத்தனை ஜீவன்களுக் கும் இரத்தப்பிடிப்புத் தருவது குத்தரிசிச்சோறு. அதாலே தான் அதற்கு நாடு என்று வைத்தனர்.

அதிலை இருக்கிற தைரியம், அமைதி, பக்குவம், பண்பு, வீரம் மற்ற எந்த அரிசியிலும் வராதுபிள்ளை. அந்தக் கஞ்சி, அந்தப் பழஞ்சோறு.......... என்னத்தைச் சொல்ல.” என்று வாயூறினாள் சரஸ்வதி.

“அம்மா! எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கு. உங்களைப்போல ஒரு அம்மா எங்களுக்குக் கிடைக்க நாம் என்ன தவம்

(12 ஆம் பக்கம் பார்க்க)



# எல்லாமே போய்ச்சுது

## தொடர்ச்சி

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

செய்தோமோ! அம்மா என்னோடை படிக்கிற பிள்ளையள் எல்லாம் என்னைப் பார்த்து ஆசைப்பட்டு கிள்ளிப்பார்க்கிறவை. ஏனென்டால் நான் கறுப்பெண்டாலும் அவ்வளவு வடிவாம். என்ரை பல்லு அப்படியாம். எனக்கு பொட்டுவாம்.பொட்டுக்கு நான் வடிவாம். பின்னலைக் காட்டாமல் மடிச்சுக்கட்டச் சொல்லுங்கள். ஏனெண்டால், கூந்தலை நீட்டினால் குடும்பம் பாழாகுமாம். அப்படியேம்மா!"

பிள்ளை! உனக்கு இப்ப விளங்கிற வயசெல்லே! குத்தரிசி தன்னை யாரென்று வெளிக் காட்டாமல் பக்குவமாக இருக்குமடி. தவிட்டுப் பிடிப்போடை, சாப்பிட்டால் கேட்டவரம் கிடைக்கிற மாதிரியிருக்கும். உனக்கு என்னகுறை? அப்பாவுக்கு என்ன குறை? எங்களுக்கு என்ன குறை? குத் தரிசியை எப்ப நாங்கள் கைவிட்டோமோ அண்டிலிருந்து இந்த நாட்டுக்குப் பிடிச்ச சனியன் எப்பதான் தீரப்போகுதோ? எல்லாமே தலைகீழாப் போய்ச்சுது. ஆன்மிகத்திலை தோய்ஞ்சு வளர்ந்த மண், அவலங்களாக மாறிவிட்டுது. கலியாண வீடுகளிலும் வெள்ளையரிசி எண்டால் வாழ்க்கை எப்படியிருக்கும்? எங்கன்ரை நாட்டுக்க உகந்ததென தெய்வம் தந்த அரிசிதான் குத்தரிசி. பொன் போல அந்த அரிசியை இனியார்தான் அனுபவிப்பார்கள்?

சரசுவதியின் வீட்டு உலையும், பறுவதம் வீட்டு உலையும் வேகமாகக் கொதிக்கவும் குத்தரிசி பதமாய் அவியமும் சரியாக இருந்தது.

அதேநேரத்தில் ஜானகியின் வீடு குத்தரிசி சோற்றினால் வரமாகியது. யாழினியின் வீடு சம்பாவினால் அசம்பாதவிதமானது.

"அம்மா! சோறு அந்தமாதிரி மொட்டக்கறுப்பன் சோறு சும்மாவே சாப்பிடலாம் போல கிடக்குதம்மா. மணம் குணம் நல்லாயிருக்கம்மா."

ஜானகியின் உடம்பில் இரத்தம் ஊறியது.

"அம்மா!....... அம்மா......... அம்மோ" – யாழினியின் குரல்.

"யாழினி!........... யாழினி!......... என்னடி! ஏனடி ஒரு மாதிரியா வாறாயடி! என்ன செய்யுது. பொறு பொறு அப்படியே இரம்மா. தலையைச் சுத்துதே பிள்ளை!" துடிதுடித்தது பெத்த வயிறு.

"அம்மா! ஏதோ செய்யுதம்மா! என்ன செய்யுதென்று சொல்லத் தெரியேல்ல" அனுங்கினாள் யாழினி. சிணுங்கினாள், மயங்கினாள்.

"கலியாணங்கட்டிற வயதில உனக்கு எல்லாமே குழப்பமாகத்தானிருக்கு, கடைச்சாப்பாடு ஏதோ நல்லதென்று வெள்ளையரிசியோடை சீவனை வளர்க்கிறியளே! மூளை, படிப்புக் கூடினாலும் உப்பிடி வருத்தங்கள் வந்தே தீரும். குத்தரிசி கஞ்சி கொஞ்சம் குடியன்ரி. சுகமாக இருக்குமடி" பறுவதம் கெஞ்சினாள்.

"வேண்டாம் என்றாள் யாழினி!

"பறுவதம்! நீ பகிடி விளையாட்டாய் நினைக்காதை. உவளுக்கு நெடுக உப்பிடி வாறபடியால் வைச்சுக் கொண்டிருக்காதை. கொண்டுபோய்க் காட்டவேணும்." மயிலர் தன்னை நியாயப் படுத்தினார்.

"பொம்பிளைப்பிள்ளையள் என்னமாதிரி இருக்குதுகள். நீங்கள் என்னடாவென்றால் செத்தேன் சிவனேயென்று இருக்கிறியள். இண்டைக்கு எப்பிடியெண்டாலும் டொக்கரிட்டை காட்டியே தீர வேண்டும். இஞ்சருங்கோ, போட்டுச் சாப்பிடுங்கோ. இவளை ஒருக்கால் கூட்டிக்கொண்டு போய்க் காட்டிக்கொண்டு வாறன்" பறுவதம் நிதானமானாள்.

"சரி சரி போயிட்டு வாங்கோ! கவனம்! காசு எடுத்திட்டியளே!" விடைகொடுத்தார் மயிலர்.

ஸ்கானிங்க செய்துகொண்டு முடிவாக்கிய டாக்டர், மகரகம வைத்தியசாலையின் அத்தனைகேள்விகளுக்கும் விடையளித்து,கையொப்பம் இட்டு.

"அம்மா! பயப்படவேண்டாம். நாளைக்கு அம்புலன்ஸ் கொழும்புக்கு போகப் போகுது. மகளைக் கூட்டிக்கொண்டுபோய் காட்டிக்கொண்டு வாங்கோ."

"பறுவதம், அஞ்சும் கெட்டு, அறிவும் கெட்டு யாழினையைக் கண்ணீரால் நனைத்தாள். யாழினியின் வயிறு புண்ணாகியது. யாழினியின் வயிறு மட்டுமா புண்! இல்லை! எத்தனை யாழினிகள்! புண்ணாகிப், பூவாகி, படமாகி.!

*யாவும் கற்பனை*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 363

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | |
| | ■ | 6 | | | | | ■ |
| 7 | 8 | | | ■ | 9 | | 10 |
| 11 | | | ■ | 12 | | ■ | |
| ■ | | ■ | 13 | | ■ | 14 | |
| 15 | | 16 | | ■ | 17 | | |
| | ■ | 18 | | 19 | | | |
| 20 | | | ■ | 21 | | | ■ |

அனுப்புபவர் பெயர்:……………………………………

பூரணமாக தபால் விலாசம்: ……………………………………

……………………………………

கையொப்பம்:……………………………………

### இடமிருந்து வலம்

1. சொந்தத் தேசம் இல்லாதவன்
4. நலம்
6. வான் வெளியில் கீதமிசைத்து அலையும் பறவை
7. நாவிதனின் பணிகளுள் ஒன்று
9. கலியாணம்
11. அதிகமாகும்
12. இணக்கச் சொல்
13. கூந்தல்
14. இடம்
15. உயர்ந்தது. கோவில்களுடன் தொடர்புபட்டது
17. பதிவைத்தல் முறை
18. நாடாளுமன்றத் தலைவர்
20. இதை இதனால் தான் அறுக்க வேண்டுமாம்
21. சிறிய

### மேலிருந்து கீழ்

1. ஐந்தாம் திதி
2. சைவ நாயன்மார்கள் பாடியது
3. கோபம்
4. இயல்பு
5. கடுமையானது
8. 'தரம' 'ஆண்டு' என்ற பதங்களில் அழைக்கப்படுவது
10. மருத்துவர்
12. உடுப்பு
13. ஓர் அரிசிவகை
14. பத்துப் பாடல்கள் கொண்டது
15. சேர்த்துக் கட்டியதால் வருவது
16. கண்ணாடியின் ஒரு பக்கத்தில் பூசப்படும் சிவப்புநிற ரசாயனக் கலவை
17. ஒரு தானியம்
19. இளம் கன்று (பெண்)

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 361 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) மதிப்பு (4) பதவி (6) கறை (7) வசதி (9) கனதி (10) அலை (11) துவரம் (13) நேரு (14) வடம் (15) இரும்பு (17) பதியம் (19) முற்றல் (20) சய (21) நன்று (22) புளுகன்

**மேலிருந்து கீழ்**

(1) மகத்துவம் (2) திறை (3) புவனம் (4) பதி (5) இல்லை (8) சதி (9) கரம்பற்று (10) அரும் (12) வட (13) நேரும் (15) இயல்பு (16) புடையன் (18) திற (19) முன் (20) சக

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 361 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**

**கமலேஸ்வரன் தனசன்,**
யா/அச்சுவேலி
சரஸ்வதி வித்தியாசாலை,
அச்சுவேலி.

**2 ஆம் பரிசு**

**நா.முருகதாசன்,**
முத்தட்டு மட வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

**3 ஆம் பரிசு**

**த.சுகந்தி,**
பிரதானவீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

**4 ஆம் பரிசு**

**திருமதி த.ஸ்ரீரஞ்சினி**
மகாத்மா வீதி,
ஐயனார் கோவிலடி,
நெல்லியடி, கரவெட்டி.

**5 ஆம் பரிசு**

**கு.வேகாவனம்,**
3 ஆம் வட்டாரம், முள்ளியவளை,
முல்லைத்தீவு.

**பாராட்டுப் பெறுவோர்**

**வினோதன் சுகந்தி,**
முதலாம் வட்டாரம்,
முள்ளியவளை.

**ஜெ.சாரதா,**
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

**வ.ஆறுமுகம்,**
சிவன் வீதி,
ஆவரங்கால்.

## போட்டி விதிகள்

**1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.**
**2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்**
**3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.**
**4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.**
**5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.**

சொற்சிலம்பம் போட்டி
இல.363
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(15.04.2015 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.363 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 19.04.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி 361 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.



# உதடுகளைப் பராமரிக்க சில ஆலோசனைகள்....

தினசரி பெற்றோலியம் ஜெல்லியை உதடுகளில் தடவி வந்தால் உதடுகள் மென்மையாக மாறும். வாரம் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு உதடுகளை வெதுவெதுப்பான மற்றும் குளிர்ந்த தண்ணீரால் ஒத்தடம் கொடுத்து வந்தால் அவை ரோஜா போல மென்மையாக மாறும்.

உதடுகளைக் கடிக்கும் பழக்கம் சிலருக்கு உண்டு. அது தவிர்க்கப்பட வேண்டிய பழக்கம். அதனால் உதடுகள் வறண்டு போகவும், நிறம் மாறி அசிங்கமாகக் காட்சியளிக்கவும் கூடும். மற்றவர்கள் உபயோகிக்கும் லிப்ஸ்டிக்குகளைப் பகிர்ந்து கொள்ளக் கூடாது. அதனால் தொற்றுக் கிருமிகள் பரவ வாய்ப்புண்டு இப்போது மேட் பினிஷ் லிப்ஸ்டிக்குகள் மிகவும் பிரபலம். அவற்றில் ஈரப்பதம் குறைவு என்பதால் உதடுகளில் உள்ள இயற்கையான எண்ணெய்களை அழித்து விடும். இரவு படுக்கச் செல்வதற்கு முன்பாக உதடுகளில் உள்ள லிப்ஸ்டிக்கை சுத்தமாக அகற்றி விட வேண்டியது மிக முக்கியம்.

முட்டையின் வெள்ளைக் கருவோடு தேன் கலந்து உதடுகளில் தடவி வந்தால் அவை அழகு பெறும்.தினமும் நெய் அல்லது வெண்ணெயை உதடுகளில் தடவி வர, அவற்றில் உள்ள வெடிப்புகள் நீங்கி, உதடுகள் வழவழப்பாகும்.முட்டையின் வெள்ளைக் கருவோடு அரை தேக்கரண்டி பாதாம் பவுடரைக் கலந்து, அத்துடன் கொஞ்சம் பாலாடையையும் சேர்த்து உதடுகளில் தடவி வர, வறண்ட உதடுகள் குணமாகும்.

இரண்டு தேக்கரண்டி ஒலீவ் என்ணெயுடன் இரண்டு கிராம் தேன் மெழுகும், பன்னீரும் கலந்து உதடுகளில் தடவி வந்தால் அவை சிவப்பாகவும், மென்மையாகவும்மாறும். கொத்தமல்லிச் சாற்றை உதடுகளில் தினமும் தடவி வந்தால் அவை இயற்கையிலேயே சிவப்பு நிறத்தைப் பெறும்.



# மட்டன் வடை

*இதுவரை மட்டனைக் கொண்டு குழம்பு, குருமா, வறுவல், என்று செய்து சுவைத்திருக்கலாம். ஆனால் மட்டன் வடை செய்து சுவைத்ததுண்டா? மட்டனைக் கொண்டும் வடை செய்யலாம். மேலும் மட்டன் வடையானது அனைவரும் விரும்பிச் சாப்பிடும் வண்ணம் சுவையாக இருக்கும். இப்போது அந்த மட்டன் வடையை எப்படி செய்வதென்று பார்ப்போமா!*

**தேவையான பொருள்கள்**

மட்டன் – 100 கிரா ம்,
மிளகு – ஒரு தேக்க ண்டி,
சீரகம் – 2 1/2 தேக்கரண்டி,
உப்பு – தேவையான அளவு,
நல்லெண்ணெய் – பொரிப்பதற்கு தேவையான அளவு.

**செய்முறை**

முதலில் மட்டனை சிறு துண்டுகளாக வெட்டி, ஒரு பாத்திரத்தில் போட்டு, அதில் மிளகு, சீரகம் ஆகியவற்றை போட்டு ஒரு குவளை தண்ணீர் ஊற்றி, அடுப்பில் வைத்து வேக வைக்க வேண்டும். மட்டன் நன்கு வெந்த பின்னர், மட்டனில் தண்ணீர் அதிகம் இருந்தால், தண்ணீர் சுண்டும் வரை அடுப்பில் வைத்து, பின் இறக்கி, குளிர வைக்க வேண்டும். பின்பு வெந்த மட்டனை மிக்ஸியில் போட்டு, தேவையான அளவு உப்பு சேர்த்து, அரைத்துக் கொள்ள வேண்டும். இறுதியில் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் பொரிப்பதற்கு தேவையான அளவு எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், அரைத்து வைத்துள்ள மட்டனை வடை போல் தட்டி, எண்ணெயில் போட்டு, பொன்னிறமாக பொரித்து எடுத்தால், மட்டன் வடை தயார்.



# முன் தொடை வார்ம் அப் பயிற்சி



பயிற்சிகள் ஐஸோடானிக், ஐஸோமெட்ரிக் என்று இரு வகைக ளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பயிற்சியின்போது குறிப்பிட்ட நிலையில் நிறுத்தி, ஒரு சில தசைகளுக்கு இறுக்கம் தந்து வலு சேர்ப்பது ஐஸோமெட்ரிக். இது முன் தொடையை வலிமையாக்கும். தசைக்கும் மூட்டுக்கும் தொடச்சியாக அசைவு கொடுத்து வந்தால் அது ஐஸோடானிக். இது பின் தொடையை வலுப்படுத்தும். இந்தப் பயிற்சிகளை சாப்பிட்ட ஒன்றரை மணி நேரத்துக்குப் பிறகு செய்வதே நல்லது. காரணம், உணவுக்குப் பின்பு ஒன்றரை மணி நேரம் வரை எமது உடல் உணவைச் செரிக்கவே முக்கியத்துவம் கொடுக்கும். விரிப்பில் நேராக நிற்க வேண்டும். வலது முழங்காலைப் பின்புறம் மடக்கி, வலது கையால் கணுக்காலைப் பிடித்தபடி 10 - 30 நொடிகள் அப்ப டியே நிற்க வேண்டும். தேவைப்பட்டால், மற்றொரு கையை சுவரில் ஊன்றிக்கொள்ளலாம் இடது, வலது காலுக்கு என முறையே 5 - 10 தடவை செய்ய வேண்டும். ஆரம்பத்தில் ஒற்றை காலில் நிற்பது சற்று கடினமாக இருக்கும். அப்போது சுவற்றை பிடித்து கொள்ளலாம். நன்றாகப் பழகிய பின்னர் சுவற்றை பிடிக்காமல் செய்ய வேண்டும். இந்தப் பயிற்சிகளை இடது, வலது என இரண்டு பக்கமும் செய்ய வேண்டும்.

# பொடுகை நீக்கி, இளநரையை தடுக்கும் வெந்தயம்





வெந்தயத்தை இரவு முழுவதும் நீர்விட்டு ஊற வைத்து காலையில் மைய அரைத்து வைத்துக் கொண்டு அதனோடு சிறிது தயிர் சேர்த்து நன்கு குழைத்து தலை முடிக்கும் தலையின் மேற்புறத்தும் தடவி நன்றாக மசாஜ் செய்து வைத்திருந்து 20 நிமிடங்களுக்குப் பின்னர் தலைக்கு குளிக்க பொடுகுகள் போகும்.

வெந்தயத்தை இரவு ஊற வைத்து காலையில் முகத்துக்கு தடவி வைத்திருந்து குளித்து விடுவதால் முகத்தில் உள்ள மருக்கள், கரும்புள்ளிகள், தழும்புகள் மறைந்து போகும். முகப்பருக்களும் குணமாகும்.

வெந்தயத்தோடு தேன் சேர்த்து முகப்பருக்களின் மீது பூசி வைத்திருந்து இளஞ்சூடான நீரில் கழுவி வர முகப் பருக்கள் குணமாகும்.

வெந்தயம் ஒரு கைப்பிடி அளவு எடுத்து அதனோடு 4 கப் நீர் ஊற்றி அடுப்பிலிட்டு 15 நிமிடங்கள் காய்ச்சி எடுத்து ஆற வைத்து வடிகட்டி வைத்துக் கொண்டு தினம் 2 முறை முகத்தைக் கழுவுவதற்கு உபயோகித் தால் முகத்துக்கு நல்ல வனப்பையும், சுருக்கங்களை நீக்கி நல்ல மென் மையும்பொன் வண்ணத்தையும் தரும். முடி கொட்டுகிற பிரச்சனைக்கு வெந்தயம் மிகச் சிறந்த நிவாரணி. முடி கொட்டுதல்,பொடுகு, தலை வழுக்கை, முடி மெல்லியதாக ஆகுதல் ஆகியவற்றுக்கு வெந்தயத்தை தாராளமாக உணவில் சேர்த்து கொள்வதோடு ஊற வைத்து அரைத்து தலைக்கு தடவி வைத்திருந்து குளிப்பதால் நல்ல பலன் கிடைக்கும்.

வெந்தயம் இளநரையையும் போக்ககூடிய நன்மருந்தாகும். கைப்பிடி அளவு வெந்தயத்தை 300மி.லி தேங்காய் எண்ணெயில் இட்டு கொதிக்க வைத்து எடுத்து வடிகட்டி இளஞ்சூட்டோடு தலைக் குத் தேய்த்து நன்கு மசாஜ் செய்து வர இளநரையைத் தடுத்து நிறுத்தும். எண்ணெய் இரவு முழுவதும் தலையில் ஊறும்படி வைக்கிருந்து காலையில்குளிக்க வேண்டும்.



## கதைப்பாடல்

முத்து என்ற ஒரு சிறுவன்
மூன்றாம் வகுப்பில் படித்து வந்தான்
முத்து முத்தாய் எழுதிடுவான்
முயன்று நன்கு படித்திடுவான்

ஆசிரியர் சொல் கேட்டிடுவான்
அதிக மதிப்பெண் வாங்கிடுவான்!
பாசத்தோடு பழகிடுவான்
பண்பில் சிறந்து விளங்கிடுவான்!

அப்பா அம்மா சொற்கேட்டு
அடங்கிப் பணிவாய் நடந்திடுவான்!
தப்புகள் செய்யத் தயங்கிடுவான்
தீயவர் நட்பை வெறுத்திடுவான்

பாட்டும் நன்றாய்ப் பாடிடுவான்!
படங்கள் அழகாய் வரைந்திடுவான்!
போட்டியில் வெற்றி பெற்றிடுவான்!
பரிசுகள் வாங்கிக் குவித்திடுவான்!

தூய்மையான சீருடையை
தினமும் அணிந்து வந்திடுவான்!
வாய்மை மட்டும் பேசிடுவான்!
வாக்கில் இனிமை காட்டிடுவான்!

இருக்கும் பொருளை பிறருக்கு
இவனும் கொடுத்து மகிழ்ந்திடுவான்!
உருவில் சிறியவன் என்றாலும்
உள்ளம் மிகவும் பெரிதாகும்!

தினமும் பள்ளி செல்வதுபோல்
சென்ற முத்துவும் ஓர்நாளில்
மனதை வருத்தும் காட்சியொன்றை
மருட்சியோடு பார்த்திட்டான்!

பள்ளம் மேடு இருப்பதனைப்
பார்த்திட இரண்டு விழியின்றி
தள்ளாத வயது முதியவரும்
தடியை ஊன்றி நடந்துவந்தார்!

கால்கள் இரண்டும் தடுமாறி
கண்கள் இல்லா முதியவரும்
சாலை ஓரம் கல்லொன்று
தடுக்கிக் கீழே விழுந்திட்டார்...


மயங்கிக் கிடந்த முதியவரை
முத்து பார்த்து கலங்கிட்டான்
பயத்துடன் அருகில் சென்றவனும்
பரிவாய் அவரின் உடல்தடவி

முகத்தில் தண்ணீர் தெளித்திட்டான்
மயக்கம் தெளிய வைத்திட்டான்
பகலும் இரவும் தெரியாத
பெரியவர் பார்த்தார் மனக்கண்ணால்!

பருகிடத் தண்ணீர் தந்திட்டான்
பாசமாய்த் தாத்தா என்றழைத்தான்
அரச மருத்துவமனையொன்றில்
அவரைக் கொண்டு சேர்த்திட்டான்

முத்துவைப் பேரா என்றழைத்து
முகமும் மலர வாழ்த்திட்டார்!
எத்தனை பேர்தான் இங்குண்டு
இதைப்போல் உதவி செய்திடவே!

முத்துவைப் போல வாழ்ந்திடணும்
மற்றவர் துன்பம் கண்டவுடன்
விரைந்து உதவி செய்திடணும்
மனதில் நிம்மதி பெற்றிடணும்!




## வினோத கடல்பஞ்சு

ரெட் ஸ்பாஞ்ச் என்று அழைக்கப்படும் கடற்பஞ்சு ஒரு வினோதமான ஜீவராசியாகும். தண்ணீரை வடிகட்டுவதுபோல துணியின் வழியே இதனைச் செலுத்தினால் அதன் நுண்துளைகள் வழியே பலநூறு துண்டுகளாகப் பிரிந்து சென்றுவிடும். ஆனால் அது இறந்து போவதில்லை. பின்னர் உடைந்த எல்லா பகுதிகளும் பழைய வடிவத்தில் ஒன்று சேர்ந்து தொடர்ந்து வாழும்.

## பருந்து காட்டிய பாதை!

மன்னர் ஒருவர் தம் பரிவாரங்களுடன் வேட்டைக்குச் சென்றார். அப்பொழுது வானில் ஒரு வியப்பூட்டும் காட்சி தென்பட்டது. ஒரு பருந்து இறைச்சித் துண்டைக் கவ்வியவாறே வேகமாகப் பறந்து கொண்டிருந்தது. இறைச்சியைப் பறிப்பதற்கு பல பறவைகள் அந்தப் பருந்தைத் தாக்கியவாறு பின் தொடர்ந்தன. எங்கெங்கோ பாய்ந்து பறந்தும் பருந்தால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. இறைச்சித் துண்டைக் கீழே நழுவவிட்டது. உடனே வேறொரு பறவை அதனைக் கவ்விக்கொண்டது. எல்லாப் பற வைகளும் பருந்தைவிட்டுவிட்டு இறைச்சித் துண்டைக் கவ்



விய பறவையைத் தாக்க ஆரம்பித்தன. மீண்டும் விண்ணிலே பறவைகளின் போர்; இறைச்சியை நழுவவிட்ட பருந்தோ நிம்மதியாகப் பறந்தது. மன்னரின் மனதில் தெளிவு பிறந்தது! இறைச்சித் துண்டைப் பற்றியிருந்த பறவைத் தாக்கப்படுவதைப்போல உலகப் பொருள்களின் மீது பற்று வைத்திருப்பவர்களையே துன்பம் தாக்கு கிறது. இறைச்சியை விட்டுவிட்ட பருந்து நிம்மதியாகப் பறப்பதைப்போல உலகப் பற்றை விட்டு விட்டவர்கள் மன நிம்மதி அடைகின்றனர். இதுவே உலக நியதி. என்று உள் மனம் அவருக்கு குருவாய் நின்று உணர்த்தியது.

## விடுகதைகள்

1. அடி மேல் அடி வாங்குவான். ஆனால் அனைவரையும் தலை யாட்ட வைப்பான்... இவன் யார்?
2. அடித்து நொறுக்கி அனலில் போட்டால் ஆவியாகத் தோன்றி கமகமக்கும்.இது என்ன?
3. அச்சு இல்லாத சக்கரம்... அழகு கூட்டும் சக்கரம்... இது என்ன?
4. அறிவின் மறுபெயர்... இரவில் வருவது. இது என்ன?
5. தாழ்ப்பாள் இல்லாத கதவு... தானாக மூடித் திறக்கும் கதவு... இது என்ன?
6. வெள்ளிக் கிண்ணத்திற்குள் கிடக்குது தங்கக் காசு... இது என்ன?
7. டாக்டர் வந்தாரு... ஊசி போட்டாரு... காசு வாங்காமல் போனாரு... யார் இந்த டாக்டர்?
8. உயிர் இல்லாத நீதிவானிடம், ஒழுங்கான நியாயம்... இது என்ன?
9. இரு கொம்புகள் உண்டு, மாடு அல்ல... வேகமாக ஓடும் மான் அல்ல... இது என்ன?

விடைகள்:

1. மிருதங்கம்
2. சாம்பிராணி
3. வளையல்
4. மதி (நிலா)
5. கண் இமை
6. முட்டை
7. நுளம்பு
8. தராசு
9. சைக்கிள்

## எப்போதும் சாப்பிடும் பிராணிகள்

எலிகள், எறும்புகள் போன்றன நாம் பார்க்கும்போதெல்லாம் எதையாவது சாப்பிட்டுக் கொண்டும் அல்லது சாப்பிடும் உணவை தூக்கிக் கொண்டும் திரிவதைக் காணலாம். ஆனால் பெரிய மிருகங்கள் அதுபோல இருப்பதைக் காண முடியாது. ஏன் தெரியுமா?...




ஒவ்வொரு பிராணியின் உடல் அளவோடு, அதன் சக்தியை கிரகிக்கும் உடல் கூறு அமைப்புக்கு தொடர்பு இருக்கிறது. சிறிய பிராணிகளின் உடலில் சீக்கிரமாகவே சக்தி வீணாகி விடுகிறது. எனவே சாப்பிடும் உணவு சீக்கிரமாக சமிபாடடைந்து சக்தியாக மாற்றப்பட்டுக் கொண்டே இருக்கிறது. அவைகளும் அவ்வப்போது சாப்பிட்டுத் தங்கள் உடலில் சக்தியை ஏற்றிக் கொள் கின்றன. உதாரணமாக ஷ்ரு என்ற சுண்டெலியும், ரீங்காரமிடும் ஹம்மிங் பறவையும் கொஞ்ச நேரத்துக்கு ஒருமுறை சாப்பிட்டுக் கொண்டே இருக்கும். சில மணி நேரங்கள் சாப்பிடாமல் இருந்தாலே அவை சோர்ந்து விழுந்து இறந்துவிடக் கூடும். ஆனால் பெரிய மிருகங்கள் பல நாள்கள் பட்டினி கிடந்தாலும் தேவையான சக்தி அதன் உடலில் சேமிக்கப்பட்டு இருக்கும் என்பது குறிப்பிடத் தக்கது.



15
05.04.2015
சூரியகாந்தி
ஞாயிறு சிறப்பிதழ்

# மேட்டு நிலத்து ஊற்று




தேவி பரமலிங்கம்

**"கணேஸ்... என்ர உள்ளத்தில் உங்களொருவரைத் தவிர இன்னொருவருக்கு இடமில்லை. வேறு நிலைமை ஏற்பட்டா இந்த வாழ்க்கையை வெறுத்து விடமாட் டன்... வாழ்வதற்காகத் துணிந்து விடுவேன்"**

உணர்ச்சி மேலிட கணேசன், எதனையோ கற்பனை செய்து கேட்டது பாமாவுக்குச் சிரிப்பையே வரவழைத்தது. கட்டுடல் குலுங்கச் சிரித்தும் விட்டாள். அந்த அழகில் நிலைத்த பார்வையை மீட்ட கணேசன் சொன்னான்.

"ஏன் பாமா சிரிக்கிறாய்... உனக்கு நான் கேட்டது சிரிப்பாவா இருக்கு....."

"இல்லைக் கணேஸ்... இவ்வளவு நாங்க பழகியும்... இந்தக் கேள்வி அவசியமா... அதை நினைச்சன் சிரிப்பு வந்திட்டுது..."

உள்ளத்தில் பட்டதை ஒளிக்காமல் பட்டென்று சொன்னாள் பாமா. அவளது விழிகள் கணேசனின் நயனங்களை நேரில் சந்திக்க அஞ்சினவாய் பட்டாம் பூச்சியாய் எங்கெங்கோ சிறகடித்துக் கொண்டதை இரசித்தவனாய் மேலும் கணேசன் சொன்னான்.

"பாமா நாங்கரெண்டு பேரும் ஒருவரை ஒருவர் வடிவாப் புரிஞ்சு கொள்ளுற அளவுக்கு இன்னும் கதைக்கேல்லை... அதனாலே அப்புடிக் கேட்டன்... அதை வடிவாக் கதைக்க இண்டைக்கு வாய்ப்புக் கிடைச்சிருக்கேக்கதான் கதைக்கலாம். "நின்ற பேச்சை நிறுத்தி, சிறிது ஓய்ந்தான் கணேசன்.

"ஓமோம்... முதல்ல காதல் உணர்வுகளுக்கு அடிமையான போது... சந்தித்த முதலாள் நீங்க. எந்த விதமான இடையூறும் இல்லாமல் பெற்றவர்களே என்னை உங்களோட சேர்த்து விடேக்க இனி என்ன தடை வரப்போகுது..."

"அப்புடிச் சொல்லாதை பாமா. இனியுங் கூட தடங்கல் வரலாம். அப்பவெல்லாம் நீ உறுதியாய் இருப்பியா எண்டே அஞ்சுறேன்...."

பாமாவின் பேச்சைக் கேட்டு கணேசன் இவ்விதம் சொன்னது அவளுக்கும் நியாயமாகப்பட்டது.

"கணேஸ்... என்ர உள்ளத்தில் உங்களொருவதைத் தவிர இன்னொருவருக்கு இடமில்லை. வேறு நிலைமை ஏற்பட்டா இந்த வாழ்க்கையை வெறுத்து விடமாட்டன்... வாழ்வதற்காகத் துணிந்து விடுவேன்"

உணர்ச்சி வசப்பட்டு பாமா சொன்னவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த கணேசனுக்கு அவளை அப்படியே வாரி எடுத்து அணைத்துக் கொள்ள வேண்டும் போல் தோன்றியது. அதையவன் அப்போ செய்யத்துணியவில்லை. கீழ்வானம் வெளுத்து வந்தது!

கொழும்பு நகருக்கே உரிய கலகலப்பு, அதிகாலையிலேயே ஆரம்பித்து விட்டதை; படுக்கையால் விழித்த கணேசன் உணர்ந்தான், என்பதிலும் அச்சந்தடிதான் அவனைத் தட்டி எழுப்பி விட்டது என்பதே சரியானது.

அதுவும் வழக்கமாக நடைபெறுகின்ற ஒன்றுதான். ஆயினும் அதற்குரிய காரண காரியங்களை மனம் மேயமுயலவில்லை. மாறாக முதனாள் பாமாவுடன் கதைத்தவைகளே, விழித்த மாத்திரத்தில் நினைவுக்கு வந்தன.

பாமா எத்தனை அழுத்தமுள்ள நெஞ்சுக்காரி. இல்லையானால் அத்தகைய பதிலைக் கணேசனின் இதயத்தில் பெரிய இடத்தைப் பிடித்துக் கொண்டிருப்பாளா?

படுக்கையால் துள்ளி எழுந்தவன் உடலை அங்குமிங்குமாக ஆட்டி அலுப்பை முறித்துக் கொண்டான். முதனாள் நடந்த உரையாடலை மனத்திரை ஞாபகப்படுத்தியது.

"கணேஸ்...என்ர உள்ளத்தில் உங்களொருவரைத் தவிர இன்னொருவருக்கு இடமில்லை. வேறு நிலை ஏற்பட்டா... இந்த வாழ்க்கையை வெறுத்து விடமாட்டன்... வாழ்வதற்காகத் துணிந்து விடுவேன்...."

பாமா உறுதியாகச் சொன்ன வார்த்தைகள் கணேசனின் நினைவில் தைத்தது. அவளின் துணிகரப்பதிலை மனத்திரை நினைவு கூர்ந்து மகிழ்ந்தது.

பல்லைத் துலக்கியவாறு கணேசன் காலைக் கடன்களை நிறைவேற்ற கொல்லைப் பக்கம் போனான். நடு அறையில் கந்தையா தேநீர் பருகிக்கொண்டிருந்ததைப் போகையில் கண்டிருந்தான்.

ராஜன் அவருக்கு அருகே நின்றதையும் கவனித்தான். விசாலாட்சி குசினியில் பலகாரம் செய்து கொண்டிருப்பதும் தெரிந்தது. 'பாத்' ரூம் சென்ற கணேசன் பாமா குளித்துக்கொண்டு நின்றதைக் கண்டான். கதவு லேசாத் திறந்திருந்தது. அப்பால் நகர்ந்து நின்று அடிக்கொருக்காய் பாமா குளிப்பதைப் பார்க்க அவனது கண்ணம்புகளைச் செலுத்தினான்.

குறுக்குக் கட்டோடு நின்ற பாமாவின் கட்டான உடலுடன் கட்டி இருந்த துணி ஒட்டிக்கொண்டதால் அவயங்கள் கவர்ச்சியாக கணேசனின் ரசனைக்கு விருந்தளித்தன.

இடையிடையே கணேசன் பார்வையால் மேய்ந்து கொண்டிருப்பதை வெளியில் பார்த்தபோது பாமா கண்டு கொண்டாள். ஆயினும் அனுபவிக்கட்டுமே என்று கொஞ்ச நேரம் விட்டுப் பிடித்தவள் திடீரென்று கதவை மூடிவிட்டாள்.

கணேசனுக்குக் கதவைச் சாத்தியது ஏமாற்றமாக அமைந்தது. கதவு மீண்டும் திறக்கப்படுகையில் ஆவலுடன் நோக்கிய அவனது பார்வைக்கு எல்லாம் முடித்து ஆடைகளை அணிந்து வந்த உருவமே பட்டது.

"களுக்" கென்று சிரித்து விட்டு பாமா ஓடி மறைந்தாள். முகம் கால் கழுவி வந்து கணேசன் வேலைக்குப் போக ஆயத்த மானான்.

காரியாலயம் சென்று கடமையை ஏற்ற போது காலையில் பாத்ரூமில் இரசித்த காட்சி நினைவில் ஊடுருவி நிழலாடியது.

"சேர்.. உங்களுக்குத் தந்தி..."

காரியாலயபியூன்தந்தியை நீட்டியபோது அவனுடைய புலன்கள் விழித்துக் கொண்டன. மனம் தடுமாற கைகள் பரபரக்க தந்தியைப் பிரித்துப் பார்த்தான். அதற்குள்ளாக அவனது மனம் எங்கெங்கோ சென்றும் மீண்டது.

"அம்மாவுக்குச் சுகமில்லை உடன் வரவும்..."

வாசகங்கள் கண்களால் மூளையை அடைந்து நெஞ்சை உறுத்திற்று. நண்பர்களில் ஒருவனான மூர்த்தி அறிவித்திருந்தான். அவனுக்கு என்ன செய்வதென்று எதுவுமே ஓடவில்லை. சற்றுவேளை ஒன்றுமே புரியாமல் தடுமாறிப் போனான்.

(தொடரும்,



## குடியிருந்த மண்ணே!

புலோலியூர்,
வேல்நந்தன்.

இன்னமும்
உம் நிலப்பசி
அடங்கவில்லையா
எம் நிலமே
எமக்கான
காட்சிப் பொருளா
மீண்டும்
மீண்டும்
ஏமாற்றமே
எம் வாழ்வா
வளலாயின்
மகிழ்ச்சியது
எம் வாழ்வுக்கும்
கிட்டாதா
நாம் குடியிருந்த
மண்ணே
உன்னை
எட்ட நின்று
பார்த்து மகிழ்கிறேன்.
காடா மேடா
ஆக்கிரமிப்பின்
கால்த் தடங்களே
தந்து விடுங்கள்
எம் மண்ணை
எம்மிடம்
நிரந்தரமாய்
முழுமையாய்...

# வலைப் பக்கம்

## facebook

கொடுக்கும் அன்பு முழுவதையும் பெறும் பாக்கியம்கூட...பெரும் பாக்கியம் தான்

"போய்த்தொலை" என்பது தற்காலிக தீர்வு....

நீங்கள் காதலித்துக் கொண்டிருப்பது ஒரு ராட்சசியை என்று ஒருபோதும் உங்களுக்கு தோன்றவில்லையெனில்.. இன்னமும் நீங்கள் காதலிக்கவே துவங்கவில்லை.

கையறுநிலை என்பது பக்கத்தில் அமர்ந்திருப்பவர் சாப்பிடும் உணவின் பெயரை மெனு கார்டில் கண்டு பிடிக்க முடியாதது.

முத்தமிடும் ஸ்மைலியையும் கண்கள் மூடியபடி வடிவமைத்தவன் ரசனையாளன்

முழுதாய் புறந்தள்ளிவிட முடியாததுமாய்.. எப்பொழுதும் தூக்கி கொண்டாட முடியாததுமான உறவு களுக்குள் மட்டுமே எப்பொழுதும் கட்டடைகிறது வாழ்க்கை..

தன் உடம்பைத் தானே புரட்டிக் கவிழ்த்துத் தலையை நிமிர்த்திப் பார்த்துச் சிரிப்பதில் தொடங்குகிறது குழந்தையின் உலக சாதனைப் பூரிப்பு

பெருந்துயரத்துடன் நீயற்ற உன் விதியை கடக்கிறேன்... உன் சாயலில் ஒருத்தி எதிர்ப்படுகிறாள்...



சிகரெட் புகையுங்கள், மது அருந்துங்கள், பான் மசாலா சாப்பிடுங்கள், பரிசுகளை வெல்லுங்கள்!

முதல் பரிசு:
(மரணம்)
இரண்டாம் பரிசு:
(புற்றுநோய்)
மூன்றாம் பரிசு:
(காசநோய், பக்கவாதம்)
ஆறுதல் பரிசு:
(பணநஷ்டம்)
பரிசளிப்பவர்:
(எமதர்மராஜா)

*பரிசுகள் 100% உத்தரவாதம்*

## லவ் ஹார்ட்

ஒரு பையன் மேக்-அப் போட்டு கிளம்பினா கடைத்தெருவுக்கு போறான்னு அர்த்தம்.....

ஒரு பொண்ணு மேக்-அப் போட்டு கிளம்புனா யாரையோ நடுத்தெருவுக்கு அனுப்ப போறான்னு அர்த்தம்



ஏன் குத்தியவுடன் ரத்தம் வருது ?
யாரு குத்தினது எண்டு பாக்கவருது.....




பெண்: நீங்க எனக்கு லவ்லெட்டர் கொடுத்த விடயம் எங்க வீட்ல எல்லோருக்கும் தெரிஞ்சுபோச்சு...

ஆண்: ஐயையோ உன் தங்கச்சிக்குமா?



முதுமையில் உழைத்தால்
பார்க்கும் அனைவரும் என்
மகனை ஏசுகிறார்கள்.
முதுமையில் உழைக்காமல்
இருந்தால் என்னைப்
பார்க்கும்
போதெல்லாம் என்
மகன் ஏசுகிறான்.
இறைவன் மனிதனுக்குக்
கொடுத்த
சாபம் முதுமை





# வாழும்போதே சாதித்தவர் லீ

சஞ்சயா பாரு

தனித்துவம் மிக்கவர் லீ. சிங்கப்பூரின்தந்தை வளர்ந்து வரும் நாடுகளிடையேயும், காலனியாட்சிக்குப் பிந்தைய நாடுகளிலும் உள்ள தலைவர்களில் மிகவும் துணிச்சலானவராகத் தனது தேசத்தை மாற்றியமைத்தவர் அவர். ஒரு தலைமுறைக்குள்ளாகவே தனது நாடு மூன்றாம் உலக நாடு என்ற நிலையிலிருந்து முதல் உலக நாடு என்ற நிலையை அடைய வேண்டும் என்ற இலக்கை வைத்துக்கொண்டு அதை சாதிக்கவும் செய்தார். லீயின் விமர்சகர்கள் அவரது சர்வாதிகார நடவடிக்கைகளைச் சுட்டிகாட்டுவார்கள். மேலும், மாற்றுக் கருத்துகளையும் ஊடகங்களையும் அவர் ஒடுக்கிய விதத்தையும் அவர்கள் சுட்டிக்காட்டுவார்கள். அவரது ஆதரவாளர்களோ, தீங்கற்ற சர்வாதிகாரியாக அவரைக் கருதுவார்கள். அதுமட்டு மல்லாமல், ஜனநாயகபூர்வமான அங்கீகாரத்தை லீ எப்போதும் நாடினார் என்றும், மக்கள்நல அரசொன்றின் மூலம் அதைப் பெறுவதை அவர் உறுதிப்படுத்திக்கொண்டார் எனவும் அவரது ஆதரவாளர்கள் கருதினார்கள். தனது குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் தங்கள் எதிர்காலத்தின் மீதானநம்பிக்கையை விதைக்கச் செய்யும் மக்கள் நல அரசாக தனது அரசை லீ நடத்தினார் என்பது அவரது ஆதரவாளர்களின் வாதம்.

### செங்கல் செங்கல்லாக...

பொருளாதார வளர்ச்சியும் நவீனமயமாக்கலும் மட்டுமே லீயின் சிங்கப்பூரைத் தனித்துக்காட்டவில்லை. சமூகத்தை வடிவமைப்பதில் அவருக்கு இருந்த ஈடுபாடுதான் லீயை மற்ற தலைவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. சிங்கப்பூரைக் கிட்டத்தட்ட செங்கல் செங்கல்லாக உருவாக்கினார் லீ. பழையனவற்றைத் தரைமட்டமாக்கி, பசுமையான பூங்கா தீவுக்கு நடுவே குளிரூட்டப்பட்ட அதிநவீன நகரை நிர்மாணித்தார். சிங்கப்பூர் நவீனமானது. அதே நேரத்தில் கலை, கலாசாரம் சார்ந்த விடயங்களிலும் அந்த நாடு மிகுந்த முனைப் பைக் காட்டியது. தனது கலாச் சாரவேர்களின் பன்மைத் தன்மையை முக்கியமாக அது கருதியது.

சமூகத்தை ஒருங்கிணைப்பது எப்படி, அரசு இயங்குவது எப்படி என்பதிலெல்லாம் லீ வலுவான கருத்துகளைக் கொண்டிருந்தார். தனது சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்கான வாய்ப்பும் சுதந்திரமும் அவருக்கு இருந்தது. சமூக வடிவமைப்பு நுட்பமும் அவருக்குக் கைகொடுத்தது. அதைக் கொண்டு பன்மைக் கலாச்சார தேசத்தை அவர் உருவாக்கினார்; (தமிழ் உட்பட) 4 மொழிகளை ஆட்சி மொழிகளாக அறிவித்தார். மேலும், அவரது வீட்டு வசதித் திட்டமும் வெவ்வேறு இனங்கள்கலந்து வாழும் சூழலை ஏற்படுத்தியது.

### வழிகாட்டும் அமைச்சர்

சிங்கப்பூரில் தனது பணியைக் கச்சிதமாக முடித்துக் கொண்ட பிறகு, லீ தனது களத்தை சிங்கப்பூரிலிருந்து ஆசியா அளவில் விரிவுபடுத்தினார். சீன மேம்பாட்டுக்காக உதவ முயன்றார். அவரது அறிவுரைகளை சீனா புறக்கணிக்கவில்லை. நவீன சீனத்தின் தளகர்த்தரான தெங்சியோ பிங், சிங்கப்பூரின் பொருளாதார வெற்றியிலிருந்து மிகுந்த உத்வேகத்தைப் பெற்றார். புதிய சீனத்தை உருவாக்குவதில் தனக்கு உதவும்படி லீயை அழைத்தார். சிங்கப்பூரிடமிருந்து கற்றுக்கொண்டதைக் கொண்டு ஷாங்காயை கீழை நாடுகளின் மன்ஹாட்டனாக தெங் மாற்றினார்.

சிங்கப்பூரில் புதிய தலைமுறையிடம் அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு வழிகாட்டும் அமைச்சராக மாறினார் லீ. அதற்குப் பிறகு, கிட்டத்தட்ட ஒரு ஆசிரியர் போன்றே ஆனார். உலக வரலாற்றைச் சுயமாகவே கற்றார். பல்வேறு நாடுகளுக்கும் சென்று அந்நாட்டுத் தலைவர்களுக்கு போதனைகளும் அறிவுரைகளும் வழங்கினார். சிங்கப்பூரில் ஒரே ஒரு நிறுவனத்துக்குத்தான் தனது பெயரைச் சூட்ட லீ அனுமதி வழங்கினார். லீ குவான் யூ சமூகத் திட்ட உருவாக்கத்துக்கான கல்லூரி என்பதுதான் அந்த நிறுவனம். வளர்ச்சிக்கும் செழிப்புக்கும் சமூகத் திட்டங்கள் உருவாக்குவதை லீ எவ்வளவு முக்கியமாகக் கருதி னார் என்பதை இதிலிருந்து நாம் உணரலாம்.

### லீயின் இரு சீடர்கள்

சீனாவைப் பற்றியும் அதன் தலைமையைப் பற்றியும் நன்கு அறிந்தவர் லீ குவான் யூ. ஆகவே, இன்னும் திரை விலகாத சீனாவுக்கும், அதன் மீது ஆர்வத்தை வளர்த்துக் கொண்டிருக்கும் உலகுக்கும் இடையிலான பாலம்போல் விளங்கினார் லீ. முன்னாள் பிரதமர்கள் நரசிம்மராவும், மன்மோகன் சிங்கும் சீனத்தைப் புரிந்து கொள்வதற்கும் எதிர்கொள்வதற்கும் வேண்டி, தாங்களாகவே லீயின் சீடர்களாக ஆனார்கள். மன்மோகன் சிங்கின் முதல் ஆட்சிக் காலத்தில் லீ, டெல்லிக்கு வரும்போதெல்லாம் இருவரும் ஒன்றாக உணவருந்துவதுண்டு.

அப்போதெல்லாம், சீனத்தின் தலைமையை எதிர்கொள்வது எப்படி என்பது குறித்து வழிகாட்டும் அமைச்சர் தனது சீடருக்குச் சொல்லித்தருவார்.

சிங்கப்பூரின் வெற்றிக்கு லீயும் அவரது ஆட்சியும் முழுமுதற் காரணமாக ஆக்கப்பட்டுவிட்டதால் அதன் தோல்விகளுக்கும் அவரே தற்போது பொறுப்பாக்கப்படுகிறார். வருமானத்தில் அதிக அளவில் ஏற்பட்டிருக்கும் ஏற்றத்தாழ்வு காரணமாக கீழ்த்தட்டு மக்களிடயே பெருங்கோபம் உருவாகியிருக்கிறது. அதே போல், செழிப்பான பொருளாதாரம் ஏற்படுத்தும் ஆசைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் நடுத்தர வர்க்கமும் பதற்றத்துக்குள்ளாகியிருக்கிறார்கள். நாடு கடந்து வாழும் சிங்கப்பூர்வாசிகளிடமும் சிறுபான்மை இனத்தவரிடையும் அதிகரித்துவரும் கசப்புணர்வில் இந்த கோபம் பிரதிபலிக்கிறது.

லீயும் அவரது சகாக்களும் உருவாக்கிய அரசியல் கட்சி தனது செல்வாக்கை இழந்துகொண்டு வருகிறது. அவரது விமர்சகர்களின் குரலும் வலுப்பெற்றுக் கொண்டுவருகிறது. அநேகமாக, தனது மண்ணின் சொர்க்கத் திலி ருந்து விடைபெற்றுக் கொள்ள இதுதான் லீக்குச் சரியான தருணமாக அமைந்திருக்கும் போல.



“ சிங்கப்பூரில் தனது பணியைக் கச்சிதமாக முடித்துக் கொண்ட பிறகு, லீ தனது களத்தை சிங்கப்பூரிலிருந்து ஆசியா அளவில் விரிவுபடுத்தினார். சீன மேம்பாட்டுக்காக உதவ முயன்றார். அவரது அறிவுரைகளை சீனா புறக்கணிக்கவில்லை.

# தூய பொலிஸ் சேவை வடக்கில் வேண்டும்



அதிரன்

சட்டத்தையும் ஒழுங்கையும் சரியாக நிலைநாட்டவேண்டிய பொலிஸ் துறை தொடர்பில் இப்போது நாட்டு மக்கள் அதிகளவு அதிருப்தி அடைந்துள்ளனர். குற்றச் செயல்கள் தடுப்புத் தொடர்பில் பொலிஸார் வினைத்திறனுடன் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு நாட்டின் பல்வேறு இடங்களிலும் மக்களால் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

அதிலும் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் பொலிஸாரின் செயற்பாடுகள் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் திருப்திகரமாக இல்லை என்று மக்கள் கூறுகின்றனர். குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துதல், சட்டம், ஒழுங்கை நிலைநாட்டல் ஆகிய விடயங்களில் பொலிஸார் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என மக்கள் குறைபட்டுக் கொள்கின்றனர்.

மக்களின் இந்த ஆதங்கத்தை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க வெளியிட்ட கருத்துக்கள்.

மணல் மற்றும் மரம் கடத்தல், களவு ஆகிய விடயங்களில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் அதிக சிரத்தை எடுத்து செயற்பட வேண்டும். எதிர்வரும் 30 ஆம் திகதி வரையில் கால அவகாசம் வழங்குகின்றேன். இதற்குள் இந்த விடயங்கள் தொடர்பில் சீரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், நீங்கள் இங்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளாக இருப்பதற்குத் தகுதியற்றவர்கள் என்றே எண்ணுகின்றேன். தகுதியானவர்கள் பலர் காத்திருக்கின்றனர். குறித்த காலப்பகுதிக்குள் யாழ். மாவட்டத்தில் பிரச்சினைக்குரிய மேற்படி விடயங்களுக்கு தீர்வு காணுங்கள் எனக் கடுந்தொனியில் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைத் தவிசாளர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும், யாழ்.மாவட்டத்தில் பொலிஸார் வினைத்திறனற்றுச் செயற்படுவது தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகளை முன்வைத்தனர்.

அனுமதிப் பத்திரம் இன்றி களவாக மணல் ஏற்றிச் செல்வதைப் பொலிஸார் கண்டும் காணாதது போல் இருக்கின்றனர். பனை மரங்கள் தறித்து கனரக வாகனங்களில் கொண்டு செல்லப்படுகின்றது. திருட்டுச் சம்பவங்கள் யாழ்.குடாநாட்டில் அதிகரித்து இருக்கின்றது.

இந்த விடயங்களைத் தடுப்பதற்குப் பொலிஸார் தமது நடவடிக்கைகளை முழுமையாக எடுக்கவில்லை. ஏதாவது ஒரு காரணங்களைச் சொல்லி தட்டிக் கழித்துக் கொண்டிருக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் சிறுவர் - மகளிர் பொலிஸ் பிரிவு இயங்குவதாக பெயரளவில் மாத்திரமே சொல்லப்படுகின்றது. ஆனால் நடைமுறையில் இல்லை - போன்ற விடயங்கள் இதன் போது சுட்டிக்காட்டப்பட்டது.

இவற்றையயல்லாம் கேட்டறிந்த வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித். நீங்கள் எனக்கு ஒத்துழைக்கமாட்டீர்கள் என்று நினைத்தே நான் இங்கு வந்தேன். ஆனால் இவ்வளவு விடயங்களை எனக்குத் தெரிவித்து, ஒத்துழைத்தமைக்கு நன்றிகள். நீங்கள் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் நான் நடவடிக்கை எடுப்பேன்." என்று குறிப்பிட்டார்.

அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த அவர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் இங்கு இருக்கின்றனர். அவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் மேற்சொல்லப்பட்ட இங்கு நடைபெறும் குற்றங்களைத் தீர்க்க வேண்டும். இந்த நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு இங்குள்ள பொலிஸாரின் எண்ணிக்கையே போதுமானது. இதனைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்கவில்லையாயின், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள்தான் வினைத்திறனற்றவர்கள். தகுதியான பலர் உங்கள் பதவிகளுக்கு வருவதற்கு காத்திருக்கின்றார்கள். நீங்கள் செயற்படாவிட்டால், அவர்களை உங்கள் பதவிகளுக்கு நியமிக்க வேண்டி வரும். உங்களுக்குச் சொல்லப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய நீங்கள் செயற்பட்டு நடவடிக்கை எடுக்காவிட்டால், நான் எனது விசேட அணியினரை இறக்கி நடவடிக்கை மேற்கொள்வேன்." என்று கடுந்தொனியில் தெரிவித்தார்.

அது உங்களுக்குத்தான் (பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி) பாதிப்பாக அமையும். இங்குள்ள சிறுவர் மகளிர் பொலிஸ் பிரிவுகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்கின்றேன். வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் பொலிஸார் சிறப்பாகச் செயற்படுகின்றனர். இங்கு பொலிஸார் சிறப்பாகச் செயற்படாமைக்குக் காரணம், மொழிப் பிரச்சினையாக இருக்கலாம்.

ஆனாலும், எதிர்காலத்தில் அவர்கள் சிறப்பாக செயற்பட நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் அவர் தெரிவித்தார்.

அவரது இந்தக் கருத்தின் மூலம் வடக்கில் பொலிஸாரின் செயற்பாடுகள் சிறப்பானதாக இல்லை என்பது தெளிவாகியிருக்கிறது. புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் இந்த எச்சரிக்கை வரவேற்புக்குரியதொன்றே. வடக்கு மக்களுக்குச் சிறப்பான பொலிஸ் சேவையை வழங்கவேண்டும் என்ற நோக்கத்தில் அவர் முன்னெடுக்கும் செயற்பாடுகள் பாராட்டப்பட வேண்டியவை. இதுவரை காலமும் இங்கு சேவைக்கு வந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர்களோ, தாம் எத்தனை கள்வரைப் பிடித்தோம், எத்தனை பேரைக் கைது செய்தோம் என எண்ணுக் கணக்கை மட்டுமே ஊடகங்களுக்குத் தெரிவித்து வந்தனர். தமது பதவி உயர்வுகளுக்காக அவர்கள் இதனைப் பயன்படுத்திக் கொண்டனர். ஆயினும் தற்போது புதிதாக வந்துள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபரோ மக்களுக்கு சிறப்பான பொலிஸ் சேவை கிடைக்க வேண்டும் என வலியுறுத்தும் ஒருவராக உள்ளார். அவரது இந்த நோக்கம் நீடித்து நிலைக்கவேண்டும் என்றே மக்கள் விரும்புகிறார்கள். புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு நாம் சுட்டிக்காட்டவேண்டிய சில விடயங்கள் உள்ளன.

வடக்கு மாகாணத்தில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு எதிராக அதிகளவிலான முறைப்பாடுகள் தேசியப் பொலிஸ் ஆணைக்குழுவில் பதிவாகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. கடந்த ஆண்டு இவ் வாறு பொலிஸாருக்கு எதிராக 16 முறைப்பாடுகள் பதிவாகி உள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகளை மேற்கொள்வதற்காக கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் யாழ். மாவட்ட செயலகத்தில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவுக்கு வடக்கின் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் பொலி ஸாருக்கு எதிரான முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமே உள்ளன. பொலிஸாரின் செயற்பாடுகள் மீது நம்பிக்கையீனம், நம்பகத்தன்மை, நீதி, நியாயம் இல்லாமை காரணமாக மக்கள் பொலிஸ் ஆணைக்குழுவில் இவ்வாறு முறைப்பாடுகளை மேற்கொள் கின்றனர்.

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி அமைதியப் பேணும் நோக்கில் உருவாக்கப்பட்டதே பொலிஸ் திணைக்களம். மக்கள் தமதுக்கு ஏற்படும் அநீதிகள், அசௌகரியங்கள், நெருக்குதல்கள், வன்முறைகள் என்பவற்றுக்கு எதிராக முறைப்பாடுகளை மேற்கொண்டு அவை தொடர்பில் பாது காப்பையும் அமைதியையும் தேடிக் கொள்வதற்காக உருவானதே பொலிஸ் பிரிவு. இவ்வாறு சட்டம், ஒழுங்கை சரியாக நிலைநாட்டி நீதி, நேர்மையை பேண வேண்டிய பொலிஸாரே இப்போது பல சந்தப்பங்களில் பக்கச் சார்பாகவும், மனிதாபிமானமற்ற போக்குடனும் நடந்துகொள்வதுடன் குற்றங்களையும், நீதியையும் மறைப்பதற்காக லஞ்சம் பெறும் சம்பவங்களும் நாட்டில் அதிகரித்துள்ளன. அதிலும் குறிப்பாக பொலிஸாரின் மீதான நம்பிக்கை யீனம் இப்போது வடக்கு மாகாணத்தில் அதிகமாகக் காணப்படுவது கண்கூடு. இதன் ஒரு அங்கமே வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருக்கும் அதிகளவான முறைப்பாடுகள்.

> "மக்கள் தமதுக்கு ஏற்படும் அநீதிகள், அசௌ கரியங்கள், நெருக்குதல்கள், வன்முறைகள் என்பவற்றுக்கு எதிராக முறைப்பாடுகளை மேற்கொண்டு அவை தொடர்பில் பாது காப்பையும் அமைதி யையும் தேடிக் கொள்வதற்காக உருவானதே பொலிஸ் பிரிவு."

மக்களால் வழங்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்காமை, குற்றங்களில் ஈடுபடுவோரை பாதுகாப்பதற்காக லஞ்சம் பெறுகின்றமை, விசாரணைகளின் போது பக்கச் சார்பாக செயற்படுகின்றமை உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் வடக்கில் பொலிஸார் மீது மக்களால் சுமத்தப்படுகின்றன. அத்துடன் வீதி ஒழுங்குக் கடமையில் ஈடுபடும் பொலி ஸார் நடந்து கொள்ளும் விதம் குறித்தும் அதிகளவான மக்கள் குறை கூறுகின்றனர்.

வீதிகளில் விபத்துக்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது போக்குவரத்து பொலிஸாரின் கடமை. அதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆயினும் போக்குவரத்துப் பொலிஸார் வீதிகளில் வாகனங்களில் பயணிப்போரிடம் நடந்து கொள்ளும் முறை விரும்பத்தக்கது அல்ல என்று பலரும் குறைகூறுகின்றனர். பெரும்பாலான பொலிஸார் அதிகாரத் தோரணையுடன் மிரட்டும் பாணியில் செயற்படுவதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

வடக்கில் மக்களின் முறைப்பாடுகளை தமிழில் மேற்கொள்வதற்கும், விசாரணைகளை இலகுவாக்குவதற் கும் என தமிழ்ப் பொலிஸார் பொலிஸ் நிலையங்களில் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர். தமிழ் பொலிஸாருக்கான பற்றாக்குறை வடக்கில் தொடர்கின்றபோது பொலிஸ் நிலையங்களில் ஒன்றிரண்டு தமிழ் பொலிஸார் உள்ளமை யால் மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்துகொள்வது ஓரளவு இலகுவாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தமிழ்ப் பொலிஸாரும் சில சந்தர்ப்பங்களில் சிங்களப் பொலிஸா ருடன் சேர்ந்து அதிகாரப்போக்குடன் நடந்துகொள்வது வேதனையான விடயம் ஆகும். தமது சொந்த மக்களின் நலனில் அக்கறைகொண்டு சேவையாற்ற வேண்டிய அவர்கள் இவ்வாறு மனிதாபிமானமற்று செயற்படுவதை ஏற்க முடியாது.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பணியான பொலிஸ் பணியை வடக்கில் தூய்மையானதாக மேற் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு எதிராக செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் இதனையே வெளிப்படுத்துக்கின்றன.

எனவே வடக்குக்கு இப்போது நியமிக்கப்பட்டுள்ள புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர், வடக்கில் தூய்மையான பொலிஸ் சேவையை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.





# புதிய பனிப்போர்

"இதேவேளையில் மஹிந்தவை அடுத்த பிரதமர் ஆக்கும் முயற்சியில் விமல் வீரவன்ஸ குழுவினர் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். மைத்திரிபாலவின் வெற்றிக்கும் கடுமையாக உழைத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் மஹிந்த ஆட்சிக்கு வந்தால் பயங்கரமான முறையில் பழிவாங்கப் படுவார்கள். அந்த அச்சம் காரணமாக அவர் கள் ரணிலின் கைகளைப் பலப்படுத்த வேண் டிய ஒரு நிர்ப்பந்தம் உண்டு.

■ சந்திரசேகர ஆசாத்

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வெவ்வேறு நோக்கங்களைக் கொண்ட வெவ்வேறு தரப்பினர் ஐக்கியப்பட்டு ஒரு முகமாக மஹிந்த ஆட்சியை வீழ்த்துவதில் களமிறங்கி வெற்றியும் பெற்றனர். இவர்கள் ஒரு பொது இணக்கப்பாட்டில் 100 நாள் வேலைத் திட்டத்தின் அடிப்படையில் தேர்தல் களத்தில் இறங்கினர். பின்னணியில் நின்று செயற்பட்ட சில வலிமை மிக்க சக்திகளும் உண்டு. மஹிந்த அரசில் சுகாதார அமைச்சராக இருந்தவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலருமான மைத்திரிபால சிறிசேனவை உடைத்தெடுத்து மஹிந்தவுக்குப் போட்டியாக ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கியதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா விஜய்குமாரணதுங்க பிரதான பங்குவகித்தார். அவருடன் ராஜிதசேனரத்ன, ரஜீவ விஜயசிங்க ஆகியோரும் இணைந்து காய் நகர்த்தல்களில் ஈடுபட்டனர்.

ஜாதிக ஹெல உறுமயவை மஹிந்த அணியிலிருந்து பிரித்தெடுப் பதிலும் வெற்றி பெற்றனர். அதே வேளையில் தனித்தும் எப்போதுமே ஆட்சியைப் பிடிக்க முடியாத நிலைமை யில் தள்ளாடிய ஐக்கிய தேசியக் கட்சியும் அந்த அணியில் இணைந்து கொண்டது.

மஹிந்த ஆட்சியில் படுமோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ் லிம், மலையக மக்களும் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவை வழங்கினர்.

100 நாள் வேலைத் திட்டத்தில் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக எந்த ஒரு தீர்வுத் திட்டமும் முன்வைக்கப்படாத போதிலும், மஹிந்த சகோதரர்களின் ஏதேச்சாதிகார ஆட்சியை விழுத்த அவர்கள் பொது எதிரணிக்கு ஆதரவு வழங்கினர்.

ஜனவரி 8ஆம் நாள் இடம்பெற்ற தேர்தல் முடிவுகளை அடுத்து மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் பதவியேற்றனர்.

100 நாள்வேலைத் திட்டத்தின் அடிப்படையில் 19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். அதை நிறைவேற்ற மூன்றில் இரண்டு வாக்குப் பலம் தேவையான நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியையும் இணைத்து இப்போது ஒரு கூட்டு அரசு உருவாக்கப் பட்டுவிட்டது.

ஏற்கனவே அமைக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவைக்கு மேலதிகமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 26 பேர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் 10பேர் நியமிக்கப்படலாம் என்ற செய்திகளும் வெளிவந்துள்ளன.

இந்த நிலையில்தான் நீறுபூத்த நெருப்பாகக் கிடந்த பனிப்போர் இப்போது கூர்மையடைய ஆரம்பித்துவிட்டது.

அமைச்சரவை நியமிக்கப்பட்டு ஒரு சில நாள்களிலேயே விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சராக நியமனம் பெற்றிருந்த பைசல் முஸ்தபா தனது பதவியை தூக்கி எறிந்தமை ரணில் விக்கிரம சிங்கவின் ஏதேச்சாதிகாரப் போக்குக்கு எதிரான முதல் வெளிப்பாடு எனக் கருதப்படுகிறது.

சிறந்த கல்விமானும் ஒரு நேர்மையான அரசியல்வாதியும் எனக் கரு தப்படும் ரஜீவ விஜயசிங்க தன்னுடன் ஆலோசிக்கப்படாமலே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலை வரைப் பதவி நீக்கம் செய்தமைக்காகத் தனது அமைச்சுப் பதவியிலிருந்து விலகி , எதிர்க்கட்சி ஆசனத் தில் போய் அமர்ந்து விட்டார். ஆனால் அரசியல்வாதிகளின் எடுபிடிகளுக்குப் பல்கலைக் கழகங்களின் உபவேந்தர் பதவிகளை வழங்கி அவர்கள் மூலம் மாணவர்கள் மீது ஒடுக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டு சகல பல்கலைக்கழகங்களிலும் குழப்பங்களை ஏற்படக் காரணமாயிருந்த எஸ்.பி.திஸநாயக்காவுக்கு அமைச்சர் பதவி வழங்கப் பட்டுள்ளது.

எஸ்.பி.திஸநாயக்காவுக்கு அமைச்சர் பதவி வழங்கியமை தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். மகளிர் விவகார அமைச்சர் ரோசி சேனநாயக்காவும் இந்த நியமனத்தைக் கண்டித்துள்ளார்.

இந்த எதிர்ப்பு குரல்களைப் பிரதமர் பெரிதும் பொருட்படுத்தவே இல்லை என்பது இங்கு முக்கியமாக அவதானிக்க வேண்டிய விடயமாகும்.

ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதரகம் புனரமைக்கப்பட்டமை தொடர்பான ஊழல் குற்றச்சாட்டின் பேரில் விசாரிக்கப்பட்டுவரும் ரேணுகா குணவர்த்தன மீண்டும் தாய்லாந்தின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். ரணில் அவர்களின் சொந்தப் பொறுப்பில் நியமிக்கப்பட்ட மத்திய வங்கி ஆளுநரின் ஊழல் நடவடிக்கைகள் தொடர்பாகப் பெரும் சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன.

கடற்படையினரின் வெள்ளைவான் கடத்தல்கள் இரகசிய முகாம்கள் என்பன தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையிலேயே கடற்படையினரிடம் இரகசிய முகாம்கள் இல்லையெனப் பிரதமர் தெரிவித்திருப்பது அவர் கடற்படையினரை அவர்களின் குற்றங்களிலிருந்து காப்பாற்ற முயல்கிறாரா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது. மேலும், கோத்தபாய ராஜபக்ஷவை மூன்று நாள் தடுத்து வைக்க குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அனுமதி கோரியபோது பிரதமர் அதற்கு மறுத்துவிட்டதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளைப் புறந்தள்ளி விட்டு பிரதமர் ஒரு தன்னிச்சையான போக்கில் செயற்பட்டு வருவதான ஒரு கசப்புணர்வு அரச தரப்பிலேயே மெல்ல மெல்ல வெளிவர ஆரம்பித்துள்ளது.

19ஆவது திருத்தச் சட்ட வரைவு மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து விட்டு அதற்குப் பதிலாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் உருவாவதை அனுமதிக்க முடியாதென ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி. போன்ற கட்சிகள் போர்க் கொடி தூக்கியுள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்களும் அதை எதிர்க்கின்றனர்.

ஆனால் அப்படி ஒரு நிலைமையை உருவாக்கும் நோக்கில் ரணில் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. அதற்கான புறச் சூழலையும் அவர் படிப்படியாக உருவாக்கி வருகிறார்.

அரச தலைவராகப் பிரதமரே இருக்க வேண்டும் என்ற முறையைக் கொண்டு வர அவர் எடுத்த முயற்சி தற்சமயம் கைகூட வில்லை என்ற போதிலும், அதற்கான களத்தை உருவாக்குவதில் அவர் பின்வாங்கி விடவில்லை.

ஒருதேசிய அரசு அமைப்பது என்ற போர்வையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தும் வகையில் அவர் செயற்படுவதாகவே தெரிகிறது. குறிப்பாகக் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரிக்கு எதிராகத் தீவிரமாகச் செயற்பட்டவர்களை அமைச்சரவைக்குள் உள்வாங்குவதன் மூலம் அரசுக்குள் அவர் தனது கரங்களை வலுப்படுத்தும் வகையில் செயற்பட்டு வருவதாகவே கருத வேண்டியுள்ளது.

அதேவேளையில் மைத்திரியின் தீவிர ஆதரவாளர்களைத் தாமாகவே அரசை விட்டு வெளியேற வைக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் அடுத்த இலக்கு ராஜித சேனாரத்னாவாக இருக்க முடியும் எனவும் கூடச் சில அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ளன.

அதேவேளையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி தனித்தே போட்டியிடும் எனத் தெரிவிக்கப்பட்டமையையும் அலட்சியம் செய்து விட முடியாதது.

இதேவேளையில் மஹிந்தவை அடுத்த பிரதமர் ஆக்கும் முயற்சியில் விமல் வீரவன்ஸ குழுவினர் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். மைத்திரிபாலவின் வெற்றிக்கும் கடுமையாக உழைத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் மஹிந்த ஆட்சிக்கு வந்தால் பயங்கரமான முறையில் பழிவாங்கப் படுவார்கள். அந்த அச்சம் காரணமாக அவர்கள் ரணிலின் கைகளைப் பலப்படுத்த வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் உண்டு.

ஆனால் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இந்த நிலைமையைச் சரியாகவே கணக்கில் எடுத்துக்கொண்டு களமிறங்கி விட்டார். அவர் பகிரங்கமாகவே, "சிலர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடைத்துச் சதி செய்கிறார்கள்" எனக் கண்டனம் தெரிவித்துள்ளார். ஒரு தேசிய அரசில் மைத்திரியின் பலம் ஓங்க வேண்டு மானால் அதற்குள் நேர்மையான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரின் தொகை அதிகரிக் கப்பட வேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார்.

எனவே இன்றைய பனிப்போர் சந்திரிகா விஜய குமாரண துங்கவுக்கும், ரணில் விக்கிரம சிங்கவுக்குமிடையே ஆரம்பமாகி விட்டது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்குப் பதிலாக நிறை வேற்று அதிகாரம் கொண்ட பிரதமரை உருவாக்கும் ஒரு திட்டமிட்ட நடவடிக்கைக்கு எதிராக அவர் களமிறங்கி விட்டார்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையிலும்கூட ரணில் அணுகுமுறைகள் நம்பிக்கையளிக்கும் வகையில் இல்லை. அவர் வட பகுதிக்கு பயணம் செய்தபோது வடமாகாண சபை முதலமைச்சரையே வடமாகாண சபையையோ கணக்கில் எடுக்கவில்லை. வடமாகாண முதல்வருக்குக் கடைசி நிமிடத்திலேயே அழைப்பு அனுப்பப்பட்டது. பிரதமர் அலுவலகத்தால் அந்த அழைப்பு அனுப்பப்படாமல் அரச அதிகாரி ஒருவர் மூலமே முதலமைச்சரை அவமதிக்கும் வகையில் அனுப்பப்பட்டுள்ளது.

அதேவேளையில் ரணில் வடபகுதி மக்களின் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களைக் கவனிக்க பிரதமர் அலுவலகம் ஒன்றை வன்னியில் ஏற்படுத்தி. அதற்கான தனது சிறப்பு பிரதிநிதி ஒருவரையும் நியமிக்கப் போகிறார் எனக் கூறியுள்ளார்.

இது அடிப்படையில் வடமாகாண சபையின் குறைந்தபட்ச அதிகாரங்களையும் தனது கைக்குள் எடுக்கும் சர்வாதிகாரப் போக்கையே தெளிவாக வெளிப்படுத்துகிறது.

எப்படியிருப்பினும் மஹிந்தவைப் போன்று நானும் ஒரு சர்வாதிகாரியாக வரும் ஒரு பனிப்போரில் ரணில் விக்கிரமசிங்க இறங்கி விட்டார். திருமதி சந்திரிகா விழிப்படைந்து விட்ட நிலையில் எச்சரிக்கை மணியும் அடிக்கப்பட்டு விட்டது.

இலங்கை மக்களின் நிலை சட்டிக்குள்ளிருந்து எரியும் அடுப்புக்குள் விழுந்து விடக் கூடாது என்பதே அனைவரினதும் விருப்பமாகும். மக்கள் வாக்களித்தமை மாற்றத்துக்கான ஓர் ஆட்சியை ஏற்படுத்தவேயொழிய இன்னுமொரு சர்வாதிகாரியை உருவாக்கவல்ல.

■

அறிதல் சிறப்புற அமைய துணைபோகும் நூலகங்களால் மனிதனைப் பற்றிய அக் கறை வளரும். உலகத்தைப் பற்றிய பார்வை விரிவடையும். வாழ்க்கை மேம்படும். எதிர்காலத்தில் அன்பும், அறிவும் பண்பும்கொண்ட ஒரு சமூகத்தைக் காணலாம்.



# நூலகம் செல்வது சாலச் சிறந்தது

■ சி.நற்குணலிங்கம்

மக்களின் பயன்பாட்டிலுள்ள நூல்களின் இருப்பிடம் நூலகமாகும். புத்தகம் இல்லாத அறை உயிரில்லாத உடல் போன்றது. தேடலுக்குப் பொருத்தமான இடம் நூலகமாகும். சுய கற்றல் சூழலை உருவாக்கும்தளமாகநூலகங்கள்விளங்குகின்றன. நூலகங்களை கிராமங்களிலும் சரி நகரங்களிலும் சரி காணக் கூடியதாக உள்ளன. இங்குமட்டுமல்ல ஆரம்பப் பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகங்கள்வரை நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சில வாசிப்புப் பிரியர்கள் தமது வீடுகளிலும் நூலகத்தை ஆக்கியுள்ளனர். அனுபவங்களின் பொக்கிஷங்களாக விளங்கும் முதியவர்கள் நடமாடும் நூலகமாக விளங்குகின்றனர்.



அறிவுக் கண்களைத் திறக்கும் திறவுகோல் தலைசிறந்த நூல்கள்தாம்– என்றார் ஓர் அறிஞர். இந்த நூல்களைக்கொண்ட நூலகங்கள் காணப்படுவது அல்ல முக்கியம் அவற்றின் உச்சப்பயன்பாட்டை மக்கள் அனுபவிப்பதுதான் முக்கியம். சிறுவர் முதல் முதியோர் வரை நூலகங்களை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். தொட்டில் பழக்கம் சுடுகாடுவரை என்பதற்கமைய சிறுபராயம் முதல் நூலகப் பயன்பாடு அமையவேண்டும்.

நூலகங்களைப் பயன்படுத்துவதன்மூலம் பல்வேறு பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். திறன்களை மனப்பாங்குகளை விருத்தி செய்ய, பண்பட்ட மனிதராக வளர, அத்தியாவசியமான சமுதாயக் குறிக்கோளை சாதித்துக்கொள்ள, உள நலம் விருத்தி பெற, சமூகம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட ஆளுமை விருத்தி பெற, சமூக விழுமியங்களை விருத்தி செய்ய, ஓய்வு நேரத்தைக்கூட பயனுள்ள முறையில் பயன்படுத்த நூலகங்கள் உதவுகின்றன. மனிதனை மனிதனாக மாற்றும் கல்வியைப் பெற தலை சிறந்து விளங்கும் நூலகங்களை இளமையிலிருந்து பயன்படுத்தப் பழக்க வேண்டும். அதன் மூலம் மொழியாற்றல் சிறக்கும். அறிவு வளம் பெறும், எழுத்தாற்றல் வளரும், பகுத்து உணரும் பண்பு தோன்றும், புதிய தேடலுக்குப் புதிய சிந்தனைகளுக்கு வழிசமைக்கும், வாழ்வின் விழுமியங்களை அறிந்து ஒழுகலாம். கற்றலில் ஆர்வம், நடத்தை, உளப்பாங்கு, நுண்மதி, அறிவாற் றல் திறன் என்பவற்றை வளர்த்து நெறிப் படுத்தும் களமாக நூலகங்கள் விளங்குகின்றன.

அறிதல் சிறப்புற அமைய துணைபோகும் நூலகங்களால் மனிதனைப் பற்றிய அக்கறை வளரும். உலகத்தைப் பற்றிய பார்வை விரிவடையும். வாழ்க்கை மேம்படும். எதிர்காலத்தில் அன்பும், அறிவும் பண்பும் கொண்ட ஒரு சமூகத்தைக் காணலாம். ஒருவன் தன்னைத்தானே கண்காணித்துக் கொள்ளவும் தவறுகளிலிருந்து திருத்திக் கொள்ளவும் சிந்தனைகளை சீர் செய்யவும் முடியும். 21ஆம் நூற்றாண்டில் அறிவு என்பது பிரதானமாக தந்திரோபாயச் சொத்தாக மாற்றமடைந்துள்ளது. இன்று அறிவுமையச் சமூகம் என்பது முக்கியத்துவமுடையதாக மாறியுள்ளது. மாற்றங்களை வரவேற்பதற்கும் மாற்றங்களுக்கு எம்மைத் தயார் செய்து கொள்வதற்கும் நூலகங்களைப் பயன்படுத்திக்கொள்வது சிறந்த தாகும். இதன் மூலம் பல்துறைசார் அறிவுத் திறன் மிக்க சமுதாயத்தையும் கட்டி யெழுப்ப முடியும்.

அனுபவப் பேறுகளின் நுழைவாயில்களாக விளங்கும் நூலகங்களை பாடசாலைக் காலத்தில் மாணவர்கள் நன்றாகப் பயன்படுத்த வேண்டும். பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படவேண்டும். வாசிப்பின் முக்கியத்துவங்கள் உணர்த்தப்பட வேண்டும். அவ்வாறாயின் மாணவர்கள், சுயசிந்தனையும் சுயதேடலும் உள்ளவர்களாக உருவாகி கிரகித்தல் திறன், சிந்தனையாற்றல் வளர்ச்சியடைந்து இலங்கை நாட்டின் அடையாளத்தின் பங்காளர்களாக, திறமை மிக்க பிரஜைகளாக உருவாக முடியும். எனவே மாணவர்கள் நூலகப் பயன் பாட்டுக்கு உகந்த கௌரவத்தை வழங்க வேண்டும்.

இன்று நூலகப் பயன்பாடு என்பது வீழ்ச்சியை நோக்கிப் போகும் ஒரு நகர்வாகவே, காணப்படுகின்றது. இதற்கு வாசிப்பின் சுகங்களை அறியாதிருப்பதே காரணமாகும். வாழ்நாளில் நூலகம் செல்லும் பழக்கத்தை மேற்கொள்ளாதவன் அறியாமையினால் உழல்வான். நூலகப் பயன்பாட்டைப் புறம் தள்ளுவது அறியாமையை எடுத்துக் காட்டுகின்றது என்பது கல்வி மான்களின் கருத்தாகும். நண்பர்களுடன் சேர்ந்துகுடித்தல், அரட்டையடித்தல், கலாசார சீரழிவுகளில் ஈடுபடல், டுவிட்டரில் சண்டைபோடல், யாரைப் பற்றியும் வம்புபேசு தல், இணையத்தள பாவனை இவற்றுக்கு ஒதுக்கும் நேரத்தை நூலகப் பயன்பாட்டுக்கு ஒதுக்கித்தான் பாருங்களேன்.

கணினி,கையடக்கதொலைபேசி போன்றவை வாழ்க்கையை சுலபமாக்குகின்றன என்பது உண்மை. ஆனால் புத்தகப் பாவனை போல செழுமை யாக்குகின்றனவா? என்பது தான் கேள்வி. சிறுவர்களிடையே வாசிப்பு பழக்கத்தில் அல்லது வாசிக்க முயற்சிப் பதற்கான செயற்பாட்டில் பின்னடைவு காணப்படுமாயின் அதைத் திருத்தவேண்டும். தகுந்த வழிகாட்டலின்கீழ் இந்தப் பிள்ளைகள் நூலகங்களைப் பயன்படுத்தமுடியும். இதற்கு பெற்றோர்களின் ஒத்துழைப்பு பெரிதும் வேண்டப்படுகின்றது.

வாசிப்பு பிறழ்வு ஒரு குழந்தையின் வாசிப்பு திறனை மட்டுமல்லாது எழுதுதல், சொல் உச்சரித்தல், சரமாரியாகப் பேசுதல் என்பவற்றையும் பாதிக்கச் செய்கின்றது. எனவே சிறுவர்களிடையே நூலகப் பாவனையில் பின்னடைவு காணப்படுகின்றதா என்பதில் பெற்றோரின் பார்வை செலுத்தப்பட வேண்டிய ஒன்றுதான் என்பதை மறந்து விடாதீர்கள். இந்த விடயத்தில் நாம் செய்ய வேண்டியவை என்ன என்பதில் சிந்தனை இல்லாமல் இருப்பதுதான் மிகப் பெரிய சோகம்.

தொழில்நுட்பம், கைக்குள் உலகம் என்றெல்லாம் நாம் பெருமைப்பட்டுக்கொண்டாலும் அதன்மூலம் உபயோகமான விடயங்களைத் தேடிப் பயன்அடைகிறோமா என்றால் அது மிகவும் குறைவாகவே உள்ளது. இளைய தலைமுறை முதல் சகலரும் நூலகப் பயன்பாட்டுப் பழக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் நல்ல சமுதாயம் தானாகவே மலரும். எனவே நூலகம் செல்வது சாலச் சிறந்தது என்பதை ஒவ்வொருவரதும் மனத்தில் விதைக்க வேண்டிய பொறுப்பு பெற்றோருடையது, பாடசாலையுடையது மட்டுமல்ல எம் எல்லோருடையதும்தான்.

# இலட்சியங்கள் சாவதில்லை

நீதிக்காய் குரல் கொடுப்போர்
நிம்மதியாய் வாழ்ந்ததில்லை
ஆதிமுதல் இருந்து வந்தே
அரங்கேறும் நாடகமிது!

போருக்குச் செல்வோன்
நெஞ்சினிலே வேல் பாய்ந்து
மடிவதுதான் வீரம்!
புறமுதுகுகாட்டி வெல்வதும்
புகழின் ஏணியாச்சு!
யாருக்கு வேண்டும் இந்த வெற்றி
நேருக்கு நேர்வரினும்
நேர்வழிதான் எம்வழியாகணும்!

வாதிப்பவர் வருமானம் நாடியே
நீதி சொல்வார்
பாதிப் பேர் பகலென்பார்
மீதிப் பேர் இரவென்பார்
அறியாமல் பார்த்திருப்போர்
இரண்டும் சரியென்பார்
சாதிப்போர் எவரும்
தனிவழி சென்றாலே வெற்றி!

நீதி மறுக்கப்படலாம்
இலட்சியங்கள் புதைக்கப்படலாம்
இறுதி முடிவு தடுக்கப்படலாம்
சுதந்திரம் பறிபோனாலும்
தோல்விகள் முடிவாகாது!
உண்மைகள் உறங்கினாலும்
உருக்குலைந்து போகாது!
"உண்மை" எரிமலைகள்
உயிர்ப்பாகி வெடித்தே தீரும்!

கடவுளுக்கும் கல்லறையா?!
கல்லறைக்கும் அங்கே காவலா?
காலம் வரும் போது
கட்டுகள் தகர்ந்து போகும்
இலட்சியங்கள் சாவதில்லை!

அலட்சியங்கள் வெல்வதுமில்லை!
சுனாமி சூறாவளிபோல் ஒருநாள்
உண்மை உயிர்ப்பாகும்
இயேசு உயிர்த்தார் வரலாற்றில்
சாவை வென்றார் சத்தியனாய்!

அபீர்ராஜன்,
அன்ரனி பீற்றர்.





■ ரெங்கன்

# ஜப்பான் - இந்திய நாடுகள் பாதுகாப்பு

## வளரும் சீன செல்வாக்கை முறியடிக்கும் முயற்சி

**பிரிட்டனில் பொதுத்தேர்தல்**
**நைஜீரியாவில் குட்லக் ஜோனதன் தோல்வி**
**மாலைதீவில் நஜித்தின் எதிர்காலம் கேள்வியில்**

# உலக நடப்பு

சீனாவின் செல்வாக்கு தங்கள் பிரதேசத்தில் அதிகரித்து வருவதையும் எல்லைப் பிராந்திய தகராறுகள் விரிவடைந்து வருவதையும் உத்தேசித்து ஜப் பானும் இந்தியாவும் தங்களுக்கிடையிலான பாதுகாப்பு தொடர்புகளை இப்போது இருப்பதைவிட ஆழமாகவும் உறுதியாகவும் பலப்படுத்தி வைத்துக் கொள்ள முடிவு செய்துள்ளன.

இந்த இருநாடுகளுக்கும் சீனாவுடனான எல்லைப் பிரச்சினை சமீபகாலத்தில் விரிவடைந்திருப்பது இரு நாடுகளுக்குமே கவலை அளித்துள்ளது.

ஜப்பானின் உலக போர்க்கால செயற்பாடுகள் தொடர்பாக சீனாவுடன் உறவுகள் சீர்குலைந்திருப்பது ஒரு புறமிருக்க கிழக்கு சீனகடற் பிரதேசத்தில் காணப்படும் மனிதர்கள் வாழாத சில தீவுகளின் உரிமை குறித்தும் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இந்தத் தீவுகள் இருக்கும் பகுதியில் எண்ணெய் மற்றும் எரிவாயுக்கள் பெருமளவில் கிடைக்கவாய்ப்பிருப்பதும் ஏனைய கடல் உயிரினங்கள் தாராளமாகக் கிடைக்கும் வசதியிருப்பதுமே இந்த இரு நாடுகளுக்கும் முரண்பாடுகள்முற்றியிருப்பதற்குக்காரணமாகும்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் எல்லைப்பிரச்சினை கடந்த 50 வருடகாலமாக இருந்து வருகின்றது. அவ்வப்போது மோதல்களும் இடம்பெற்றுள்ளன. இவைகளில் ஒன்று சீனத் தலைவர் ஸி யின் பிங் கடந்த வருடம் இந்தியாவுக்கு வருகை தரவிருந்த சமயத்தில் இடம்பெற்றிருந்தது. சீனா தனது எல்லைப் பிராந்திய ஆசையைக் கைவிட வேண்டும் என்று இந்திய பிரதமர் நரேந்திரமோடி கடந்த பெப்ரவரியில் கூறியிருந்தார்.

கடந்த வாரம் ஜப்பானுக்கு பயணம் மேற்கொண்டிருந்த இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் மனோகர் பாஹிக்கர் டோக்கியோவில் ஜப்பானிய பிரதமர் ஷின்ஸோ அபேவைச் சந்தித்திருந்தார்.

இந்திய – ஜப்பான்நாடுகளுக்கு இடையில்பலமான பங்காளித்துவம் நிலவவேண்டியது இரு நாடுகளுக்கு மட்டுமல்ல இந்தப் பிராந்தியத்தின் முழு அமைதிக்கும் பாதுகாப்புக்கும்கூட அவசியமாகும் என்று பாஹிக்கர் பின்னர் கூறியிருந்தார்.

சீனாவின் சில நிலப்பரப்புகள் நீர் பரப்புகள் தொடர்பான கோரிக்கைகளை நிராகரிக்கும் வகையில் ஆசியாவில் மிகப்பெரிய ராணுவ செலவுகளை மேற்கு கொண்டு வரும் 2 ஆவது மூன்றாவது நிலைகளில் உள்ள இந்த நாடுகள் தமது பொருளாதார மற்றும் பாது காப்பு நலன்களை நோக்கி நகர தீர்மானித்துள்ளன. தனது இராணுவத்தை நவீனப்படுத்த முயன்று வரும் இந்தியாவுக்கு தனது இராணுவ தளபாட ஏற்றுமதி சட்டவிதிகளை இலகுடுத்தவும் ஜப்பான் முன்வந்துள்ளது.



★ ★ ★

**கமரூன் மகாராணியுடன் சந்திப்பு**

பிரிட்டிஷ் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தலுக்கான பரப்புரைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பிரிட் டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் பக்கிம் ஹாம் மாளிகையில் எலிசபெத் மகா ராணியை திங்கட்கிழமை சந்தித்து உரையாடியுள்ளார்.

அரசியல் நிலைமைகள் குறித்து மகாராணிக்கு எடுத்துரைப்பது வழமையானமுறை என்ற வகையிலேயே பிரதமர் கமரூன் இந்தச் சந்திப்பை மேற்கொண்டார் என்று தெரிகின்றது. பிரிட்டனில் அரசியல் நிலைமைகளைப் பொறுத்தவரை இம்முறை கமரூனின் கன்சர்வேடிவ் கட்சியோ எட் மிலிபான்டின் எதிர்த்தரப்பு லேபர் கட்சியோ ஆட்சி அமைக்கும் அளவுக்கு பெரும்பான்மை பெறும் நிலைமை காணப் படவில்லை.

★ ★ ★

**நஷீத்தின் அரசியல் வாழ்வை ஒழிக்க அரசு தீர்மானம்**

மாலைதீவுகளின் முன்னாள் அதிபர் மொகமத் நஷீத் மீண்டும் அரசியலில் ஈடுபடாத வகையில் அந்த நாட்டின் இப்போதைய அரசு தீர்மானமாக நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது.

அதிபர் யமீன் அப்துல்கயூமின் கட்சி இப்போது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கொண்டுள்ளது. இந்தப் பெரும்பான்மையைவைத்துக்கொண்டு தனது எதிரிகளை ஒழித் துக்கட்டுவதில் அவர் இறங்கியிருக்கிறார் என்று விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

அந்த வகையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் சட்டமொன்று இயற்றப்பட்டது. இதன்படி சிறையில் இருக்கும் ஒருவர் தனது கட்சியின் உறுப்புரிமையை இழந்துவிடுவார். இந்தச் சட்டத்தின் நோக்கம் இப்போது சிறையில் இருக்கும் முன்னாள் அதிபர் நஷீத்தை அரசியலில் இருந்தே ஒழித்துக் கட்டுவதாகும் என்று கருதப்படுகின்றது.

85 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 42 க்கு 2 என்ற அடிப்படையில் சட்டம் நிறைவேற்றப்பட்டது. நஷீத்தின் ஜனநாயகக் கட்சி சட்டத்தை கடுமையாக எதிர்த்ததுடன்வாக்களிப்பில்கலந்துகொள்ளவில்லை. நஷீத் முன்னாள் அதிபர் என்ற வகையில் பெற்று வரும் படிகளை நிறுத்தவும் பாதுகாப்பு ஏற்பாடுகளை இல்லாமல்செய்யவும் நாடாளுமன்றம் ஆலோசித்து வருவதாகக் கூறப்படு கின்றது.

★ ★ ★

**நைஜீரியாவில் எதிர்க்கட்சி அதிபர் வெற்றி**

நைஜீரியாவில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார். இது அந்த நாட்டில் ஒரு சரித்திர நிகழ்ச்சியாகக் கருதப்படு கின்றது.

எதிர்க்கட்சி சார்பில் போட்டியிட்ட ஜெனரல் முகம்மது புகாரி என்பவர் பதவியிலிருந்த அதிபர் குட்லக் ஜோனதனை 2.1மில்லியன் வாக்குகளால் தோற்கடித்தார். குட்லக்ஜோனதன்போக்கோ ஹறாம்தீவிரவாதிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளில்இறங்காமைமக்களை அவர்மீதுவெறுப்புக் கொள்ளச் செய்திருந்தது. 36 மாநிலங்களையும்சிறியசமஷ்டிதலைநகர்பிராந்தியத்தையும் கொண்ட நாட்டில் புகாரி 15. 4மில்லியன் வாக்கு களையும் ஜோனதன் 13.3 மில்லியன் வாக்குகளையும் பெற்றதாக அறிவிக் கப்பட்டது.



# உலக நாடக தின திட்டம் வெற்றிபெற...

கலா பூஷணம் அராலியூர்
ந.சுந்தரம்பிள்ளை

நாடக விருந்து எங்களுக்கு நாடகங்களுக்கா பஞ்சம்? இல்லை! இருக்கின்றனவே வானொலி நாடகங்கள், தொலைக் காட்சி நாட கங்கள், எங்களது பாரம்பரிய நாடகங்களான நாட்டுக்கூத்துகள், இசைநாடகங்கள், வரலாற்று நாட கங்கள், நூல்க ளிலுள்ள நாடகங்கள், சமூக நாட கங்கள்....

**வானொலி நாடகங்கள்:**
வானொலி நாடகங்கள் எவ்வளவு நல்லவையாக இருந்தா லும் அவற்றில் பாத்திரங் களை நேரில் பார்க்க முடி யாது. அதனால் அவற்றுக்காக அனுதாபப்படும் வாய்ப்பும் குறைவு.

**தொலைக்காட்சி நாடகங்கள்:**
எங்கள் நாட்டில் தமிழ் தொலைக் காட்சி நாடகங்கள் இலலை. இருந் தாலும் அவை எமக்குப் பார்க்கக் கிடைப்ப தில்லை. இலங்கை தமிழ் மக்கள் எல்லோரும் தென்னிந்திய தொலைக்காட்சி நாட கங்களையே பார்க்கின்றனர். அவை எங்களது சமூக வாழ்க் கையைப் படம் பிடித்து காட் டுவன அல்ல. அவை தென் னிந் திய வாழ்க்கையை பிரதிபலிப் பவை. அவை தென்னிந்திய மண் வாசனை நாடகங் கள். தென்னிந்திய பாத்திரங்கள் வந்து, தங்களுக்குரிய பிரச்சினைகளை தங்களுக்கே உரிய பேச்சு வழக்கு மொழியில் அலசுகின்றன. எங்களால் அந்தப் பாத்திரங் களுடன் ஒன்றி நிற்க முடியவில்லை. அதனால் அவற்றுக்காக அனுதாபப்படவும் முடிய வில்லை. மேலும் அவை அடிதடி கொலைக் குற்றம், பழிக்குப்பழி வாங்கல் கள் பற்றியே அதிகம் பேசுகின்றன. அப்படியான வாழ்க்கை யையா நாங்கள் வாழ்கின்றோம்? வேறு ஒன்றும் இல்லா ததால் அந்த நாடகங் களைப் பார்க்கி றோம்.

**எங்களது பாரம்பரிய நாடகங்கள்:**
எங்களது பாரம்பரிய நாடகங்க ளான நாட்டுக் கூத்துகளும், இசை நாடகங் களும் கூட எங்களது வாழ்க் கையை பிரதிபலிப்பவை அல்ல. அவை முனிவர் கள், தேவர்கள், கடவுளரது மகிமை பற்றி பேசுவன. வரலாற்று நாடகங்களும் அவ் வாறே.அவைஎங்கோஎப்பொழுதோ வாழ்ந்த மன்னர்களது கதைகளைச் சொல்பவை. இன்று இந்த நாட கங்களை நடிப்பவர் களும் குறைவு. எங்களவது யாராவது நடிப் பார்கள். சிலர் போய் அவற்றைப் பார்ப் பார்கள். சும்மா பொழுது போக்காக பார்க் கிறார்கள்.

**சினிமாப் படம்:**
சினிமாப் படங்களிலும் நாடகம் இருக் கிறது. ஆனால் சினிமா பல கலைகளின் சங்கமம், சினிமாப் படங்களில் வரும் அழகளையெல்லாம் பட்டியலிட்டுக் காட்டுவது அனாவசியம், அந்த அழுக ளெல்லாம் சேர்ந்து, அதில் உள்ள நாடகங்களை மறைத்து விடுகின்றன. சினிமாவில் யாதார்த்தம் என்பதே இல்லை. எல்லாம் செய்கை . சினிமா நடிக நடிகையர்களில் உள்ள கவர்ச்சி யிலும் அதன் ஏனைய அழகுகளிலும் மயங்கியே படம் பார்க்கிறோம்.

**நூல்களிலுள்ள நாடகங்கள்:**
நூல்களிலுள்ள நாடகங்களை விட்டு விடுவோம். அவை பாட்டிலை கிடப் பவை. நாடகமென்பது நடிக்கப்பட வேண்டும். நடிக்கப்படுகின்ற



நாடகங்கள் பற்றியே நான் இந்தக் கட்டுரையில் பேசுகின்றேன்.

**நவீன நாடகத்தின் சிறப்பு**
நாங்கள் வாழ்கின்ற இந்த வாழ்க் கையை திறப்படச் சித்தரிக்கின்ற நாட கமே நவீன நாடகம் ஆகும். இதை சமூக நாடகம், மண்வாசனை நாடகம், யாதார்த்த நாடகம் என்றும் அழைப்பார். எங்கள் சமூகத்தின் கதை நாடக மாக்கப்படவேண்டும். அந்த நாடகம் எங்கள் வாழ்க்கையை பிரதிபலிக்க வேண்டும். நாங்கள் சாதாரணமாக சமூகத் தில் சந்தித்துப் பேசி பழகுகின்ற மனிதர்களே அதில் பாத்திரங்களாக வருவர். அந்தப் பாத்தி ரங்கள் வந்து எங்கள் சமூகப் பிரச்சி னை களை எங்க ளுக்கே உரிய பேச்சு வழக்கு மொழியில் அலசும். அத்தகைய பாத்திரங் களுடன் நாடக இரசிகர்கள் நன் றாக ஒன்றி நின்று நாடக்ததை ரசிப்பர். நாடகத்தில் இந்த ஒன்றிப்பு உணர்ச்சி முக்கியமானது.
ரசிகர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு பாத் திரங்களுடன் ஒன்றி நிற் கிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு அந்த நாடகம் சிறந்தது என்பது கருத்து. ஒன்றி நிற்கின்ற பொழுது பாத்திரங்களுக்கு ரசிகர்களது அனுதாபமும் கிடைக்கும். பாத்தி ரங்கள் தங்கல் இட்சியங்களை அடையப் போரா டும் பொழுது, ரசிகர்களும் மனதளவில் அந்தப் பாத்திரங்களுடன் சேர்ந்து போராடு வர். இவை கண்ணீர் சிந்தும் பொழுது இவர் களும் கண்ணீர் சிந்துவர், அவை வெற்றி பெறும் பொழுது இவர்களும் மகிழ்வர். வேறு எந்த வகை நாடகத்திலும் இவ்வளவு வெற்றி கிடைக்காது!

**உலக நாடக தினம்**
நாடகம் சமூக விழிப்புணர்ச்சியை ஏற் படுத்த வேண்டும். சமூ கத்தில் சாந்தி யையும் சமா தானத்தையும் பரவச் செய்ய வேண்டும். இனங்களுக் கிடையில் ஒற்று மையை ஏற்படுத்த வேண்டும். நாடுகளுக்கிடையிலும் சமாதானத் தையும் ஒற்றுமை யையும் ஏற்படுத்த வேண்டும். இவை உலக நாடக தினத்தை பிரகடனப்படுத்தியோர், நாடகத்திலிருந்து எதிர்பார்க்கும் இலட்சியங் களில் சில. நீங்களே சொல்லுங்கள்! நவீன நாட கங்கள் அல்லாத வேறு எந்த நாடக வகை யால் இந்த இலட் சியங்களை அடைய முடி யும்? சமூக நாடகங்கள் முதலில் நன்றாக எழுதப்பட வேண் டும். பின்பு அவை திறமாக தயாரித்தளிக்கப் பட வேண்டும். அப்பொழுது தான் உலக நாடக தின இலட்சியங்கள் ஒரு சில வாவது கைகூடும்.
எங்கள் நாட்டில் தமிழ் நாட கங்கள் நடிக் கப்படுவது குறைவு. அதிலும் சமூக நாடகங்கள் அருமையிலும் அருமை, பிரதேச சபைகள், பிரதேச செயலர்கள் நடத்தும் கலை விழாக் களில் கூட நாட் டுக் கூத்துக்களை பாடி ஆடுகின் றனர். மக்களுக்கு சமூக நாட கங்கள் என்றால் என்ன வென்றே தெரிய வில்லை. சமூக நாடகங் கள் மலிவு பொலிவாக நடித் தால் தானே மக்கள் சமூக நாட கங்களின் சிற்பபை அறிந்து அவற்றைப் பயன்படுத்து வார் கள்?

**பாடசாலை தமிழ்தத்தினப் போட்டிகள்**
இன்று பாடசாலை தமிழ்த்தினப் போட்டி களில் எல்லாப் பாட சாலைகளிலும் சமூக நாடகங் களையே நடிக்கின்றனர். ஆனால் அவை பாடசாலை மட் டத்திலேயே நின்று விடுகின்றன. அவற்றை சாதாரண மக்கள் பார்க்க முடியாது. கடைசி, போட்டி களில் வெற்றி பெறும் நாடகங் களையாவது பொது இடங்களில் அரக்கிட்டு காட்ட லாம். தனிப்பட்ட பாடசாலை கள் இதைச் செய்வது சிரமம், கலாசார உத்தியோகத்தர் களும் எங்கள் கல்வித் திணைக் களமும் இந்தப் பணி [illegible] செய்யலாம். மாகாண சபை யும் இதற்கு உதவலாம். இது இலங்கை தமிழ் சமூக நாடக வளர்ச்சிக்கு செய்யும் பெரும் தொண்டாகும்.

**ஊருக்கு உபதேசம்**
"ஊருக்கு உபதேசம் செய்கி றாய். முடியுமானால் நீயே செய்து காட்டு" என்று நீங்கள் சொல்லும் குற்றச்சாட்டு எனது காதுகளிலும் விழுகிறது. நான் செய்து காட்டியதையே இன்று உபதேசம் செய்கிறேன். 1954–1974 காலப் பகுதியில் 25 சமூக நாடகங்களை எழுதி எனது ஊரான அராலியிலும் வேறு பல இடங்களிலும் அரங் கிட்டுக் காட்டிய வன். அதன் பிறகே வானொலி நாடகத்துக்குத் தாவினேன். மேடை நாட கத்தில் பெற்ற பயிற்சியே இலகுவாக வானொலி நாட கங்கள் எழுதும் ஆற்றலை எனக்குத் தந்தது. 85 சமூக நாடகங்களை அச்சிட்டு வெளியிட்டு, எல்லாப் பாடசாலைக ளுக் கும் நன் கொடையாக அனுப்பி உள்ளேன். இப்பொழுது மாணவர்கள் அவற்றை பயன் படுத்துகின்றனர்! நீங்களும் பயன் படுத் துங்களேன்!

> எங்களது பாரம்பரிய நாடகங்களான நாட்டுக் கூத்துகளும், இசை நாடகங் களும் கூட எங்களது வாழ்க் கையை பிரதி பலிப்பவை அல்ல. அவை முனிவர்கள், தேவர்கள், கடவுளரது மகிமை பற்றி பேசுவன. வரலாற்று நாடகங்களும் அவ் வாறே.அவைஎங்கோ எப்பொழுதோ வாழ்ந்த மன்னர்களது கதை களைச் சொல்பவை. இன்று இந்த நாட கங்களை நடிப்பவர் களும் குறைவு.

# ஏமாற்றம்: நல்லாட்சிக்கான வடக்கின் ஏக்கம் தொடர்கின்றது


(02ஆம் பக்கத் தொடர்ச்சி..)
னில், நல்லாட்சிக் கான வாய்ப்புகள் மிகக் குறைவாகவே பிர காசிக் கின்றன.
வடக்கு மாகாண சபை நிர்வாகம் ஏனைய மாகாண சபைகளுக்கு உதாரணமாக இருக்க வேண்டும் என்று அடிக்கடி கூறிக்கொள்ளும் அதன் தவிசாளரும் கல்வி அமைச்சர் சுகாதார அமைச்சர் ஆகியோரும் நீண்ட காலம் அரச துறைகளில் உயர் பதவிகளில் இருந்து வந்தவர்கள். சபையின் பிரதித் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் பலரும் அரச திணைக்களங்களில் பணியாற்றியவர்கள். அப்படி இருந்தும் சபையின் நிர்வாகத்தில் இன்னமும் நேர்மையையும் சரியான போக்கையும் அவதானிக்க முடியாமல் இருப்பது ஆழ்ந்த கவலைக்குரியது. ஒரு சேவையைச் சேர்ந்த தகுதியானவர்கள் இருக்கத்தக்கதாக அந்தச் சேவைக்குரிய பதவிகளுக்கு ஏனைய சேவைக்குரியவர்களை நியமிப்பதைக் கட்டுப்படுத்தவோ நிறுத்தவோகூட, அரச நிர்வாகத்தில் பலத்த அனுபவமுள்ளவர்களை உள்ளடக்கிக்கொண்டுள்ள இந்தச் சபையால் முடியவில்லை என்றால், நல்லாட்சியை அதனால் எப்படிக் கொடுக்க முடியும்?
மிக மிக விரைவில் இந்த நிலைமைகள் சீர் செய்யப்படவேண்டும். இல்லையேல், தெற்கில் ரணில் அரசு செல்வாக்கிழந்து வரும் நிலையையே வடக்கு மாகாண சபையும் எட்டவேண்டியிருக்கும். முதலமைச்சர் இந்த நிலைமையைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுப்பார், நீதியை நிலைநாட்டுவார் என்ற நம்பிக்கை கொஞ்சம் மிச்சமிருக்கிறது. அதற்கும் சாவு மணி அடிக்கப்படுமா என்பது சிறிது காலத்தில் தெரிந்துவிடும்.

*(கட்டுரையாளர் இலங்கை நிர்வாக சேவையில் போதியளவு அனுபவம் கொண்டவர்)*

# ஐ.பி.எல் என்னும் அக்கினிப் பரீட்சையில் கனவுகள் சாத்தியப்படுமா?

பிரகாஸ்

2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய இந்திய அணியில் இருந்து, முழுமையான திறன் இல்லை என்ற காரணத்தினால் யுவராஜ், சேவாக், கம்பீர், ஹர்பஜென்சிங், ஷகீர்கான், போன்ற முன்னணி வீரர்கள் கழற்றி விடப்பட்டனர். இவர்கள் மீண்டும் இந்திய அணிக்குள் வருவதற்கு பல்வேறுபட்ட முயற்சிகள் செய்த பொழுதும் எதுவும் பயனற்றுப் போய் விட்டது. இந்த நிலையில் எதிர்வரும் ஐ.பி.எல் தொடரைப் பயன்படுத்தி அடுத்த வருடத்துக்கான ரி–20 உலகக்கிண்ணத் தொடரிலாவது இவர்களின்மறு பிரவேசம்சாத்தியமாகுமா?





**யுவராஜ்**

கழற்றி விடப்பட்ட வீரர்களில் யுவராஜிற்கு இந்திய அணியில் வாய்ப்புக்கள் இன்னமும் இருந்து கொண்டுதான் உள்ளது. காரணம் யுவராஜ் போன்ற ஒரு சகலதுறை வீரரை உலகளவில் தேடுவது என்பது மிகவும் கடினமானதே! துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு என்று, மூன்றிலும் கொடிகட்டிப் பறந்தவர் யுவராஜ். ஓர் அணியில் மூன்று வீரர்களால் செய்யப்பட்ட காரியத்தை தனி மனிதரராக ஊதித்தள்ளிய இவர், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பின்னர் களத்தடுப்பில் சற்று பலவீனமாகவே காணப்பட்டார். இடையிடையே துடுப்பாட்டத்திலும் சொதப்ப நட்பைவிட, தேசம் முக்கியம் என்ற டோனியின் சிந்தனையில் புறந்தள்ளப்பட்டார். யுவராஜ் புறம்தள்ளப்பட்டு பல மாதங்கள் ஓடிமறைந்துவிட்ட போதிலும் இன்னமும் யுவராஜின் இடத்தை எந்தவொரு வீரராலும் முழுதாக நிரப்பி விட முடியவில்லை. அவரின் வருகைக்காக இந்திய அணியில் இன்றும் ஒரு வெற்றிடம் காத்துக் கிடக்கின்றது என்றால் அது மிகையில்லை. ஏனெனில் யுவி ஒரு இடதுகைத் துடுப்பாட்ட வீரர். இந்திய அணியில் இடதுகைத் துடுப்பாட்ட வீரர்களாக ரெய்னா, தவான், ஜடேயா மூவரும் காணப்படுகின்றார்கள். ஆனால் இவர்கள் மூவரும் சமீபகாலமாகச் சற்று தடுமாற்றத்திலேயே உள்ளனர். ரெய்னா தடுமாற்றத் தருணங்களில் கைகொடுக்கக்கூடியவர் என்பதனால் அவரின் இடம் பறிபோகாது. தவான் ஆரம்பத்துடுப் பாட்ட வீரர் என்பதனால் யுவரா ஜின் மீள் வருகையினால் தவா னுக்கு எந்த ஆபத்தும் ஏற்படப் போவதில்லை. ஆனால் யுவ ராஜ் அணியில் வந்தால் ஜடேயா புறம் தள்ளப்படலாம். சிலவேளைகளில் தற்போதைய ஆஸ்திரேலிய அணியைப்போல் அதிகப்படியான சகலதுறை வீரர்கள் இருப்பதை டோனி விரும்பும் பட்சத்தில் யுவராஜின் கனவு நிச்சயம் சாத்தியப்படும்.

**ஷகீர்கான்**

இந்திய அணிக்குள் யுவராஜ் திரும்புவதற்கு எந்தளவுக்கு வாய்ப்புக்கள் உள்ளதோ அதைவிட அதிகமான வாய்ப்புக்கள் ஷகீர்கானுக்கு உண்டு. ஏனெனில் இந்திய அணிக்குள் பந்து வீச்சாளர்களுக்கு பற்றாக்குறை இருந்துகொண்டேயிருக்கிறது. உலகக்கிண்ணத் தொடரில் இந்திய வேகப்பந்துவீச்சாளர்கள் அசத்தலாக செயற்பட்டாலும் ஷகீர்கான் போன்ற நேர்த்தியான பந்துவீச்சை முயற்சிக்க அவர்களால் தற்போதைக்கு முடியாது. இதனால் ஷகீர்கானின் மறுபிரவேசமும் சாத்தியமே.

**ஹர்பஜென்சிங்**

இந்திய அணிக்குள் நுளையமுடியாது ஓய்வை அறிவிக்கும் வீரர்கள் வரிசையில் ஹர்பஜென்சிங்கும் உள்ளார். இந்தியாவில் சுழற்பந்துவீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்படுகின்றனர். இதைவிட, பகுதிநேர பந்துவீச்சாளர்களும் சுழற்பந்து வீச்சாளர்களாகவே உள்ளனர். ஹர்பஜென்சிங்கிற்கு வயதும் அதிகம். அணியில் மீண்டும் இவர் இடம் பிடித்தாலும் ஓரிரு வருடங்கள் தான் விளையாட முடியும். குறைந்த காலத்திற்காக இவரை மீண்டும் இணைக்க டோனி விரும்பமாட்டார். இதனால் ஹர்பஜென்னை இந்திய சீருடையில் காண்பது கடினமே.

**சேவாக்**

சேவாக் என்றதும் எதிர் அணியின் பவர்பிளே பந்துவீச்சாளர்கள் பயந்து நடுங்கிய காலம் சென்றுவிட்டது என்றே சொல்லவேண்டும். ஆனால் அவர் இந்திய அணி சார்பாக ஆட முடியாது என்ற துயரச் செய்தியையும் ஏற்றுத்தான் ஆகவேண்டும். ஹர்பஜென்சிங்கை விட மூத்த வீரர்தான் சேவாக். ஐ.பி.எல் தொடரிலும் சாதிப்பாரா என்பது கேள்விக்குறி. சாதித்தாலும் அணிக்குள் ஆறு மாதம் அல்லது ஒருவருடம் இருப்பதற்காக இவரை அணிக்குள் மீண்டும் இணைப்பதற்கு டோனி விரும்பமாட்டார். எனவே ஹர்பஜென் புறக்கணிக்கப்பட்ட அதே காரணங்களின் அடிப்படையில் இவரும் புறந்தள்ளப்படுவார்.

**கம்பீர்**

2011இல் இந்திய அணி கிண்ணம் வெல்லக்காரணமான இடதுகைத் துடுப்பாட்ட வீரர். மற்றொரு இடதுகை ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான தவானின் தீடிர் எழுச்சியால் புறம் தள்ளப்பட்டவர். இதனால் தவான் வீழ்ச்சியுற்றாலே இவர் மீண்டும் எழுச்சியுறலாம். தவான் தற்போது நிற்கும் திறனில் கம்பீர் மீண்டும் அணிக்குள் இணைவதென்பது சற்று சந்தேகமே. ஐ.பி.எல்லில்தான் இவரின் எதிர்காலம் தங்கியுள்ளது என்று சொன்னால் அது மிகையில்லை.

இந்திய அணியில் தற்பொழுது தக்கவைக்கப்பட்டிருக்கும் வீரர்கள் தொடர்ந்தும் இடம்பிடிப்பார்களா? புறம்தள்ளப்பட்ட வீரர்கள் மீண்டும் இணைந்து கொள்வார்களா? அல்லது புதுமுக வீரர்கள் அணிக்குள் அங்கம் வகிப்பார்களா? ஐ.பி.எல் என்னும் அக்கினிப்பரிட்சைக்கு இன்னும் இருப்பது ஆக மூன்று நாட்கள் மட்டுமே!!!

# தங்கத்தில் தடம்பதிப்பேன்.... டென்சிகா சபதம்

நேர்காணல்
தமிழினியன்

கிளிநொச்சியில் உள்ள இரத்தினபுரம் எனும் சிறிய கிராமத்தில் தனது ஓட்டத்தின் பயணத்தை ஆரம்பித்து மாவட்டம், மாகாணம், தேசியம் என்று ஒன்றும் விடாமல் அனைத்திலும் சாதித்து ஆசிய இளைஞர் விளையாட்டு விழாவில் இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்தி தங்கத்தை இந்து சமுத்திரத்தின் முத்திற்குள் எடுத்துவர முனைப்பாக இருக்கும் டென்சிகா பற்றியதே இந்த நேர்காணல்..

**உங்களைப்பற்றி சிறிது கூறுங்கள்...**

எனது பெயர் தேவராசா டென்சிகா. நான் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் தரம் 10இல் கல்வி கற்று வருகின்றேன் எனது ஊர் கிளிநொச்சி இரத்தினபுரம்.

**உங்களது குடும்பத்தினரின் ஒத்துழைப்பு பற்றி கூறுங்கள்...**

எனது தந்தையார் ஓர் உதைபந்தாட்ட வீரர். எனது அண்ணன் டெல்மன் மகாணமட்ட மரதன் ஓட்ட சாதனையாளர். இவர்கள் விளையாட்டில் அதிக ஈடுபாடுடையவர்களாக இருந்ததனால் அவர்களின் ஒத்துழைப்பு எனக்கு மிகையாகக் கிடைத்தது. தவிர எனது அன்னையினதும் சகோதரர்களினதும் ஒத்துழைப்பும் என்னை இந்த நிலைக்கு உயர்த்தியது.

**பாடசாலையில் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள்பற்றி தெரிவியுங்கள்?**

பாடசாலை அதிபர் மு.ரவிந்திரன், உடற்கல்வி ஆசிரியை திருமதி வி.செல்வானந்தம் மற்றும் எனது ஏனைய ஆசிரியர்களின் ஆலோசனைகள் வழிகாட்டல்கள் எனக்கு ஊக்கமளித்தன. நான் சாதனைகள் ஏதேனும் படைத்துவிட்டால் பாடசாலைகளின் அன்றாட காலை, மாலை சந்திப்புக்களில் எனது பெயர் இடம்பெறத்தவறாது. எனவே இவ்வாறான அதிபர்கள் ஆசிரியர்களின் ஊக்குவிப்பும் என்னை வெற்றியாளராக்க சிறந்த காரணிகளாக இருந்தன.

**உங்களது பயிற்றுனர் பற்றி கூறுங்கள்...**

நான் மாவட்ட மெய்வன்மைப் பயிற்றுநர் ந.முகுந்தனிடம் 4 வருடங்கள் தொடர்ச்சியாகப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன். எனக்காக அவர் நேரம்காலம் பாராமல் பயிற்சிகளை வழங்குவதோடு நான் போட்டிகளில் பங்கு பற்றுவதற்குச் செல்லும்போது அவர் எனக்கு வெற்றிபெறுவது தொடர்பான சில நுட்பங்களையும் அறிவுரைகளையும் வழங்கத்தவறுவதில்லை. போட்டி நடைபெறும் இடத்திற்கும் என்னுடன் வந்து எனக்கு உற்சகம் வழங்கி நான் போட்டிகளில் வெற்றி பெற வழிவகுத்தவர். எனது பயிற்சியாளர் இல்லாவிட்டால் நான் இவ்வளவு தூரம் முன்னேறியிருக்க முடியாது.

**நீங்கள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்ளுகின்றிர்கள்..**

நான் மட்டுமல்ல இன்று வட்மாகாணத்தின் பல வீரவீராங்கனைகள் எதிர்கொள்ளும் பெரியதொரு பிரச்சினை வளப்பற்றாக்குறை. எம்மிடம் திறமைகள் இருந்தபோதிலும் தரம்வாய்ந்த வழங்களின் பற்றாக்குறையும் எமக்கான வாய்ப்புக்களும் எம்மை அச்சுறுத்தும் பெரிய பிரச்சினைகளாக உள்ளன.

**நீங்கள் பங்கு பற்றிய போட்டி கள் பற்றிகூறுங்கள்...**

நான் ஆரம்பத்தில் மாவட்ட மட்ட வீதியோட்டங்களில் கூடியளவு



கவனம் செலுத்தினேன். கடந்த ஆண்டு மாகாணமட்ட பாடசாலை விளையாட்டுப் போட்டியில் 1ஆம் இடத்தைப்பெற்றேன். இதைவிட 400 மீற்றர் ஒட்டப் போட்டியிலும் திறந்த வடமாகாண போட்டிகளில் 800மீற்றர், 1500மீற்றர் ஒட்டங்களில் முதலிடத்தையும் பெற்றுள்ளேன். மேலும் தேசிய விளையாட்டு விழாவில் திறந்த போட்டியில் 1500மீற்றர் போட்டியில் 8ஆம் இடத்தைபெற்றதுடன் குறைந்த வயதில் 8ஆம் இடத்தைப் பெற்றமைக்காக சிறப்பு பரிசிலையும் பெற்றேன்.

**உங்களது எதிர் கால இலட்சியம் பற்றி கூறுங்கள்...**

தேசிய விளையாட்டு விழாவில் தங்கப்பதக்கத்தை வெல்வதும், 2017ஆம் ஆண்டு ஆசிய இளையோர் விளையாட்டு விழாவில் பங்குபற்றி ஆசியாவில் தங்கப்பதக்கம் வெல்வதுமே எனது எதிர்கால இலட்சியங்கள் ஆகும்.

**எதிர்காலத்தில் இந்தத் துறையில் பங்குபற்றவுள்ள வீரவீராங்கனைகளுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்...**

வெற்றியொன்றைப் பெறுவதற்கு தொடர்சியாகவும், உரிய முறையிலும் பயிற்சிகளைச் செய்ய வேண்டும். இதைவிட தரமான பயிற்றுநர் ஒருவரின் வழிகாட்டல்களின் கீழ் உரிய மற்றும் முறையான பயிற்சிகளை பெற்றுக்கொள்வதும், எமக்கு நாமே இலக்கு ஒன்றை நிர்ணயித்து பயிற்சியாளருடன் இணைந்து அந்த இலக்கிற்காகத் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருப்பதும் மிக அவசியம். எடுத்தவுடன் வெற்றிபெறுவது என்பது இயலாத காரியம். தோல்வியென்பது அனைவரும் சந்திக்கும் ஒன்று. எனவே தோல்விகளில் துவண்டு விடாது மீண்டும் மீண்டும் முயற்சித்து அனுபவங்களின் ஊடாக சோதனைகளைச் சாதனைகளாக்க வேண்டும் என்பதே என்னைப் போன்ற வீராங்கனைகள் மற்றும் வீரர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புவது.



# ஐ.எஸ்.ஐ ஒடுக்க குர்துக்களுக்கு ஆதரவு தேவை!

சிரியாவின் பெரும் பகுதியை ஐ.எஸ். அமைப்புதான் இன்னமும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. ஈராக்கில் அதன் முன்னேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டு விட்டது. ஷியா, படைகளும் ஈரானியத் தோழமைப் படைகளும் கடுமையாக எதிர்த்துப் போரிடும் அதே வேளையில், 640 கிலோ மீற்றர் எல்லை நெடுகிலும் குர்துகள் நவீன ஆயுதங்களும் பெரிய உதவிகளும் இல்லாமல் வீரத்துடன் போரிட்டு வருகிறார்கள்.

உலகின் மிகப் பெரிய நாடற்ற இனத்தவர்கள் என்று அழைக்கப்படும் குர்துகளின் தீரத்தையும் உறுதியையும் நேரில் பார்த்த பிறகாவது அமெரிக்கா தன்னுடைய உத்தியை நிச்சயம் மாற்றிக்கொள்ளவேண்டும்.

சில வாரங்களுக்கு முன்பு சதாம் ஹுசைனின் சொந்த ஊரும் சன்னிகளின் கோட்டையுமான திக்ரித், ஈராக்கைச் சேர்ந்த ஷியா படையிடம் வீழ்ந்தது. ஈரானின் ஆதரவு அப்படைகளுக்கு இருக்கிறது. ஈராக்கின் இரண்டாவது மிகப் பெரிய நகரமான மோசுல், குர்துகள் வசமாகும் நிலையில் உள்ளது. கடந்த ஜூன் மாதம் ஐ.எஸ். நுழைவதற்கு முன்னால் குர்துகள் அதிக எண்ணிக்கையில் வசித்த மோசுல் நகரின் கிழக்குப் பகுதிக்குள் நுழையப் படைகள் தயாராகிவிட்டன. ஷியா ஆட்சியின் குறைகள் காரணமாகத்தான் சன்னிகள் ஐ.எஸ்.ஸுக்கு ஆதரவு தெரிவித்தனர் என்பதை குர்துகள் சுட்டிக் காட்டுகின்றனர். இஸ்லாமியப் படைகளுக்கு இணையான உணர்வோடு அவர்களை எதிர்க்கின்றனர் குர்துகள்.

## கொன்றுவிடுவார்கள்

கடந்த வாரம் கிர்குக் நகரில் குர்துகளையும் ஐ.எஸ். படைகளையும் குறுகிய ஒரு வாய்க்கால்தான் பிரித்தது. அங்கே பிடிபட்ட மூன்று இஸ்லாமியப் படையினருடனும் அவர்களைக் கைதுசெய்த குர்து போலீஸ் படைத் தலைவர் ஜெனரல் சராத் காதிர், அவரது துணை அதிகாரி கர்னல் காஜி அலி ரஷீத் ஆகியோருடனும் பேசினோம்.

அந்தச் சண்டையில் தன்னுடைய சகோதரனை இழந்திருந்தார் காதிர். சன்னிகளுடனான சண்டைகளில் 14 முறை காயம் அடைந்திருக்கிறார். சமீபத்தில் நடந்த தற்கொலைப் படைத் தாக்குதலில் பலத்த காயம் அடைந்திருக்கிறார். ஐ.எஸ். படையினர் காதிரின் சகோதரரையும் தாங்கள் கைப்பற்றிய இதர கைதிகளையும் ஒரு கூண்டில் அடைத்து வண்டியில் ஏற்றி நகரில் அனைவரும் பார்க்கும் படி இழுத்துச் சென்றனர். என்னுடைய சகோதரனை விடுதலை செய்ய மாட்டார்கள், கொன்றுவிடுவார்கள் என்று தெரியும் என்கிறார் காதிர்.

பிடிபடும் ஐ.எஸ். கைதிகளும் உடனுக்குடன் கொல்லப்படுகின்றனர். பிடிபட்ட மூன்று இளம் கைதிகளுக்கும் சுமார் 20 வயதுதான் இருக்கும். மூவருக்கும் திருமணமாகி இளம் மனைவியரும் குழந்தைகளும் இருக்கின்றனர். மூவரும் ஆரம்பப் பள்ளியைக்கூடத் தாண்டவில்லை. கடந்த 10 ஆண்டுகளாக ஈராக்கில் வளர்ந்துள்ளனர். அடிக்கடி நடந்த கெரில்லா சண்டை காரணமாக வாழ்க்கையைப் பற்றிய நம்பிக்கையோ விருப்பமோ அவர்களுக்கு இல்லை. ஈரானையும் ஷியாக்களையும் தங்களுடைய மிகப் பெரிய எதிரிகளாகக் கருதுகின்றனர். அரபு சன்னிகளை அமெரிக்காதான் அடக்கி ஒடுக்கியது என்று கருதுகின்றனர்.

## இஸ்லாம் என்றால் என்ன?

இஸ்லாம் என்றால் என்ன? என்று கேட்டபோது மூவரும், எங்களுடைய உயிர் என்று பதில் அளித்தனர். ஆயினும், திருக்குரான் பற்றியும் இஸ்லாமிய வரலாறு குறித்தும் அவர்களுக்கு அதிகம் தெரியவில்லை என்பது புரிந்தது. அல்குவைதாவும் ஐ.எஸ்ஸின் பரப்புரைக் காரர்களும் சொன்னதைத் தவிர அதிகம் தெரியவில்லை. மதவழிப்பட்ட அரசியல் ஆட்சிக்கு உதவ வேண்டும், நம்முடைய மார்க்கத்தில் நம்பிக்கையில்லாதவர்களைக் கொன்றுவிட வேண்டும் என்று மட்டுமே அவர்களுக்குப் புகட்டியுள்ளனர்.

குர்துகள் தாய்நாட்டுப் பற்றும் மதப்பற்றும் நிறைந்தவர்கள். அவர்களுடைய மதப்பற்று பாரம்பரியமானது, கட்டுக்கோப்பானது, கண்ணியமிக்கது. அவர்கள் யஜீதுகள், கிறிஸ்தவர்கள், அரபு சன்னிகள் என்று எல்லோரையும் ஐ.எஸ். தாக்குதலிலிருந்து காப்பாற்றிவருகின்றனர். மிகக் குறைவான ஆயுதங்கள் தளவாடங்கள் உதவியோடு மிகப் பெரிய எல்லையை அவர்கள் தற்காத்துவருகின்றனர். மஹ்மௌர் நகருக்கு அருகில் ஜனவரி 30ஆம் திகதி அதிகாலை பனிப்படலம் சூழ்ந்திருந்த வேளையில், ஐ.எஸ். படையினர் திடீரெனத் தாக்கி குர்துகளில் 7 பேரைக் கொன்றார்கள். குர்துகள் உடனே தயாராகிப் பதில் தாக்குதலில் இறங்கினார்கள்.

## அமெரிக்காவின் அனுமதி

பெரிய பீரங்கிகளை நீண்ட தொலைவு ஓட்டி வந்தால் தாக்கப்படுவோம் என்பதால், குர்துகளின் படைகளுக்கு அருகே ரகசியமாக வரும் ஐ.எஸ். படையினர் தங்களுடைய கவச வாகனங்களைத் திடீரென ஓட்டிவந்து தாக்கி, சேதம் ஏற்படுத்துகிறார்கள். அதைத் துப்பாக்கிகளாலோ கையெறி குண்டுகளாலோ தடுக்க முடிவதில்லை. இவ்வளவுக்குப் பிறகும் குர்துகள் தங்களிடம் ஒவ்வொரு முறையும் அனுமதி வாங்கிக்கொண்டுதான் போர் செய்ய வேண்டும் என்று அமெரிக்கா பிடிவாதம்காட்டுகிறது.

ஐ.எஸ். படைகள் களத்தைவிட்டு வெளியேறத் தயாரில்லை. இறந்த வீரர்களின் உடல்களையே மனிதக் குண்டுகளைப் போலப் பயன்படுத்துகின்றனர். இதற்காகவே இறந்த வர்களின் சடலங்களை மீட்க உயிரையும் பணயம் வைக்கின்றனர். மத நம்பிக்கையுடனும் துணிச்சலுடனும் செயல்படுவதால், அவர்களை எமிர்கள் என்று ஐ.எஸ். ஆதரவாளர்கள் அழைக்கின்றனர். மேற்கத்திய நாடுகளிலிருந்து வரும் ஐ.எஸ். ஆதரவாளர்கள்தான் தற்கொலைப் படையாகச் செயல்படுகின்றனர்.

வடஆப்பிரிக்கா, மத்தியக் கிழக்கு நாடுகளிலிருந்து வருகிறவர்கள், செசன்யா, உஸ்பெகிஸ்தான், தாஜிகிஸ் தான் போன்ற பகுதிகளிலிருந்து வருகிறவர்கள் தொழில்முறை ராணுவத்தினரைப் போலவே கடுமையாகச் சண்டையிடுகின்றனர். போர்க் களத்திலிருந்து பின்வாங்கும் ஐ.எஸ். வீரர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படுகிறது. எனவே, படுகாயமடைந்தால் தாய்நாடு திரும்புகிறார்கள் அல்லது தலைமை அனுமதித்தால் வீட்டுக்குப் போகிறார்கள்.

குர்துகளிடம் சிக்கிவிட்ட உள்ளூர் ஐ.எஸ். வீரர் ஒருவர், என்னுடைய சகோதரனைக் கொன்றுவிட்டீர்கள், என்னைச் சுற்றிவளைத்து விட்டீர்களே, உடலை எடுத்துக் கொள்ள அனுமதிக்கக் கூடாதா? என்று கேட்கிறார். மிக்க நல்லது, உன்னுடைய சகோதரனுடன் நீயும் சொர்க்கத்தில் சேர்ந்து கொள்வாய் என்று குர்துகள் கோபமாக அவருக்குப்பதில்அளிக்கின்றனர். சரி, இந்த முறை மண்ணில் என்னை வாழ அனுமதியுங்கள், சொர்க்கத்தை அப்புறம் பார்த்துக் கொள்கிறேன் என்கிறார் அவரும் விடாமல்!

மூன்று மகன்களைப் பெற்ற ஒருவரை மறித்து, உங்கள் மகன்களில் ஒருவரை எங்களுடன் அனுப்பி வையுங்கள், இல்லாவிட்டால் உங்கள் பெண்ணை எங்களுடைய படையினருக்கு மணப் பெண்ணாக எடுத்துச் செல்கிறோம் என்று பேரம் பேசுகின்றனர்.

## குர்துக்களுக்கு சுயாட்சி

15 வயதுப் பெண்ணை ஐ.எஸ். வீரர்களிடமிருந்து மீட்டுள்ளனர். அவர் கண்ணீர் மல்கக் கூறுகிறார், ஒரே நாளில் என்னை அடுத்தடுத்து 15 பேருக்குத் திருமணம் செய்து வைத்து, விவாகரத்து செய்ய வைத்து பாலியல் ரீதியாக என்னைச் சித்தரவதை செய்தார்கள் என்று.

இந்தக் கொடூரங்களைக் கேட்ட பலர், ஐ.எஸ். படைகளை ஆதரிப்பதை விட்டுவிட்டு, அரபு சன்னி களையும் குர்துகளையும் ஆதரிக்கத் தொடங்கி விட்டனர். அரசியல், பொருளாதார, ராணுவ விவகாரங்களில் தங்களுக்குச் சுயாட்சி கொடுத்தால் ஈராக்கியக் கூட்டமைப்பில் இணைந்து செயல்படத் தயார் என்கின்றனர் குர்து தலைவர்கள். அமெரிக்கா ஆதரவு தரத் தவறினால், குர்துகள் தாங்களாகவே சுயாட்சி அறிவிப்பார்கள். ஆனால், அதை துருக்கி, ஈரான், சிரியா ஆகியவை கூட்டாகத் தடுக்கும். தங்கள் பகுதியில் உள்ள குர்துகள் அவர்களுடன் சேர்ந்துவிடுவார்கள் என்ற அச்சம் காரணமாகக் குர்துகளை அடக்க முற்படுவார்கள். குர்துகளின் வீரம் ஐ.எஸ். படைகளை வெற்றி கொள்வதற்கு அமெரிக்கா ஆதரவு தர வேண்டும்.



திநியூயார்க் டைம்ஸ்,
தமிழில்: சாரி.